352

# காவேரி

AUGUST 194

பார்த்திப - ஆவணி

352

5-1

24 AUG 1945



-/6

Widest Circulated Monthly

# சுத்தம்

## ப்ரொட்யூசர்
## T.V.S. காஸ் பிளான்டின்
## முக்கிய அம்சம்




காஸ் பிளான்ட் அமைக்கப் பட்ட உங்கள் பஸ் அல்லது லாரி சுகமாக ஓட காஸ் சுத்த மாய் இருப்பது அவசியம். T. V. S. ப்ரொட்யூசர் காஸ் பிளான்ட் மற்றெல்லா தயாரிப் பையும்விட மிக சுத்தமான காஸை கொடுக்கிறது.

7000-க்கு மேற் பட்ட பிளான்டு கள் இந்தியாவில் விற்பனை ஆகி இருக்கின்றன.

T·V·S

**T.V. சுந்தரம் அய்யங்கார்**

அன் சன்ஸ், லிமிடெட்.

**மதுரை & மதராஸ்**

TVSK-15-TM

24 AUG 1945
MADRAS




விஜயபுரம்

கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், கிருஷ்ணா அகர்பத்தி, ராஜா பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும் பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

K·T·R
சந்தனாதி
தைலம்




...SOLE DISTRIBUTORS...
GIRISON & Co...MADRAS



# பாலை வனங்களில்

கல்லும் மணலும் நிறைந்த பாலை வனப் பாதைகளில் இனிய மணி யோசையோடு செல்லும் ஒட்டகங்கள் ஒரு சைன்னியம் அணிவகுத்துப் போகும்போது ஏற்படுவதைவிட அதிகமான தூசியைக் கிளப்புகின்றன. உயர அமர்ந்திருக்கும் ஒட்டக ஓட்டியும் அடங்காத தாகம் கொள்கிறான்.

ஒட்டக வர்த்தகம் அநேகமாக நீர் வசதியற்ற தொலையிலுள்ள ஊர்களுக்கு இடையே நடக்கிறது. ஊற்று அல்லது மழைநீர்த் தேக்கம் இருக்கும் எந்த இடத்திலும் புத்தப்புதிய தேனீர் செய்ய வசதியுண்டு.




பரந்த விநியோகம்—
புத்தப்புதிய தேயிலை

இராஜ்புத்தானா, பலுச்சிஸ்தான் பாலைவனங்களிலும், கற்பாறைகள் நிறைந்த வடமேற்கு எல்லையிலும் ப்ரூக் பாண்ட் தேயிலை வருஷம் முழுவதும் புத்தப்புதிதாக எப்போதும் கிடைக்கும்.

# ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"



சிறந்த ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A.ராஜுசெட்டியார் பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்
போன் 218A-தபால்பெட்டி 139-தந்தி "ராஜா"



யுத்தத்திற்காகவும்
சமாதானத்திற்காகவும்

# அதிகப்படியான சிக்கனங்கள்

பொருட்களை
மிதமாகச் செலவிட்டு,
அவை தாராளமாகக்
கிடைக்கும்படிச்
செய்யுங்கள்.

இந்நாட்களில் அநேக சாமான்கள் கிடைப்பது அபூர்வமாய் இருக்கிறது. தேவைப் பொருட்கள் வரத்தில் பெரிய நெருக்கடி யிருக்கிறது. நீங்கள் உங்கள் உபயோகிப்பதில் பங்கீடு செய்து கொண்டாலொழிய ஏழைகள் அவைகளில் பங்கு பெற முடியாது. எல்லாவற்றையும் இயன்றவரை குறைவாக உபயோகிப்பது நாட்டுப் பற்றுடையவர்களின் கடமையாகும்.

சிக்கனமாக இருப்பது பண விஷயத்திலும் பிரயோஜனமானது. தினப்படி செய்யப்படும் சிறிய சிக்கனங்கள், மாதாந்திர சேமிப்பாகிறது. சமாதானம் ஏற்பட்டு விலைவாசிகள் குறைந்த சமயத்தில் செலவு செய்ய, அதிகப்படியான ரூபாய் உபரியாயிருக்கும்.

உபயோகங்களில்லாத சமயம் சோப்பை உலர்த்தி வையுங்கள்.



அது அதிக நாட்களுக்குப் பயன்படும்.

சமையலுக்கு சிறிய அடுப்பு உபயோகியுங்கள்.



எரி துரும்பை மிச்சப்படுத்துங்கள்.

உங்களது மோட்டார் வண்டியை உபயோகிக்காமல் வைத்திருங்கள்.



பெட்ரோல் யுத்தத் தேவைக்கு வேண்டியிருக்கிறது.

சமாதானம் ஏற்படும் வரை



புது மேசை நாற்காலி வகைகளை வாங்காதீர்கள்.

கலியாணச் செலவுகளைக் குறையுங்கள்.



அதற்குப் பதிலாகப் பணமாகக் கொடுத்து விடுங்கள்.

சில வேலைக்காரர்களைக் கொண்டு



வேலையை முடித்துக்கொள்ளுங்கள்.

ஒருகடிதம் போதுமாயிருக்கையில்



தந்தியடிக்காதீர்கள்.

## உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்

(இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு.) AAA 6

# சந்தனம் —

## குளிர்ந்த மணம்

ஆதிகாலந்தொட்டு சந்தனத்தின் விலையற்ற குணங்களில் ஒன்று அதன் குளிர்ச்சியளிக்கும் தன்மையே. ஜுரத்தாலேற்படும் தாபத்தை தணிப்பதற்குரிய ஒளஷதமாகவன்றி சோர்வுற்ற அவயவங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. குறைவற்ற தன்மையை முன்னோர்கள் சந்தனத்திற்கு ஒப்பிடுவார்கள். அதே சந்தனம் இன்று மைசூர் சந்தன சோப் என்னும் நாகரீக உருவத்தில் சரீரத்தின் குளிர்ச்சிக்கும், சோர்வையகற்றுவதற்கும் பயன்பட்டு வருகிறது.

# மைசூர்

## சந்தன சோப்

சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே

தென் இந்தியாவுக்கு ஸோல் ஏஜண்டுகள்:- பெண்ட் & கம்பெனி, லிமிடெட்., சென்னை

B·I·TN

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★




# No. 3. பிரத்தக்ஷிய செய்கை.

யுத்தத்திற்குப் பிறகு செய்ய வேண்டிய நிர்மான திட்டங்களில் கிராம வாசிகளின் வசதிகள் முதல் ஸ்தானம் பெற்றிருக்கிறது. இதை அடிப் படையாகக் கொண்டு, கிராம முன்னேற்றத்தால் ஜனங்களுக்கு எவ்வளவு தூரம் வசதிகள் அளிக்கலாமென்று கவர்ன்மெண்ட்டும் பொது ஜனங்களும் உதவியடைய, பம்பாயிலிருந்து 38 மைல் தூரத்திலிருக்கும் வீரார் என்ற கிராமத்தில் சில காங்கிரீட் வேலைகள் செய்து காட்டப்பட்டன. புதிய தொரு சிறிய வீடு, எல்லா பருவ காலங்களிலும் கேடு வராத தங்குமிடம், ஸ்தரமான தானிய குழி, சுத்தமானதாயும், புழுதியில்லா ததுமான சந்தை மேடுகள், குடி தண்ணீர் ஊற்று, கை வண்டிகள், ஸைக்கிள், ஒரு சக்கர மாட்டு வண்டிகள் புழங்குவதற்கான குறுகிய பாதை,— இவைகள் அதிசியமாயிலும், விசேஷ அம்சங்களாக கொண்டு கண்கான செய்து காண்பிக்கபட்டது. இதனுல் பொது ஜன சேவையின் இலக்ஷியம் கை கூடுவதில் சந்தேகமில்லை.

இதர விவரங்களுக்கு கூாங்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 199, மவுன்ட் ரோடு, மதருஸ், விலாசத்துக்கு எழுதவும்.

ஸி.எம்.ஐ

காங்கிரீட அஸோஸியேஷன் ஆப் இந்தியா

தி ஸிமென்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா
லிமிட்டின்
போதனை முறை ஸ்தாபனம்

கண்ட்ரோல் விலையில் எல்லாவிதமான
எலெக்ட்ரிக் சாமான்களுக்கும் கீழ்க்கண்ட
விலாசத்திற்கு எழுதக் கோருகிறோம்

★ ★ ★ ★

தந்தி: AREMESCO டெலிபோன்: 4060

# ஆர்எம். எஸ். & கம்பெனி,

## லிமிடெட்,

எலெக்ட்ரிகல் எஞ்ஜினியர்கள்,

( தபால் பெட்டி நெ. 1283 )

16, பிராட்வே, மதராஸ்

★ ★ ★ ★

பல்புகள், வயர்கள், MEM ஸ்விச்சுகள்
முதலியன உடனடியாக டெலிவரி
கொடுக்கப்படும்.




தாய்மார்கள் அறிவர்

—உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின்—
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

# WOODWARD'S
# GRIPE WATER
*keeps baby well*

I-WW108-111 W. WOODWARD LTD LONDON ENGLAND

*Agent:—* **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS



# லோத்ரா ★★★

**கர்ப்பாசய ரோக நிவாரணி**

கர்ப்பாசய கோளாறுகளால் ஏற்படக்கூடிய பல்வேறு உபாதைகளிலிருந்து காப்பாற்றி ஆரோக்யத்தை அளிக்கிறது



**கேசரி குடீரம் லிட், மதராஸ்**

நிஜாம் சமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ்நாடு முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள்:-

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்**

சகிந்திராபாத், பெஜவாடா, மதுரை.


# பொருளடக்கம்


பார்த்திப மலர் 5 — ஆவணி இதழ் 1



யுத்தத்தின் பயனென்ன? ... 3

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 6
ராமய்யா

ஜனநாயகம் ... 9
கே. சந்தானம்

கதம்பம் ... 12

புத்தக விமர்சனம் ... 14

ஆடை ... 16
தி. சே. சௌ. ராஜன்

நம் விக்ஞானிகள் ... 21
நா. அனந்தவைத்யநாதன்

வறுமையை வென்ற புலமை... 25
சண்முகாநந்தன்

காலம் வளர்க்கும் காதல் ... 32
ஜி. எஸ். மணி

விடிந்தது ... 45
ஜி. சதாசிவம்

பண்டிகைப் பணம் ... 50
புனர்ஜன்மி

பயன் தூக்கார் செய்த உதவி 56
சாரி

ரோமா ரோலான் ... 65
யோகி சுத்தானந்த பாரதியார்

பட்டகுடி ... 70
டாக்டர் வே. ராகவன்

ஆடிப்பாவை ... 77
எம். அனந்தநாராயணன்


குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.



7—8—45 செவ்வாய்க்கிழமையன்று சேலத்தில் நடந்த அகில இந்திய சுதேசி எக்ஸிபிஷனில் கர்னாடக சங்கீத வித்வான் "இசை ஒளி" தும்பகோணம் **A. D. சுல்தான்** அவர்களின் கச்சேரி நடந்தது. ஷை கச்சேரி ஆரம்ப முதல் முடிவுவரை அகில இந்திய நாதஸ்வர சக்ரவர்த்தி இசை உலக ஜோதி **T. N. ராஜரெத்னம் பிள்ளை** அவர்கள் இருந்து அன்னாரின் சகல பாவங்களையும் ரசித்து அவர் திறமையைப்பற்றி நீண்ட நேரம் புகழ்ந்து சொற்பொழிவாற்றியதுடன் தங்கமெடலும் சன்மானம் செய்திருக்கிறார் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.




# காவேரி

| பார்த்திப | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் | ஆவணி |
| --- | --- | --- |
| மலர் 5 | செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | இதழ் 1 |

## யுத்தத்தின் பயனென்ன?

ஜப்பான் சரணாகதி அடைந்துவிட்டது. ருஷ்யாவின் எதிர்பாராத விரோதமும் அமெரிக்காவின் அணு வெடிகுண்டு வீச்சும் ஜப்பானுக்கு வேறு கதியின்றிச் செய்துவிட்டன. ஒருமாத காலமாகவே ஜப்பான் தான் சளைத்துப் போனதை உணர்ந்து, ருஷ்யாவை ஸமரசப் பேச்சுத் தொடரத் தூண்டியது. அக்கோரிக்கையின்படியே பாட்ஸ்டாமில் கூடிய நேச தேசத்தலைவர்கள் ஜப்பானுக்குச் சில நிபந்தனைகள் விடுத்தனர். அப்பொழுது அதை நிராகரித்துவிட்டது ஜப்பான். மத்தியஸ்தத்திற்கு அழைத்த ருஷ்யாவும் சண்டைக்கு வரவே கதியற்று அணு வெடிகுண்டினால் தாக்குண்டு பரிதவித்து, எஞ்சியுள்ள ஜப்பானிய நகரங்களையும் மக்களையும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் சரணாகதி அடைந்துவிட்டது.

யுத்தம் முடிந்துவிட்டதுபற்றி உலக மக்கள் பெருமகிழ்ச்சியடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. 1939-ல் மூண்ட ஐரோப்பிய யுத்தம் ஆசியாவுக்கும் பரவி 1945-ல் முடிகிறது. இந்த ஆறு வருஷ யுத்தத்தினால் உலகம் எவ்வித நன்மை தீமைகளை அடைந்தது என்பதைச் சீர்தூக்கிப் பார்ப்பது விவேகமாகும்.

கோடிக்கணக்கான மக்கள் மடிந்தது ஆச்சரியமில்லை. நாடுகளும் நகரங்களும் அழிந்தன, பொசுக்கப்பட்டன. மனிதனுடைய கொடுஞ் செயலுக்கு அவை சாக்ஷியம்போல் இன்று மொட்டையாய் நிற்கின்றன. இவை எல்லாம் ஆறிப் போகும் புண்கள். கட்டடங்கள், நகரங்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவிடும். எந்த யுத்தம் நிகழ்ந்தாலும் இவ்வழிவு இயல்பே.

இந்த யுத்தத்தின் பயனாக ஏற்பட்ட பெருத்த முக்கிய மாறுதல் உலகம் முழுதும் இன்று திரிமூர்த்திகளான ருஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து இவ்வல்லரசுகளின் அடிமை. பூகோள அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்தான் முதலில் நம் கவனத்தைக் கவரக்கூடியது.

உலகத்தில் சுதந்தரத்தை நிலைநாட்டவெனத் தொடுக்கப்பட்ட யுத்தம் வெற்றி பெற்றதா? இந்த ஆறு வருஷ யுத்தத்தின் பயனாக உலக மக்கள் சுதந்திரமாக வாழ இனியேனும் ஹேது உண்டா?

ஐரோப்பாவை எடுத்துக்கொள்வோம். அங்கே பல நாடுகள் சுதந்திரமிழந்துவிட்டன. இத்தாலி, ஜர்மனி, ஆஸ்ட்ரியா முதலிய நாட்டுமக்கள் பூரண சுதந்திரத்தை இழந்துவிட்டார்கள். போலந்து போன்ற பல சிறிய நாடுகள் உருக்குலைந்து பரிதவிக்கின்றன. கட்சிப் பிரதிகட்சிகள் எங்கும் தலையோங்கி நிற்கின்றன. எங்கும் பசிப்பிணியின் தாண்டவம். ருஷ்யாவின் அடியார்களாய்ப் பல தேசங்களும், இங்கிலாந்தின் நட்பைத்தேடிச் சில தேசங்களும் தங்கள் வியாபாரம் செல்வம் எல்லாவற்றையும் பறிகொடுத்து ஏங்கி நிற்கின்றன. சுதந்திரத்திற்குப் பேர்போன

காவேரி தோன்றி நான்கு ஆண்டுகள் நிறைந்துவிட்டன. ஐந்தாவது ஆண்டு ஆரம்ப மலர் இது. நமது வாசகர்களின் ஆதரவினாலும் எழுத்தாளர்களின் ஒத்துழைப்பினாலும் காவேரி இன்று தமிழ் நாட்டில் வேரூன்றித் தலையெடுத்து நிற்கிறது. இனி அதன் வளர்ச்சியும் வனப்பும் வாசகர்களின் உள்ளம் குளிரச் செய்யுமென வாக்குறுதி கூறுகிறோம். இவை எல்லாம் கைகூடவேண்டுமென ஆசிகூற வாசகர்களை வேண்டுகிறோம்.

பிரான்ஸில் இன்று தேசத்தலைவர்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டு, அமைதியின்றி இங்கிலாந்தின் நட்பை எதிர்பார்த்து நிற்கின்றனர். ஐரோப்பாவில் தலை தூக்கி நிற்பது இங்கிலாந்துதான். துருக்கியும் ஸ்பெயினும் தங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கத்திமுனையில் நர்த்தனம் செய்வதுபோல் நடித்து வருகின்றன. இவ்விரு தேசங்களுக்கும் தூக்கம் இல்லை.

தூரக்கிழக்கில் அமெரிக்காவின் ஆதிக்யம் ஓங்கிவிட்டது. ஜப்பானின் முறிவினால் அநேக கேந்திரஸ்தானமான தீவுகள் அதன் கைக்கு மாறும் என்பது திண்ணம். இங்கிலாந்தின் பலமும் ஆதிக்யமும் இனி கங்கு கரையின்றி ஆசியாவில் பரவும். ருஷ்யாவைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. ஐரோப்பாவிலும் சரி, ஆசியாவிலும் சரி, அதன் ஆதிக்யம் ஒப்பற்றதாகிவிட்டது. மஞ்சூரியா முதலிய நாடுகள் அதன் கைவசம் என்றே வைத்துக் கொள்ளலாம். சைனு கொஞ்சம் தலை ஓங்கி நிற்கும் என்றாலும், ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே அதன் கதி மிகவும் பொருமைப்படத் தக்கதாக இருக்காது என்று தோன்றுகிறது. அதன் நீண்டநாள் வைரியான ஜப்பான் அடியோடு ஒழிந்ததுபற்றி அதற்குச்சந்தோஷமிருப்பினும், இனி அது பூரண சுதந்திரத்துடன் சுகித்துவாழ முடியுமென்று நினைக்க இடமில்லை.

ஆசியா மக்களின் கதி அதோகதிதான். அவர்களின் சுதந்திரதாகம் தணிய அரசியல் வானத்தில் மேகங்கள் காணப்படவில்லை. ஐரோப்பிய அமெரிக்க மக்களின் கூலிகள்போல் இனி பாடுபட வேண்டுமெனத்தான் தோன்றுகிறது. சுதந்திரம் என்று பிலிப்பைன்ஸ்போன்ற நாடுகளுக்கு அளித்தாலும் சொந்தபலமில்லாதவரையில் அது போலிச் சுதந்திரமாகவே முடியும்.

எனவே, இந்த யுத்தத்தின் பயனுக பூகோளம் உருக்குலைந்துவிட்டது. உலகிலுள்ள எல்லா நாடுகளும் சுதந்திரமிழந்து போலிச் சுதந்திரத்துடன் மூன்று பெரிய வல்லரசுகளின் இச்சைப்படி நடித்து வாழவேண்டிய கதி ஏற்பட்டுவிட்டது.

விஞ்ஞானத்துறையில் அநேக மாறுதல்கள், புரட்சிகரமான ஆராய்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அடாமிக் பாம் (அணு வெடிகுண்டு) உலகப் போக்கையே மாற்றக்கூடுமாம். இதிலிருந்து என்ன ஏற்படுகிறது? அடுத்தபடி யுத்தம் உலகில் மூண்டால் பாதிக்குமேல் தரைமட்டமாகி விடும் என்பது திண்ணம்.

யுத்தம் இனி என்றும் நிகழாமலிருக்க வேண்டி தொடரப்பட்ட சண்டையல்லவா இது! இனி உலகில் யுத்தம் அறவே ஒழிந்துவிட்டதா? அது ஏற்படாவண்ணம் செய்தாய்விட்டதா? சிறிய நாடுகள் இனி உலக சமாதானத்தைக் குலைக்காவண்ணம் செய்தாய்விட்டது என்பது மட்டும் உண்மை. சண்டை மூண்டால் அது இனி திரிமூர்த்திகளுக்குள்ளே தான். அவர்கள் செய்துவரும் பந்தோபஸ்துக்களைப்பார்த்தால் வெகு சீக்கிரத்தில் அவர்கள் இன்னுமொரு யுத்தத்தை எதிர்பார்த்து நடப்பதாகத் தோன்றுகிறது.

இங்நிலையில் இந்த யுத்தத்தின் விளைவு என்ன? உலக பலம் மூன்று பெரும்புள்ளிகளின் கைக்குள் அடங்கிவிட்டது. பூரண சுதந்திரம் என்பது சிறிய நாடுகள் எட்டிப்பிடிக்கமுடியாத பொருளாகிவிட்டது. அடிமைத்தனம் அதிகரித்துவிட்டது. வறுமை பரவிவிட்டது. மனிதத் தன்மை மங்கி வருகிறது. அநீதி, கொடுமை ஓங்கி நிற்கின்றன. விஞ்ஞானிகள் இதற்கு உடந்தையாக நிற்கின்றனர். திரிமூர்த்திகளின் தாண்டவம்தான் இனி.

சர்வாதிகாரிகள் ஒழிந்தனர். அவர்களைப் பின்பற்றிய ஆட்சிமுறையும் ஒழிந்தது. மக்களின் ஆட்சிமுறைதான் நல்ல அரசியல் என்ற கொள்கை வெற்றிபெற்றுவிட்டது. எனினும் எல்லா உலக மக்களும் இதை யனுபவிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படுமா என்பதுதான் சந்தேகமாய்விட்டது.

இந்த யுத்தம் மூண்டதினுல் உலக மக்களுக்குப் பயன் யாதொன்றும் இல்லை என்பதுதான் நமது உறுதியான அபிப்பிராயம்.

---

# பிரிட்டிஷ் மந்திரி சபையில் முக்கியஸ்தர்கள்



**ஸி. ஆர். ஆட்லி**

மந்திரிசபைத் தலைவர். பேச்சிலோ தோற்றத்திலோ வசீகரமில்லாத பேர்வழி. ஆனால் தொழிற் கட்சிக்குள் மெத்தப் படித்தவர்.



**ஹர்பர்ட் மாரிஸன்**

இவர் ஒரு போலீஸ்காரரின் புதல்வர். ஏகாக்ஷி. ஷாப்புக் கடையில் வேலைக்கிருந்தார்; பிறகு டெலிபோன் ஆபரேட்டராகவும் இருந்தவர். ஆட்லிக்கு அடுத்தபடியாக பிரதமராக வரக்கூடியவர்.



**ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்**

தொழிற் கட்சிக்குள் பெரிய அறிவாளி. இவர் ஒரு பிரபல வக்கீல். 30,000 பவுன் சம்பாதிக்கிறார்.



**எர்னஸ்ட் பெவின்**

பேச்சில் நிகரற்றவர். விவாதத்தில் நிபுணர். இவர்தான் இப்பொழுது வெளிநாட்டு மந்திரி.

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

சென்ற நான்கு வாரங்களில் நானும் அம்மாஞ்சியும் நான்கு நாட்களில் சங்கீதம் கேட்டோம். கான்சாஹிப் நிஸ்ஸார் ஹுஸ்ஸேன் என்பவர் தியாகராஜநகரிலுள்ள ஹிந்தி பிரசார் சபாவில் சுமார் ஒன்றரை மணி நேரம் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று பாடினார். ஒரு மணி நேரம் பூர்வி எனப்படும் கமகக்கிரியா ராகத்தைச் சம்பூர்ணமாகப் பாடினார். வழியும், வேலைப்பாடும், ஸ்ருதி சுத்தமும், கமக சுத்தமும், ராகவின்யாசமும் மிகவும் ரசிக்கத் தகுந்தனவாயிருந்தன. இந்தக்கச்சேரி முடிந்தவுடன் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஸ்வாமி சபையில் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் பாடுகிறார்என்று யாரோ சொல்லவும் நேராக அங்கே சென்றோம். அய்யங்கார் பாட்டில்தான் அப்பு அழுக்கு ஒன்றும் இராது என்பது யாவரும் அறிந்த விஷயம்; சில வேளைகளில் மாத்திரம் ஏனோ தானோ வென்று நம்மை ஏமாற்றி விட்டுப்போய் விடுவார்; அந்தச் சேஷ்டை ஒன்றுமாத்திரம் அவரிடம் உண்டு. இரண்டு கறி, ஒரு தயிர்ப் பச்சடி, ஒரு வறுவல், ஒரு பொரித்த கூட்டு, ஒரு அவியல், சாம்பார், வற்றல் குழம்பு, இரண்டு ரசம், ஒரு கோசுமலி, இரண்டு ஊறுகாய், வடை, அப்பளம், பாயசம், ஹல்வா, நல்ல நெய், கட்டித் தயிர்—இவ்வளவுடன் எப்பொழுதும் சாப்பாடு போடக்கூடிய அந்தஸ்தும், அபிமானமும் உள்ள ஒரு ரசிகர், நம்மைச் சாப்பிடக் கூப்பிட்டபின், ஒரு கறி, டாங்கர்மா பச்சடி, சுண்டைக்காய் வற்றல் குழம்பு, ரசம், சுட்ட அப்பளம், நீர்மோர் இத்துடன் சாப்பாடு போட்டால் நமக்கு எவ்வளவு கோபம் வருமோ அவ்வளவு கோபம் வரும் அரியக்குடி கச்சேரிகளில் நம்மை ஏமாற்றும் போது என்கிறான் அம்மாஞ்சி. வாஸ்தவமாகவே, அந்த மனுஷரிடத்தில் உள்ள யோக்கியதை பிரமாதம்; அவருடைய வழியும் நிதானமும் பழுது சொல்லமுடியாதவை. அவருடைய சாரீரத்திலுள்ள கார்வை வேறு ஒருவரிடமும் இப்பொழுது கிடையாது. அவருடைய பாடாந்தரம் சமையலுக்குப் பாகசாஸ்திரம் எப்படியோ அப்படிப்பட்டது. மனது வைத்தாரோ எந்த ராகமும், எந்த உருப்படியும் எண்ணெய் நஸ்ஸியம்தான் அவருக்கு. அப்படிப்பட்டவர், சில வேளைகளில் குழந்தைக்குக் கிலுகிலுப்பைகொடுத்து விளையாட்டு காட்டுவது போல் நம்மை ஏமாற்றிவிட்டு, "ராம நன்னுப்ரோவரா", "எவரிகை அவதாரம் எத்திதிவி", "நேபோகடு கொண்டே" இந்த மூன்றை மாத்திரம் பாடிவிட்டு, குழந்தைகளைப் பார்த்து, "பூச்சி, பூச்சீ, சிரி பாப்பா, சிரி, ஈன்னு பல்லைக்காட்டு" என்பதுபோல் நம்மைச்சந்தோஷப்படுத்தப் பார்த்தால், தோலை உரித்து, பழத்தைத் தின்று, கொட்டையையும் உமிழ்ந்த சங்கீத ரசிகர்களுக்கு (அதாவது அம்மாஞ்சியைப் போலுள்ள பேர்வழிகளுக்கு) எப்படித் திருப்தி உண்டாகும்? சில வேளைகளில் அம்மாஞ்சி அய்யங்காரிடம் கசந்துகொண்டால் இதுவே காரணம். இது நிற்க, அன்றைய தினம் பார்த்தசாரதிஸ்வாமி சபையில் அய்யங்கார் மனப்பூர்வமாகப் பாடிவிட்டார். அவரைப்பற்றிப் பூஷித்து எழுதினால் இப்படித்தான் எழுதவேண்டும். நன்றாயிருந்தது, பேஷாயிருந்தது, பிரமாதமாயிருந்தது என்றெல்லாம் எழுதினால் சுத்த அதிகப்பிரஸங்கித்தனமாயிருக்கும். அய்யங்கார் மனப்பூர்வமாகப் பாடினார் என்றால், அது போதும். சொல்லவேண்டியதெல்லாம் சொல்லி ஆயிற்று எனலாம். அன்று அவருக்குப் பக்கவாத்தியம் வாசித்தவர் பாபா வெங்கடராமய்யர். அரியக்குடி எவ்வளவு அழகாகப் பாடினாரோ அவ்வளவு அழகாகப் பாபாவும் பிடில் வாசித்தார் என்றால் போதுமல்லவா?

அரியக்குடியிடம் இன்னும் ஒரு விசேஷமுண்டு. அதென்னவென்றால், நம்மைச்சில சமயங்களில் எமாற்றுவதில், அவர் சாம்பாருக்குப் பதிலாக வற்றல்குழம்பும், டொமாடோ தயிர்பச்சடிக்குப் பதிலாக டாங்கர்மாவு பச்சடியும், பாதாம் ஹல்வாவுக்குப் பதிலாக சேமியா கேசரியும் கொடுப்பாரேயொழிய, விபரீதமாக வேறொன்றும் செய்யவே மாட்டார். அதாவது உருளைக்கிழங்கு கறிக்குப்பதிலாக கத்தாழைபோட்டுக் கறியாகச்சமைத்து நமக்குக் கொடுக்கமாட்டார்; டொமாடோ பச்சடிக்குப்பதிலாக நாகதாளிப்பழ பச்சடி கொடுக்கமாட்டார்; முளைக்கீரைக்குப் பதிலாக ஊமத்தை இலையை உபயோகிக்கமாட்டார். அதாவது அவர் சங்கீதத்தில் உபயோகிக்கும் வஸ்துக்கள், (என்றால் ஸாஹித்தியங்கள்) எல்லாம் சம்பிரதாயத்தை யொட்டியிருக்குமேயல்லாது கன்னாபின்னாவென்று ஒருபோதும் இரா. ஆதலால்தான் அவரை ப்ராசின வித்வான் என்று எல்லோரும் கொண்டாடுவது. அம்மாஞ்சி சொல்லுகிறான் "தமிழ்ப் பாட்டுக்கள் எத்தனையோ அவர் பாடுகிறார், நாமும் கேட்டிருக்கிறோம். நாஸ்திக சாஹித்யங்கள், துச்ச சாஹித்யங்கள், கச்சடாக்கள் எப்பொழுதாவது அவர் பாடிக் கேட்டிருக்கிறீர்களா? "உன்னை

யெனக்குக் காட்டையா, காட்டாமல்சும்மா ஒளித்தென்ன விளையாட்டையா" என்றது போலும், "மாதரை நினையாதே, நெஞ்சே மாதரை நினையாதே" என்றும், "தொண்டை கிழித்துக்கொண்டு சண்டை செய்யும் வக்கீல்கள் அண்டையிருந்து நம் மண்டையுடைத்தால்" என்றும் அவர் பாடி நான் கேட்டதில்லை. இத்தகைய வம்புக்கிழுக்கும் சாஹித்தியங்களெல்லாம் கத்தாழைகள் என்று அறிந்தவர்களில் அவர் ஒருவர். ஆதலால்தான் என்றும் ஒரே சீராக அவருடைய சங்கீதம் பெருமையுடன் வளர்ந்து வருகிறது.

நம்முடைய வித்வான்கள் சகலவிதமான பாட்டுக்களையும் கற்றுக்கொள்ளட்டும்; அவைகளை ஆத்மார்த்தமாகப்பாடி ஆனந்திக்கட்டும், நமக்கு ஒன்றும் ஆக்ஷேபனையில்லை. தெம்மாங்கு, ஆண்டிப்பண்டாரம், ஆரேஸைய்யா படுமை தூரேபையா, மானு மதுரையிலே மரிக்கொழுந்து கூடைக்காரி, என்கிற பாட்டுகளையெல்லாம் வேணுமென்றாலும் கற்கட்டும்; ஆனால் கச்சேரிகளில் பாடவும் பிரசாரம் செய்யவும் இவைகள் உதவா என்பதுமாத்திரம் உணரட்டும் என்கிறான் அம்மாஞ்சி. பொருத்தம் என்பதை உணர்ந்தவன்தான் கலைஞன்; அதை யறியாதவன் சங்கட விஷமன். சிராத்தத்தில் உட்கார்ந்துகொண்டு சிகரேட் பிடிப்பது போலும், ரயில்வே ஸ்டேஷனில் கூட்டத்தின் மத்தியில் நின்றுகொண்டு கச்சத்தை அவிழ்ப்பது போலும், அமாவாசை பலகாரத்துக்கு வெங்காய வடை சாப்பிடுவது போலும் ஆகுமாம் கச்சேரிகளில் பொருத்தமில்லாத சாஹித்தியங்களைப் பாடுவது. வர்ணமெட்டும் காலப் பிரமாணமும் மாத்திரமும் பொருந்தியிருந்தால் போதாது; சாஹித்தியப் பொருத்தம் என்பதுதான் பிரதானம். இதையறியாதவர்களும், அறிந்தும் துணிந்து பாடுபவர்களும், பாடுபவர்களைக் கேட்டு ஆனந்திப்பவர்களும் நூற்றில் தொண்ணூற்றைம்பது பேர்கள் உண்டு தற்காலத்தில்.

சென்னையில் ஒரு கவர்மெண்டு கல்விச் சாலையில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு, தினந்தோறும் காலையில் மாணவர், மாணவிகள் வந்தவுடன் கடவுளைத் தொழுது பாட வேண்டிய பாட்டுக்களில் கீழ்வரைந்துள்ளதும் ஒன்று:

*(1) நித்யானந்தத்தை நாடு-பல நிர்மல சுகம்*
*மணமேடி* [தன்னைத்தேடு

*(2) சத்திய மார்க்கந்தனிலே கூடு*
*சஜ்ஜன சங்கத்துடன் உறவாடு*

*(3) இந்திர ஜாலம், உலக வைபோகம்*
*இன்றைக் கிருப்பதுவோ சந்தேகம்*
*அந்தர மின்னல்போல் அழியும் இத்தேகம்*
*ஐயோ! அதனுடன் உனக்கென்ன*
[சிநேகம்

இந்தப்பாடலில் சரணத்தைக்கவனியுங்கள். என்ன வேதாந்தம்! பத்து வயதிலிருந்து பதினறு பதினேழு வயதுவரையில் உள்ள குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் தினந்தோறும் காலையில் "இன்றைக்கிருப்பதுவோ சந்தேகம்" என்று சொல்லிக் கொடுத்தால் அவர்களுடைய மனோவிசாரமும் ஊக்கமும் எவ்வளவு ஓங்கிவளரும் என்பதை நீங்களே யோசியுங்கள். அந்த அடியைப் பாடும்போது குழந்தைகளுடைய முகம் சோர்ந்து போகாதா? மேல் நாடுகளில் சிறுவர் சிறுமிகளுக்கு ஊட்டும் தத்துவங்கள் என்ன? நம் நாட்டில் ஊட்டுவது என்ன? முன் நோக்கமும் மேன்மையுமே பிரதானமாக வாலிபர்களுக்குச் செவியூட்டல் மேல்நாடுகளில் வழங்குங்கால், நம் நாட்டில் "இன்றைக்கிருப்போர் நாளைக்கில்லை", "மெய்யும் பொய்யாகும்", "அந்தர மின்னல்போல் அழியும் இத்தேகம், ஐயோ அதனுடன் உனக்கென்ன சிநேகம்" என்று போதித்து வந்தால் நமது குழந்தைகள் ஜீவிதத்தினுடைய கருத்து என்னவென்று உணர்வார்கள்?

"என்னஸார்! பையன் இண்டர்மீடியேட் பாஸ் பண்ணிவிட்டான் போலிருக்கே! இனிமேல் என்னசெய்யப் போகிறான்? ஹானர்ஸா, பாஸ் கோர்ஸா, அல்லது மெடிகல் காலேஜா, அல்லது எஞ்சினீரிங் காலேஜா, யோசனை செய்திர்களா" என்று ஒருவரைக் கேட்பீர்களானால், அவர் என்ன பதில் சொல்லுவார் தெரியுமா?

"அதுகடக்கட்டும் ஸார்! பையன் அவா மாமாவாத்துக்குப் போயிருக்கான், திருவனந்தபுரத்திலே! பிழைத்துக் கிடந்து வந்து சேரட்டும், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்பார். ஏனென்றால் அவர் பரம வேதாந்தியாம்! "இன்றைக்கிருப்பதுவோ சந்தேகம்" ஆச்சுதே. பையன் நிதானமாக ஜூன் மாதம் பதினைந்தாம் தேதி வருவான். அதற்குள் எல்லா காலேஜ்களிலும் அட்மிஷன் தீர்ந்துபோயிருக்கும். சரி, அதிர்ஷ்டமிருந்தால் தானே நமக்குக்கிடைக்கும் என்று பாட்டி சொல்லிவிடுவாள். ஒருவருஷம் போனால் போகட்டும். "அதுக்குள்ளே பையனுக்கு ஒரு கலியாணத்தைப் பண்ணிப் போட்டுடு', என்றும் பாட்டி சொல்லிவிடுவாள். அடுத்த வருஷத்துக்குள் பையனுக்கு ஒரு குழந்தையும் பிறந்துவிடும். அந்தக்குழந்தைக்கும் பையன் போதித்து விடுவான். என்னவென்று? "வாழ்வை நம்பாதே, மனமே, உலகை நம்பாதே"

என்றுதான்! அல்லது, "வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்" என்று விடுவான். தகப்பனார் இதைக்கேட்டு, உள்ளம்பூரித்து, அடுத்தவீட்டு நண்பரிடம் "பையனுக்கு கலியாணம் பண்ணி வெச்சேனே ஸார், அது எவ்வளவு சரியான காரியம் தெரியுமா! பாருங்களேன்! ஒரு வருஷம் படிப்பு போய்விட்டதே என்று கவலைப்படுகிறானா? பெரிய வேதாந்தியாய்விட்டான் ஸார்,ன்னுக்கே! நல்ல philosophic basis வந்துவிட்டது அவனுடைய மனப்போக்குக்கே! இன்னிமே, எனக்குக் கவலையில்லை. பையன் பிழைத்துண்டு விடுவான்" என்றும் சொல்லுவார்.

இத்தகைய நாஸ்திக சாஹித்தியங்கள் தேச க்ஷேமத்துக்கே ஹானி என்பது அம்மாஞ்சியின் கொள்கை. தேக வியாதியைவிட மனோவியாதி விஷமம் அதிகம். நமது தேசத்தில் வீரியம் என்பதுதான் தொலைந்து பல நூற்றாண்டுகள் ஆயின. உற்சாகம், முன்னோக்கம், சிரத்தை யென்பவைகளும் தொலைந்துவிடும்போலிருக்கிறது, சங்கீதத்திலுள்ள சூன்ய சாஹித்யங்களால்! தமிழ்ப் பாட்டுக்கள் என்றால் சூன்யமும் துச்சமும் தானா குடிகொள்ளவேண்டும்? அருணாசல கவிராயருடைய ராமாயண கீர்த்தனைகள் இல்லையா? கோபால கிருஷ்ண பாரதியாருடைய பாடல்கள் இல்லையா? சுப்பிரமணிய பாரதியாருடைய வீரச் செய்யுட்கள் இல்லையா? முத்துத் தாண்டவர் பாடவில்லையா? கவி குஞ்சர பாரதி பாடவில்லையா? இதையெல்லாம் விட்டு "பார்த்துக் கடன் கொடுங்கள்" என்றும், "காட்டாமல் சும்மா ஒளித்தென்ன விளையாட்டையா" என்றும் பாடுவதும் சங்கீதமாகுமா? பெண் உருவம் என்பதையே பழித்துப் பழித்துப் பாடியிருக்கும் சாஹித்தியங்களைக் கையாடுகிறார்களே இந்தக் காலத்தில்! இதுதானா வேதாந்தம்? "மாதரை நினையாதே, நெஞ்சே, மாதரை நினையாதே" என்பது வேதாந்தமாகுமா?

"அருமஞ்சட்பூச்சல்லவோ முகக்காந்தி
அடிக்கடி பெண்கள் நிறமாறும் பச்சோந்தி
ஒருமையா யவர்களை விரும்புதல் பிராந்தி
உடற்றுட் புகுந்து பார்த்தால் வரும் வாந்தி"

என்பது ஒரு செய்யுள் ஆகுமா? இதையும் கமாஸ் ராகத்தில் ஸ்திரீகள் நிறைந்த கூட்டத்தில் பாடுகிறார்களே! இதை யென்ன நாகரிகமெனச் சொல்லுவது?

"செட்டிகளால் அல்லவோ இடையழகு!
எண்ணெய்ச் செக்கர்களால் அல்லவோ
சடையழகு,
தட்டார்களால் அல்லவோ நடையழகு;
மாதர்தம் மூகெல்லாம் பல உடையழகு"

என்ற சாஹித்தியமும் வழங்கிவருகிறதே. இப்படியெல்லாம் ஸ்திரீகளைப் பழிக்கும்படியான துர்ப்பாக்கியம் கர்னாடக சங்கீதத்துக்குத்தானா வரவேண்டும் என்கிறான் அம்மாஞ்சி?

வளவளவென்று எழுதிக்கொண்டுவந்துவிட்டேன். நான்கு கச்சேரிகளில் இரண்டைப்பற்றித்தான் சொன்னேன். மற்றிரண்டு என்னவென்பீரோ? ஒன்று டி. கே. பட்டம்மாள் ரேடியோவில் பாடியது. சில உருப்படிகளைப் பழைய வாஞ்சையுடன் கையாடின மாதிரி தெரிந்தது. இரண்டாவது, வீ. வீ. சடகோபன் என்பவர் செய்த ரேடியோ கச்சேரி. அதில் முதலாவது வர்ணமும், இரண்டாவது கொலுவையுன்னாடே என்ற தோடிராகக் கீர்த்தனையும் கேட்டோம். அதற்கப்புறம் எங்களுக்குத் தெரியாத சில உருப்படிகளைப் பாட ஆரம்பித்ததில் ரேடியோவை மூடிவிட்டோம். மற்றொரு நாள் பாலமுரளி கிருஷ்ணா என்ற சிறுவன் பாட்டைச் சிறிது நேரம் கேட்கும்படிநேர்ந்தது. அடேயப்பா! பெயருக்குப் பொருத்தமாக கர்னாடக சங்கீதத்தின் மேலே ஏறிக்கொண்டு காளிங்கமர்த்தனமல்லவோ செய்கிறான் அந்தக் கிருஷ்ணன்? என்ன உதறல், என்ன கொந்தளித்தல் பத்து கமகங்கள் போதாதுபோலேயிருக்கு அவனுக்கு? ஒரு இடத்தில் கேட்டால் ஸ்புரதத்திரியுச்சம் எனலாம் போலிருக்கு, இன்னொரு இடத்தில் கேட்டால் கம்பிதஸ்புரிதம் எனலாம்போலிருக்கு, மற்றோரிடத்தில் ஆந்தோளிகப்பிரத்யாகதம் எனலாம் போலுமிருக்கு. இன்னும் சிலகாலம் கழிந்தால் இண்டியன் சாண்டோ ராமமூர்த்தி சர்க்கஸுக்கு வரும்போது சங்கிலியால் கட்டுண்டு வந்தமாதிரி பாலமுரளியின் சாரீரத்தை இழுத்துப்பிடித்து நிறுத்தவேண்டும்போலிருக்கிறது என்கிறான் அம்மாஞ்சி.

சென்னையில் கார்பரேஷன் ஆதீனத்தில் ஒரு மாணவர் காலேஜ் ஸ்தாபிதப்படுத்தப் போவதாக வதந்தி. சங்கீதக் கச்சேரிகளும், பரதநாட்டியக் கச்சேரிகளும் ஆரம்பமாய்விடும். சென்னைப் பட்டணத்தினுடைய கௌரவத்துக்குத் தகுந்தமாதிரி முதல் வகுப்பு டிக்கட்டுகள் கட்டணம் ஆயிரம் ரூபாயாவது இருக்கவேண்டும். அதற்குத் தகுந்தமாதிரி டிக்கட்டினுடைய அளவும் பெரியதாயிருக்கவேண்டுமென்கிறான் அம்மாஞ்சி. ஒவ்வொரு டிக்கட்டும் ஒரு அடமானப் பத்திரம் மாதிரி இருக்கட்டுமே, என்கிறான். இதுவும் நல்ல யோசனைதான்!

# ஜன நாயகம்

கே. சந்தானம்

பிரிட்டிஷ் தொழில் கக்ஷியின் பெரிய வெற்றி அரசியல் உலகத்தில் மகத்தான சம்பவமாகும். அதன் தன்மையை முற்றிலும் உணர்வதற்கு நமது தேசிய பட்ச பாதங்களை ஒதுக்கிவைத்துச் சிந்திக்கவேண்டும். ஸ்ரீ சர்ச்சில் இந்திய சுயராஜ்யத்திற்குத் தீராத சத்துரு. மிகவும் அகம்பாவமுள்ளவர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை மதமாகக் கொண்டவர். அவரை நாம் வெறுப்பது சகஜம். ஆனால் பிரிட்டிஷ் மக்களின் மனத்தில் அவர் ஓர் ஒப்பற்ற தலைவராக விளங்கவேண்டும். இங்கிலாந்து தனது வலியிழந்து, தோல்வியுற்று, அடிமைப்படும் தறுவாயில் ஸ்ரீ சர்ச்சிலின் சிம்மகர்ஜனை அவர்களைக் காப்பாற்றியது. அவர் தலைமையில் இங்கிலாந்து பெற்ற வெற்றிக்கு முன்சரித்திரத்தில்கூட இணையில்லைஎன்று கூறுவதுமிகையாகாது. ஆயினும் அவரைத் தலைமையிலிருந்து நீக்கிவிட்டு அவர் ஸ்தானத்தில் எவ்வித வீர குணமுமில்லாத ஸ்ரீ ஆட்லியைப் பிரதம மந்திரியாகப் பிரிட்டிஷ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். இதன் மர்மம் என்ன? இதிலிருந்து இந்தியா கற்றுக்கொள்ளவேண்டிய பாடமென்ன?

சென்ற பிரிட்டிஷ் தேர்தலில் இரண்டு கட்சிகள் போட்டி போட்டன. கன்சர்வெடிவ் கக்ஷி 'எங்கள் தலைவர் ஸ்ரீசர்ச்சில், அவருக்கு ஓட்டுப் போடுங்கள்' என்றது. இதற்கு எதிராகத்தொழிற்கட்சி 'எங்கள் திட்டம் பலாத்காரமின்றி ஒரு பொதுநல சமுதாயம் ஏற்படுத்துவதே. யுத்த அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு நாட்டின் செல்வ உற்பத்தியையும் பிரிவினையையும் படிப்படியாகப் பொது சேவைகளாக்குவோம். இத்திட்டற்கு வாக்குக் கொடுங்கள்' என்றது. நமக்குத் தலைவரைப்பற்றிக் கவலையில்லை, திட்டமே பிரதானம் என்று பிரிட்டிஷ் மக்கள் தீர்மானம் செய்தனர்.

எவ்வித அரசியல் ஏற்பாட்டிலும் திறமையான தலைவர்கள் அவசியம். ஆனால் எதேச்சாதிகார ஆட்சிகளைப்போல் ஜனநாயகம் குறிப்பிட்ட தலைவர்களுக்கு அதீனமாக இருக்காது. ஒழுங்காகவும், புத்திசாலித்தனமாகவும் காரியங்களை நிர்வகிக்கக்கூடிய சாதாரண தலைவர்களைக் கொண்டு ஜனநாயகம் எளிதில் நடைபெறும். ஜனங்களின் மனத்திற்கு உவந்த காரியங்களைச் செய்யவேண்டியதே முக்கியமானது. எதேச்சாதிகாரத்திலோ ஜனங்களின் நன்மையைப்பற்றி, எதேச்சாதிகாரியே தீர்மானம் செய்வான். சில காலங்களில் இது உண்மையாகப் பொது நன்மையாகவிருக்கலாம். ஆனால் நாளடைவில் எந்த எதேச்சாதிகாரியும் தன் பெருமையும், தன்னைச் சுற்றியிருப்போர்களின் சுகமுமே முக்கியமான நோக்கங்கள் என்று கருதிவிடுவான்.

ஜனநாயகத் தலைவர்கள்கூட பெரிய தவறுகளும், குற்றங்களும் செய்யக்கூடும். ஹிட்லரையும், முசோலினியையும் முதலில் வலுப்படுத்திய குற்றம் பிரிட்டிஷ் பிரெஞ்சுத் தலைவர்களைச் சேரும். எப்பொழுதும் பொது நன்மையையே நாடும் தலைவர்களைப் பெறுவதற்கு வழி ஜனநாயகம் என்று நினைப்பவர் ஏமாற்றமடைவர். ஆனால் கெட்ட தலைவர்களை, கர்வத்தினால் மதியிழந்த தலைவர்களை, துஷ்டர்களையும் பிற்போக்கானவர்களையும்ஆதரிக்கும் தலைவர்களை ஜனநாயகத்தில் ஜனங்கள் சாத்வீக முறையில் எவ்விதக் குழப்பமுமின்றி நீக்கிவிட முடியும். எதேச்சாதிகாரி எவ்வளவு நல்லவனாகவும், சுயநலமற்றவனாகவும், சாமர்த்தியசாலியாகவும் இருந்த போதிலும், அவனை மாற்றும்பொழுதும் அவன் இறந்தபொழுதும் பெரிய குழப்பமும் சண்டையும் இல்லாமலிருக்க முடியாது. அதனால் அவன் பலவருஷங்களில் செய்த நன்மைகள் சிலநாட்களில் அழிந்து துன்பமே மிஞ்சும்.

இங்கிலாந்தில் இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் இருந்ததால்தான், பிரிட்டிஷ் ஜனங்கள் எளிதில் ஸ்ரீ சர்ச்சிலை நீக்கித் தொழிற் கட்சியிடம் அதிகாரத்தை ஒப்புவிக்க முடிந்தது. கன்சர்வெடிவ் கட்சி ஒன்றுமட்டுமே இருந்திருந்தால்

அதன் திட்டத்தில் எவ்வளவு அதிருப்தி இருப்பினும் அதைக் கிரியாம்சையில் காண்பிக்க முடியாது. ருஷியாவின் அரசியல் அமைப்பு குடியரசுதான். ஆனால் அங்கு ஒரே ஒரு அரசியல் கட்சிதான் இருக்கமுடியும். ஆதலால் ருஷியாவின் தலைவர்களை ருஷிய மக்கள் மாற்ற முடியாது. பொது உடைமைக் கட்சிக்குள் பிளவுண்டாகி, பெரும்பான்மையோர் தற்போதைய தலைவர்கள்மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டித் தள்ளிவிட்டாலொழிய அவர்கள் ஆதிக்கம் செலுத்தி வருவார்கள். ருஷியாவிலும் பல அரசியல் கட்சிகள் இருந்து, பொதுத் தேர்தல் நடந்தால், ஸ்ரீ சர்ச்சிலைப்போல் ஸ்ரீ ஸ்டாலினையும் நீக்கியிருப்பார்கள் என்று நான் கூறவில்லை. அமெரிக்காவில் பிரசிடெண்டு ரூஸ்வெல்ட்டை நான்காம்முறையும் தேர்ந்தெடுத்தனர். அவ்வாறே ஸ்டாலினையும் அவர் பதவியில் ஊர்ஜிதப்படுத்தலாம். ஆனால், இப்பொழுது அவரை வைத்திருக்க வேண்டுமா, நீக்க வேண்டுமா என்ற பிரச்சினையைத் தீர்க்கும் அதிகாரம் ருஷிய மகா ஜனங்களிடமில்லை. அந்நாட்டின் பொதுவுடைமைக் கக்ஷியிடம்தானிருக்கிறது. அக்கக்ஷியின் முக்கிய உத்தியோகஸ்தர்கள் ஸ்டாலின் பக்தர்களாக இருந்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு ஆபத்து. இந்த யுத்தத்தில் அளவிலா வெற்றி பெற்றுவிட்டபோதிலும், தலைவர்களைச் சமாதான முறையில் மாற்றக்கூடிய அரசியல் ஏற்பாடு உண்டாகும் வரையில் ருஷியாவுக்கு அபாயம் தான். ஸ்ரீ ஸ்டாலினுக்குப் பிறகு அவர் ஸ்தானத்திற்குப் போட்டியும், கலவரமும் ஏற்பட்டு உள்நாட்டுக் கலகத்தில் முடியலாம்.

இந்த ஆபத்து சீனவுக்கு நம்கண்முன் ஏற்பட்டிருக்கிறது. ருஷியாவில் பொது உடைமைக்கக்ஷிபோல், சீனவில் கோமிண்டாங் கட்சி ஒன்றுதான் சட்டப்படி இருக்கலாம். ஆதலால் மார்ஷல் சியாங்கிஷேக் ஓர் எதேச்சாதிகாரியாகஇருக்கிறார். சீனவில் இப்பொழுது ஒரு பொதுத் தேர்தல் நடந்து பலகக்ஷிகள் போட்டி போடுவதற்கு அனுமதிக்கப்பட்டால், ஸ்ரீசியாங்குக்கு எதிரியான கட்சிகளுக்கு மேஜாரிட்டி கிடைத்து, சியாங்கும் சர்ச்சிலைப் போலவே சரித்திரமெழுத ஒய்வு கொடுக்கப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. சீனவில் ஓர் பாகத்தில் பொது உடைமைக் கட்சி ஓர் தனி ஆட்சி ஏற்படுத்தி, சைனியம் திரட்டி ஆண்டு வருகிறது. ஜப்பான் தோல்வியுற்றபிறகு, சீனவில் பெரிய உள்நாட்டுக்கலகம் ஏற்பட்டு, எதிரியால் உண்டான நஷ்டத்திற்கு மேற்பட்ட சேதம் உண்டாகுமே என்று சீனவின் நண்பர்கள் பெரிதும் கவலைப்படுகின்றனர்.

அரசியல் கட்சிகளின் குறைகளையும் விதண்டா வாதங்களையும் பற்றிப் பெரிய வியாசம் எழுதலாம், உண்மையைத் திரித்து, எதிர்க்கட்சியில் உள்ள நல்லவர் மீது அபாண்டமான குற்றங்கள் சாட்டி, சக்திக்கு மேலான காரியங்கள் செய்வதாக அறியா மக்களை ஏமாற்றிப் பொது வாழ்க்கையைக் கெடுப்பதாகக் கூறலாம். கக்ஷிச் சண்டைகளை யெல்லாம் விட்டுவிட்டு, குணங்களையே கவனித்துப் பிரதிநிதிகளை அனுப்புவதே சரியான முறையென்று வாதிக்கலாம். இவ் வாதங்களில் ஓரளவு உண்மையிருப்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். கக்ஷிச் சண்டைகளை ஓர் வரம்புக்குட்படுத்திப் போட்டிகளைக் கவுரவமான வழிகளில் நடத்தக் கற்றுக்கொள்ளுவது ஜனநாயகத்தின் ஓர் முக்கிய அம்சமாகும். ஆனால் கக்ஷிகளே கூடாதென்பவர்களும், ஒரே கக்ஷி இருக்கவேண்டும் என்பவர்களும் உண்மையில் எதேச்சாதிகாரத்தை ஆதரிப்பவர்களாவார்கள். கொள்கைகளில் அதிக வித்தியாசங்கள் இல்லாமலிருந்தாலும், இரண்டு கட்சிகளிருப்பது ஜனநாயகத்திற்கு அத்தியாவசியமாகும். அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சிக்கும், குடியரசுக் கட்சிக்கும் திட்டங்களில் பெரிய வித்தியாசமில்லை. ஆயினும் நீண்டநாள் அதிகாரம் வகித்ததால் ஒரு கட்சித் தலைவர்களின் தன்மை குன்றிவிட்டால், அவர்களை விலக்கி எதிர்க்கட்சித் தலைவர்களிடம் நிர்வாகத்தை ஒப்புவிப்பது சாத்தியமாகிறது.

தலைவர்களைவிடத் திட்டமே பிரதானம் மென்ற உணர்ச்சி, குறைந்தது இரண்டு அரசியல் கட்சிகள், இவ்விரண்டும் ஜனநாயகமுறை அமுலிலிருப்பதற்கு அடிப்படையான தேவைகள். நம்நாடு பூர்ண சுதந்திரமடையும் வரையில் இவற்றைப் பற்றி அதிகக் கவலை வேண்டியதில்லை.

ஆனால் சுதந்திரப்போராட்டத்திற்காக ஓர் அரசியல் ஸ்தாபனத்தையே ஆதரிப்பதும், வேறு எவ்விதத்திட்டத்தையும் கவனியாமல் வெறும் தியாகத்திற்காக அதன் தலைவர்களைப் போற்றுவதும் தற்சமயம் அவசியமாக இருந்தபோதிலும் இப்பழக்கங்களைச் சுதந்திரம் வந்தவுடன் மாற்றுவிடில் இந்தியாவில் ஜனநாயகம் நிலைபெருது. சுதந்திர ஆரம்பத்தில் எக்கட்சிக்கும் 100-க்கு 75-க்குமேல் ஸ்தானங்கள் கிடைக்கக்கூடாத ஓர் அரசியல் திட்டம் அமைப்பது நலமென்று தோன்றுகிறது.

மிருக பலமும், அதை அஸ்திவாரமாகக் கொண்ட வல்லரசுகளும் தோற்றுவிட்டால் ஜனநாயகம் தானே தோன்றிவிடுமென்று நினைப்பது தவறு. ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும் குழப்பமும் கலகமும் பெருகி வருகின்றன. பெரிய கட்சிகளும், திட்டங்களும் தோன்றி, தேர்தல் மூலம் அவற்றின் ஆதிக்கம் நிலைபெறும் வரையில் அமைதி ஏற்படாது. இங்கிலாந்தில் தொழிற்கட்சியின் வெற்றி இதர நாடுகளில் ஜனநாயக ஆட்சிகள் ஸ்தாபிக்கப்படுவதற்குப் பெரிய சாதகமாக இருக்கும்.

## காய் கறித்தோட்டம்

பேராசிரியர் மு. அருணசலம் எழுதியது. சக்தி காரியாலய வெளியீடு. விலை 5—0—0.

பெரிய தமிழ்ப்பண்டிதர் எளிய நடையில் எழுதுவதே அரிது. அதிலும் அன்றாட விஷயங்களையும் கறி சமைத்தலைப்பற்றியும் எழுதுவது என்ருல் ஆச்சரியமுண்டாகும் அல்லவா? அதுமட்டுமல்ல. தானே தோட்டம்போட்டு, காய்கறிகளை உற்பத்திசெய்து அந்த அனுபவமுதிர்ச்சியைக் கொண்டு எழுதப்பட்ட புத்தகமாகத் தெரிகிறது இது. ஆகையால் பெரிதும் பயன்படக்கூடியது தான். "நமதுநாடு விவசாய நாடு. மக்களில் 100-க்கு 90பேர் கிராமத்தில் வசிப்பவர்கள், இவர்களுக்கு விவசாயத்தைப் பற்றி ஏதாவது அதிகமாகத் தெரியவேண்டுமானுல் எளிய நடையில் தாய்மொழியில் புத்தகங்கள் வெளிவரவேண்டும்" என்று தான்பதிப்பாசிரியர் "தோட்டவேலை வரிசை "என்று ஆரம்பித்து, இதை அதன் முதல் புத்தகமாக வெளியிடுகிருர். சரியான விஷயம்தான். அதற்காக ரு. 5 விலை கொடுத்து வாங்கும் கிராம மக்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிருர்கள்?

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.




உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்கலைவிட அதிக-நாள் உழைக்கும்.

மைசூர் சில்க்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

# கதம்பம்

## அர்த்தநாரீச்வரரின் அவதாரம்!

தேம்ஸ்நதி தீரத்தில், லண்டன் மாநகரில் அர்த்தநாரீச்வரர் அவதாரம் செய்துள்ளார். இந்தக் கலிகால அர்த்தநாரீச்வரர் முழுவதும் ஆண்வேடமே கொண்டுள்ளார்; பாதி பெண்ணின் உருவமும், மற்றப் பாதி ஆண் உருவாகவும் அல்ல. அர்த்தநாரீச்வரர் ஆங்கிலேயர் நாட்டில் அவதரித்தது இன்னும் விசேஷமாம். அங்கு வீற்றிருந்தே இக் கடவுள் இந்தியர்களின் க்ஷேமத்தில் அக்கரை கொள்வாராம். ஸ்திரீகளிடம் அதிக பக்தி கொண்டவராம். தம் மனைவியை எப்பொழுதும் பக்கத்தில் தம்மோடு இணைத்துப் பிணைத்துக்கொள்ள, தேக சக்தி இல்லாததினால் மனைவியின் பெயரை மட்டும் தம் பெயருக்கு முன்னால் சூட்டிக்கொண்டுள்ளார். இவர்தான் நமது புதிய இந்தியா மந்திரி பெதிக் லாரன்ஸ் பிரபு.

அர்த்தநாரீச்வரர் என்ற திருநாமத்தை இந்தியா மந்திரிக்குச் சூட்டினவர் திருவனந்தபுரத்திலிருக்கும் டாக்டர் கஸின்ஸ் அவர்கள்.

சாதாரணமாக ஸ்திரீகளே தங்கள் பெயருக்கு அப்பால் புருஷன் பெயரையும் சேர்த்துக்கொள்வது வழக்கம். கமலா சுப்பிரமணியன், லீலா சுந்தரராமன், அலமேலு கோதண்டன் என்ற பெயர்கொண்ட நாகரிக நாரீமணிகளை நாம் அறிவோம். லாரன்ஸ் என்ற பெயருடைய ஆண் மகன் ஒருவன் தன் மனைவியின் பெயராகிய பெதிக் என்பதை முன்னால் சேர்த்து, பெதிக் லாரன்ஸ் என்று வைத்துக்கொண்டது விநோதமாக இருக்கிறது.

காரணம் தெரியுமா? அவர் மனைவி ஸ்திரீகளின் சுதந்தரத்தில் அக்கரை கொண்டவராம். புருஷனும் ஸ்திரீகளுக்குப் பெருமையளிப்பதில் ஆர்வம் கொண்டவராம். தம் மனைவியைத் தெய்வமாகக் கொண்டாடுபவராம். ஆகவே அர்த்தநாரீச்வரர் என்ற பெயர் பொருத்தமாம்.

இந்த அர்த்தநாரீச்வரர் இந்தியா விஷயமாகத் திருவருள்புரியும் திருவிளையாடல்களை நின்று சுவனிப்போம்!

## கோஷ்டி மரியாதை!

தலைப்பைக் கண்டதும் வைஷ்ணவ பக்த சிகாமணிகளுக்குப் பிரசாதங்களின் பரிமளமும், துளசி—தீர்த்த மகிமையும் தான் மனக்கண் முன் ஊசலாடும். இது வேறு விஷயம் ஸ்வாமிகாள்!

"ரைட்! புதிதாக வந்தவர்கள் வரிசையாக நில்லுங்கள். சீக்கிரம்! அட எழவே! கிராப் தலைகள் தனிவரிசை, குடுமிகள் இந்தப்பக்கம். பார்பர்! கிராப்தலைகளுக்குக் குடுமிகள்வை! குடுமிகளை வெட்டு!

"கொண்டா அந்தச் சட்டித்தாரை(Tar). பூசு இவர்கள் மூஞ்சியில்! சுண்ணும்புச் சட்டியை எடு ஜல்தியாக! பட்டையடி தேக முழுவதிலும்!

"எங்கே அந்த அழுகிய முட்டைகள்? அன்பார்ந்த சகோதரர்களே, இவைகளை உண்டுகளியுங்கள்!

"விளக்கெண்ணெய்! விளக்கெண்ணெய்! ஆருயிர்த் தோழர்களே, அருந்துங்கள்!"

"ஏனடா இன்னும் தாமதம்? தீவட்டித் தடியன்களா! இவர்களது உடைகளை விலக்குங்கள்!"

"ரொம்ப ரைட்! எல்லோரும் போகலாம்!" இவ்வித அட்டகாச கொடூரச்செயல்கள் எங்கு நடக்கும், யோசியுங்கள்.!

அலிப்பூர் சிறையில் அவதிப்படும் கைதிகளின் அவதிகளா? இல்லை.

ஹிட்லர் பிரிட்டிஷ் யுத்தக் கைதிகளை நடத்தியவிதமா? — ஒருகாலும் அப்படியிருக்காது. பின் போலீஸ் புலிகள் உண்மையைக் கக்கவைக்கக் கையாளும் சித்திரவதை முறைகளா?—இல்லவேயில்லை.

சுயமரியாதைச் சூரர்களின் கலாட்டாவா? அடகடவுளே! ஏனய்யா இந்தக் குயுத்தி!

பின் என்ன விஷயம்?

வெறும் தமாஷ் ஸ்வாமி! எல்லாம் வேடிக்கையார்த்தம். பெற்றதாய் தகப்பன்மார்கள் வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி, படாதபாடெல்லாம் பட்டு, பிள்ளைகளை 'ஹாஸ்ட'லில் சேர்த்து அந்திக் காலத்தில் உதவுவார்கள் என்று ஏமாறுகிறார்களல்லவா? இந்த ஹாஸ்டல் பழைய பிள்ளைகள் புதிதாக ஹாஸ்டலுக்கு வந்துசேரும் அப்பாவிப்பிள்ளைகளை மேலே கண்டபடி பாடுபடுத்தியே தங்கள் கோஷ்டியில் சேர்த்துக்

கொள்ளுவது வழக்கமாம். இப்படியாகச் சமீபத்தில் சென்னையிலுள்ள பிரபல விக்டோரியா ஹாஸ்டலில் புதிதாக வந்துள்ளவர்களுக்கு 'மரியாதை'கள் செய்யப்பட்டு அவர்கள் பழைய பிள்ளைகளது திருக்கோஷ்டியில் கலந்துகொண்டார்களாம். இப்படிப்பட்ட வழக்கம் நாகரிகம் முற்றியதாகச்சொல்லப்படும் சீமையில் அதிவிமரிசையாக நடைபெறுவதுண்டாம். அந்த 'மாடலை' அனுசரித்தே நம் நாட்டு ஹாஸ்டல்களிலும் நடத்தப்படுகிறதாம்.

சீமை மக்களிடம் எவ்வளவோ நல்ல பழக்கவழக்கங்கள் உள்ளனவே, அவைகளைப் பின்பற்றக்கூடாதா? ஆபாஸங்களைத்தான் அனுசரிக்க வேண்டுமோ என்று சிந்தனையாளர் பலர் சிந்திக்கலாம். பயன்? முட்டாள் பட்டம்தான் கட்டிக்கொள்ளலாம்!

## வாருங்கள் வாருங்கள் !

திடீரென்று சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளை எவ்விதத்திலும் திருப்தி செய்யப் பிரிட்டன் இப்பொழுது முனைந்துள்ளது. வங்காளத்துக்கு ஆஸ்திரேலிய துரை கவர்னராக வருவிக்கப்பட்டார். வந்தவர் இன்னும் பல ஆஸ்திரேலியர்களை இந்தியாவுக்கு. இறக்குமதி செய்து இந்தியாவின் பணத்தை விரயம்செய்ய உதவினார்.

வெள்ளையர்களின் கூட்டத்தை இந்தியாவில் அதிகரிக்கச் செய்ய அமெரி துரை பிரும்மாண்டமான திட்டம் போட்டார். அதன்படி பல வெள்ளையர்கள் இந்தியாவின் பணத்தை எப்பமிட வசதியளிக்கப்பட்டது. ஆனாலும் வெள்ளையர் கூட்டம் இந்தியாவில் போதுமானதாகக் கருதப்படவில்லை. பிரிட்டனிலுள்ள திறமைசாலி வெள்ளையர்களை இந்தியா மந்திரியின் ஆசைகாட்டல் மயக்கவில்லை.

வெள்ளையர் கூட்டம் பெருக, குடியேற்ற நாடுகளிலிருந்து உதவாக்கரைகளெல்லாம் இந்தியாவில் உத்தியோகம் பெற்று, இந்திய மக்களின்மீது பிரிட்டனின் ஆதிக்கத்தை அதிகரிக்கச் செய்ய, சூழ்ச்சி செய்யப்படுகிறது. காரியங்கள் திரை மறைவில் மூடுமந்திரமாக நடத்தப்படுகின்றன.

"இந்திய சிவில் சர்விஸுக்கும் போலீசுக்கும் கனேடியர்களைச் சேர்ப்பதாக இந்திய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதாம்." பம்பாய் இந்திய வியாபாரிகள் சங்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது இதை. யுத்தம் முடிந்தபின் வேலையில்லாத் திண்டாட்டத்தின் கொடுமை தாங்கமுடியாத அளவில் இந்தியாவில் இருக்குமென்பதாக விஷயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள். இந்திய மக்களிடம் அனுதாபமுள்ள—பொறுப்புள்ள—அரசாங்கம் இல்லாத நிலைமையில் மேலே கண்ட செய்தி திடுக்கிடச் செய்கிறது. இந்திய சட்டசபையிலுள்ள நமது பிரதிநிதிகள் இது விஷயத்தில் சற்றே கவனம் செலுத்த வேண்டுகிறோம்.

## குற்றவாளியும் லாட்டரி சீட்டும்!

கோயில் திருப்பணி செய்யப் பணமில்லையா? போடு லாட்டரி! அயர்லாந்து குதிரைப் பந்தயமா? லாட்டரி சீட்டு! பிறக்கப்போவது ஆணா, பெண்ணா, அலியா என்பதை அறிய, சீட்டுக்குலுக்கிப் போடப்படுகிறது. எல்லோரும் 'லாட்ரி' போடவே சர்க்காருக்கும் அத்தொத்து நோய் பரவி, அவர்களும் லாட்டரி சீட்டு மோகம்பிடித்து அலைகிறார்கள். யுத்தநிதிக்குப் பணம் சேர்க்க வேண்டுமா, போடு 'லாட்ரி'! மக்களை, சேமிப்புப் பத்திரங்கள் வாங்கவைக்க வேண்டுமா, குலுக்கு லாட்டரி சீட்டுக்களை. லாட்டரி சீட்டுக்களின் உபயோகத்தின் எல்லையை இன்னும் யாரும் முடிவாகக் கண்டுபிடிக்கவில்லை.

சமீபத்தில் ஸிம்லாவுக்கு அருகிலுள்ள ஓர் ஊர் போலீஸார் உருளைக்கிழங்கு மூட்டை ஒன்று திருட்டுப்போனதைக் கண்டுபிடிக்க லாட்டரி சீட்டை உபயோகித்தனராம். இரண்டு துண்டுக் காகிதங்களை எடுத்து, ஒன்றில் "குற்றவாளி, கைதுசெய்" என்றும், மற்றொரு துண்டில் "குற்றவாளியல்ல, கைதுசெய்யவேண்டாம்" என்பதாகவும் எழுதிக்கொண்டார்கள். திருட்டுப்போனவிடத்தில்போய் துப்பு விசாரித்தார்கள். சந்தேகப்பட்டவர்களைக் கைது செய்யுமுன், முன் எழுதிய இரண்டு சீட்டுக்களையும் குலுக்கிப்போட்டு ஒரு போலீஸ் சேவகனை விட்டு ஒன்றை எடுக்கச் செய்தார்கள். "குற்றவாளி, கைது செய்" என்று எழுதிய சீட்டைப் பொறுக்கினான். சந்தேகப்பட்டவன் கைது செய்யப்பட்டான். குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்தது. போதுமான சாக்ஷியமில்லையென்று மாஜிஸ்ட்ரேட் வழக்கைத் தள்ளுபடி செய்தாராம்.

என்ன அநியாயம், தெய்வமே பார்த்து, குற்றவாளி என்று சொல்லிவிட்ட பிறகு வேறு சாக்ஷியம் எதற்கு என்று சம்பந்தப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கருதுவதாக வதந்தி!

# புத்தக விமர்சனம்

## கோதைத் தீவு

வ. ரா. எழுதியது. திருச்சி புத்தக நிலையம் பிரசுரம் விலை ரூ. 2—0—0.

வ. ரா. என்றாலே விறுவிறுப்புத்தான் என்பது வாசகர்களுக்குத் தெரியும். உண்மையாகப் பெண்களின் அடிமைத் தளைகள் நீங்கவேண்டுமானால் அவர்களுக்கும் ஆண்களுக்குச் சமமாக உரிமைகள் கொடுப்பதுடன் சொத்து உரிமையும் கொடுக்கவேண்டும். ஆண்கள் பெண்களை நடத்தும் முறையிலுள்ள முரண்பாடுகளை விளக்கிக் காட்டுவதற்காக நம்மை ஒரு கற்பனை உலகிற்கு வ. ரா. அழைத்துச் செல்கிறார். அவ்வுலகம்தான் கோதைத் தீவு—பெண்கள் தனி அரசு செலுத்தும் நாரீபுரி. ஆண்கள் பெண்களுக்கு அடங்கி, சமதர்ம அரசியல் தலைசிறந்து விளங்கும் நாடு சித்திரிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆண்டாள், சாவித்ரி, அஹல்யை முதலியவர்களின் சரித்ரங்களுக்குப் புது முறைவியாக்யானம். முதல்பத்து அத்யாயங்கள் வரையில் கதைக்கும் கற்பனைக்கும் வேண்டாத விபீஷணன், சிபி, நளன் முதலியவர்களைப் பற்றிய விதண்டாவாதங்கள், 'இயற்கையாக எழும் உணர்ச்சிகள் கூடாது' என்று கட்டுப்பாடு செய்யும் வைதீகர்களைப் பற்றிய தூஷணை, இவைகளும் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இவ்விஷயங்களை ஆசிரியர் வேறு புத்தகமாக வெளியிட ஒதுக்கி வைத்துக்கொண்டுவிட்டு, கற்பனை நாரீபுரியை மட்டில் விஸ்தரித்துக்கொண்டு போயிருந்தால் படிப்பவர்களில் பெரும்பான்மையோருக்குத் திருப்தியளிப்பதாகும்.

## தாவரங்களின் இல்லறம்

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் எழுதி, அல்லயன்ஸ் கம்பெனி வெளியிட்டது. விலை ரூ. 1-8-0.

தாவரங்களுக்கு உயிர் இருக்கிறது என்பதை நம் நாட்டு முன்னோர்கள் முன்பே கண்டுபிடித்து, மஹாபாரதம் முதலிய பெருங் காவ்யங்களிலும் விசதமாக விளக்கிவிட்டுச் சென்றனர். ஜகதீச சந்திரரைப் போன்ற நம்நாட்டு விஞ்ஞானிகள் தாவரங்கள் உயிர்வாழும் விசித்ரத்தை விஞ்ஞானக் கண்ணாடிகள் மூலமாக யாவரும் கண்கூடாகக் காணும்படி செய்துவிட்டுச் சென்றனர். தாவரங்கள் வளரும் வகைகளையும் வாழ்க்கை முறைகளையும் சுத்த தமிழில் விளக்கும் பாக்யம் இப்பொழுது ராஜாஜிக்கு வாய்த்திருக்கிறது. இனிமையான புத்தகம். பள்ளிக்கூடங்களிலும் பாட புத்தகமாக் வைக்க ஏற்றது. விஞ்ஞான ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ப் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்

கி. சந்திரசேகரன் எழுதியது. விலை ரூ. 8-0-0 கலைமகள் காரியாலய வெளியீடு.

"நாற்காலியுமில்லை, கீற்காலியுமில்லை" என்கிறாரே 'கீற்காலி' என்றால் என்ன? கிருஷ்ணஸ்வாமி ஐயர் விடுத்த விடை வேண்டுமானால் இப் புத்தகத்தில் பக்கம் 512-ல் காணலாம். அதிலிருந்தே கிருஷ்ணஸ்வாமி ஐயரது நுண்ணறிவும் ஸமயோசித ஸாமர்த்தியமும் வெளியாகின்றன. ஆனால் இந்தப் புஸ்தகம் கிருஷ்ணஸ்வாமி ஐயரது ஜீவிய சரிதம் மட்டில் அல்ல. தென் இந்தியாவின் 20 வருஷத்திய சரிதமே இது. வெள்ளைக்காரர்கள் இந்தியர்களை நடத்திய விதமும், கர்ஸன் பிரபு இந்தியர்களை, வேலைத் திறமையற்றவர்கள், யோக்யப் பொறுப்பற்று தந்திரங்களிலும் சூழ்ச்சிகளிலுமே ஈடுபட்டு, சத்திய நெறியினின்று வழுவும் இயல்புடையவர்கள்' என்று இகழ்ந்ததற்கு மறுமொழி கூற கிருஷ்ணஸ்வாமி ஐயர் முன்வந்ததும், ஆரிய சரித்திரம் என்ற அருமையான நூலை வெளியிட்டதும், தாமே கவர்னரது நிர்வாக சபையில் அமர்ந்து வேலை செய்து இந்தியரின் திறமையையும் சத்திய நெறியையும் எடுத்துக் காட்டினதும் இப்புஸ்தகத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. பக்ஷபாதமின்றி, தம் தந்தையின் சால்பியல்புகளையும் குற்றங் குறைகளையும் வெளிப்படுத்தும் ஸ்ரீ சந்திரசேகரனது முயற்சி பாராட்டற்குரியது.

## தமிழ் மலர்

பதிப்பாசிரியர். தி. மு. ரா. தமிழ் மலர் நிலயம். திருமானூர் P. O. திருச்சிவழி,

தமிழ் மலர் நிலயத்தாரின் முதல் வெளியீடு வரப்பெற்றோம். மாதம் ஒரு புத்தகம் வெளிரவப்போவதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டுப் பிரபல எழுத்தாளர்கள் யாவரும் இதில் எழுதுகிறார்கள்.

## கன்னித் தெய்வம்

ஸ்ரீமதி எம். எஸ். கமலா எழுதியது. சென்னை பிராட்வே ஸ்ரீமகள் கம்பெனி பிரசுரம். விலை 2-4-0

பலரகப்பட்ட இனிய கதைகள். ஏற்ற நடை. ஏற்கனவே பத்திரிகைகளில் வெளிவந்தவைகள்தான் என்றாலும் கோவையில் ஓர் குணம் உண்டல்லவா?



குன்றுகளினின்று வீசும்—
நறுமணத் தென்றல் போலவே........
ரிமள புஷ்பங்கள்....பச்சை யிளஞ் செடி கொடிகள்..குளிர்ச்சியோங்கும் தோப்புக்கள்.. வழிநடந்து அலுத்துப்போன யாத்ரிகர்களை எங்ஙனம் தேற்றுகின்றனவோ அதைப்போன்றே டாடா கம்பெனியாரின் நறுமணங் கமழுவதும் களைப்பாற்றுவதுமான ஓடி கொலோன் சோர்வுற்ற மனதிற்கும் தளர்வுற்ற தேகத்திற்கும் ஆசுவாசமளிக்கின்றது.
A TATA PRODUCT
டாடாஸ்
ஓ டி கொலோன்
டாம்கோ விற்பனை இலாகா வாணியர் தெரு,
த. பெ. நெ. 31, மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்

# ஆடை

தி. சே. சௌ. ராஜன்

“நிர்வாண தேசத்தில் கோவணம் கட்டுபவன் பைத்தியக்காரன்” என்று ஒரு பழமொழி நமது நாட்டிலுண்டு. அதற்கு எதிரிடையாக “ஆடை உடுக்கும் தேசத்தில் நிர்வாணமாயிருப்பவன் பைத்தியக்காரன்” என்று சொல்வதும் பொருந்தும். உடை உடுத்துபவன், உடுத்ாதவன் கதை இப்படியிருக்க, நடைமுறையில் நாமெல்லோரும் உடை உடுத்தி வருகிறோம். ‘உடை உடுத்தவேண்டுமா, அவசியமா, அப்படி வேண்டுமானால் எந்தப் பொருளைக்கொண்டு உடை செய்துகொள்வது, அதை எப்படி உடுத்துவது’ என்கிற விசாரணை ஏற்படுகிறது. ஏன் மனிதர்கள் பலவிதமாக உடுத்துகிறார்கள்? ஆண் பெண் இருபாலார்களுக்குள் ஆடைமுறை ஏன் மாறுபட்டிருக்கிறது? இவற்றையும் கூட ஆராய்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. உடை சுகத்திற்கா அல்லது அழகிற்கா என்பவற்றையும் தெரிந்துகொள்ளவேண்டும். சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி உடை மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா வென்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். மனிதன் உடை உடுத்திக் கொள்ளும் முறையில் சுகம் பெறுவது அடிப்படையான நோக்கமாக இருக்க வேண்டும். உடையின் காரணமாக நோயைச் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது. இந்தக் கருத்துக்களை மனத்துட்கொண்டு தமிழ்நாட்டில் உடை உடுத்தும் முறையைப்பற்றி ஆராயவேண்டும்.

தமிழ்நாட்டில் வருஷத்தில் பத்துமாதங்களுக்கு மேற்படச் சீதோஷ்ண நிலைக்காக உடலை மூடவேண்டிய அவசியமில்லை. ஆகையால் மறைக்கப்படவேண்டிய அங்கங்களை மூடுவதற்கு வேண்டுவதைத்தவிர அதிக ஆடை அவசியம் இல்லை. எனினும் உடையைப் பற்றிய பண்பு நாளாவட்டத்தில் பலவிதமாக உருக்கொண்டு எழுகிறது. மனிதன் நிர்வாணமாயிருந்தது மாறி எப்பொழுது உடை உடுத்தப் புகுந்தான் என்று சரித்திர பூர்வமாக நிர்ணயப்படுத்த முடியாது. மனம் களங்கமற்று, ஆணும் பெண்ணும் கூடி வாழவேண்டிய வரம்பிற்கு உட்பட்டு, சுகவாழ்வு நடத்திய காலத்தில் நிர்வாணமாக இருந்திருக்கலாம். ஆதி மனிதன் இயற்கைப் பாதுகாப்பினால் ஏற்பட்டிருந்த முறையைத் தவிர வேறு உடை உடுத்தினதாகத் தெரியவில்லை. மனம் மாறுபட்டுக் கேவலமடைந்து, சிற்றின்ப மோகம் கட்டுக்கடங்காமல் போனகாலம் முதல்தான் உடலை மறைக்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும். அதிலும் பெண் தனது அங்கங்களை மறைத்துக்கொள்ள வேண்டி இருந்திருக்கும்; பிறகு ஆணும் அவ்வண்ணமே சிறிது குறைவான உடையை உடுக்கத் தொடங்கி இருக்கவேண்டும். மரம், மட்டை, தழை இவைகளைக் கொண்டு ஆதியில் உடலை மறைத்துக்கொண்டிருந்ததை இன்னும் காட்டில் வசிக்கும் சில மக்களிடத்துக் காணலாம். நாளாவட்டத்தில் தோல், பருத்தி, பட்டு, மயிர் முதலியவைகளைக் கொண்டு நூற்று, நெய்து, பிறகு வர்ணங்கள் தீட்டி அழகுபடுத்தி, தற்கால நாகரிக ஆடைகளாக வியாபார முறையில் கொண்டு விற்று அணியப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் சுகாதார முறைக்காக உடை அணிவதென்பது மறந்துபோய் விட்டது; அழகிற்கும், அலங்காரத்திற்கும், சிறிதளவு சீதோஷ்ண நிலைக்காகவும் அணியப்பட்டு வருகிறது.

அழகென்பது உடையின் மூலமாக ஏற்படுகிறதாவென்பது எனக்குச் சந்தேகம். உயிரில்லாத உருவங்களுக்கு, மாறி மாறி ஆடை உடுத்தி, ஜவுளிக் கடைகளின் முன்னிலையில் நிறுத்தி, வியாபாரத்தைப் பெருக்குவதற்காகத் தற்காலம் விளம்பரப் படுத்தப்படுகிறது. சுகத்தைக் கவனியாது வீண் டம்பத்திற்காக, பொருத்தமற்ற விலை உயர்ந்த உடைகளை அணிபவர்கள், வியாபாரிக்கு நடமாடும் இலவச விளம்பரங்களாக விளங்குகிறார்கள். பகுத்தறிவுள்ள ஓர் ஜாதியார் முதலில் சுகத்திற்

காகவும், பிறகு உடை உடுத்துவதில் அழகிருந்தால் அதற்காகவும், உடையை உபயோகப்படுத்த வேண்டும். உருவத்தின் அழகை வெளிப்படுத்தச் சிற்பிகளும், ஓவியக்காரர்களும் ஏன் நிர்வாண நிலையைப் பின்பற்றுகிறார்கள்? ஆதிகாலந் தொடங்கிப் பண்பு உற்ற நாடுகளிலெல்லாம் இதே முறையைத்தான் மேதாவிகள் பின்பற்றி வந்திருக்கிறார்கள். அருமையான சிற்பங்கள் நிறைந்த நமது கோயில்களிலும் சரி, சிலைகள் நிறைந்த இத்தாலி தேசத்திலும் சரி, நவீன ஆங்கில ஐரோப்பிய சிற்பச்சாலைகள், கண்காட்சிச் சாலைகள், சிங்காரத் தோட்டங்கள், இவைகளெல்லாவற்றிலும் நிர்வாண உருவங்கள் நிறைந்திருக்கின்றன. கலைஞன் மனித உருவத்தை நிர்வாணமாகவே மனக்கண்ணால் கண்டு இன்புற்று வர்ணிக்கிறான். மறைந்திருக்கும் பொருளைத் தேடுவது மனித இயல்பு. அதிலும் இளம் வயதுள்ள ஒரு கட்டழகி தனது உருவத்தை உடையால் மறைத்தாளாகில் ஆடவரின் கண்கள் அவள் உருவத்தை அதிகம் நாடுகின்றன. அவர்களுடைய நாட்டத்தை வசீகரிக்கத் தமது அங்கங்களைச் சற்று மறைப்பதும் மறைக்காததுமாக உடை அணிகிறார்கள் இளமங்கையர்கள். நிர்வாண தேசத்தில் ஆண் பெண் கவர்ச்சி இவ்விதமிருக்க முடியாது. இயற்கை அழகிற்குத்தான் மதிப்பு இருக்கக்கூடும். இயற்கை வனப்பை அதிகப்படுத்துவதற்கு மட்டிலும் உடைதரிப்பது வழக்கமானால் அதில் ஒரு கருத்து இருக்கிறது. அப்படியின்றிச் சுமைதாங்கிபோல் பொருத்தமில்லாத விலையுயர்ந்த உடைகளை அணிவதால் விலை மாதர்களுக்குக்கூட அதில் லாபமில்லை. உடை உடுத்துவதில் அறிவுவேண்டும்; சுகாதாரப் பழக்கம்வேண்டும். சாக்கு மூட்டைபோல் எந்த உடையையும் கட்டிச் சுற்றித்திரிவது அறிவீனம். தற்காலம் பெண் மக்கள் உடைக்குச் சினிமா நடிகை குரு. வேஷம் போட்டு நிழல் படங்களின் மூலம் கண்ணைக் கவரும் நடிகர்கள்போல நமது பெண் மக்கள் உடைதரிக்க முற்படுவது கேவலம்.

தமிழ்நாட்டில் அதிக உடை அவசியமில்லை. தொன்று தொட்டுப் பழக்கத்திலிருந்துவரும் உடையில் அனுபவமும், ஆரோக்கியமும் உண்டு. உடலில் மறைக்க வேண்டிய பாகம் தவிர மற்றவை நல்ல காற்றும், வெயிலும்பட, திறந்திருப்பது பலவிதத்திலும் சுகத்தைக் கொடுக்கும்; குளிர்காலத்தில் மட்டிலும் அவை மூடியிருக்கலாம். முன்காலத்தில் பாராளும் மன்னர் முதல் குடியானவன் வரையில் உடலின் மேல் பாகத்தை மூடும் வழக்கம் கிடையாது: திறந்த உடலில் ஆபரணங்கள் பூட்டிக் கிரீடம் வைத்து, தோளில் கேடயம் தரித்து, அழகுசெய்துகொள்வது வழக்கம். நமது நாட்டுச் சீதோஷ்ண நிலைக்கு அது பொருத்தமாக இருந்தது. விலை உயர்ந்த பட்டாடைகளையும், மிகத்திறமையுடன் வேலைப்பாடு செய்யப்பட்ட ஜரிகையால் அலங்கரிக்கப்பட்ட அருமையான பீதாம்பரங்களையும் அணிந்தார்கள். உள்ளும் புறமும் வெம்பி, வெதும்பி, வியர்த்து, துர்நாற்றமெடுக்கும் முறையில் அணியவில்லை; நல்ல காற்றோட்டமிருக்கும்படியாகவும் உடலின்மேல் பாகத்தில் அணிந்துகொண்டார்கள். வியர்க்கும் இடங்களைச் சுலபமாகத் துடைத்துக்கொள்வதற்கும் வசதியுள்ளபடி உபயோகித்தார்கள். அரசன் என்றும் தீரனாயும், உடல் உறுதி, கட்டு உள்ளவனாயும் இருந்தான். அவனது வைரம் பாய்ந்த உடலமைப்பைப் பார்ப்பதற்கே கம்பீரமாய், அழகாகவிருக்கும் விதம் உடைகளை அணிந்தான்.

உடையில் தையல் வேலை, இந்தக் காலத்தில் இருப்பது போல இருந்திருக்கமுடியாது. நல்ல விலையுயர்ந்த பட்டு, ஜரிகை, முதலிய உடைகளைத் துண்டு துண்டாகக் கத்தரித்து பிறகு அதைப் பட்டு நூலால் தைத்து உடை செய்யும் பழக்கம் இருந்திருக்கமுடியாது. அந்தக் காலத்தில் நாட்டில் துணி ஏராளமாக உற்பத்தியாகி, கப்பல் கப்பல்களாக அயல்நாட்டுக்கு நாம் ஏற்றுமதிசெய்து வாணிகம் செய்துவந்துள்ளோம். ஆகையால் நமது உடைகள் ஆண்களுக்குப் பத்தும் ஆறுமாகப் பதினாறு முழமும் பெண்களுக்குப் பன்னிரண்டு முழம்முதல் பதினெட்டு முழம் வரையிலும் கிழிக்காமல், கத்தரிக்காமல், தைக்காமல் அன்றும், இன்றும் கூட நாம் உடுத்திவருகிறோம். ஆண்மகன் முழங்காலிற்குக் கீழாகக் கட்டவேண்டிய அவசியமில்லை, கச்சம் வைத்துக் கட்டினாலும் சரி, அல்லது சுற்றிக் கட்டினாலும் சரி. கச்சம்வைத்து நீட்டித் தொங்கவிட்

டுக் காற்றில் பறப்பதில் பெருமையில்லை. சுற்றிக் கட்டி முழங்காலிற்குக் கீழாக நடக்கும்பொழுது கால்களை வீசிவைக்க முடியாமல், துணியின் ஓரங்களைக்கிழித்து விடுவதும் பயனில்லை. கச்சம் கட்டாதவர்கள் கோவணம்கட்டவேண்டும். இதனை நவீன நாகரிகத்தில் அநேகர் பின்பற்றுவதில்லை. "லங்கோடு அல்லது சல்லடம்" ஏதாகிலும் அணிவது முறையாகும். மேல் நாடுகளில்கூட உடைதரிக்கும் நிபந்தனைகள் சற்றுத் தளர்ந்துவருகின்றன. யுத்த காலத்திற்கேற்றவாறு, அனுபவத்தினால் விவேகமுள்ள சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. நன்றாகக் கஞ்சிதடவி விறைப்பாக இஸ்திரி செய்யப்பட்டு அணியப்பட்ட காலர் (கழுத்தைச் சுற்றி அணிவது) இப்பொழுது மாறி வருகிறது. காற்றுப் புகும் வண்ணம், நாலைந்து அடுக்குகள் ஒன்றின்மேலொன்றாக, எந்த சீதோஷ்ண நிலையிலும், மாட்டிக்கொண்டு அவதிப்படும் ஆங்கிலேயர்களும், அவர்களது அடியார்களும், ஒரே ஷர்ட் அல்லது கோட்ஷர்ட் இரண்டும், ஒரே துணியால் இணைக்கப்பட்ட உடல் மூடியை அணிகிறார்கள். இடையிலும், காலிலும் அணியும் நிஜாரை, அகலமாயும் தளர்ந்து காற்று உட்புகுவதற்கு வேண்டிய இடமும், கால், இடை இவைகளை கஷ்டப்படாமல் மடித்துகொண்டு, உட்கார,படுக்க வசதியுள்ளதாயும் அணிகிறார்கள். ஆங்கில மாதர்களும் பழைய காலத்துப் பூதாகாரமான—அடுக்கடுக்கான—துணிகளை ஒன்றின் மேலொன்றாக அணிவதில்லை. அவர்களுடைய பாவாடைகள் முழங்காலோடு நின்றுவிட்டன; இன்னும் மேலேறிக்கொர்ண்டும் போகின்றன. நீண்ட மேஜோடுகள் அணிந்த காலம் மறைந்துவிட்டது. அரைக் கச்சையை (Shorts) ஆண்மகன் எப்படியோ அப்படியே பெண்களும் அணிகிறார்கள். ஒரு சமயம் ஆண்பிள்ளை மேஜோடு போட்டாலும் பெண்பிள்ளைகள் அணிவதில்லை; இதில் நாகரிகக் குறைவு ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை; சுகாதாரத்திற்குப் பொருத்தமாகவிருக்கிறது.

தமிழ்நாட்டிலே தங்கியிருக்கும் வெள்ளைப் பட்டாளங்கள், தங்கள் விடுதியில் தங்கியிருக்கும் காலத்தில் எவ்வித உடையையும் போட்டு உடலை மூடுவதில்லை; இடுப்பில் கச்சை தவிர வேறு அணிவதில்லை; தினசரி கவாத்துப்பழகும் காலத்தில்கூட உடலை மூடாமலே பயிற்சி செய்கிறார்கள். தமிழர்கள் வெகுகாலமாகப் பின்பற்றி வரும் முறையும் இதுவேதான் காலப்போக்கின் அனுபவத்தின் காரணமாக, நமது நாட்டின் நிலைமைக்குத் தகுந்தவாறு அன்னியர்களும் நம் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. அப்படியிருக்க நாம் மட்டிலும் ஏன் பழைய பசலி ஐரோப்பியர்களைப் பின்பற்றிவருகிறோம்? இதுவும் நமது அடிமை மனப்பான்மைக்கு ஒரு சான்று. உடலை மூட வேண்டிய அவசியம் ஆண்பிள்ளைக்கு ஏற்பட்டால், காற்றுப்புகும்படியாக, தாராளமான இடம்விட்டுத் தைத்த குடுத்தா அல்லது ஜிப்பா போன்றவைகளை அவசியமான வேளைகளில் தரித்தால் போதுமானது. உயர்ந்த வேலைப்பாடுடைய பட்டு, ஜரிகை, முதலியவைகளை அங்கவஸ்திரமாகத் திறந்த உடலில் தரிப்பது நலம். தேவையானால் அவைகளைக் கொண்டே உடலை மூடிக்கொள்ளலாம். வியர்வை கசியவைத்து, உடலை மூடிக்கொண்டு அவஸ்தைப்படுவது அறிவீனம். காந்தி சகாப்தம் நமது நாட்டில் பலவித உண்மைகளைப் பரப்பியுள்ளது. அதில் நாட்டின் உடையும் அதன் தத்துவ நாகரிகமும் ஒன்று.

கிராமங்களில் உடை விஷயத்தில் முட்டாள்தனமான பழக்கம் ஏற்பட்டு வருகிறது. கையெழுத்துப் போடத் தெரியாத கிராமக் குடியானவன்கூடச் சட்டை அணிய ஆரம்பித்துவிட்டான். வெயிலில் வேலை செய்யும் காலத்தில்கூட விடாது அணிகிறான். இது சுகத்திற்குக் கேடு என்பது அவனுக்குத் தெரியாது. தனக்குள்ள மதிப்பு,சொக்காய்போடுவதினால் அதிகரித்துவிட்டதாக எண்ணுகிறான். மாசற்ற தனது உடலில் சூரியனுடைய ஒளிக் கதிர்கள் வீசும் பாக்கியத்தைத் தடுத்து வருகிறான். தினசரி அணியும் சட்டையைத் துவைக்காமல், அநேக நாள் வரையில் அழுக்கும், எண்ணெயும் படியவிட்டு, நோய் பரவுவதற்குச் சட்டையை உறைவிடமாக்கிக்கொண்டு, சொறி, சிரங்கு, மேகப்புற்று, படை, கரப்பான் முதலிய விகாரமான ரோகங்களால் அவதிப்படுகிறான். உழைப்பாளிக்கு இடையில் கோவணமோ அல்லது முழத்துண்டோ

போதுமானது. ஆறுமுழம் வேஷ்டி வெயில் காலத்தில் தலையில் கட்டவும், குளிருக்கு மேலே போர்த்திக்கொள்ளவும் போதுமானது. சுகம் குன்றாத உடை இது தான். வடநாட்டாருடைய உடையும் நமக்குத் தேவையில்லை; அதனுடைய அழகும் நமக்கு வேண்டாம்.

பெண்களுக்கு உரியஉடையை மலையாள நாட்டில் காணலாம்; நவீன கேரளம் அல்ல, புராதன கேரளம். முண்டுத் துணி இடையிலும் மேலும். சுத்தமான வெள்ளை. அழகிற்குக் கரைகள். பெண் களுக்கும் கோவணம் உண்டு. தலை மயி ரின் வனப்பும், வளர்த்தியும் உடையின் அழகை மேன்மைப்படுத்துவன. சுத்தம், சிக்கனம், அழகு, சுகாதாரம் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற உடை கேரள நாட்டுப்பெண்மணிகள் யாது காரணத் தாலோமற்றத் தமிழ்நாட்டினரைப்போல மடிப்புப் புடவைகள், கழுத்துவரையில் மூடின சட்டைகள் முதலியவைகளை அணி ந்துவரத் துவக்கிவிட்டார்கள். இந்தஉடை அவர்களுக்குப் பொருத்தமுள்ளதாக எனக்குத்தோன்றவில்லை. மலையாளத்துப் பெண்மணிகளுக்கு யோசனை கூற நான் யார்? சுகாதார முறையின் காரணமாக மட்டிலும் நான் எனது அபிப்பிராயத் தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டுப் பெண்மணிகள் தற்சமயம் தேவைக்கு அதிகமானதும் பொருத்தமில் லாததுமான உடையை அணிகிறார்கள். கிராமங்களில் தினப்படி வேலை செய்யும் பெண்கள் சுத்தப்படுத்தப்படாத அழுக் குச் சட்டையைத் தினசரி அணிந்து உழை த்து வருகிறார்கள். அதனால் அவர்களுக் குத் தோலைப்பற்றிய பலவித நோய்கள் உண்டாகின்றனவென்பது எனது அனுப வம். சூரிய வெளிச்சத்தால் பண்படாத உடலில் நோய் எளிதில் பரவும். வெயி லும், வியர்வையுமுள்ள நமது நாட்டில் உடையின் தத்துவத்தைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். ஆந் திரம் மகாராஷ்டரம் இந்தத் தேசங்களில் பெண்கள் கச்சம் வைத்து, முழங்காலிற்கு மேல் புடவை கட்டுகிறார்கள். இந்தப் பழக்கம் முக்கியமாக உழைப்பாளிகளுக்கு உகந்ததாக இருக்கிறது. தமிழ்நாட்டிலும் பட்டாணிப் பெண் மக்கள் எல்லோரும் முழங்காலிற்கு மேல்தான் சீலை கட்டு கிறார்கள். ரவிக்கை சட்டை போடுவதும் அவசியத்தின்பேரில் அணியவேண்டும். கூடிய மட்டில் எவ்வளவு குறைவாக அணிய முடியுமோ அவ்விதம் அணிய வேண்டும். அதிலும் நவீன நாகரிகம் புராதன வழக்கத்தை யொட்டியே வரு கிறது. அவசியமானமட்டில் மார்பை மறைக்க வேண்டும். இறுகக் கட்டி முடிந்து, மூச்சுவிடுவதைத் தடை செய்யக் கூடாது. சீலையை இடையில் இறுகக் கட்டுவது எல்லாவிதத்திலும் சுகத்திற்குக் கேடு விளைவிக்கும்; ரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்தும்; உணவு, வயிறு, குடல் களில் போவதைத் தடை செய்யும்; கர்ப் பப் பை முதலியவைகள் இடம்விட்டுச் சாய்ந்து போவதற்குக் காரணமாகும். பெண்களுக்குண்டாகும் பலவித நோய் களுக்கு இடையை இறுகக் கட்டுவதும் ஒரு காரணம். மேலும், அரையில் தழும்பு ஏறி, விகாரமான தோற்றத்தை உண்டு பண்ணும். உடை அணிவது காற்று உட்புகுந்து சஞ்சரிக்கக் கூடிய முறையில் இருக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு உடை தேவையில்லை. பிறந்து இரண்டு அல்லது மூன்று வருஷங் கள் வரை நிர்வாணமாகவே இருக்கலாம். இளம் வெய்யிலில் காலை மாலை முதலிய நேரங்களில் வெளியிலாவது, தோட்டங் களிலாவது அல்லது வீட்டு முற்றத்திலா வது ஓடி விளையாடும்படி விட்டுவிடவேண் டும். அதற்குப் பிறகு அரையில் ஏதாகி லும் ஒரு கச்சை கட்டவேண்டும். இதைத் தவிர வேறு உடை வேண்டியதில்லை. பள்ளியில் சேர்க்கும் வயதுவரும் வரை யில் இப்படியே இருக்கலாம். முதல் நான்கு வகுப்புக்கள் வரையில் அவர் களுக்குச் சட்டை அணிய அவசியமில்லை. அரையில் ஒரு துண்டு அல்லது சிறிய பாவாடை போதுமானது. இவைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் பழக்கம் அவர்களுக்குப் பள்ளியில் ஏற்படவேண் டும். பத்து வயதிற்குமேற்பட்டவர் களுக்கு அரையில் கச்சையும் (Shorts) அதுவும் முழங்காலிற்கு மேலாகவும், மற்றப் பாகத்திற்குச் சட்டையும் அணிய வேண்டும். சட்டையும் அரைக்கையுள்ள தாகவிருக்கவேண்டும். கிராமங்களில் உழைப்பாளிகள் வீட்டுக் குழந்தைக்கு உடை உடுத்துவதில் ஒரு கணக்கு உண்டு.

ஆடு மேய்க்கும காலத்தில் நிர்வாணம். அடுத்தபடியாக மாடு மேய்க்கும் காலத்தில் கோவணம். பண்ணை வேலைக்கு ஆரம்பிக்கும்பொழுது துண்டும் வேஷ்டியும். இப்பொழுது கிராமங்களில்கூட இந்தப் பழக்கம் மாறிவருகிறது. ஆண், பெண் இருவரும் சட்டை அணியத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் அதைச் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரிந்து கொள்ளவில்லை. மேலும் உழைப்பாளிகளாக நாள் முழுதும், வயலிலும், வரப்பிலும், களத்திலும், வாய்க்காலிலும் வேலை செய்பவர்கள் அழுக்குப்படிந்து வியர்வையில் நனைந்து, அதே ஒரு உடையை மாற்றுவதற்கில்லாமலும், துவைப்பதற்கில்லாமலும் நாள் கணக்கில் போட்டுக்கொண்டு அவதிப்படும் காட்சி பரிதவிக்கத் தக்கதாயிருக்கிறது. வறுமையும், அறியாமையும் சேர்ந்திருப்பதோடு, போலி நாகரிக உணர்ச்சியும் கூடிவிட்டால், உடை, உடலைக் காப்பாற்றுவதிலிருந்து நோய்க் களஞ்சியமாக மாறிவிடுகிறது.

நமது ஆடைகளுக்குத் தேவையான பருத்தி நம் நாட்டில் உண்டாகிறது; தேவைக்கு மேலும் உண்டாகிறது. சீதோஷ்ண நிலைக்குத் தகுந்த உடை நம் பூமி நமக்கு அளிக்கிறது. குளிர்காலத்தில் போர்த்திக்கொள்ளத் துப்பட்டியும், படுக்க ஜமக்காளமும், உடுத்த மெல்லிய ஆடையும் நமக்குப்போதும். அதிலும் நாமே பருத்தியை அடித்துப் பட்டை போட்டு, நூற்றுவிட்டால் நம்மூர் தறிக்காரர்கள் நெய்து கொடுத்துவிடுவார்கள். இப்பொழுது கைத்தறிக்காரர்கள் நூல் கிடைக்கவில்லையென்று கூக்குரலிடுகிறார்கள். மில் நூல் எல்லாம் கட்டுக்கட்டாக இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகிறது. உணவைச்சமைத்து வீட்டில் உண்பது போல நூலையும் ஓய்வு நேரத்தில் நூற்றுவிட்டால் நாம் இவ்வளவு பரிதாபகரமான நிலையிலிருக்க மாட்டோம். மாகாத்மாகாந்தி அல்லும் பகலும் இருபத்தைந்து வருஷகாலமாக நம்மை நூற்க அழைக்கிறார்; தாமும் தவறாது நூற்று வருகிறார். இதன் தத்துவத்தைப் பெரும்பான்மையோர் இன்னும் பின்பற்றக் காணோம். பட்டு உடுத்துவதற்கு நல்ல உடை. ஆனால் அதற்கு விலை அதிகம். பட்டுநூல் உண்டாக்கும் புழுவை வளர்த்துக்கொன்று நூலைத்திருடவேண்டியிருக்கிறது. கம்பளி நூல் தமிழ் நாட்டில் நமக்கு அவசியமில்லை. அதை உடுத்தும் குளிர் நமக்குக்கிடையாது; துவைத்துச் சுத்தம்செய்ய இயலாது; தேவையும் கிடையாது. மேல்நாட்டினரிடமிருந்து யாசகம் வாங்கிய பழக்கம். வேலைப்பாடுள்ள சால்வை புராதனமாக நம் நாட்டில் வழங்கிவருகிறது. அதை அலங்காரமாகத்தரிப்பது மாத்திரம் வழக்கம். அப்படி உபயோகப்படுத்தும்பொழுதுகூட உட்புறத்தில் பருத்தியினால் செய்த வேஷ்டியை உறுத்தாமல் வைத்து, பிறகு உபயோகப்படுத்துவது வழக்கம். இப்பொழுது அப்பழக்கங்கள் அநேகமாய் மறைந்துவிட்டன. பெண்களால் செய்யப்படும் அருமையான கைத்திறன் குன்றி, ஓர் அபூர்வமான நிலையும் மங்கி வருகிறது. மேல் நாடுகளிலிருந்து பகட்டான போர்வைகளும், கம்பளிகளும் மில்களில் மூட்டை மூட்டையாகத் தயாரிக்கப்பட்டு நம்மிடத்தில் பரவிவருகின்றன. தென்னிந்தியாவில் கம்பளிச்சட்டை போடுவது மூடத்தனம்; சுகக்கேடு; அடிமைத்தனத்திற்கு அறிகுறி. நார்மடிகள் இன்னும் அணியப்பட்டு வருகின்றன. பட்டிற்கும், பருத்திக்கும் நடுவில் ஸ்தானம் வகிக்கிறது நார்; பட்டிற்கு உரிய உறுதி நாருக்குக் கிடையாது; பருத்தியிலுள்ள சுகம் கிடையாது; பட்டும் பருத்தியும் கிடைக்காத இடத்தில் நார் உபயோகிக்கலாம். ஆடை அணிவதில் சுகம் அடிப்படை. அழகு சுகத்திற்கு விரோதமாகயிருக்கக்கூடாது. அலங்காரம், அழகு சுகம் இரண்டிற்கும் முரணாகவிருக்கக்கூடாது. இந்த நுட்பங்களை அறிந்து அறிஞர்கள் ஆடை உடுத்தும் முறையைப் பின்பற்றி மற்றவர்களுக்கும் வழிகாட்டவேண்டும்.

# நம் விஞ்ஞானிகள்

நா. அனந்த வைத்யநாதன்

'ஸயன்ஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் விஞ்ஞானத்திலும் வேறு துறை ஒவ்வொன்றிலும் நமது தாய்நாடாகிய இந்தியா அதிகத் தேர்ச்சியடைந்து மிக்க கீர்த்தி வாய்ந்தது. இப்புண்ணிய நாட்டிலிருந்தே வெளி நாடுகளுக்கு விஞ்ஞான அறிவு பரவியதென்பதையும், மேல் நாடு காட்டுமிருண்டித்தனமாயிருந்த காலத்தில் நம் நாடு வெகு உயர்வான நாகரிக நிலையிலிருந்ததென்பதையும் காட்டப் பல ஆதாரங்களிருக்கின்றன. எல்லாக்கலைகளுக்கும் அடிப்படையாய் நிற்பது கணித சாஸ்திரம் என்று சொல்லுவது மிகையாகாது. கணிதத்திற்கு உயிர்நிலை எண். பூஜ்யம், எண் வரிசை, அவற்றின் அர்த்தம் என்பவற்றையும், இன்னும் கணக்கியலுக்குள்ள பல மூல உண்மைகளையும் முதலில் அறிந்து உலகிற்கு இவ்வறிவைப் புகட்டியது நமது இந்தியாவே. இன்னும் இலக்கியம், தர்க்கம் முதலியவற்றிலும் இந்தியா உன்னத ஸ்தானத்தைப் பெற்றிருந்தது. வறட்டுக் கொள்கையில் மட்டும் நம்நாடு ஈடுபட்டிருந்தது என்று எண்ணவேண்டாம். பல அபூர்வமான ரஸாயனத் தொழில்களும் இங்கு நடந்தன. அக்கால இந்திய எஃகுக்கு ஈடு உண்டோ என்பது சந்தேகந்தான், சுமார் 1200 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்ட 10 டன் நிறையுள்ள ஓர் இரும்புத்தூண் டெல்லிமாநகரத்திற்குச் சமீபத்தில் இன்னும் நின்றுகொண்டிருக்கிறது. மழை, வெய்யில், வானிலை மாறுபாடு ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல், சிறிதேனும் துருப்பிடிக்காமல், அது புத்தம் புதியதாய்க் காணப்படுகிறது. வியாபார முறையிலும் இந்தியா சிறந்து விளங்கி நின்றது.

பல வழிகளில் உலகிற்கு வழிகாட்டியாக நின்ற இந்தியா அநேக காரணங்களால் தனது சக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க நேரிட்டது. பிற நாடு ஒவ்வொன்றும் விஞ்ஞான அறிவை வளர்த்துக்கொண்டு வர, இந்தியா தூங்கிக்கொண்டிருக்க நேர்ந்தது. இதைக் காட்டப்பாரதியார் சொல்லுகிறார்—"புத்தம் புதிய கலைகள்—பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்—மெத்த வளருது மேற்கே—அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை." இவ்வசை மொழியைக் கேட்டுச் சினங்கொண்டு, சிலர், நமது முன்னோரின் அரிய பெரிய திறமைகளை எடுத்துக் காட்டிச் சமாதானம் சொல்லி ஒருவாறு திருப்தி அடைகின்றனர். இப்பழம் பெருமையிலேயே நாம் பெருமை அடைவது மகிமையா? பாரதியார் கூறுகிறார்:—"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை; திறமான புலமையெனில், வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்." இது காறும் தூக்கத்திலமர்ந்திருந்த இந்தியத் தாய் விழித்துக்கொண்டுவிட்டாள். ஒவ்வொரு துறையிலும் வெகு ஊக்கத்துடன் வேலை தொடங்கிவிட்டது. பாரதியாரின் எண்ணமும் ஆசையும் பூர்த்தியாகிக் கொண்டு வருகின்றன. அந்நாள் நன்னாளாக எந்நாள் வருமோ என்று இனி ஏங்க வேண்டாம். இந்திய மக்கள் நம்நாட்டின் புகழ் ஓங்கி நிற்கும்படியும், பிற நாட்டுப் பேரறிவாளர்கள் திகைக்கும்படியும், அவர் நமது இந்தியாவை வணங்கும்படியும் செய்ய நம்நாட்டில் விஞ்ஞானிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டனர். 'விடியலுக்கு முன் கும்மிருட்டு' என்பது ஒரு பழமொழி. இருள் நீங்கிவிட்டது. மங்களகரமான ஒளி கிளம்பிவிட்டது. அதற்குக் காரணமாயிருக்கும் நம் நாட்டுத் தற்கால விஞ்ஞானிகள் சிலரின் சரித்திரங்களைக் கவனிப்போம்.

## ராமானுஜம்

கணித உலகில் நம் நாட்டிற்கு, முக்கியமாய் நமது தமிழ் நாட்டிற்கு, அழியாப் புகழை இந்நாளில் அளித்தவர் ராமானுஜம். இப்பெரியார், ஸர்வஜித் வருஷம் மார்கழி மாதம் ஒன்பதாம்தேதி, (22-12-1887) அவரது தந்தை ஸ்ரீநிவாஸய்யங்கார் நாமகிரி அம்மனைக் குறித்துத் தவஞ்செய்த பயனால், பிறந்தார். இவர்

ஏழைக்குடும்பத்தவர். முறைப்படி அக்ஷ ராப்பியாஸம் செய்விக்கப்பட்டுக் கும்ப கோணம் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட் டார்; இளம்வயது முதற்கொண்டே கணக் கில் ஆர்வம் காட்டி வந்தார்; எப்பொழு தும் ஆழ்ந்த யோசனையில் இருப்பார்; தமது சிநேகிதர்களுடன் ஓடிஆடி விளை யாடமாட்டார்; அதிகம் பேசக்கூடமாட் டாராம்; அவரது கணக்குப் புதிர்களைக் கண்டு அவரது தந்தை, சுற்றத்தார், வாத்திமார் எல்லோரும் திகைத்து ஆச்சரி யப் படுவார்களாம்!

அவர் கீழ்வகுப்பி லிருந்த காலத்தில், அவரது கணக்கு வாத்தியார் 'எந்த எண்ணையும் அதே எண்ணால் வகுக்க ஈவு ஒன்று' என்று சொல்லியவுடன், ராமானுஜம் 'பூஜ் யத்தைப் பூஜ்யத் தால் வகுத்தால் ஈவு என்ன ஸார்?' என்றாராம்; இன் னும் 'பூமிக்கும் நக்ஷத்திரத்திற்கும் என்ன தூரம்?' என்று கேட்பா ராம். ஏழாவது வகுப்பில் வாசித்த பொழுதே, பி. ஏ. வகுப்பிற்குள்ள கணித நூல்களைப் படித்து அதிலுள்ள சிக்கலான கேள்வி களுக்கு வெகு சுலப மாகப் பதில் அளிப் பாராம் இம்மேதாவி. சிறுவயதிலேயே, பிரசித்திபெற்ற ஆயிலர் (Euler) என்ற கணித சாஸ்திரி கண்டுபிடித்த உண் மையை (Euler's theorems for the sine and the cosine) ராமானுஜம் தாமாகவே கண்டுபிடித்தாராம். பிறகு ஒரு கணக்குப் புத்தகத்தில் அதே உண்மை முன்பே கண்டுபிடிக்கப்பட்டதாக இருக் கக் கண்டு ஏமாற்றமடைந்தாராம், இவ ரது புத்தி சாதுரியத்தை மெச்சி அவருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டது.



ராமானுஜன் இங்கிலாந்தில் வசித்துவந்தபொழுது சில இந்திய நண்பர்களுடன் எடுத்த படம்; நடு வில் பருத்த சரீரத்துடன் வீற்றிருப்பவர் அவரே

16-ஆவது வயதில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினார்; கும்பகோணம் கலாசாலையில் எப். ஏ. வகுப்பில் சேர்ந் தார்; இந்நுண்ணறிவாளர், அவ்வருஷக் கடைசியில் நடந்த ஆங்கிலப் பரீக்ஷை யில் வெகு மோசமாக விடையளித்தா ரென்றும், ஆனதால் அவர் மேல் வகுப் புக்கு அனுப்பப்படவில்லை யென்றும் கேட்க உங்களுக்கு ஆச்சரியமாக இருக்க வில்லையா? இதனால் இவருக்குக் கொடுக் கப்பட்டுவந்த உபகாரச் சம்பளம் நிறுத் தப்பட்டது. தந்தை க்குத் தொந்தரவு கொடுக்கக்கூடா தென்று எண்ணி, விசாகபட்டினம், சென்னை முதலிய இடங்களுக்குச் சென்றார். 'சரஸ் வதி, இருக்குமிடத் தில் லக்ஷ்மி இருக் கமாட்டாள்' என்று மக்கள் சொல்வதும் உண்மைபோலும். பச்சையப்பன் கல் லூரியில் சேர்ந்து எப். ஏ. பரீக்ஷைக்கு போனார் (1906). ஆனால் வெற்றி அடையவில்லை. இது வும் விந்தையே. ஆனால் எது நேரிடி னும் மனச்சஞ்சல மடையாமல் கண க்கு ஆராய்ச்சியி லேயே ஈடுபட்டு, தாமறிந்த விஷயங் களை இரு பெரிய குறிப்புப் புஸ்தகங்களில் அவ்வப்போது எழுதிவந்தார். மேலே படிக்க இடமில்லா மல் போய்விட்டது. 1909ல் இவருக்குத் திருமணமும் நடந்தது.

எங்காவது வேலையிலமர்ந்து கால க்ஷேபம் செய்யவேணுமே என்ற கவலை கொண்டார். இவரது திறமையை நன் கறிந்த ஆசிரியர் சேஷுவய்யர் கணித சங்கஸ்தாபகர் ராமசாமி அய்யர் திவான் பகதூர் ராமச்சந்திர ராவ் என்ற மூவரும்

திரவிய சகாயமும் வாக்கு சகாயமும் செய்துவந்தனர். சென்னைத் துறைமுக ஆபீசில் சொல்ப சம்பளத்திற்கு. குமாஸ்தாவாக அமர்ந்தார். எது எப்படி நடந்தாலும் கணக்கிலுள்ள ஊக்கமும் ஆசையும் சிறிதேனும் தளர்வடையவில்லை. பல பெரியார்களின் சிபார்சின்பேரில் சென்னை சர்வகலாசாலையார் இவருக்கு மாதம் ரூ. 75/- கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். வேறு அலுவல்கள் இல்லாமல் கணக்கு ஆராய்ச்சியிலேயே தமது புத்தியைச் செலுத்துவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்தது கண்டு மகிழ்ந்து, இன்னும் அதிக ஊக்கத்துடன் வேலை செய்தார்.

கேம்ப்ரிட்ஜ் கலாசாலை கணித பேராசிரியர் ஜீ.எச். ஹார்டிக்கு (G.H. Hardy) ராமானுஜத்தின் திறமை தெரியவந்தது. விஞ்ஞான முறைப்படி ராமானுஜம் இச் சாஸ்திரத்தைக் கற்றால் மிக நன்மை விளையுமென்று எண்ணி, இவரைச் சீமைக்கு வரும்படி அழைத்தார். ராமானுஜம் பரம வைதிக குணம் கொண்டவராதலால் அதற்கு இசையவில்லை. ஆனால் எப்படியும் இவரைச் சீமைக்கு இழுத்துவிடுவது என்று ஹார்டி தீர்மானித்தார். சென்னைக்கு அவர் சகா நெவில் என்பவர் 1914ல் பிரசங்கம் செய்யவந்தார். ராமானுஜத்தை எப்படியாவது சீமைக்குத் தம்முடன் அழைத்து வரவேண்டும் என்று நெவிலுக்கு ஹார்டி கட்டளை இட்டிருந்தார். இக்காலத்திலும் தெய்வீகச் செயல்கள் நடக்கின்றன என்றே சொல்லவேண்டும். இச்சமயத்தில் ராமானுஜத்தின் தாய் ஓரிரவு, 'தனது மைந்தன் வெள்ளைக்காரர்களுக்கிடையே இருப்பதாயும், அவன் சீமைக்குப் போவதில் குறுக்கே நிற்கக்கூடாதென்று நாமகிரி அம்மன் கட்டளையிட்டதாகவும்' கனவு கண்டாள். சென்னை சர்வகலாசாலையாரும் பண உதவி செய்ய இசைந்தனர். இப்பணத்திலிருந்து தமது தாயாருக்கு ஒரு பகுதியை அனுப்புவதற்கு ராமானுஜம் ஏற்பாடு செய்தார்.

பணத்தொந்தரவு நீங்கிவிடவே ராமானுஜம் மிக்க உற்சாகத்துடன் வேலை செய்தார். கோட்பாட்டு முறைப்படி ஹார்டி ராமானுஜத்திற்குப் பாடம் கற்பித்தார். சில சமயங்களில் இவ்விருவருக்குள் குரு யார், சிஷ்யன் யார் என்பது தெரியாமலிருந்தது. ராமானுஜம் தம்மிடத்திலிருந்து கற்றுப் பலனடைந்ததைவிட, தாமே அவரிடம் பல அரிய விஷயங்களைக் கற்றுப் பயன்பெற்றதாக ஹார்டி எழுதியிருக்கிறார். இவ்விரு கணித சிகாமணிகளும் பல அபூர்வ விஷயங்களை வெளியிட்டிருக்கின்றனர். ராமானுஜத்தின் கணித ஆராய்ச்சிகளைப் புஸ்தக ரூபமாக ஹார்டி வெளியிட்டிருக்கிறார். விஞ்ஞான உலகில் ஹார்டிக்கு ஒரு பெரும் புகழுண்டு. கணக்கு சம்பந்தமான ஆராய்ச்சிகளைவிட அவர் செய்த ஒரு பெரிய ஆராய்ச்சி உண்டு; ராமானுஜத்தின் மகிமையை அவர் ஆராய்ந்தறிந்ததே அது.

ஆதி முதல் ராமானுஜத்தின் போக்கும் வழியும் குறுக்காகவும் பிறருக்கு எளிதில் விளங்கக்கூடாதனவாகவும் இருந்தன. ஆனதால் இவரது அநேக வியாசங்களைக் கணித பத்திரிகைகள் முதலில் பிரசுரிக்க மறுத்துத் திருப்பிவிட்டனவாம். இவர் வரம் பெற்ற விஞ்ஞானி. கடினமான கணக்குக்களுக்கு விடையளிக்கும் மார்க்கங்களை இவர் கனவில் கண்டிருக்கிறாராம். விழித்துக்கொண்டவுடன் புஸ்தகத்தில் குறித்து விடுவாராம். புஸ்தகங்களைப் படித்துக் கணித விவகாரங்களை அறியாதவர். இவர் இந்தியாவிலிருந்தபோது மூன்று கணித புத்தகங்கள்தான் படித்திருப்பார். இவைதான் அவருடைய ஆர்வத்தைத் தூண்டிவிட்டன. பல கணித சாஸ்திர உண்மைகளைத் தமது மனக்கண்ணால் ஆராய்ந்தறிந்தார். ஆனால் இந்த உண்மைகளை மேல்நாட்டுக் கணக்கு அறிவாளிகள் அறிந்து பல நூல்கள் மூலம் வெளியிட்டுள்ளனர். இந்த வெளியீடுகளை அவர் பார்த்தவருமல்ல; அவற்றைப் பற்றிக் கேள்விப்பட்டவருமல்ல. இவ்வுண்மைகள் பலவற்றை அவர் தாமே கண்டுபிடித்தார். எண்களிடத்துள்ள அவரது ஆர்வம் சொல்வதற்கரிது. ஒவ்வொரு எண்ணும் ராமானுஜத்தின் அந்தரங்கத் தோழன் என்கிறார் லிடில்வுட் (Littlewood) என்ற அறிஞர். ராமானுஜத்தின் எண் சம்பந்தமான தேர்ந்த அறிவைக் கீழ்க்கண்ட சம்பவம் காட்டும். நோயாளியாயிருந்த ராமானுஜத்தைப் பார்க்க ஹார்டி 1729-ஆம் எண்ணையுடைய வாட

கை மோட்டாரில் சென்றார். 1729 என்பதின் காரண எண்கள் (7×13×19) அதிருஷ்ட எண்களில்லையே என்று ஹார்டி கூறினாராம். ராமானுஜம் உடனே அடாடா! அது ஒரு விசேஷ எண்ணல்லவா? இரு விதங்களில், இரண்டு எண்களுடைய கனங்களின் ஒரே கூட்டுத்தொகையைக் கொடுக்கக்கூடிய சிறிய எண் இதுவே ($1729 = 12^3 + 1^3 = 10^3 + 9^3$. It is the smallest number expressible as a sum of two cubes in two different ways') என்றாராம். எண் சம்பந்தமான ஆராய்ச்சியில் ராமானுஜத்திற்கு மிஞ்சியவர் ஒருவருமில்லை. இவரது சில கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்காமல் இன்னும் கணித வல்லாளர்கள் திணறிக்கொண்டிருக்கிறார்கள். ஹார்டி சொல்லுகிறார் :—“தற்கால கணிதநூல் சரித்திரத்தில் ராமானுஜம் அற்புத கற்பனாசக்தர். அவரது வாழ்நாளில் ஏற்பட்ட சம்பவங்கள் புதிர்களாகவும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் இருக்கின்றன. மக்களின் யோக்யதையை நிதானிக்க நாம் சாதாரணமாகக் கையாளும் முறை எதுவும் அவரது பெருமையின் எல்லையைக் கண்டறியப் பயனற்றதாக இருக்கிறது. பலர் பலவிதமாக அவரது மகிமையை வருணிக்கலாம். ஒன்றுமட்டும் நிச்சயம். எவரெவர் எங்கெந்த அபிப்பிராயத்தைக் கூறினபோதிலும், கடைசியாக எல்லோரும் “ராமானுஜம் ஒரு மாபெரும் கணித சிகாமணி” என்று ஏகோபித்த முடிவுக்கு வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

ராமானுஜம் வேத நெறிப்பட்ட ஆசார அனுஷ்டானமுள்ளவர். அவர் மாத்ரு வாக்ய பரிபாலன சிரேஷ்டர். தம் ஜாதிக்குரிய பழக்க வழக்கங்கள் ஒவ்வொன்றையும் கைவிடாது அவர் இங்கிலாந்திலிருந்த பொழுதும் தாயாருக்கு வாக்களித்தபடி அனுசரித்து வந்தார். இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குச் சென்ற மக்களிடையே இந்த மனோதிடத்தைக் காண்பதரிது. கடைசி வரையில் அவர் மரக்கறியையே இங்கிலாந்தில் உண்டுவந்தார். எவ்வித மாமிச உணவையும் கண்ணெடுத்துப் பாரார். அவர் அங்கு நோய்வாய்ப்பட்டிருந்த காலத்து இவ்வைராக்கியம் அவர் சுகமடைவதற்குப் பெரிய இடையூறாக இருந்தது. அவர் கேம்பிரிட்ஜில் இருந்த காலம் முழுவதும் தமக்கு வேண்டிய ஆகாரத்தைத் தாமே சமைத்துக்கொண்டார். தாம் அணிந்திருந்த மேல்நாட்டு உடையைக் களைந்துவிட்டு இந்திய உடையை அணிந்தே சமைக்கச் செல்லுவார். ஆனால் அவருடைய மனப்போக்கோ வெகு விசாலமானது. எதிலும் நல்லதைக் கண்டு களிக்கும் மனப்பாங்குடையவர். எல்லா மதமும் ஓர் உண்மையையே போதிப்பதாகத் தமக்குத் தோன்றுகிறதென்று அவர் ஹார்டியிடம் கூறினாராம்.

துரதிருஷ்டவசமாக ராமானுஜம் 1917ல் ஒரு கடும் தீரா நோய்க்குள்ளானார். ஐரோப்பிய மகா யுத்தம் நடந்துகொண்டிருந்த காலம் அது. ஹார்டி மிகப் பிரயாசையுடன் ராமானுஜத்தின் சௌகரியத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்தார். இச்சமயத்தில் (1918) அவர் எப். ஆர். எஸ். (F. R S. Fellow of the Royal Society) ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இம் மரியாதையை முதன்முதலில் அடைந்த இந்தியர் இவரே. தாய்நாட்டை அடைந்தால் குணம் ஏற்படுமென்று கருதி 1919-ல் இந்தியாவுக்கு வந்தார். வேண்டியவரையில் சிகித்சை செய்து பார்த்தார்கள். தெய்வ சம்மதம் வேறாகப்போய்விட்டது. தாயையும் மனைவியையும் தீராத் துக்கத்துக்காளாக்கி, 1920ஆம் வருஷம் ஏப்ரல்மாதம் 20-ம் தேதி ராமானுஜம் உயிர் துறந்தார். இவரது உடல் மண்ணோடு மண்ணாக நசித்தும், இவரது புகழ் என்றும் அழியாமல் விருத்தியாகிக்கொண்டு வருகிறது.

# வறுமையை வென்ற புலமை

நாகநாதபுரம் சண்முகாநந்தன்

"என்ன ஆச்சரியம்! என்ன தர்மம்! என்ன காலம்! நீதிவழுவாத வழுதி கூடலில் இப்பேர்ப்பட்ட காரியம் செய்யத் துணிந்த கள்வன் யார்? நாட்டிலே ஒரு துரும்பை அநியாயமாகக் களவாடினாலும் அதைப் பார்த்து, தகுந்த தண்டனைவிதிக்கும் இப்பாண்டி நாட்டில் பாண்டியனுடைய போர்வையைக் களவாடிய திருடன் என்ன தைரியமுடையவனாய் இருக்கலாம்! போர்வை பாண்டிய கருணை உருவையே—நீதி உடலையே—போர்த்திக்கொண்டு, தர்மத்தைப் பாதுகாக்கும் தர்ம நெறியாக இருக்கும் பொழுது, கணத்தில் கள்ள நெஞ்சத்துடன் களவாடிய அக்கொடும் திருடனைக் கண்டுபிடித்து, தகுந்த தண்டனை கொடுக்காவிடில், பாண்டியனுடைய அரசல்லவா நெறிபிசகிய பெரும் பாவத்திற்குள்ளாகியதாகும்.

"ஹாம்...அதற்கும் இடமில்லை. உண்மைதான். நாட்டில் உண்ண உணவிற்கும் உடுக்க உடைக்கும் தரித்திர மிகுந்திருந்தால்......ஒரு சமயம் மழையில் குளிரைப் பாதுகாக்கப்போர்வையைக் களவாடியிருக்கலாம், அப்படியும் நாட்டில் பஞ்சமில்லை. ஹாம், எப்படியிருந்தாலும் திருடனைக் கண்டுபிடித்தே திரவேண்டும்." என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி மெய்மறந்து கிடக்கிறான் மந்திரி.

மதுரை நகரம் ஓரே அமளிதுமளிப் படுகிறது. எங்கும் ஒரே பேச்சு! ஒரே முழக்கம்! ஒற்றர்கள் நாற்புறமும் புகை நுழையாத இடமெல்லாம் நுழைந்து துப்பறிகிறார்கள்.

'ஆ! நாட்டின் செல்வமெல்லாம்......நாட்டின் செழிப்பெல்லாம்...நலத்தின் கொழிப்பெல்லாம்...பிறதேச அரசனுக்கு அடிமையாகப்போகின்றவே. நம்நாட்டை அவர்கள் கைவசப் படுத்திவிட்டால் என்ன மாறுதல்கள் ஏற்படுமோ? நீதி தவறுமோ? நெறி பிசகுமோ? மக்கள் நலிவார்களோ? இன்னும் என்னென்ன தீங்குகள் ஏற்படுமோ? என்று வருந்தி, போருக்கு ஆயத்தப்படுத்துகிறார்கள் பாண்டிய நாட்டு வீரர்கள்.

எதிரிதான் தூது அனுப்பி, தான் யுத்தத்திற்கு வருகிறேன் என்பதற்கு அறிகுறியாக அரசனுடைய போர்வையை அரசன் மேலிருந்து பறித்துக் கொண்டுபோயிருக்க வேண்டும். என்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு பரபரப்புடன் தம் வீட்டிலுள்ள ஆண்மக்களைப் போருக்குப் போகும்படி உத்ஸாகப் படுத்துகின்றனர் சில வீரப் பெண்மணிகள். ஜயம்பெற்று வாருங்கள்; மார்பிலே காயம் தாங்குங்கள்; ஒத்துழைப்புடனும் திறமையுடனும் சண்டைசெய்யுங்கள் என்று வாழ்த்துகிறார்கள் சில பெரிய தாய்மார்கள். தம் கணவன் யுத்தத்திற்குச் செல்லப் போகிறான்; தம் கணவன் தான் படைக்கே திறம்பெற்றவன் என்று எண்ணிப் பெருமிதங்கொண்டு குதூகலத்துடன் ஆடிப் பாடுகிறார்கள் சில யௌவன மங்கைகள்.

எதிரி வந்தால் தமிழ் நசித்துவிடுமோ, தமிழ்க்கலைகள் களைந்தெறியப்படுமோ என்று விசனம் கொண்டிருக்கிறார்கள் சில தமிழ்ப்புலவர்கள்.

இப்படியாக, நாட்டிலே ஒரே முழக்கம். எங்கும் பரபரப்பு. ஆனால் அரசன் ஒன்றுக்கும் கவலைப்படவேயில்லை. அவன் வதனம் வாடவேயில்லை. அல்லது கோபத்தினால் கண்கள் சிவக்கக் கூடவில்லை. ஆனால் அடுத்தவினாடியோ! இன்னும் சற்று நேரத்திலோ! என்று,எதையோ எதிர்பார்ப்பதைக் கண்ணாடிபோல எடுத்துக்காட்டியது பாண்டியனுடையமுகம். சிற்சில சமயங்களில் புன்சிரிப்புத் தோன்றுவதும், சிரிப்பை அவன் அடக்க முயல்வதுமாய் இருந்தான். இன்னும் சற்றுநேரத்தில் நிகழப்போவதை நினைத்துப் புளகாங்கிதம் அடைபவனாய் இருந்தான். பொதுவாக அரசசபையிலே புலவர்கள் ஒருவர்க்கொருவர் வாதாடும் பொழுது ஏற்படும் இன்பத்திலும்—தமிழை அமுதமாகப்பருகும் சமயத்தில் ஏற்படும் ஆனந்தத்திலும்—தன் வீரர்களின் புயவலிவைபார்க்கும் நேரத்தில் ஏற்படும் கம்பீரத்திலும்—ஒற்றர்கள் நாட்டைப் பற்றிச் சொல்லும் பொழுது ஏற்படும் சந்தோஷத்திலும், பன்மடங்கிற்குப் பன்மடங்கான குதூகலம் கொண்டவனாய் இருந்தான் என்றே சொல்லவேண்டும். தான் செய்த பெரியகாரியத்தையும், இன்னும் கொஞ்ச நேரத்தில் நிகழப்போகும் சம்பவத்தை

யும் எண்ணும்பொழுது அவன் முகம் மலர்ந்தது.

பாண்டியனுடைய மனைவிக்கு மனதிலே பலத்த போராட்டம். இன்னது செய்வதென்று புலனாகவில்லை. மெல்லவும் முடியாதவளாய் விழுங்கவும் முடியாதவளாய் இங்கும் அங்கும் செயலற்று அலைவதும், புரள்வதுமாய் இருந்தாள். தன்கணவனின் வதனத்திலே தவழும் சாந்தியும் உள்ளத்திலே ஏற்பட்ட ஆசையினால் ஏற்படும் சந்தோஷமும் முகத்தில் ஒளிர்வதைக் கண்டதும் சற்று அச்சம் விடுத்தாள். ஆயினும் நாட்டின் பாதுகாப்பிற்கு வேண்டிய காரியங்களை அரசன் கவனிக்கவில்லையே என்று சிறிது கோபமும் அடைந்தாள். அப்படியென்ன நடக்கப்போகிறது?

— 2 —

அரண்மனை வாயிலில் ஒரே கும்பல். படைவல்லாரும், ஒற்றர்களும், தமிழ்ப் பெரியார்களும், இன்னும் பல நகரவாசிகளுமான ஆண்மக்களும் பெண்மக்களும் சேர்ந்தகூட்டம். அவற்றில் பலர் பலவிதமாய் மனதில் தோன்றிய விதமெல்லாம் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்களுக்கிடையில் தாடியும் மீசையும் அடர்ந்த ஒரு வயது சென்றவர் ஒன்றும் தோன்றாது விழித்துக் கொண்டிருந்தார். அவர் தளர்ந்த மூகம் வாழ்க்கையின் வறுமைப் பேயின்தாண்டவத்தை விளக்கியது. தோல்வற்றி நரம்பு தளர்ந்த அவர் உடல், உடலில் உள்ள எலும்புகளையெல்லாம் காட்டியதுமல்லாமல், பல நாட்களாகப் பட்டினி அரக்கன் தன்னை வலியத் தழுவி இருப்பதையும் எடுத்துக் காட்டியது. அவர் கிழிந்த ஆடைகள் பாண்டிய நாட்டிலே உணவுக்கும் ஆடைக்கும் பஞ்சமில்லை பஞ்சமில்லை என்று பறை சாற்றுகிறீர்களே; இதோ பாருங்கள் எங்களை! என்று சொல்வனபோலிருந்தன .அப்படி அவ்வாடைகள் வாரும் தோலுமாய்த் தொங்கிக்கொண்டு இருந்தன. பாண்டிய நாட்டிற்கு வந்ததுமே கந்தைகளெல்லாம் மறைந்துவிடக் காலம் வந்துவிட்டதே! என்று பெருமிதமாக ஏளனம் செய்தது அவர் தளர்ந்த உடலின்மேல் அலக்ஷியமாகப் போடப்பட்டிருக்கும் விலை உயர்ந்த அரசனுடைய போர்வை.

'ஐங்காதம் போனாலும் தன்பாவம் தன்னோடே' வந்தது என்னே! நான் வந்ததின் கருத்தென்ன! இங்கு வந்ததும் நான் கைதியாக்கப்பட்ட காலமென்ன! சோமசுந்தரா? திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளே! என்று எண்ணியுருகி வார்த்தை காணாது திகைத்தன அவர் மனமும் நாவும்.

வாயிலிலே கேட்கும் பேரிரைச்சலைக் கேட்டுப் பரபரக்க ஓடிவந்தான் பாண்டியன். அவன் ஆசையின் வேகத்திற்குமுன் தாவியோடப் பார்த்தன அவன் அழகிய கால்கள்.

அங்குள்ளவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அங்கு என்ன நடக்கிறது என்று அறிந்துகொள்ளவும் சக்தியில்லாது மனம் குழம்பியது. அரசன் மரியாதையுடன் அக்கிழவனாரை உள்ளே அழைத்துக்கொண்டு போனது, "ஐயோ! பாண்டியனுக்குப் பைத்யம் பிடித்துவிட்டதே! பாண்டிய வம்சபரம்பரை நீதிக்குப் பங்கம் தேடிவிட்டானே! கைதிக்கா இவ்வளவு கண்ணியம் அளிப்பது! இவனோ அரசன்! என்று சொல்லிவைத்தது போல் ஒவ்வொருவரும் நினைத்தனர். அவர்களுடைய கண்கள் ஒருவரை ஒருவருக்கு இணைத்து வைத்தன. யாதொன்றும் உரையாது சென்ற அரசன்பின் அனைவரும் தொடர்ந்து சென்றனர்.

சிம்மாசனத்திலே வீற்றிருக்கிறார் கிழவனார். அவர் முகத்திலே சாந்தம் ததும்பியது; தமிழ்ப் புன்முறுவல் பூத்தது. அரசன் கைதட்டிக் குதித்துத் "தமிழைப் பெற்றேன். இன்றே தன்யனானேன். அமுதமெனும் தமிழை வளர்க்கும் அறிஞர்களே! இதோ தமிழ்ப் புலவர் ஒருவரைப் பெற்றேன்" என்று சந்தோஷப் பெருக்கினால் கதறினான்.

ஆங்கமைந்த புலவர்கள் 'ஆ! ஆ!' என்றனர். கிழவனாருக்குத் தகுந்த சன்மானம் அளித்து, அவரைப் பற்றி அரசவையில் பிரசாரம் செய்தான். அங்கமைந்தவர்கள் என்ன! என்ன! என்றுமேலே கேட்க விழைந்தனர்,

— 3 —

சோழ மண்டலத்திலே இருக்கிறது சத்திமுற்றம்என்ற ஊர். அவ்வூரிலே வசித்தார் ஒரு தமிழ் வல்லார்.

புலவர்களைப் பற்றி நாம் அதிகமாகக் கூறத் தேவையில்லை. 'புலவர்கள் வறுமையிருளில் பிரகாசிக்கும் தமிழ்ச்சுடர்களல்லவா?' என்று சொல்லாமலே புலனாகிவிடும். நம் புலவரும் அதற்கு விலக்கானவரல்ல; சேற்றிலே மலரும் செங்கழுநீர் மலர்தான். அவரைப்பற்றிச் சொன்னாலோ கேட்கவேண்டியதில்லை. அவர் குடும்பத்

தைப்பற்றி நினைத்தாலோ த்ஸோ............ த்ஸோ பரிதாபம். ஏன் அப்படி?

தமிழ் என்றால் ஒரு வசீகரப்பொருளா? ஆம். தமிழ்க் கடலில் இறங்கிவிட்டால் பின் கரையேற எண்ணம் வராது. அதன் இன்பமே இன்பம். நமக்கே அப்படியிருந்தால் புலவர்களுக்குக் கேட்கவேண்டுமா? தமிழ் ஆராய்ச்சியிலே வேறொன்றையும் அவர்கள் தேட விரும்புவதில்லை. தமிழ்த் தெய்வம் உறையுமிடத்திலே, வறுமைப்பேய் திரிவது தமிழ்ப் பக்தர்களுக்குத் தெரியாது. அடுப்பிலே பூனைக்குட்டி முகாம் போட்டிருந்தாலும் சரி. வீட்டிலே விளக்கு அமைதியை நிலைநாட்டினாலும் சரி. அதைக்கவனிப்பார் யார், யாருக்குப்பசிக்கும்! தமிழ்தான் அவர்கள் அமுதமான ஆகாரம். தமிழ்தான் அவர்களின் அணையாத விளக்கு.

வறுமையிலே மிதந்த நம் புலவரை, அவர் இல்லக்கிழத்தியார் பொருள் தேடிக்கொண்டுவரும்படி வற்புறுத்தினர். இவரிடம் கல்விப் பொருள்தான் இருக்கிறது. செல்வப் பொருள் இல்லை. என்ன செய்வார்? பாண்டிய நாட்டிற்குப்போய்ப் பொருள் மாற்றம் செய்துகொண்டு வரலாம் என்று கிளம்பினர்.

வறுமைச் சுழலிலே புலவர் சிக்குண்டு திக்குமுக்காடினர். வறுமை நம்புலவரை விளையாட்டுப் பொம்மையாக வைத்திருந்தது. ஆனால், பாண்டிய நாட்டிற்குப் போனாலோ வறுமைக்குச் சீட்டுக் கொடுத்தாகிவிடும். அதனால் வறுமைபயந்து ஆலவாயை அணுகுவதற்குள்ளாவது, பாண்டிய வேந்தன் முன்னிலையில் புலமையை உணர்த்தும் வரையிலாவது அவரைப் பல கஷ்டங்களுக்குட்படுத்தி, தன் அவாவைத் தீர்த்துக் கொண்டுவிடலாம் என்று நினைத்தது போலும்!

கடும் முடும் என்ற இடி; ஹோ வென்ற வாடைக்காற்று; பெருத்த பெருத்த மழைத்துளி ஆகிய இடையூறுகள் இவரை வழி மறித்தன.

உலகின் அற்புதங்களை எல்லாம் எடுத்துக் காட்டும் கதிரவன் வலிவிழந்து மடுவில் விழுந்ததை எடுத்துக் காட்டியது பிரகாசமற்ற அந்திநேரம். இன்பமும் துன்பமும் மாறி மாறிவரும் என்பதைத் தெரிவித்தது, பகல் ஒழிந்தபின் ஏற்பட்ட அவ்வந்தி நேரம்.

பரந்தவெளி. பசுமையான பயிர். விரிந்த வானில் கரியமேகப் படைகள் சஞ்சரிப்பு.


# S. K. R. & CO.

PERFUMERS

Arunachala Asari St. :: Jothy Building

**SALEM TOWN**

1. சக்தி அகர்பத்தி
2. சக்தி ஜவாஜிபத்தி
3. சக்தி தர்பார்பத்தி
4. பத்மா அம்பர்பத்தி
5. ஜோதி ஜவாஜிபத்தி
6. S. K. R. ஸ்பெஷல் கஸ்தூரிபத்தி

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு

**எஸ். கே. ஆர். அண் கோ.**

பர்ப்யூமர்ஸ்

அருணசல ஆசாரி தெரு :: ஜோதி பில்டிங்

சேலம் டவுன்

உலகை மறைத்து உள்ளத்தைக் கலக்கும் கரிய இருள். எல்லாம் புலவரை என்னவோ செய்தன. நாற்புறமும் சுற்றிச் சுற்றி நீர்த்திவலைகளை வாரிவீசும் வாடைக்காற்றின் வாதனை; சோவென்று உலகின் இன்ப ஒலிகளை மறைத்து விடும்படியான மழையின் ஆவேசக் குரல்கள்; இவரைப் பெரிய பெரிய வானளாவும் அலைகள் எழும்புகின்ற உணர்ச்சி வெள்ளம் நிறைந்த ஓர் ஆழக்கடலில் பிடித்து அமுக்குவதுபோல் இருந்தது. தம் புலமையைஅழிக்கும் வறுமையில் ஊறும்கவலைகளையெல்லாம் யாரிடம் சொல்லி மனந்தேறுவார் புலவர்! தனியான அவ்விடத்தில் அவருடைய கவலைக்குத் தேறுதல் சொல்ல யார் கிடைப்பார்கள்! 'உடலை மூடுவதற்கும் கந்தையில்லாமல் இருக்கும் தம்மிடம் இவ்வறியாக் காற்று எதைப் பறித்து கொள்ளப் பார்க்கிறது! மடமைக்காற்று.'

உடல் சிலிர்க்க மனங்குழம்பிச் சோரஅங்குள்ள ஒரு மரத்தடியில் படுத்துவிட்டார். ஆ! வறுமையின் வலிவுதான் என்னே!

புலமை அழிவற்றது. வறுமைக்குப் புலமை அடிமையில்லை. வஞ்சகத்திற்கு உண்மை அடிமையாகுமா? முள்ளடர்ந்த ரோஜாச் செடியிலும் ரோஜா மலர் மலராமல் இருக்குமா? துர்க்கந்தம் வீசும்நத்தையிலும்நன்முத்து ஜனிக்கவில்லையா?' அதைப் போலத்தான் வறுமை மிகுந்த புலவரிடமும் புலமை மலர்ந்துவிட்டது. உண்மையாக அவர் உடல்தான் துன்பம் அனுபவித்தது எனலாம். ஆனால் அகத்திற்கு மகிழ்வளிக்கும் கண்கள் ஆங்குள்ள இயற்கைக் காட்சிகளை நோக்கி இன்பநுகர்வு உற்றன.

கரிய பரந்த வானில் ஜதையாகப் பறந்து வரும் இருநாரைகளைக்கண்டார். அவைகள் கரிய கடலில் மிதக்கும் இருவெள்ளை அன்னப்படகை ஒத்து, உள்ளத்திற்கு ஓர் எழுச்சியளித்தன. ஏனோ அவைகள் இவரையடைந்ததும் சடக்கென்று இருசத்தத்தையும் கொடுத்தன. ஒருயிரும் காணாத அவ்விடத்தில் இரண்டு வெண்ணாரைகளைக் கண்டதும் தம்மை யறியாத ஒரு கவியின்பத்தில் ஆழ்ந்துவிட்டார். தம்மருகே வந்ததும் அவைகள் கத்துவது தம்மிடம் பேசுவதாகவே கவியுள்ளம் எண்ணிவிட்டது.

புலவர்களுக்கு இயற்கை ஓர் துணைக்கருவி. இயற்கை கவிதா வன்மையைத் தூண்டிவிடும். இயற்கையில் கவியுள்ளம் கவிஇன்பத்தை அடையும். புலமை மலர்ந்துவிடும். கவிமணம் கமழ ஆரம்பித்துவிடும்.

'ஆ இயற்கையின் வனப்புத்தான் என்னே! ஏழ்மைச் சோடையை நிரப்பிவிடும் இயற்கையின் சக்தி கடவுள் திறத்தையும் ஒப்பற்ற பெருமையையும் காண்பிக்கிறதே' என்று மெய்மறந்து நெஞ்சம் புடைக்க நெடுமூச்செறிந்துவிட்டு மேலே நோக்கினார் புலவர். வறுமையில் வாடும் உடல்—ஆடையில்லாமல் வாடையில் நடுங்கும் உடல்கடகடவென்று நடுக்க முற்றது. அவ்வளவுதான்! வாய் மடைதிறந்தது. கவி வெள்ளம் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்துவிட்டது! கவியின் கற்பனையையும் இயற்கையோடு ஒப்பிடும் திறத்தையும், ஏழ்மையின் புலம்பலையும்—இதோ காணுங்கள்.

'ஏ! நாரையே! நாரையே! உன் அலகு பனங்கிழங்கைப் பிளந்தாற்போல் இருக்கிறதே! உன் கால்கள் பவளம் பிறந்த இடத்தில்பிறந்தனவோ! நீங்கள் இருவரும் தம்பதிகளா? ஆத்மா பெற்றதின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நீங்கள் தெற்கே குமரிக்கு நீராடப் போகிறீர்களா? அப்படியானால் திரும்ப நீங்கள் வடக்கே செல்ல நேரிடுமே! யான் அனாதை; துன்பத்தின் இன்பக் காதலன். எனக்கு ஓர் உதவி செய்வீர்களா? வானில் விடுதலைபெற்று மகிழும் தாரகைகளும், சூரிய சந்திரர்களும் வறுமைக்குப் பயந்துதான் மேலே ஓடிவிட்டனவோ! அதனால்தான் தங்களை எட்டிப் பிடிக்க முடியாமல் மண்ணுலகை அழிக்கும் வறுமையைப் பார்த்து ஏளனம் செய்கின்றனவோ! அப்படிப் பரிகசிக்கும் ஒவ்வொரு சமயத்தில் நான் வீட்டினுள் இருந்தவாறே பார்ப்பேன்! இது பொய்யா? என் வீட்டின் மேல் கூரை சிதைவில்லாமல் இருந்தாலல்லவோ நான் படுத்தபடி பார்ப்பதற்குத் தடை ஏற்படும்! தற்பொழுது என் வீட்டின் கூரையால் தடுக்கமுடியாதபடி மழை ஆக்கிரமித்துச் சுவர்களை நனைத்திருக்கும். என்னோடு ஒத்து உழைத்து வாழ்க்கை இலக்ஷியத்தை அடையத் துணைபுரியும் என் இல்லக் கிழத்தி பல்லியின் சொல்லையே நோக்கிக்கொண்டிருப்பாள். அவள் முகத்தில் சோகத்திலும் அமைதி நிலவி வீசும். நீங்கள் தங்க எங்களூரான சத்தி முற்றத்தில் குளம் இருக்கிறது. நன்றாகத் தங்கி இருந்துவிட்டுப்போகலாம். உன் கணவர் பாண்டிய நாட்டில், உடுக்க ஆடையில்லாமல், வாடைக்காற்றின் வன்மையில் உடல் சோர்ந்து கிடக்கிறார். குளிரைப் பாதுகாக்கக் கால்களும் கைகளும்தான் தற்பொழுது பயன் படுகின்றன. பொதுவாகப் பெட்டிக்குள் இருக்கும் பாம்பு சுவாசித்துக்கொண்டிருப்பதுபோல் இருக்கிறார்.

உங்கள் சௌந்தர்யத்தைக்
காப்பாற்றிக் கொள்ளுங்கள்




19/5

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட், பம்பாய் 15

என்று தெள்ளத்தெளியச் சொல்லிடுவீர், நாரைகளே! என்று உள்ளத்தில் ஊறி உணர்ச்சியில் முட்டும் சோகச் செய்திகள் கற்பனை மடையை உடைத்துக்கொண்டு இழ்க்கண்ட ஒரு கவிப்புனலாக மாறி விட்டன.

"நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயு நின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி
வடதிசைக் கேகு வீராயின்,
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுட்டங்கி
நனைசுவர்க் கூரை கனை குரற் பல்லி
பாடு பார்த்திருக்கு மெம்மனைவியைக் கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலதுகொண்டு மேலது தழுவி
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே!"

வாடைக்காற்றில் அலைபோல் மிதந்தது அவ்வினிய கவிதை. ஆ! என்ன இனிய கவிதை? என்ன உயரிய கற்பனை! இயற்கையில் இயைந்த இனிய கவிதையமுதம், இப்பரந்த வெளியில்—பயங்கர இருள் நிறைந்த அம்பலத்தில் ஏது? வறுமை—பாழும் துன்பம் இன்னும் கொஞ்ச நாளில் விண்ணையும் மண்ணையும் அளாவுகின்ற தெய்விகக் கற்பனையைச் சூறையாடி விட்டால்... தூ தூ என்ன பிதற்றல். வறுமையை வென்றுவிடும் புலமை. ஆம். வீட்டில் வறுமை. வீட்டினுள் வெள்ளப்பெருக்கு. இங்கே உடுக்க ஆடையில்லாமல், வாடைக் காற்றோடு உயிருக்கு மன்றாடும் நிலைமை. பயங்கரப் புயல் நிறைந்த இடம். பயங்கர இருள் உறைந்த வெளி, மட மடவென்று மரங்கள் கீழே சாயும் பேரிரைச்சல். இவ்விடத்திலும் சக்திவாய்ந்த பொருள் நிறைந்த கவி. "ஆடையின்றி வாடையின்மெலிந்து, கையதுகொண்டு மெய்யது பொத்திக் காலதுகொண்டுமேலது தழுவி, பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழையாளனைக்கண்டனம்எ...னு...மே". ஆ...ஆ! இந்நிலைமையிலும் இதுவரை காணுதற்கரிய கற்பனை! என்ன திறமை! தமிழிலே கலையிலே கவியிலே கற்பனையிலே என்ன...... என்ன தேர்ச்சி! கவிக்கொண்டல். மேகமும் காலம்தவறி எல்லைமீறிப் பொழியாது, என்று அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டு பிதற்றிய வண்ணம் கவிப்பண் எழுந்த திசையை நோக்கித் தாவிப்பறந்தது ஓர் உருவம்.

அதோ! அக்கவி......சுருட்டி மடக்கிக் கொண்டு கவிதையில் கண்டபடி கிடக்கும் வறுமையில் தவிக்கும் மெலிந்தவுடல். ஆ! கவிகளுக்கு வறுமை! கவிகளுக்கென்று ஏற்பட்ட வறுமை அழியட்டும். புலமை வறுமையை வெல்லட்டும். பாண்டிய நாட்டில் கற்றோர்கள், வறுமையில் உழல்வார்களேயானால்......ஆ! பாண்டிய குலம், கொடிய அரக்கர் குலமல்லவா? இல்லை...இல்லை கண்ணால் நேரே பார்த்தபிறகுமா? வறுமையின் ஆட்சிக்கு நிச்சயம் முடிவு ஏற்படட்டும் என்றது கடகடத்த குரலில் அம்மனித உருவம். கண்களில் பொடபொடவென்று உருண்டன கண்ணீர்த் துளிகள். பளிச்செனமின்னும் மின்னல் ஒளி அதை இயற்கைக்குக்காண்பித்தது இரத்தம் வடிவதுபோல். கைகள் விசையாய் எழுந்தன. போர்வை புலவர்மீது விழுந்தது. மறுகணம் மறைந்தது அங்கிருந்து.

அரசன் கேட்ட கேள்விக்கு ஒருவரும் பதில் அளிக்கவில்லை. பதில் அளிக்காமலுமில்லை. பல உதாரணங்கள்தான் சொன்னார்கள். ஒன்றும் அரசனுக்குத் திருப்திகரமாய் இல்லை. நாட்கள் பல, மாதங்கள் பல, ஆண்டுகள் பல ஓடி மறைந்தன. சமஸ்தானப் புலவர்களிற் பலர் நாரையின் அலகிற்கும், பலர் நாரையின் கால்களுக்கும் தனியாகவும் சேர்த்தும் உதாரணங்கள் கொடுத்துப் பார்த்தார்கள். ஏன்? அவைகள் அதற்குப் பொருத்தமாக இருந்தால்தானே!

மன்னன் மாறுவேடம் பூண்டுகொண்டு நகர சோதனைக்குச் சென்றான். பரிதியை இழந்த உலகம் பரிதவித்துக்கொண்டு இருந்தது. அப்பொழுது பெருத்த வாடைக்காற்றும் பலத்த மழையும் அரசனுக்கு இடையூற்றை விளைவித்தன. மழையினின்றும் தப்பி ஓடுங்கால் ஓர் அம்பலத்தின் வழியாக ஓட நேர்ந்தது. அக்கணத்தில் ஓர் இனிய கவியின் குரல்கேட்டு நின்றான். கவியின் துன்பம் காவலனால் பொறுக்க முடியாது போயிற்று. கண்ணீர் உகுத்தான். கற்பனையைக்கண்டு பெரிதும் வியந்தான். உடனே தன் போர்வையைப் புலவர் மீது வீசி மகிழ்ச்சி கூர்ந்து அரண்மனை ஏகினான். அவன் மனதில் இக்கவியின் இரு அடி ஒலித்துகொண்டே இருந்தது. "பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன, பவளக் கூர்வாய்ச்செங்

கால் நாராய்!" என்று அவன் வாய் முணுமுணுத்தது. தான் காணாதபொருளைத் தற்பொழுது தற்செயலாய் அடைந்ததுபற்றிப் பெரிதும் சந்தோஷித்தான். ஆயினும், இலை மறைகாய்போல் இருந்த இவ்வரிய புலவர் மணியை இதுவரை கண்டிலோமே என்று கரையற்ற துக்கத்தில் ஆழ்ந்தான். தான் தேடிய பொருளையடைந்தோம்; ஆனால் புலவரை எங்ஙனம் அடைவது என்று விசனம் கொண்டான், ஆனால் சமயோசிதமாக ஏற்பட்ட அவ்வுயரிய சூழ்ச்சி புலவரைக் கூட்டி வைத்தது.

போர்வை களவு போய்விட்டது என்று அறிந்த தூதர்கள் புலவரைப் பிடித்துக் கொணர்ந்தனர். தான் இதுவரை தேடிய அரும்பொருளைப் பெற்றான். அரிய புலவரை அடையச் செய்த சூழ்ச்சி பலித்தது. 'எல்லாம் நன்மை. எல்லாம் இன்பம்' என்று கங்கு கரையற்ற ஆனந்தக் கடலில் அமிழ்ந்தான்.

புலவர் அரசனிடம் சென்றார். சன்மானம் போதும் போதும் என்று பொன்னை வெறுக்கும் வரை பெற்றார். புகழுக்கோ அளவில்லை. தான் வேண்டியது நிறைவேறியது. புலவருக்கு எல்லையற்ற இன்பம். சோமசுந்தரா.........! ஆலவாய் அண்ணலே ...!திரிபுரம்எரித்த விரிசடைக் கடவுளே! என்று மனமாரத் துதித்தார்.

புலமை வறுமையை வென்று விட்டது. வறுமை வலுவிழந்து முறி பெற்றுப் போய் விட்டது. உள்ளத்தையும், உடலையும் வருத்தும் வறுமைப் புலியையும் தமிழ்ப் புலமை வென்றுவாகை புனைந்ததென்றால் தமிழின் பெருமையை என்னென்பேம்! தமிழ்த்தாய் வாழ்க!


# ஆச்சரியமான பாதுகாப்பு — — மற்றும் பந்தோபஸ்து

நேற்றைய கனவு........

இன்றைய வாழ்க்கை........

நாளைய நம்பிக்கை........

இவ்விதமாக வாழ்நாள் சென்றுகொண்டிருக்கின்றது.

வாழ்க்கையின் பிரயாணத்தில் உங்களுக்கு நாங்கள் உதவி புரிகிறோம்.

**மொத்த ஆஸ்தி சுமார் 3 கோடிகள்**

## லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கோ, லிட்., (லாகூர்)

மதராஸ் பிராஞ்ச்:
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி.
ஸி. ஆர். சேஷன், M. A.,
பிராஞ்ச் மானேஜர்.

ஹைதராபாத் பிராஞ்ச்:
அபித் ரோட், (டெக்கான்)

# காலம் வளர்க்கும் காதல்

ஜி. எஸ். மணி

"என்னடா, சிவராமா! கடைசியில்கல்யாணம் செய்துகொண்டுவிட்டாய் போலிருக்கிறதே!" என்று பரிஹாஸமாய் சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான் கோதண்டராமன்.

சிவராமன் முகத்தைச் சுளித்துக்கொண்டே, "என்னமோ? பிராப்தம்!" என்று தலையில் அடித்துக்கொண்டான்.

"பிராப்தம்டா, பிராப்தம்!" என்று கோதண்டம் திருத்தினன்.

"அதுசரி; நீ இப்போது எங்கே வந்தாய்?" என்று ஆத்திரப்பட்டுச் சீறிவிழுந்தான் சிவராமன்.

"ஏன்? வரக்கூடாதோ? என் சந்தோஷத்தைத் தெரிவித்துவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்? என்னை என்ன பண்ணச் சொல்லுகிருய்?" என்றுசிரித்தான் கோதண்டம்.

"சரி; தெரிவித்தாகிவிட்டதல்லவா? இனிமேல் நீ போகலாம்!"

கோதண்டம் மீண்டும் நகைத்தான். "கல்யாணம் என்னவோ பண்ணிக்கொண்டாகிவிட்டது, இனியும் ஏன் வீணுக ஆத்திரப்பட்டுக்கொண்டிருக்கிருய்? பேசாமல் மேலே நடக்கவேண்டியவைகளைக் கவனிக்கலாமே? ஆடிக்குப் போகப்போகிருய் அல்லவா?" என்ருன்.

"அதற்கெல்லாம் உன் யோசனையைக் கேட்கவில்லை! பேசாமல் வந்த வழியைப் பார்த்துக்கொண்டுபோ!"

"நான் வந்த காரியம் முடிந்துதானே வந்த வழியைப் பார்க்கத்திரும்புவேன்?"

"என் கழுத்தையறுக்கவா வந்தாய்? எங்கேயோ தொலைந்துபோயிருந்தாயே? அப்படியே தொலைவதுதானே? ஏண்டா திரும்பிவந்து என் பிராணனை வாங்குகிருய்?"

"உன் கல்யாணத்தின்போதுதான் நானும் கூடஇருந்து ஆனந்தப்படக் கொடுத்துவைக்காமல் போய்விட்டது; இனியாவது உங்கள் இருவரையும் சேர்த்துப் பார்த்தபிறகுதான் மறுகாரியம்; அதுவரைக்கும் நான் ஏன் தொலைவேன்!"

"எப்போது பார்த்தாலும் எனக்கு உன் தொல்லைதான் சகிக்கவேமுடியாத தொல்லையாக ஆய்விட்டது. எனக்கு நீ நண்பனு? இல்லை—சத்துருவாடா?"

"சத்துருதான் — ஹிதசத்துரு!" என்று சொல்லிச் சிரித்தான்.

"உன் மென்னியை இங்கேயே திருகிப் போட்டுவிடுவேன்! அதிகமாகப் பேசாதே?" என்று கோஷமிட்டான் சிவராமன்.

"அப்படியும் நான் உயிரைவிடமாட்டேன்!;' என்று சாந்தமாகக் கூறினுன் கோதண்டம்.

சிவராமன் எரித்துவிடுபவனைப்போலே அவனைப் பார்த்துப் பற்களைக் கடித்தான். கோதண்டம் சிரித்தான். அவனை இன்னமும் கொஞ்சம் கோபமூட்டி ஆடச்செய்து வேடிக்கை பார்க்கவேண்டுமெனத் தோன்றியது.

"என்னைப் பார்த்து முறைப்பதெல்லாம் கிடக்கட்டும், சிவராமா! ஆனுல் நீ இந்தப் பெண்ணை எப்படித்தாண்டா கல்யாணம் செய்துகொண்டாய்?" என்று வினவினுன்.

"உன் வேலையை என்னிடமேயா திருப்புகிருய்? எனக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைத்துக்கொண்டிருக்கிருயோ?" என்று சீறினுன் சிவராமன்.

"அது போனுல் போகிறது; ஆனுல்—நீ உன் 'லவ்'வை எப்படித்தானடா மறந்து போனுய்?"

"மறப்பதா? அது இந்த ஜன்மத்திலே இல்லை! ஹஉம்? போயும்போயும் ஒரு பெண்ணைப் பார்த்து என் கழுத்திலே கட்டிவீர்களே?......"

"அட? நீதாண்டா அவள் கழுத்திலே கட்டினுய்!"

"ச்சீ! மூடு வாயை! அவள் அழகிற்கு இவளைக் காலில் கட்டித்தான் அடிக்க வேண்டும்."

"எவள் அழகிற்கு எவளோ?"

"அட போடா பிளகார்ட்! என் லீலாவின் அழகு—அதில் ஆயிரத்தில் ஒரு பங்காவது வருமோடா இவளுக்கு?......கூஸ்!......நீயும் தானே அம்மாவுடன் சேர்ந்துகொண்டு நான் இந்தப்பெண்ணைக் கட்டிக்கொள்ளச் சூழ்ச்சிசெய்தாய்?—இடியட்!"

"அப்படியானால் நாங்கள் பார்த்து உனக்குக் கல்யாணம் செய்துவைத்த இந்தப் பெண் பிடிக்கவில்லையாக்கும், உனக்கு?"

"ஆமாம்! பிடிக்கத்தான் இல்லை!"

"நன்ருகப் பார்த்தாயா? தெரிந்துதான் சொல்லுகிருயா!"

"ஆஹா! நன்ருகத்தான்!"

"அவளையே பிடிக்கவில்லையா? அவள் அழகுதான் பிடிக்கவில்லையா?"

"ஸில்லி! அந்தப் பெண்ணை யாரடா தலை நிமிர்ந்து பார்த்தது?"

"பின்னே? சற்றுமுன்னே என்னவோ—'பார்த்தேன் பிடிக்கவில்லை' என்ருயே? என்னத்தைப் பார்த்தாய்?"

"உன் தலையைத்தான் பார்த்தேன்!—பிடிக்கவில்லை: 'உடைத்துவிடுவோமா' என்றுதான் இப்போது யோசித்துக்கொண்டிருக்கிறேன்."

"இப்போது வேண்டாம்! பின்னுடி பார்த்துக்கொள்ளலாம்!"

அந்தப் பதிலைக் கேட்டுச் சிவராமனே சிரித்துவிட்டான்.

கோதண்டம் கடைசியில் மாடியை விட்டுக் கீழே இறங்கிவந்தபோது சிவராமனின் தாயார் அடிப்படியில் அவனைச் சந்தித்தாள்.

"என்னடா கோதண்டம்! என்னசொல்லுகிருன் பிள்ளையாண்டான்?" என்று அவனை ஆவலுடனே வினவினுள்.

"தரையில் விழுந்த நெல்லிக்காய் மாதிரி குதிக்கிறது! எல்லாம் 'வர வர' சரியாகிவிடும்! அந்தலீலாவின் மயக்கம் இன்னும் அவனை விடவில்லை—ஆனுலும் போகப்போகக் கட்டாயம் திருந்தியேவிடுவான்! அவன் ஸ்வபாவம் எனக்குத்தெரியாதா?" என்று ரகசியக் குரலில் சொன்னுன்.

"எல்லாத்தையும் நானும் ஒளிந்தபடியிருந்து கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்! அடியம்மா! உன்னிடம் கூட அந்த ஆட்டம் ஆடிருனே! அந்தமுரடனிடம் எதிரில் நின்று பேசவே எனக்கு ரொம்ப பயமாயிருக்கப்பா!" என்று கவலையுடன் சொன்னுள்.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதேயுங்கோ, அம்மாமி! இவன் கிடக்கிருன்! பெண்டாட்டி தெய்வத்திடம் பணியாத புருஷனும் உண்டோ!" என்று சிரித்தான்.

"என்னமோடாப்பா? நீயாவது அடிக்கடி வந்து அவனுக்குப் புத்தி சொல்லித் திருத்துகிற வழியைப் பாரு? அவனை ஒரு 'குடியும்—குடித்தன' முமாக இருக்கும்படி செய்துவிட வேண்டியது உன் பொறுப்பு... ......இல்லாவிட்டால்......அவன்... வீணுக... 'தத்தாரி'யாகி......?......நீயும் எனக்கொரு பிள்ளை மாதிரிதான்........."

"அதெல்லாம் நீங்கள் ஒன்றுமே சொல்ல வேண்டாம்; அம்மாமி! எனக்குத்தெரியாதா? நான் போய்விட்டு அப்புறம் வருகிறேன்." என்று சொல்லிவிட்டுப் போனுன்.

— 2 —

ஆடிக்குப் புறப்பட்டு வரும்படியாக மாமனுரிடமிருந்து சிவராமனுக்கு அழைப்பு வந்தது.

ஆனுல் சிவராமன் 'போகமாட்டேன்' என்று பிடிவாதமாக இருந்தான். அவன் தாயாரே 'கட்டாயம் போயே ஆகவேண்டும்' என்று ஒற்றைக்காலில் நின்ருள்.

"ஏண்டாப்பா? மெனக்கட்டு 'வா' வென்று அழைத்திருக்கிருர்களே? போகாவிட்டால் நன்ருயிருக்குமா?" என்று ஆரம்பித்தாள்.

"மெனக்கட்டு என்ன மெனக்கட்டு? உலக வழக்கப்படி தானே அழைத்திருக்கிருர்கள்? இல்லாவிட்டால் நன்ருயிருக்குமா?", என்ருன் சிவராமன்.

"அது சரி; ஆனுல் 'உலக வழக்கப்படி' போக வேண்டாமோ? இல்லாவிட்டால் இதுமட்டும் மரியாதையாகுமா?"

'நான்போகப் போவதில்லை!"

"ஏன்?"

"என்னமோ? எனக்குப் பிடிக்கவில்லை; அவ்வளவுதானே?"

"இப்படியெல்லாம் பேசாதேடாப்பா?"

"இதோ பார் அம்மா? அவர்கள் செய்யப் போகும் 'சீர்—சினத்திகள்' உனக்கு முக்ய மென்றால் நீமட்டும் வேண்டுமானால் போய் அவர்கள் கொடுப்பதை வாங்கிக்கொண்டு வந்துவிடு! வீணாக என்னைத் தொந்தரவு செய்யாதே''

"எனக்கு 'சீர் சினத்திகள்' அத்தனை முக்ய மில்லை......பெண்தான் முக்யம்!''

"எனக்கு அதுவும் முக்யமில்லை!''

"பின்னே எதற்காகத்தான் கல்யாணம் செய்துகொண்டாய்?''

"நானாகவா அவளைப்போய்ச் செய்து கொண்டேன்? எல்லாம் உன் தொந்தரவு பொறுக்க முடியாமல்தான்! 'காரியம்செய்ய முடியவில்லை—முடியவில்லை' என்று தொண தொண'த்துத் தள்ளி விட்டாயே? இத் தனைக்கும் நான் ஒரே பிள்ளைதான்......''

"ஒருதாய்க்கு ஒரு பிள்ளையாக இருந்து கொண்டு நீ என்னைமட்டும் இப்படி வயிற் றெரிச்சல் கொட்டிக் கொள்ளலாமா?......''

"என்ன கொட்டிக்கொண்டேனும்? அது தான் எல்லா எழவுக்கும் நீ சொன்னபடி யே தானே கேட்டுத் தொலைத்து அழுது கொண்டு வருகிறேன்? இன்னும் என்ன?''

"அது மாதிரியே இப்பவும் கேட்டால் எனக்கும் சந்தோஷமாகப் போய்விடுமே?''

"இனிமேல் முடியாது! என் இஷ்டம் தான்?''

"அப்படியானால் கட்டின பெண்டாட்டி யை அழைத்து வைத்துக்கொண்டு குடித் தனம் செய்யாமல் நடுத்தெருவில் விட்டு விடுவதாக உத்தேசமோ?''

"அதுவும் உன் இஷ்டம்தானே?''

"பின்னே எதுதான் உன் இஷ்டம்?''

"இப்படியே இருந்துவிடுகிறேன்''

"அந்தப் பெண்ணின் கதி?''

"என் இஷ்டத்திற்கு விரோதமாகத்தான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டேன். ஆகையால் அவள் கதியைப்பற்றி எனக்கு அக்கரையில்லை!''

"லீலா—லீலா' என்று இன்னும் லீலா சொப்பனமே கண்டுகொண்டிருக்கிறாயே? அவளுக்கும் நமக்கும் ஏணிவைத்தாலும் எட்டுமா? இது ஏன் உனக்குத் தெரியமாட் டேன் என்கிறது? அவளாவது உன்னைக் கொஞ்சமாவது லக்ஷியம் செய்தாளா? சொல்லு''

"அவள் அழகு உலகத்திலேயே வேறு ஒருத்திக்குக்கூட இருக்காது. மற்றப்படி எப்படி யிருந்தாலென்ன? அபாரமான அழகு அகம்பாவமாக இருக்கத்தான் சொல் லும்! ஆனாலும் அது அவள் குற்றமில்லை.''

"அது சரி; இவள் அழகையும் கொஞ்சம் போய்ப் பார்த்துவிட்டுவந்துதான் பிறகு சொல்லேன்! கல்யாணத்தின் போதே நீ அவளைச் சரியாகப் பார்க்கவில்லைபோலிருக் கிறதே?''

"அக்கரையில்லை!'' என்றான் சிவராமன்

"என்ன அம்மாமி? பிள்ளை உங்களிடமே மாப்பிள்ளை முறுக்குப் பண்ணிக்கொள்ளு கிறானு, என்ன? என்ன சொல்லுகிறான்?'' என்று கேட்டுக்கொண்டே அதே சமயம் கோதண்டம் அங்கே வந்துசேர்ந்தான்.

"என்னவோடாப்பா, போ; ஆடிக்கு அழைத்திருக்கிறார்கள்; போகமாட்டானும்! இனிமேல் உன் பாடு; இவன் பாடு; என்னால் முடியவில்லை'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

"சரி, சரி! சரியான சமயத்தில் இந்த 'ராஸ்'கலும் வந்து சேர்ந்துகொண்டுவிட் டானு! இனிக் காரியம் முடிந்தாற்போலத் தான்? 'கழுகுக்கு மூக்கில் வியர்ப்பதுபோல, கூர்ச்சம் மாதிரி எங்கிருந்தோ வந்துவிட் டானே பாவி!'' என்று சலித்துக்கொண் டான் சிவராமன்.

கோதண்டம் சிரித்தான்.

"இந்த மாதிரி சிரித்துச்சிரித்துத்தானே நீ ஆளை உயிருடன் கொல்லுகிறாய்?''

அவன் விடாமல் சிரித்துக்கொண்டே "என்னடா உளறிக்கொட்டிக்கொண்டிருந் தாய் அம்மாவிடம்? இடியட்! இத்தனை கேவலமாக நீ நடந்துகொண்டால் அந்தப் பெண்—பாவம்—உன்னைப்பற்றி என்னடா நினைத்துக்கொள்ளும்? கொஞ்சமாவது யோசித்துப் பேசுகிறாயா?'' என்று ஆரம் பித்தான்.

"அதுதான் உன்னைக் கண்டதுமே சொல்லிவிட்டேனே? இனிக் காரியம் முடிந் தாற்போலத்தான்!'' என்றான் சிவராமன்.

"யார் பக்கம்?'' என்று கேட்டான் கோதண்டம்.

"உங்கள் பக்கம்தான்! இல்லாவிட்டால் நீ வேறு உன் பங்கிற்கு அரிக்க ஆரம்பித்து விடுவாயே? உங்களிடம் இருந்துகொண்டு பிடுங்கல் பட்டுக்கொண்டு இருப்பதைவிட வேறு எங்காவது போய்விடுவதே மேல்!"

"அங்கேயே போய் ஆடு!" என்று குறிப்பாகச் சொல்லிச் சிரித்தான் கோதண்டம்.

— 3 —

ரயிலிலே போய்க்கொண்டிருக்கும்போது சிவராமனின் மனம் என்னவெல்லாமோ யோசனை செய்துகொண்டே யிருந்தது......

'ஆடியாம்! ஆருமாசமாம்! தீபாவளியாம்; என்ன குருட்டுத்தனமான பழக்கவழக்கங்கள்! அர்த்தமற்ற சம்பிரதாயம்! இப்படியெல்லாம் போய்விட்டு வருவதில் யாருக்குத்தான் என்ன லாபம்? வீணாக ரயில்காரன் சாப்பிடுவதுதான் 'லாபம்'; வீண் அலைச்சல்; சிரமம்...... ஒரே நாள் கல்யாணப்! அதுதான் சரி...... அதுகூடத் தவறு; ஒரு நாழிகைதான் கல்யாணம் இருக்க வேண்டும்...... ரிஜிஸ்டர் கல்யாணம்?...... நல்ல வழிகாட்டி!......பேசாமல் லீலாவைக் கல்யாணம் செய்துகொண்டிருந்தால்!...... இத்தனை நாள் 'ஹனிமூன்' 'எஞ்சாய்' செய்துகொண்டு இருக்கலாமே ஆனந்தமாக?...... ஹூம்?...... அவள் நாகரிகத்திற்கும் இதற்கும் எவ்வளவு தூரம்? எத்தனை வித்யாஸம்!...... அவளுக்கும் இவளுக்கும்......... அதற்கும் இதற்கும்......... எப்படி ஈடுகட்டமுடியும்? அவள் ஒய்யாரமென்ன! அதென்ன; இதென்ன!......... பட்டிக்காடு!...... எப்படியிருப்பாளோ!... சரியாகக்கூடப் பார்க்கவில்லை... எதற்காகப் பார்க்கவேண்டும்?......திரும்பி வரும்போது கையுடன் அழைத்துக்கொண்டே வந்துவிடலாமா?......... கல்யாணமே அம்மாவுக்குத்தானே?......... கூடமாட அம்மாவுக்கு 'ஒத்தாசை'யாகத்தானிருக்கட்டுமே?......... அவர்கள் அனுப்பச் சம்மதிக்காவிட்டால்? ஹூம்?...... என் சம்மதத்தைக் கேட்டுக்கொண்டுதான் இந்தக் கல்யாணம் பண்ணி வைத்தார்களோ?...... அந்தக் கோதண்டராமன்!...... படுபாவி!...... இருக்கட்டும் சொல்கிறேன்!...... இப்படியே ஊருக்குத் திரும்பிப் போய்விடலாமா அடுத்த ரயில்......? ஆடிக்குப் போகாவிட்டால்தான் என்ன?...குடிமுழுகிப் போய்விடுமோ?...... அம்மா கேட்டால் என்ன பதிலைச் சொல்வது?...இத்தனை தூரம் கிளம்பி வந்துவிட்ட பிறகா? ...... நன்றாயிருக்குமா? ...... அந்தக் கோதண்ட யமன்!.........என்ன அக்கரை!







மற்ற மருந்துகளால் குணப்
படுத்த முடியாதென அபிப்
பிராயப்பட்ட பல்லாயிரக்
கணக்கான குழந்தைகள்
இவ்வபூர்வ மருந்தினால் காப்
பாற்றப்பட் டிருக்கின்றனர்.

ஜம்மி'ஸ்
லிவர்
க்யூர்

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே
ஒரு நன் கொடை யெனப் போற்று கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி,
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

பிராஞ்சு:
பெரிய தெரு,
கும்பகோணம்.

என்ன சிரத்தை! ஈச்வரா!.........அந்தப் பெண்!......என்ன நினைத்துக்கொண்டிருப்பாளோ! என்னை எதிர்பார்த்துக்கொண்டு தான் இருப்பாளோ?.........அங்கே போன பிறகு என்ன நடக்குமோ!.........இருந்து இருந்து.........வெறுங் கையுடனே போகிறோமே? ...... அவளுக்கு......ஏதாவது......? ......என்னத்தை?......ஏன்?...... எதற்காக? ......என்னதான் இருந்தாலும்.........கழுத்தைக் கொடுத்துவிட்டபிறகு?......கொன்று போட்டு விடுவது?.........தாலியைக் கட்டி விட்டோமே!......இனிமேல் என்ன......... அவள்......அவளுக்கு......ஏன் இப்படியெல்லாம்?.........என்ன பிடிக்குமோ?......யார் கண்டது?.........எப்படித் தெரியும்?......... கடவுளே! ஈச்வரா!...இது என்ன சோதனை? .........ஏன் இந்த வீணான சஞ்சலம்?......... அவளுக்கு?......புஷ்பம்!......பேனு! 'பௌடர்; கிவுடர்'?......சேச்சே!......ஒன்றுமே வேண்டாம்!......போகிறதே பெரிசு!...... இல்லையா? ...... அவள் ......அவள்......சீ!'...

சிவராமனுக்கு நிஜமாகப் பைத்தியமே பிடித்துவிடும்போலிருந்தது! ஏனோ பெருமூச்சு விட்டான்? நெற்றியிலே அரும்பு அரும்பாக வியர்வைத் துளிகள்......

ரயில் வண்டி, நடுவில் ஒரு சிறிய ஸ்டேஷனில் நின்றது. உஷ்ணக் காற்று வீசியது. வெளியில் தலைகாட்ட முடியாதபடி வெய்யில் பொசுக்கியது......

அவன் இருந்த வண்டிக்குள்ளே இரண்டு பேர் ஏறிக்கொண்டார்கள்; ஒரு வாலிபனும், ஒரு மங்கையும்; பின்னேடு ஏராளமான மூட்டை முடிச்சுக்கள்; பெட்டி பேழைகள்......

சிவராமன் பார்த்தான்......

"என்னப்பா? கிட்டு! எதுவரைக்கும் போகிருப்போலே?" என்ருர், வண்டிக்குள்ளிருந்த யாரோ ஒருவர், புதிதாக வந்தவர்களைப் பார்த்துச் சிரித்தபடியே; ஏற்கனவே 'பரிச்சயம்' உண்டுபோலிருக்கிறது......

"ஓ! நீங்களா! நீங்கள் எதுவரைக்குமோ?" என்று சிரித்தான் வாலிபன்.

"நான் பட்டணம் வரையில் போகிறேன்"

"நாங்களும் அங்கேதான் வருகிறோம்!"

"ஓகோ? சரிதான்; ஏது உன் 'ஸிஸ்டரை'யும் அழைத்துவருகிருய்? இந்த ரயில் 'கிக்கிட்'த்தில் இத்தனை மூட்டையும், முடிச்சும்! புதிதாகக் குடித்தனமோ?"

"ஆமாம் ஸார்!" என்று சிரித்தான் அந்த வாலிபன். "பின்னே என்ன ஸார் செய்கிறது? மாப்பிள்ளை பூனவில் வேலையாக இருக்கிருன். உங்களுக்குத்தான் தெரியுமே போன வருஷம் இவளுக்குக் கல்யாணம் பண்ணினது?—இந்த ஒரு வருஷ காலமாய், கிணற்றிலே போட்ட கல் மாதிரியிருந்தான் மாப்பிள்ளைப் பிள்ளையாண்டான்; இப்பொழுது வந்து......திடீரென்று 'உடனே பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து சேரு; இங்கே சாப்பாட்டிற்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு!'—என்று தந்தி அடித்திருக்கிருன்! ஒரு 'நாளா-நக்ஷத்திரமா' ஒன்றும் கிடையாது! நம்முடைய சௌகர்யா சௌகர்யங்களை எங்கே ஸார் கவனிக்கிருன்கள்? இல்லாவிட்டால் 'மாப்பிள்ளை—விறைப்பு' விறைக்கிருன்கள்!......அவன்களாகப் பார்த்து 'வைத்தால் குடுமி—சிரைத்தால் மொட்டை' யென்கிற கதையாகத்தான் இருக்கிறது? பெண்ணைப் பெற்றுவிட்டோமல்லவா! நாமும் அவன்கள் இஷ்டப்படி தான் ஆடவேண்டியிருக்கிறது! என்ன செய்வது? இதைப் பாருங்கள்—முதலில் என் 'ஸிஸ்டரே' என்ன பயம் பயப்படுகிருள் என்கிறீர்கள்? இவளும்தான் என்ன செய்வாள்? இடமும் புதிசு; ஆளும் புதிசு; எல்லாம் புதிசு. முன்னே பின்னே பழக்கப் படுத்திக்கொள்ள வேண்டாமா, ஸார்? அதெல்லாம் ஒன்றுமே கிடையாது. திடீரென்று 'ஆர்டர்' போட்டுவிட்டான்; நாமும் நடத்தித்தானே கொடுக்கவேண்டும்?" என்று தன் மனசு வேகத்தை எல்லாம் திறந்து காட்டிவிட்டுக் கடைசியில் சகோதரியின் பக்கமும் திரும்பி லேசாகச் சிரித்தான். அவள் வெட்கத்துடன் தலையைக் கவிழ்ந்துகொண்டாள்......

சிவராமனும் அத்தனையையும் கேட்டுக் கொண்டுதான் உட்கார்ந்திருந்தான்!......... 'அவ்வளவும் அவனுக்காகவும் சொல்லப் பட்ட வார்த்தைகள்தானே?' என்றுகூட எண்ணினன்......

'முன்னே பின்னே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டாமோ?'—என்று அந்த வாலிபன் கூறியதை மறுபடியும் தனக்குள்ளாகவே நினைத்துப் பார்த்துக்கொண்டான் வாஸ்தவமாகத்தான் பட்டது...........

ஒருமுறை தலை நிமிர்ந்து அந்தப் பெண்ணிருந்த பக்கம் நோக்கினன்; கிளி மாதிரி தான் இருந்தாள்! என்ன அழகு! அவள் கணவனைப்பற்றிச் சிந்தித்தான். 'எப்படியிருப்பானே' வென்று......அந்தப் பெண்

ணின் பயத்தைப்பற்றி எண்ணமிட்டான். அவனுக்கொன்றும் புரியவில்லை.........

தன்னைப் பற்றிய யோசனைகளிலேயே அவன் மீண்டும் லயித்து விட்டான்............

— 4 —

விவரம் புரியாத மனக்குழப்பத்துடனே சிவராமன் தன் மாமனார் வீட்டு வாசற்படியிலே காலை வைத்தான்.

வண்டிச்சத்தம் கேட்டு உள்ளேயிருந்து வந்து கொண்டேயிருந்த சிவராமன் மாமனார் மாப்பிள்ளை படியேறி வருவதைக்கண்டதும், சொல்லொண்ணாத முக மலர்ச்சியுடனே, "வா, சிவராமா! உன்னைத்தான் ஒவ்வொருக்ஷணமும் எதிர் பார்த்துக்கொண்டேயிருக்கிறோம்!" என்று தாங்கமுடியாத குதூகலத்தால் ஆர்ப்பரித்தார். "வருவதற்குச் சௌகர்யமில்லை" யென்று எங்கே கடுதாசியெழுதி விடப்போகிறாயோ என்று உள்ளூரப் பயந்துகொண்டேதான் இருந்தோம்; நல்ல வேளை! வந்தாயே? எத்தனை சந்தோஷமாயிருக்கிறது, தெரியுமா!" என்று உண்மையிலேயே ஆனந்தப்பட்டார், அவன் அசடு வழியச் சிரித்தான்.

மாமனார் பின் தொடரக் கூடத்திற்குப் போனான். சமையல் அறையிலிருந்து மாமியார் வெளிப்பட்டு, ஒரு புறமாக, மரியாதையுடன் ஒதுங்கி நின்றாள்.

"வாருங்கள்! ஆத்தில் அம்மா சௌக்யமா?" என்றாள்.

"உம்" என்றான் சிவராமன்.

"அம்மாவும் ஆடிக்கு வருவார்களென்றுதான் நினைத்தேன்; கூட்டிக்கொண்டு வரவில்லைபோலிருக்கிறதே? ஏன்?" என்று கேட்டாள்.

"என்னவோ...அவளால் முடியவில்லை..." என்று மென்று விழுங்கினான்.

மாமியார் தலைகுனிந்தபடி உள்ளே சென்று மறைந்தாள்.

"உட்காருங்கள்! உட்காருங்கள்! மாப்பிள்ளை!" என்று மாமனார்கூட நின்று கொண்டிருந்த வேறு யாரோ ஒருவர் சொன்னார்.

"உட்கார்ந்து கொள்ளப்பா, சிவராமா! நிற்காதே; இதை உன் வீடாகவும், எங்களையெல்லாம் உன் மனுஷ்யாளாகவுமே கொள்ளவேணும்; சங்கோசப்படாதே!" என்று மாமனார் உபசரித்தார்.

அவன் ஈஸிசேரில் சாய்ந்துகொண்டதும் வேலைக்காரன் ஒருவன் விசிறி ஒன்றை எடுத்துவந்து 'பங்கா' போடத்தொடங்கினான்.

இதையெல்லாம் கண்டதும் சிவராமனுக்குத் தன்னையறியாமலேயே சங்கோசம் எங்கிருந்தோ வந்து சூழ்ந்துகொண்டது. எல்லாமே அதிக உபசரணையாக இருப்பதாக உணர்ந்தான். ஆயினும் வாய் திறந்து ஒன்றுமே சொல்லமுடியாதவனுகிப் பொம்மையாக உட்கார்ந்திருந்தான். அவனையறியாமலேயே அவர்கள் சொன்னபடி எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான்.

பத்து வயது மச்சினியொருவள் சிரித்து மினுக்கிக்கொண்டே காப்பியையும் டிபனையும் கொண்டுவந்து சிவராமன் எதிரில் வைத்துவிட்டு மிதமீறிய வெட்கத்தினால் முகத்தை மூடிக்கொண்டு நின்றாள்.

"என்னடீ பட்டு! இப்படி நாணிக் கோணிக்கொண்டு அத்திம்பேர் எதிரில் நிற்கிறாய்! நீயும் அத்திம்பேரையே கல்யாணம் செய்து கொண்டுவிடலாமென்று பார்க்கிறாயா என்ன? ஒன்றுக்கு இரண்டாக இருக்கட்டுமே யென்று!" என்று யாரோ கேலி செய்தார்கள்.

சிவராமன் புன்னகையுடன் பட்டுவைப் பார்த்தான். அந்தச் சிறுமியின் வெட்க உணர்ச்சி இன்னும் மேலே ஓடியது. கன்னங்குழியச் சிரித்துக்கொண்டே முகாரவிந்தம் 'குபீ'ரெனச் சிவக்க ஒரே தாவலில் உள்ளேயோடிமறைந்தாள்.......

'தங்கை அழகுடன்தான் விளங்குகிறாள்; அக்கா?' என்று சிவராமன் உள்ளம் எண்ணமிட்டது. 'இவள் மாதிரியே இருந்தால்...... அவளும்தான் அழகாய் இருப்பாள்!' என்று தானே நினைத்துக்கொண்டான்.........

'எல்லோரும் இருக்கிறார்கள்; கண்ணிலே படுகிறார்கள்; 'அவளை' மட்டும் காணவே காணோமே? அசைவு மறைவிலேகூட கண்ணிலேயே படவில்லையே? எங்கேதான் இருப்பாளோ! என்னதான் செய்வாளோ!' என்று ஒரு சமயம் யோசித்தான்......

'ஒரு வேளை வெட்கப்பட்டுக்கொண்டு சமையல் அறை மூலையிலேயே பதுங்கிக் கிடக்கிறாளோ என்னவோ? எதிரில் வரவே

இப்படி காணுகிறவள் பின்னாடி எப்படித் தான் என்னுடன் குடித்தனம் செய்யப் போகிறாளோ!' என்று ஒரு சமயம் தானே வியந்துகொண்டான்.

ஆனால் வந்தது முதலே அவனுக்கு இதென்ன, 'அவள்' நினைவாகவே இருக்கிறதே! அவளைப்பற்றிய யோசனைகளாகவே இருக்கிறதே! இப்படி ஒரு தடவை ஆச்சர்யப்பட்டான்.

அவனையறியாமலேயே 'அவள்' நினைவு அந்த உள்ளத்திலே ஊசலாடிக்கொண்டிருப்பதை உணர்ந்தான்; காரணம் தெரியாமல் விழித்தான்; வந்தது முதலாகவே தனது தேகமாத்யந்தம் தோன்றி நிற்கும் அர்த்தமற்ற பரபரப்பைக்கண்டு பிரமித்தான்; உள்ளத்தின் படபடப்பைக்கண்டு மலைத்தான்; என்னவோ ஓர் உணர்ச்சித் துடிப்பைக்கண்டு திகைத்தான்.

பிற்பகல் நேரம் கழிந்து, மாலையாகி, அதுவும் அந்தியின் மயக்கத்திலே மறைந்தது. வேட்டகத்துப் புதுமயக்கம் சிவராமனையும் அவனது சிந்தனை அலைகளையும் மறைத்துக் கொண்டு சிரித்தது.


சேலத்தில்

கல்யாணப் பட்டு ஜவுளி ரகங்கள் வாங்க சிறந்த இடம்

# கோபால பத்ம விலாஸ்

385, கடைவீதி, சேலம்.

*Proprietors :*

S. N. PATHMANABA CHETTIAR

P. R. JAYAGOPALA CHETTIAR


மாடியிலே தனக்காகவென்று 'ஸ்பெஷ'லாக ஒழித்துவிடப்பட்டிருந்த அறையிலே சாய்வு நாற்காலியிலே சாய்ந்தபடி அவன் தூக்கமும் அல்லாத—விழிப்பும் அல்லாத ஒரு மயக்க நிலையிலே இருந்தான்.

கீழேயிருந்து ஒரு குரல்:— "அடியே, சிவகாமி! அந்த ஸ்வாமி விளக்கை ஏற்றி வைத்துவிட்டு, வழக்கமாகப் பாடுவது போலே இன்னிக்கும் பாட்டுச்சொல்லு!... உம்?...... நாழிகையாகிவிட்டது."

"விளக்கை ஏற்றுகிறேன்; ஆனால்......... இன்னிக்கிக்கூடப் பாடவேண்டுமா அம்மா?" என்று மெதுவாகக் கேட்டது மற்றொருகுரல்.

"என்னது? இன்னிச்குத்தான் பாட வேண்டும்! ஏன்? உன் ஆம்படையானும் தான் உன் குரல் அழகைக்கேட்டு மயங்கட்டுமே!"

"சீ!...... சரிதான்; போம்மா!" என்ற சிணுங்கல்.

பின்னர் சிறிது நேரம் நிசப்தம்; பிறகு வெகு மதுரமான குரல் ஒன்று, அதி இனிமையுடனே; "கடைக்கண் நோக்கிக் காவாததுமேனோ!" என்ற பாட்டைத் தொடங்கியது.

சிவராமன் கேட்டான்; அந்தச் சம்பாஷணையையும் கேட்டான்; பாட்டையும் கேட்டான்; குரலையும் கேட்டான்; எல்லாவற்றையும் கேட்டான்; கேட்டுக்கொண்டேயிருந்தான்; அரைக்கண் மூடியபடி அவன் அமர்ந்திருந்தாலும் மனம் மட்டும் நன்றாக விழித்துக்கொண்டது.

'சிவகாமி! சிவகாமி! சிவராமன் சிவகாமி! பெயரிலுமல்லவா ஒற்றுமை யிருக்கிறது! சிவகாமி!...... அது அவள் பெயர்தான்; அவன் மனைவியின் பெயர்தான்! பெயரைக் கூட அல்லவா அவன் அத்தனை நாளும் மறந்துபோயிருந்தான்? என்ன ஆச்சரியம்! சிவகாமி—சிவராமன்! இந்தப் பெயர் ஒற்றுமையைக்கூட அல்லவா அவன் கவனிக்காமலே இருந்துவிட்டான்?...... ஆஹா! எப்பேர்ப்பட்ட மதுரமான குரல்! என்ன இனிமையான சாரீரம்! வெகு அலக்ஷியமாகப் பேசும் கண்டம்! வெகு அனுயாஸமாய் மேலோங்கும் த்வனி!... இத்தனை அற்புதமாகப் பாடவும் தெரியுமா?... அவனுக்குத் தெரியவே தெரியாதே!...... இன்னும் என்னென்னவெல்லாம் தெரியுமோ?...... எதெதையெல்லாம் தனக்குள்ளே மறைத்து

வைத்துக்கொண்டிருக்கிருளோ? 'எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ' என்று சொல்வதெல்லாம் உண்மைதான் போலிருக்கிறது?...... என்ன அடக்கம்! என்ன அடக்கம்!...... இது வரையில் தன்னைப்பற்றி ஒன்றையுமே வெளிப்படுத்திக் கொள்ளாமல் மூலையிலே பதுங்கிக் கிடந்தாள்?...... இப்போது தன் குரலை—குரல் அழகை மாத்திரம்—வெளிப்படுத்துகிருள்! இனித் தன்னையே—தன் வெளி அழகை-எப்போதுதான் காட்டிக்கொள்வாளோ! அப்புறம் அவள் குண—அழகை என்று உணர்வானே! எப்படி யிருப்பாளோ? எப்படிப் பார்க்கப் போகிருனே?......!

"பாரா முகம் யாலரா" வென்று அடுத்த பாட்டை ஆரம்பித்தாள் சிவகாமி. என்ன அர்த்த புஷ்டி நிறைந்த பாடல்!...... ஆனல் இனியும் அவ்விதமேயிருக்க அவனல் முடியுமோ?.........

"குழலோசை கேட்டாயோ கிளியே!" என்று அவள் கேட்டபொழுது சிவராமன் உள்ளம் துடித்தது......

அடுத்தபடியாக, "நின்னருள் இயம்பலாகுமோ!" என்று சிவகாமி ஆரம்பித்து, "இன்னல் பூட்டி, இன்பமூட்டி, இந்திர ஜால வித்தை காட்டி" என்று அதிலே மஹேந்திரஜாலங்களை யெல்லாம் செய்து காட்டியதில் சிவராமன் மயங்கியே போனுன்! சொக்கியே போனுன்! தேனில் விழுந்த ஈயெனத் தத்தளித்தான்!......

அன்றிரவு அவனது உள்ளத்திலே நிகழ்ந்த "இன்ப வேதனை" இன்னதுதான் என்பதே அவனுக்குப் புரியவில்லை.

— 5 —

மறுநாள் பொழுது புலர்ந்தது.

முந்திய இரவின் ஹிருதயத் துடிப்பு அப்போதுகூட அடங்காமலே சிவராமன் உட்கார்ந்திருந்தான். அவனது உள்ளத்திலே நிரம்பிக்கிடந்தது என்ன உணர்ச்சி என்பதே புரியாமல் என்னவோ தவித்துக் கொண்டேயிருந்தான். ஏனே அவனுக்கு, 'சிவகாமியைப் பார்த்தால் தேவலை' என்கிற எண்ணமானது மனத்தின் ஒரு மூலையிலிருந்து அடிக்கடி எட்டிப் பார்த்துக் கொண்டே யிருந்தது. 'அந்தரங்கம்!—என்ன; எதனல் அப்படித் தோன்றுகிறது'—என்பதொன்றுமே அவன் அறியான். என்னவோ அவளைப்பார்க்க ஆசைப்பட்டான்!......

'ஒருகால் இன்றுகூட 'அவள்' கண்ணிலேயே தென்படவும் மாட்டாளோ! நேற்று மாதிரிதானே?' என்கிற சந்தேகமும் கூடவே இருந்து வாட்டியெடுத்தது......

கீழேயிருந்து ஒரு குரல்—

"அடியே, பட்டு! இந்தா? இந்தக் காப்பியையும், இட்டிலியையும் கொண்டுபோய் அத்திம்பேரிடம் கொடுத்துவிட்டு வா!"

அது சிவராமனின் மாமியார் குரல்தான்!

தொடர்ந்தாற்போல் பட்டு கால்களில் அணிந்திருக்கும் 'பாதஸரம்' கல் கல்' என்று ஒலிக்க ஓடிவரும் சப்தம்; பின்னர் அவளே மாடிப் படிகளில் ஏறிவரும் ஓசை.........

ஏனே சிவராமனின் மனம் ஓய்ந்து போயிற்று!—இல்லை—அதாவது— ஏமாற்றமடைந்தது! அருகிலிருந்த ஏதோ ஒரு புஸ்தகத்தை எடுத்துப் பிரித்துக்கொண்டு முகத்தை மறைத்தபடி 'வாசிக்க' ஆரம்பித்தான்............

மாடிப்படிகளில் கேட்ட பாதஸரத்தின் ஒலி பாதியில் திடீரென்று நின்றது; சில நிமிஷங்கள் நிசப்தம். திடீரென்றுபாதஸரம் அணிந்திருந்த கால்கள் மறுபடி கீழே இறங்கிப் போகும் சப்தம்............

சிவராமன் 'வாசித்தபடி'யே உட்கார்ந்திருந்தான்............

அவன் இருந்த அறைக் கதவருகிலே கைவளைகள் 'கிலு கிலு' வென்று ஒன்ருேடொன்று மோதிக்குலுங்கும் இனிமையான ஒலி.........

அறைக்கதவு திறக்கப்பட்டது. மெதுவாக—லேசாக; மிருதுவான காலடி ஓசை...

சிவராமன் முகத்தை மறைத்தபடியே 'வாசித்து'க் கொண்டேயிருந்தான்.........

அறைக்குள்ளே புதுப் புடவையின் சலசலப்பு; மல்லிகையின் ஸுகந்தம்; லேசான குரலில் வெகு ஸன்னமாகக் கனைத்த சப்தம்.........

சிவராமன் திடுக்கிட்டுப் புஸ்தகத் திரையிலிருந்து, தலை நிமிர்ந்து பார்த்தான்.........

எதிரே, தலைகுனிந்தபடி, 'அவள்'! சிவகாமி!

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது! என்னது! 'பட்டு' என்னவிதம் 'சிவகாமி' யாய் மாறினுள்!............




வாழ்க்கையில் ஆரோக்கியத்தை விரும்
பும் பெற்றோர்கள் ஆகாரத்தில் சிறந்த
தென நம்புவது பெரீஸ் பிஸ்கட்ஸ்

★

குழந்தைகள் விரும்பும் அமிர்தம்
போன்ற உணவு மேலான சத்துக்கள்
அடங்கிய தங்களின் சிற்றுண்டி என்
பதை ஒவ்வொரு தாய், தந்தையரும்
அறிந்திருப்பதால் அவர்கள் எப்
பொழுது வாங்குவதும்

★

# பெரீஸ்

## பிஸ்கட்ஸ்

**PERRY & CO., USILAMPATTI.** (Estd. 1917)

"நீயா!" என்ருன் எல்லேயற்ற ஆச்சர்யத்துடனே வாயைப் பிளந்தபடி.

அவள் மௌனமாகத் தான் கொண்டு வந்திருந்த காப்பியையும் இட்டிலியையும் மேஜைமீது வைத்துவிட்டுத் தலைகவிழ்ந்து கொண்டு நின்ருள்.

சிவராமனுல் பேசவே முடியவில்லே! தொண்டையில் என்னவோ அடைத்துக் கொண்டது.

"பட்டு கொண்டு வருகிருள் என்றல்லவோ நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்று சொல்லுவதற்குள் திக்கித் திக்கித் தடுமாறிப் போனுன்.

சிவகாமி தலை நிமிர்ந்து அவனை ஒருமுறை நன்ருக நோக்கினுள். ஆனுல் மறுக்ஷணமே தரையை அடைந்தன அவள் கண்கள்.

சிவராமன் அசந்தே போனுன்! ஐயோ— அந்தக் கண்கள்! எத்தனை பெரியவை! என்ன ஆழம்! அந்தப் பார்வை! அதற்கு அர்த்தம்? அந்தப் பார்வையிலே அவள் என்ன பதிலைத் தெரிவித்தாள்?

"சிவகாமி!............"

அவ்வளவு தான்; மேலே வார்த்தைகள் கிளம்ப மறுத்து விட்டன அவனுக்கு. காரணம் அவள் மீண்டும் தலைதூக்கி அவனைப் பார்த்ததுதான்?.........

அந்த விழிகள்! என்ன கறுப்பு! என்ன கறுப்பு! என்ன கூர்மை! அவளுக்குத்தான் என்ன கண்கள்! எத்தனை விசாலமானவை! அவள் பார்வையின் ஆழமோ! வாய் பேசாமல் கண்களே அல்லவா பேசுகின்றன! அந்த மை தீட்டிய விழிகளின் சுழற்சியிலே மயங்காத புருஷனும் இருக்கமுடியுமா?...

சிவராமன் உள்ளம் வேகமாக அடித்துக் கொண்டது.........

"நேற்று நீ பாடினுயே? ரொம்ப அற்புதமாயிருந்தது!"—இதுவும் சிவராமன் தான்.

அவளது அழகிய வதனத்திலே புன்னகை நிலவு தவழ்ந்தது. தலை குனிந்துகொண்டே "கேலி பண்ணுகிறீர்கள்!" என்ருள் மெதுவான குரலில்.

அந்தக் குரலினிமையின் மயக்கமும், அவளது அடக்கமுள்ள கெட்டிக்காரத்தனமும் மேலும் அவனைத் திகைத்துத் தடுமாறச் செய்தன.

"இல்லை—நிஜமாகவேதான், சாரீர சம்பத்தும், சரீர சம்பத்தும் உன்னிடம்........." என்று சிவராமன் மேலும் குழறத் தொடங்கியபோது சிவகாமியின் முகாரவிந்தம் சொல்லமுடியாத வெட்கத்தினுல் 'குபீர்' என்று சிவந்தது.

"நான் போகிறேன்!" என்று நாணமிகுதியுடன் சொல்லிக்கொண்டே, அவ்வறையை விட்டு, வேகமாகப்போய், மின்னலென மறைந்தாள்.

மின்சார சக்தியினுல் தாக்குண்டவன் போலே பிரமித்துப் போயிருந்தான் சிவராமன்.

* * *

'போனவுடனேயே திரும்பி விடுவது' என்று மாமனுர் வீட்டிற்குப் புறப்படும்போதே ஸங்கல்பித்துக்கொண்டு வந்த சிவராமன் வேட்டகத்திலே நான்கு நாட்களுக்கு மேலாகவே தங்கினுன்.

ஆயினும் அவன் தங்கிய காரணத்திலே வெற்றியைக் காணவில்லை; அந்த ஒரு தடவைக்குமேல் அவனுக்குச் சிவகாமியின் 'தரிசனம்' கிடைக்கவேயில்லை; எப்படித் தவமிருந்தும் 'பலன்' இல்லாமற்போய் விட்டது! சிவகாமி ரொம்பவும் முன் ஜாக்ரதையுடனேதான் நடந்துகொண்டாள். அடிக்கடி அவள் அவன் கண்களிலே தென்பட்டுக்கொண்டே யிருந்தபோதிலும் 'நேர் தரிசனம்' மற்ருெரு முறை இல்லாமலேயே செய்துவிட்டாள்! அப்புறம் அவனுக்கு டிபன், காப்பி கொண்டு வருவதெல்லாம் அவன் மைத்துனி பட்டுதான்!

ஒரு பெருமூச்சுடனே சிவராமன் ஊருக்குக் கிளம்பினுன். அதியற்புதமான அவளது அழகை அகக்கண்ணுல் பருகியபடியே போனுன். அவளுடைய அகன்ற—பெரிய விழிகள் திரும்பத்திரும்பச் சுழன்றுவந்து அவனது உள்ளத்துடிப்பை இன்னும் அதி வேகமாக ஆக்கிக்கொண்டே இருந்தன. "இப்பேர்ப்பட்ட அழகியையா அலக்ஷியமாக எண்ணினேம்!" என்று சிவராமன் கடைசியில் எண்ணலானுன்.

— 6 —

"என் அன்பு நீலைக்கு,

போனதே பிடித்து இதுவரையில் எனக்கு ஏன் ஒரு கடிதம்கூட எழுதவேயில்லை? ஆடிக்குத் தங்கள் வரவை எத்தனை ஆவ

லுடனே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தேனோ அதைவிடப் பன்மடங்கு ஆசையுடனே தங்கள் கடிதத்தை அதன் பிறகு எதிர்பார்த்தேன். முன்னைக்கிப்போது உங்கள்மீது நான் கொண்டுள்ள ஆசை எவ்வளவோ அதிகமாகிவிட்டது. ஏற்கனவே தாங்கள் ஆடிக்கு வந்திருந்தபோது நமக்குள் பழக்கமும் ஆகிவிட்டதல்லவா? ஆயினும் தங்கள் அன்பிற்கு அடையாளமாக, 'போய்ச் சேர்ந்தேன்' என்று ஒருவரிகூட எனக்கு எழுதிப்போட மனசு வரவில்லையல்லவா? என்மீது ஏதாவது கோபமா? என்ன தவறுசெய்தேன்?

அப்படியே நான் ஏதாவது தவறு செய்துவிட்டதாகத் தாங்கள் கருதினால், தீபாவளிக்குத் தாங்கள் இவ்விடம் வரும்போது எல்லாவற்றையும் சரிப்படுத்தித் தங்களைச் சரியான விதத்தில் திருப்திசெய்து வைக்கிறேன். அன்று வெகு சீக்கிரத்திலேயே தங்களை விட்டு ஓடி விட்டேன் என்றுதானே கோபமெல்லாம்? வெட்கமாயிருக்காதா பெண்ணுக்கு? அன்றுகூட நானாகத்தானே வலுவில் தங்களிடம் வந்தேன்! நீங்கள் என்னை எதிர்பார்த்திருப்பீர்களென்றும் தெரியும்! ஆனாலும் நீங்களாக முயற்சிப்பதற்கு முன்னரே நானாக வந்துவிட்டேனே. உண்மையில் பாதிவழி வந்துகொண்டிருந்த பட்டுவை மறித்து, அவள் கையில் இருந்தவற்றை நான் பிடுங்கிக்கொண்டல்லவா தங்களை நெருங்கினேன்! தெரியாதா? எவ்வளவு ஆசையுடனே வந்திருப்பேன் தெரியுமா! இன்றும் நாளையும்கூடப் பட்டு அதற்காக என்னைக் கேலிபண்ணிக்கொண்டுதான் இருக்கிறாள்! இருக்கட்டுமே? நாளைக்கு அவளுக்குக் கல்யாணமாகி அகமுடையான் வந்தால் அவளும் அவ்விதம்தானே நடந்துகொள்வாள்?

தீபாவளியும் நெருங்கிவிட்டது. ஞாபகமிருக்கிறதல்லவா? தீபாவளிக்கும் கட்டாயம் புறப்பட்டு வரவேண்டும். தங்களை எத்தனை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் என்பதை நீங்களும் அறிவீர்களல்லவா? கட்டாயம் புறப்பட்டு வரவேணும் என்பதற்காகவே இந்தக் கடிதத்தை முன்னாடி என் அழைப்பாக அனுப்பிவைக்கிறேன். அப்பாவும் இனிமேல் எழுதுவார்; இந்தத் தடவை வரும்போது அம்மாவையும் அவசியம் அழைத்துக்கொண்டு வரவேண்டும். தவறவேகூடாது. அம்மாவுக்கும் தங்களுக்கும் அநேக நமஸ்காரங்கள்.

தங்கள்,
சிவகாமி"

என்று சிவராமனுக்கு எழுதினாள் சிவகாமி. அதைப்படித்து உள்ளம் பூரித்துப் போனான் சிவராமன். கடிதத்தின் நாஸூக்கையும் அதே சமயம் அதிலே மறைந்து பெருகும் அன்பையும் கண்டு சிவகாமியின் சாதுர்யத்தைப்பற்றித் தனக்குள்ளாகவே ரொம்பவும் வியந்துகொண்டான். "என்ன விஷயம்; என்ன பிரியம்!" என்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டே அவனும் அவளுக்கு உடனே பதில் எழுதினான்.

"என் ஹ்ருதய ராணிக்கு,

உன் கடிதம், அதைப் படிக்கும் ஒவ்வொரு தடவையும், என்னை ஸ்வர்க்கானந்தத்தில் ஆழ்த்தி ஆவலையும் தட்டி எழுப்புகிறது. உனக்குக் கடிதம் எழுதினால் நீ என்ன நினைத்துக்கொள்வாயோ என்றுதான் பேசாமலிருந்தேனே தவிர வேறொன்றுமே இல்லை. உனக்கு எழுதத்தான் இல்லையே ஒழிய, உன்னைவிட்டுப் பிரிந்து இங்கு வந்ததுமுதல் ஸதாஸர்வ காலமும் கனவிலும் நினைவிலும் தூக்கத்திலும்


## மாதவிடாய் நின்றிருந்தால்



குமாரி (TABS) உபயோகித்தால் மீண்டும் ஏற்படுவதுடன் பிற்காலத்திலும் தொந்தரவு ஏற்படாது. தீங்கற்றது. விரைவில் பலன் தரும். விலை ரூ. 3. கடுமையானதற்கு ரூ. 5. கர்ப்பத்தடை 6 மாதங்களுக்கு ரூ. 4. (வி. பி. அணா 12 பிரத்யேகம்)

**Mrs. P. DEVEE, F. D. S., (C. M.)**
Tollygunge, Calcutta.

*Available also from :—*

(1) HARRY & SON, 93, China Bazar Road, Madras.
(2) RAJA MEDICAL HALL, 31, Dharmaraja St., Bangalore Contt.
(3) NATHAM & CO. Mattancheri, Cochin
(4) K. C. MATHEW & Co., Kozhancheri, Travancore.

விழிப்பிலும் எனக்கு உன்னைப்பற்றிய தியானமேதான் என்பதை நான் சொல்லியா நீ தெரிந்துகொள்ளவேண்டும்? ஆடிக்கு நான் அங்குவந்து திரும்பியபிறகு உள்ள இந்த இடைக்காலமானது உன்மீது நான் கொண்ட பிரியத்தை எவ்வளவு தூரம் வளர்த்திருக்கின்றது என்று விவரிக்க வார்த்தைகளே கிடையாது!

'தீபாவளி எப்போது வரும்' என்று நாளை எண்ணிக்கொண்டுதான் பொழுதைத் தொலைத்துக்கொண்டிருக்கிறேன். என்மீது கோபமா?'—என்று உன் கடிதத்திலே நீ கேட்டிருக்கிறாய்? இனி நீ என்மீது கோபித்துக்கொள்ளாமல் இருந்தால் அதுவே எனக்கொரு பெரிய வரப்பிரஸாதமாகும்! உன்னிடம் அன்புப் பிச்சையை எதிர்பார்த்து யாசிக்கும் நான் உன்னைக் கோபித்துக் கொள்வதா? எதற்காக? உலக வழக்கத்திற்கு நேர் எதிரிடையாகச் சொல்கிறாயே! அவ்விதமே ஒரு சமயம் நானே கோபித்துக் கொண்டுவிட்டதாகவே வைத்துக்கொண்டாலும், உன் அழகிய விழிகளின் ஆகர்ஷண சக்திக்கு முன்பு என் முறுக்கெல்லாம் பஸ்மீகரமாகப் போவதைவிட வேறு வழி?

உன் அகன்ற கண்ணழகுக்காகவேகூட உன்னை மறுபடியும் பார்க்க ஆவல்கொண்டு துடித்துக்கொண்டிருக்கிறேன். தீபாவளி அளிக்கப்போகும் நல்ல சந்தர்ப்பத்தைத் தகுந்தபடி பயன்படுத்திக்கொள்ளாமல் நழுவ விட்டுவிடுவதற்கு நான் என்ன அதனை முட்டாளா! போக்கு வரத்து வசதிகளே திடீரென்று மறைந்துவிட்டபோதிலும் கட்டாயமாக—பறந்தாவது — நடந்தாவது தீபாவளிக்கு உன்னைப்பார்க்க வந்தே திருவேன்!

வரும்போது உனக்கு என்ன வாங்கிக் கொண்டு வரட்டும்? ஸதா ஸர்வஸதா உன் நினைவாகவே இருக்கும்,

உன் அன்பன்,
சிவராமன்''

என்று அவன் அவளுக்கு எழுதியதற்கு அவள்—''நீங்கள் எனக்காக உங்களையே கொண்டு வருகிறபோது, உலகத்திலுள்ள வேறு எந்த அல்பத்துக்காக நான் ஆசைப் படப்போகிறேன்?'' என்று அவனுக்கு உடனே பதில் எழுதியதைப் பார்த்தபோது சிவராமனுக்குப் பெருமை சற்றும் பிடிபடவேயில்லை!

சிவராமன் தலைத் தீபாவளிக்குப் புறப் பட்டுப்போனான்;தாயாரையும்கூட அழைத்துக்கொண்டு சென்றான்; இந்தத் தடவை சிவகாமிக்கென்று ஸோப்புக்கள், பௌடர், ஸ்னோ, வாஸனைத் தைலங்கள் இத்யாதிகளையும்வாங்கிக்கொண்டு போனான்; தலைத்திபாவளியை ஆனந்தமாகக் கழித்தான்—என்றெல்லாம் கூறவும் வேண்டுமோ?

அவன் தாயார் அங்கே போனதும் போகாததுமாக நமஸ்காரம் செய்ய வந்த மாட்டுப்பெண்ணைப் பார்த்து, ''சிவகாமி! ஆடிக்கு வந்த என் பிள்ளையை எப்படித் தான் 'சொக்குப்பொடி' போட்டு மயக்கினாயோ அம்மா! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம்! அவனைப் பைத்தியமாக அடித்துவிட்டாயே! என்னவோ நீ 'மஹா ராஜியாய் நன்னா இருக்கணும்!'' என்று மனப்பூர்த்தியாக ஆசீர்வாதம் செய்து அக மகிழ்ந்ததை மட்டும் இங்கே குறிப்பிடத் தான் வேண்டும்!

— 7 —

சிவகாமியுடன் சிவராமன் குடித்தனம் துவக்கிவிட்டான்.

ஒருநாள் மாலை நேரத்திலே தனியறையில் அவன் அவளுடன் ஆனந்தமாக ஸல்லாபித்துக்கொண்டிருந்தபொழுது 'கோதண்ட யமன்' அவர்களிடையே தோன்றினான்.

அவனைக்கண்ட சிவகாமி உள்ளேயோடி மறைந்தாள்.

''என்ன சிவராமா? இப்போதுகூட என் 'மண்டையை உடைத்துவிடலாமா' என்று தானே யோசிக்கிறாய்? போனால் போகிறதென்று மன்னித்து விடு! பிழைத்துப்போகிறேன்'' என்று சிரித்தான் கோதண்டம்.

சிவராமனும் சந்தோஷமாகச் சிரித்தான்.

''இனி முன்மாதிரி நான் அடிக்கடி இங்கே வந்து குறுக்கிடக்கூடாதுதான்! நானும் ஏன் வரப்போகிறேன்? எனக்கும் தெரியும்!...... ஆனாலும் எப்போதாவது— ஆடிக்கு ஒருதடவை அமாவாசைக்கு ஒரு தடவை வந்து நீங்கள் இருவரும் சேர்ந்து சந்தோஷமாய்க் குடித்தனம் செய்வதைக் கண்ணாரப் பார்த்துவிட்டுப்போக அனுமதி கொடுப்பாயல்லவா?'' என்று சொல்லி மீண்டும் சிரித்தான் கோதண்டம்.

சிவராமனும் சிரித்தபடியே ''ஏன்? நீயும் தான் எங்களுடனேயே தங்கிவிடேன்'' என்றான்.

"என் மனைவி?" என்று கேட்டான் கோதண்டம்.

"அவளில்லாமலா!"

"அது கூடாதப்பா! இரண்டு தம்பதிகள் ஒரே இடத்தில் இருந்தால் அது எத்தனையோ காரியங்களுக்கு ரொம்ப இடைஞ்சலாக இருக்கும்!" என்று குறும்பாகக் கண்ணைச் சிமிட்டினான். "ஏன்? உன் லீலாவை வேண்டுமானால் இப்போது கொண்டுவந்து வைத்துக்கொள்ளேன்!" என்று வெகு ரகசியமான குரலில் சொன்னான்.

"அவள் போகிறாளடா — நான்ஸென்ஸ்! என்னத்தையாவது உளறிவைக்காதே இப்போது!"

"ஓஹோ! பயம்கூட வந்துவிட்டதா! ஆனாலும் அவள் போகாமல் இன்னும் இருக்கிறாளென்று நீ நினைத்துக்கொண்டிருக்கிறாய்? எப்போதோ உன்னுடைய 'லவ்' எவனையோ இழுத்துக்கொண்டு எங்கோ ஓடிவிட்டாள்! இதைச் சொல்லத் தான்வந்தேன் இப்போது"

"அது யாரடா அவன்?" என்று ஆச்சர்யத்துடனே வினவினான் சிவராமன்.

"எவனோ—நடுவீதி நாராயணன்! உன் மாதிரி அவளுக்கு எத்தனையோ பேர்கள்! நீ ஒருவன்தான் என்று நினைத்துக்கொண்டாயோ?—பார்த்தாயா,'நாகரிகம்'போகிற போக்கை! நடுத்தெரு நாகரிகம்!—படித்த படிப்பின் லக்ஷணம்! 'லவ்'வாம்; புடலங்காயாம்!........."

"கிடக்கிறதுடா—தள்ளு குப்பையை! ஏற்கனவே எதிர்பார்த்தது தானே?"

'யார் எதிர் பார்த்தது? நீயா? நானா?"

"அட, நீதான்!—அதுதான் விட்டுத்தள்ளு என்கிறேனே?"

"உத்தரவு! அப்படியே நானும் உத்தரவு வாங்கிக் கொள்கிறேன்! இல்லாவிட்டால் அப்புறம், 'அவள்' வந்து பாவம் உன்னைப் எங்கேயாவது கோபித்துக் கொள்ளப் போகிறாள்! வரட்டுமா?........"


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

48 வருஷங்காலமாகப் பல்லாயிரக் கணக்கான தழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

# விடிந்தது

**ஜி. சதாசிவம்**

கடந்த ஒரு வாரமாகவே ஓயாது பெய்துகொண்டிருந்த பேய் மழை அன்று மாலைதான் விட்டிருந்தது. ஆனாலும் வாடைக் காற்று, மரங்களெல்லாம் முறிந்து விழுந்துவிடுமோ என்று அஞ்சும்படி, பேயாட்டமாட, வீசிக்கொண்டிருந்தது. அப்பொழுது அது வளர்பிறைதானென்றாலும், வானம் இன்னும் வெளிவாங்காது மப்பும் மந்தாரமுமாயிருந்ததினால், எங்கும் ஒரே கும்மிருட்டா யிருந்தது. விடாது பெய்த மழையினால் காவேரியும் பெருக்கெடுத்துக் கரைபுரண்டோடி, கரையோரத்திலிருந்த ஏழை எளியவர்களின் குடிசைகளைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக்கொண்டு அடங்கிவிட்டாள்.

வாடைக்காற்றின் இரைச்சலைத் தவிர மற்றப்படி அங்கே நிசப்தம் நிலவியிருந்தது, ஊர் அடங்கிவிட்டதைத் தெரிவித்தது. வெள்ளத்திற்கு முன்பு காவேரிக்கரையில் சில குடிசைகளிருந்தன என்பதற்கு அடையாளம்போல் ஒரே ஒரு குட்டிச்சுவர் மட்டும் அங்கு நின்றுகொண்டிருந்தது. அதுவும் எந்த நிமிஷம் கீழே விழுந்துவிடுமோ என்ற மோசமான நிலையில்தானிருந்தது. அந்தச் சுவரை ஒட்டினாற்போல, 'எண்ணிக்கொள்' என்று சொல்லும்படியாக, தேகத்திலுள்ள எலும்புகள் வெளியே தெரிய இளைத்துப்போன ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள். அந்தக் கடும் குளிரில் வெடவெடவென்று உடல் நடுங்கிக்கொண்டு தனக்கு முன்னால் புகைந்து எரியும் அடுப்பிலே குளிரில் மரத்துப்போன தனது கைகளுக்குச் சூடு காண்பித்துக்கொண்டிருந்தாள். மூன்றே கற்களாலாகியது அவளுக்கு முன்னிருந்த அந்த அடுப்பு. அதன் மேல் ஒரு மிகப் பழைய சட்டி. அதில் கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்தாள் அந்த ஸ்திரீ. அவள்தான் சின்னாயி.

சின்னாயிக்குச் சற்றுத் தொலைவில் ஒரு மரத்தினடியில், மானத்தைமூடக்கூடப்போதும் போதாதுமான கந்தல் உடைகளுடன் குளிரில்தவித்துக்கொண்டு எலும்பும்தோலுமாக உட்கார்ந்திருந்தன மூன்று குழந்தைகள். வறுமையும், வியாதியும் தங்களின் அழிக்கமுடியாத சின்னங்களை யெல்லாம் அந்தக் குழந்தைகளின் மேல் ஆழமாகப் பதியவைத்திருந்தன. அவர்கள் மூவரும் சின்னாயியின் குழந்தைகள்தாம். நடுக்கும் குளிரிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் தங்கள் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு ஈரத் தரையில் குந்திட்டு உட்கார்ந்திருந்தனர். அவர்களுடைய பார்வையெல்லாம் அடுப்பிலே தயாராகிக் கொண்டிருந்த கஞ்சியின்மீதுதான் இருந்தது.

மூவருள் ஐந்தே வயதான பொன்னிதான் சின்னஞ்சிறுவள். "ஆயா! குளிர் நடுக்குகிறது. பசியோ உயிர் போகிறது" என்று மழலை மொழியிலே, ஈனக்குரலில் தன் தாய்க்குக் கேட்கும்படி கூறினாள்

கந்தன்தான் மூவருள்ளும் மூத்தவனென்றாலும் அவனுக்கு வயது ஒன்பதுதானாகிறது. தன் தங்கை கூறியதைக் கேட்டதும், "பொன்னி, பொறுமையா யிரு. ஆயா நமக்குத்தானே கஞ்சி காய்ச்சிக்கொண்டிருக்கிறாள், தெரியவில்லையா? பாக்குக் கடிக்கிற நேரத்திலே அம்மா கஞ்சி காய்ச்சி முடித்துவிடுவாள். இதோ பார், நீ இப்படி என் பக்கத்திலே நெருங்கிவந்து குந்திக் கொள். குளிர் அவ்வளவாகத் தெரியாது" என்ற வார்த்தைகள் கிணற்றுக்குள்ளிருந்து வருவதுபோல அவனிடமிருந்து வெளிவந்தன.

தங்களுடைய ஒட்டி உலர்ந்த தேகம் ஒன்றுடன் ஒன்று ஒட்டியதுபோல் உட்கார்ந்தால் சிறிது கதகதப்பு ஏற்பட்டு அதைக் கொண்டு குளிருடன் போராடலாம் என்ற எண்ணத்துடன் குழந்தைகள் மூவரும் நெருங்கி உட்கார்ந்தனர். மூவருக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது.

"ஆயா, இன்னும் எவ்வளவு நேரந்தான் பிடிக்கும்?" என்றான் கறுப்பன், பொறுமையை இழந்தவனாய். இவன் கந்தனுக்கு இரண்டு வருஷங்களுக்கு இளையவன். "என்னால் பசி பொறுக்க முடியவில்லை. பொன்னியும் பசி பசியென்று துடியாய்த் துடிக்கிறாள். நேற்றுப்பொழுது சாயவாவது அரை வயிற்றுக்குக் கஞ்சி கிடைத்தது.

இன்று இந்நேரமாகியும் அதற்குக் கூட வழியைக்காணோம். கந்தன் எங்கேயாவது போய் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு வந்திருப்பான். இல்லாவிட்டால் அவனும் எங்களைப்போலப் பசி பசியென்று பறக்கமாட்டானா?'' அவனுடைய குரலில் தன் அண்ணன்மீது சொல்லமுடியாத வெறுப்புத் தொனித்தது.

தொலைவிலுள்ள கிராமத்துக் கோவிலில் இருந்து, அர்த்தஜாம பூஜை முடிந்து, மணியோசை காற்றிலே மிதந்துவந்து நடுநிசியாகிவிட்டதைத் தெரிவித்தது. எங்கிருந்தோ ஒரு நாய் ஓயாது அழும் குரலும் மணியோசையுடன் கலந்துகொண்டது. கந்தனுக்குத் தன் தம்பி தன்னைப்பற்றி அபாண்டமாகக் குறை கூறியது மிகவும் கோபத்தை உண்டாக்கிற்று. கறுப்பனைச் சுட்டெரித்து விடுவதுபோலக் கோபமாக முறைத்துப் பார்த்தான். பிறகு என்ன எண்ணினானோ தெரியவில்லை. தன் முகத்தைத் திருப்பி வெட்ட வெளியைப் பார்க்கலானான்.

அவர்களுடைய தாய் அவர்களிருந்த பக்கம் திரும்பி, ''கந்தா, கறுப்பா, பொன்னி. கஞ்சி காய்ச்சியாகிவிட்டது. எல்லோரும் குவளையை எடுத்துக்கொண்டு வாருங்கள்'' என்று கூறினாள்.

அவள் சொன்னதுதான் தாமதம் மூன்று குழந்தைகளும் தங்கள் குவளைகளைத் தாய்க்குமுன் கொண்டுவந்து வைத்தார்கள். கறுப்பனும், பொன்னியும் நாக்கைச் சப்புக்கொட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். கந்தனோ எவ்வித உணர்ச்சியுமில்லாத மண் பொம்மையைப்போலக் குந்தியிருந்தான். சின்னாயி சட்டியிலுள்ள கஞ்சியை மூன்று குவளைகளிலும் சமபாகமாக ஊற்றினாள். அந்த மையிருட்டிலும் குவளைகளிலிருந்து ஆவி வெளிப்படுவது நன்ருகத் தெரிந்தது. பாவம்! அவர்களுக்கு அப்பொழுதிருந்த அகோரப் பசிக்கு, அவர்களுக்கு முன்னேயிருந்த கஞ்சி எந்த மூலைக்கு?

''கடித்துக்கொள்ள ஒரு மிளகாய்க் காம்புக்கும் வழியில்லை. விடிந்தால் நாளைக்கு இதுவாவது கிடைக்கிறதோ என்னவோ? ஆண்டவன் இன்றைக்கு இதற்காவது படி போட்டாரே'' என்ருள் சின்னாயி.

கந்தன் கற்சிலையைப்போல் உட்கார்ந்திருந்தான். தானிருந்த இடத்தைவிட்டு ஓர் அடிகூட நகரவில்லை. கறுப்பனும் பொன்னியும் காணுததைக் கண்டவர்களைப் போல் பாய்ந்து கஞ்சியைக் குடிக்கலானார்கள்.

''கந்தா நீ மட்டும் ஏன் சும்மா குந்திக்கிட்டிருக்கிருய்? கஞ்சியைக் குடித்துவிட்டுப் படுத்துத் தூங்கு.'' சின்னாயி, கந்தன் கஞ்சி மிகவும் குறைவாயிருக்கிறதென்ற கோபத்தில்தான் அதைக் குடிக்காமலிருக்கிருன் என்று நினைத்துக்கொண்டாள். ''என்னப்பா செய்வது, ஏதோ இதுவாவது கிடைத்ததே என்று சந்தோஷத்துடன் குடித்துவிட்டுப் படு.'' அவள் சொன்னது எதுவுமே அவன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

கறுப்பனும், பொன்னியும் தங்களுடைய பங்குக் கஞ்சியைக் குடித்துமுடித்தார்கள். கறுப்பனின் பார்வை, தன் அண்ணனுக்காக வைக்கப்பட்டுக் குளிர்ந்துகொண்டிருக்கும் கஞ்சியின்மீது சென்றது. கறுப்பனுக்கிருந்த பசி அவனுக்குக் கிடைத்த கஞ்சியினால் அடங்குவதற்குப்பதிலாக அதிகரித்து விட்டது. கந்தனின் கஞ்சியைக் கண்டதும் அவனுக்குச் சபலம் தட்டிற்று. பிம்பம் போல் உட்கார்ந்திருந்த தன் அண்ணனைப் பார்த்துவிட்டு மெதுவாகக் கையை நீட்டி அந்தக் குவளையை எடுக்கப்போனான்.

அதே நிமிஷம் இதுவரை சிலைபோலிருந்த கந்தன், கறுப்பனின்மீது பாய்ந்து அவன் கையைப் பிடித்து முறுக்கி, ''பெருந்தீனிக்காரப்பன்னி! உன் பாழும்வயிறு இன்னுமா ரொம்பவில்லை. அதைத் தொட்டால் உன் கழுத்தை நெறித்து விடுவேன்'' என்று கூறி அவனை முரட்டுத்தனமாகக் கீழே தள்ளினான். கறுப்பன் ஏமாற்றத்துடன் வலி பொறுக்கமாட்டாமல் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே பழையபடி மரத்தடியில் போய் முடங்கினான்.

சின்னாயி தன் மகனை, அவன் கறுப்பனைச் சின்ன விஷயத்திற்காக அவ்வளவு கடுமையாக நடத்தியது தவறு என்று கடிந்து கொண்டாள்.

''ஆயா!'' அவன் அழைத்த அந்தக் குரலில்தான் எவ்வளவு கனிவு; எத்தனை அன்பு! ''அது உன் பங்கு. அதை நீ குடிக்கவேண்டும்.''

அவன் கூறியது அவளைக் கட்டளையிடுவது போலிருந்தது. சின்னாயி அன்றுதான் அத்தகைய அதிகாரக் குரலைத் தன் மகனிடமிருந்து முதல் முதல் கேட்டாள். ஆகவே ஒரு நிமிஷம், அந்தக் குரல் தன்னுடைய

மகனுடையதுதானா வென்று எண்ணி, திகைத்தேபோனாள். அங்கு மரணத்தை யொத்த மௌனம் ஆழ்ந்திருந்தது. அதைக் கலைத்துக்கொண்டு வந்தது கந்தன் விசித்து விசித்து அழுத குரல்.

"கந்தா என்ன ஆய்விட்டது இப்பொழுது? ஏன் இப்படி அழுகிறாய்?" என்று கூறி அன்புமேலீட்டால் சின்னாயி கந்தனைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"ஆயா இந்தக் கஞ்சியை நீ குடித்தே ஆவணும். எங்களைக் காப்பாற்றுவதற்காக நீ எவ்வளவு நாட்கள் பட்டினி கிடப்பாய்? நான் எவ்வளவு நாளாகப் பார்த்துவருகிறேன். கிடைப்பதை யெல்லாம் எங்களுக்கே கொடுத்துவிட்டு உனக்கு எதுவுமே வைத்துக்கொள்கிறதில்லை. இன்று நீ இந்தக் கஞ்சியைக் குடித்துத்தான் ஆவணும். ஆமாம் இது என் உத்தரவு."

"கந்தா, ஏதோ நீ இவ்வளவு கண்டிப்பாகச் சொல்வதால் இன்று நான் கஞ்சி குடிக்கச் சம்மதிக்கிறேன். ஆனால் பூராவையும் நானே குடித்துவிட்டு உன்னைப் பட்டினியாகப் படுக்கவிடமாட்டேன். இருப்பதைத் தலைக்குக் கொஞ்சமாகக் குடிப்போம். எனக்கு என்ன? வயதாகிவிட்டது. நான் எப்படிப்போனாலும் கவலையில்லை. உன் விஷயம் அப்படியில்லை நீ உயிரோடிருந்து உன் தம்பியையும், தங்கையையும் காப்பாற்றவேண்டும்."

"நடக்கவே நடக்காது." கந்தன் ஒரே பிடிவாதமாக அந்தக் கஞ்சியில் தான் ஒரு வாய்கூடக் குடிக்க முடியாதென மறுத்து விட்டான். அவனுடைய திடமான பதிலே அதை வெளிப்படுத்தியது. "நான் அதைத் தொடக்கூடமாட்டேன். எனக்கு நேற்றுக் காலையில் கொஞ்சம் வயிற்றுக்குக் கிடைத்தது. ஆனால் நீ கஞ்சி குடித்தோ மூன்று நாட்களுக்குமேலாகிவிட்டது. நீ இப்பொழுது இந்தக் கஞ்சியைக் குடித்தால் தான் நாளைக்குப் பொழுது விடிந்ததும் எங்களுக்கு ஆகாரம் தேடிக்கொண்டுவந்து




# வின்ஸென்ட் கம்பெனி லிமிடெட், திருச்சி.

பிராஞ்சுகள்: மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, கும்பகோணம், கோயம்புத்தூர், சேலம்.

வின்ஸெண்ட் ஸோடா, கலர், விம்டோ, ரொட்டி, கேக்குகளை எல்லோரும் தாராளமாய் வாங்கி, குடும்பத்தில் யாவருக்கும் பந்துமித்திரர்களுக்கும் கொடுங்கள். ஏனெனில், இவைகள் கடந்த 30 வருஷமாய், பொதுஜனங்களின் நன்மதிப்பை நன்றாய் அடைந்திருக்கும் **வின்ஸெண்ட் கம்பெனியாரால்** தயார் செய்யப்பட்டவை. மேலும் ஷை சரக்குகள் கல்யாணம், டீபார்ட்டி, திருவிழாக் காலங்களிலும் விருந்தினர்களுக்குச் சிற்றுண்டியாக வழங்க நேர்த்தியாய் அமைந்துள்ளன.

போட உனக்குச் சக்தியிருக்கும்.'' முடிவில் கந்தனின் பிடிவாதம்தான் நிறைவேறியது.

* * *

மறுநாள் விடியற்காலை. கதிரவன் நன்றாக எழவில்லை. ஆனால் சின்னாயி நடுக்கும் குளிரையும் லக்ஷியம் செய்யாது எழுந்து விட்டாள். தனக்காக முதல்நாள் இரவு பட்டினியாகப் படுத்துக்கொண்ட தன்மகன் கந்தனுக்காக ஆகாரம் தேடிவரப் புறப் பட்டுவிட்டாள் அவள். தெருத் தெருவாக வீடு வீடாகச்சென்று ஈனக்குரலில் கல்லும் உருகக் கெஞ்சினாள் பிச்சைவேண்டி.

''ஐயா, அம்மா, நான் உங்களைப் பிச்சை கேட்பதெல்லாம் என் மகனுக்காகத்தான். அவன் இரண்டு நாளாகப் பட்டினி. தவிர வும் அவன் மிகவும் நோயாளி. மனம் இரங்கிக் கொஞ்சம்......''

அவளுடைய வேண்டுகோளுக்கு, கேட்ட இடங்களிலெல்லாம் பற்பலவிதமான பதில் கள். எல்லாம் 'இல்லை' என்ற பொருள் கொண்ட கடினமான பதில்கள்தாம். கன வான் ஒருவர் அவள் நிலைமைக்கு இரங்கி னார். தாராளமாகப் பிச்சைபோட்டு அனுப்பிவிடவில்லை அந்தத் தயாளமூர்த்தி. எல்லாம் வாய் வார்த்தைகளில் அனுதாபப் பட்டார். அவ்வளவுதான். ''ஐயோ பாவம். உன் நிலைமையைக் கேட்கவே சங்கடமாய்த் தானிருக்கிறது. ஆனால் இந்தப் பாழும் 'ரேஷனல்லவா' ஊரில் தாண்டவமாடுகிறது எங்களுக்குக் கொடுக்கும் அரிசியே போதும் போதாமலிருக்கிறது. அப்படி யிருக்க உனக்குப் பிச்சை எங்கிருந்துபோடு வது? வேறு எங்கேயாவது போய்ப் பார்'' என்று கூறிக்கதவைப்படீரென்று சாத்திக் கொண்டார் அந்த கனவான்.

கதிரவன் உச்சிக்கு வந்துவிட்டான். ஒரு வாரமாக வெளியே தலைகாட்டமுடியவில்லை என்ற கோபத்தாலோ என்னவோ அன்று அவன் ஆட்சி உக்கிரமாயிருந்தது. காலைக் கீழே பாவி நடக்கமுடியவில்லை; தலையை வெளியே காட்டமுடியவில்லை. அவ்வளவு உக்கிரமா யிருந்தது அவன் ஆட்சி. ஆனால் அதையும் அலக்ஷியம் செய்து தன் காரியத் திலேயே கண்ணாயிருந்தாள் சின்னாயி, வீதி வீதியாக வீடுவீடாக வீணாக அலைந்துகொண் டிருந்தாள் அவள். ''ஆண்டவனே மனிதர் களின் இருதயம் இவ்வளவு கடினமானதா? இந்த ஏழைக்கு இரங்க ஒரு புண்ணிய வானுமில்லையா?'' என்று அவள் மனம் ஏங்கித் தவித்தது.

அவள் உள்ளம் உடைந்து, கண்களில் நீர் சொரிய, ஏமாற்றத்துடன், பசியால் துடி யாய்த் துடிக்கும் தன் அருமை மகனின் அருகிலாவது போய் இருப்போம் என்ற எண்ணத்துடன் காவேரிக்கரை நோக்கித் திரும்பலானாள்.

''ஏனம்மா கண்ணீர்விடுகிறாய்?'' என்ற கனிவான குரல் கேட்டுச் சின்னாயி தன் நிலையை அடைந்து தலை நிமிர்ந்துபார்த் தாள். அவளை அவ்வளவு பரிவுடன் விசா ரித்தது சின்னாயியைப் போன்ற ஒரு ஸ்திரீ தான்.

வாடி வதங்கிய வற்றலான சரீரம். அதற் குக் கந்தல் உடைகளால் அலங்காரம். இவைகளெல்லாம் அவளும் சின்னாயியைப் போலத் தரித்திர நாராயணனின் மற்றொரு சந்ததிதான் என்பதை எடுத்துக் காட்டின. ஆம் அவள் ஏழைதான். ஆனால் அவள் உள்ளம் ஏழ்மையில் மூழ்கி அவளுடைய கண்களைத் திரைபோட்டு மறைத்துவிட வில்லை. அந்த ஸ்திரீயின் இருதயத்திலிருந்து வந்த அந்தக் கனிவு நிறைந்த சொற்கள் சின்னாயிக்கு எவ்வளவோ ஆறுதலை அளித் தன. அவள் பல்லை இளித்துப் பிச்சை கேட்ட 'படே படே' மனிதர்களிடமிருந் தெல்லாம் கிடைக்காத ஆறுதலான வார்த்தை, அடுத்த வேளை ஆகாரத்திற்கு வழி தெரியாத அந்த ஸ்திரீயிடமிருந்து கிடைத்தது.

''என் மகன்......'' தொடர்ந்து பேச முடி யாது அவள் குரல் தழுதழுத்தது. தட்டுத் தடுமாறி, ''அவன் பசியால் வாடுகிறான். நேற்று இரவு நான் அவனுக்கு ஊற்றிய கஞ்சியைக் குடிக்காது நான் குடிக்கவேண்டு மெனப் பிடிவாதம் பிடித்துத் தான் பட் டினியாகப் படுத்துக்கொண்டான். அப்ப டிப்பட்ட என் மகன்......'' அவளால் மேலே பேச முடியவில்லை. தன் மகன் தனக்காகச் செய்த தியாகத்தைச் சொல்லவந்த அவள் வாய் உணர்ச்சியின் மிகுதியால் அவளை மௌனமாக்கிவிட்டது.

சின்னாயியின் நிலை அந்த ஸ்திரீயைக் கலக்கிவிட்டது. ''அம்மா, இதோ என்னி டம் இந்தக் குவளையில் கொஞ்சம் ஆகாரம் இருக்கிறது. கிராமத்திலே ஒரு பணக் காரர் வீட்டுக் கல்யாணத்தில் இன்று விருந்து. அங்கு எறியப்பட்ட எச்சில் இலை களிலிருந்து, நாய்களுடன் போராடி, நான் கொண்டு வந்ததுதான் இந்த ஆகாரம். இதோ இதை உன் மகனுக்குக் கொடு'' என்று கூறித் தன் கையிலிருந்த குவளை யைச் சின்னாயியிடம் நீட்டினாள்.

ஏழ்மையின் சித்திரமான அவ்விருவரின் கண்களிலும் நீர் துளித்தது. ஒருவன் குலைப்பட்டினியால் துடிக்க, மற்றொருவன் வயிறு வெடிக்க விருந்து சாப்பிடும் இந்த விசித்திர உலகில் ஓர் ஏழையின்பால் மற்றோர் ஏழைதான் இரக்கம் கொள்கிறான். அன்பும், அபிமானமும், ஆதரவும் அவர்களுக்குள்தான் ஏற்படுகின்றன.

சின்னுயி வாய்திறந்து தன் நன்றியறிதலை வெளியிடவில்லை. மௌனமாக, தன் குழிவிழுந்த கண்களில் நன்றியறிதல் பிரகாசிக்க அந்த ஸ்திரீயைப் பார்த்துவிட்டு, ஒட்டி உலர்ந்து சுருங்கிப்போன முகத்திலே ஆனந்த ரேகை படர, நடையிலே ஒரு புதிய தெம்புடன், கையில் குவளையுடன் காவேரிக் கரையை நோக்கி விரைந்தாள். தன் மகனுக்கு எதிர்பாராமல் கிடைக்கப்போகிறது விருந்துச் சாப்பாடு, அது தெரிந்தால் கந்தன் எத்தகைய ஆனந்தம் அடைவான் என்று அவள் மனதிலே எண்ணி மகிழ்ச்சி அடைந்தாள்.

அவள் கையிலிருந்த அந்தக் குவளையிலே பணம் படைத்த ஒருவரின் வீட்டுக் கல்யாணத்தின் விருந்துக்காகத் தயாரான உணவும், பக்ஷணங்களும் இருந்தன. அதிலிருந்தவை சின்னுயியின் குடும்பமே அதுவரை பார்த்தறியாத—ருசித்திராத—பண்டங்கள் தாம். ஆனால் அவைகள் யாவும் மிதமிஞ்சித் தின்று அதனால் புளியேப்பம் வர, பணக்காரக் கும்பலால் பெருமைக்காக நாசூக்காகக் கடித்து ஒதுக்கப்பட்டு எச்சிற் கலைகளுடன் சேர்ந்து குப்பைத் தொட்டிக்கு வந்து சேர்ந்தவைகள்தாம்.

சின்னுயி கூப்பிடுதூரத்தில் வரும்போதே தன் தொனியில் மகிழ்ச்சி மேலோங்க, "கந்தா...கந்தா" என்று குரல் கொடுத்தபடியே வந்தாள். "இதோ உனக்கு நான் என்ன கொண்டு வந்திருக்கிறேன் பார்." பாவம்! அந்த ஏழையின் குரலில் எவ்வளவு உணர்ச்சி. முடக்கிச் சுருட்டி மூட்டைபோலக் கிடந்த மகனை, "எழுந்திரப்பா, எவ்வளவு நேரம் தூங்குவது?" என்று கூறியபடி நெருங்கி வந்தாள்.

"ஆயா, கந்தன் காலையிலிருந்து இன்னும் எழுந்திருக்கவேயில்லை" என்றான் கறுப்பன்.

சிறுமி பொன்னி கந்தனை நெருங்கி, "அண்ணு, எழுந்திரு, ஆயா கூப்பிடுவது காதில் விழவில்லையா? ஆயா சாப்பாடு கொண்டுவந்திருக்கிருள்" என்று தன் மழலைச் சொற்களால் கூறிக் கந்தனின் முகத்தைத் திருப்பினாள்.

திருப்பிய முகத்தைப் பார்த்தாள் சின்னுயி. "கந்தா......என் கண்ணே கந்தா" என்று சின்னுயி அலறிய அந்தக் குரல் காவேரிக் கரையெங்கும் எதிரொலித்தது. அவள் கொண்டுவந்த விருந்தைச் சாப்பிட அவளுடைய மகன் கந்தன் அங்கில்லை. அவனுடைய சடலம்தான் அங்கிருந்தது. பசிக் குப்பலியான பலருடன் கந்தனும் சேர்ந்து வெகு நேரமாகிவிட்டது! சின்னுயிக்குக் கந்தனைக் காப்பாற்ற வேண்டுமென்ற கஷ்டம் அன்றுடன் விடிந்தது. அத்துடன் அவள் மனமும் இடிந்தது! கிராமத்துக் கோவிலிலே உச்சிக்கால வேளை பூஜை முடிந்து, கிண்டாமணியின் நாதம் காற்றிலே மிதந்து வந்தது. அத்துடன் சின்னுயியும், குழந்தைகளும் அலறுவதும் கலந்துகொண்டது.


## நரையை ஒழியுங்கள்!



நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4- சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினுல் தபால் செலவு இனும்.

ஏஜண்டுகள்: அப்பா & கோ.,
கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

## கேடரைன்



மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணுடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள், கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/-

ஏஜண்ட்ஸ்: அப்பா & கோ., கெமிஸ்ட்ஸ்.
286, சைனு பஜார் ரோட், மதராஸ்,

# பண்டிகைப் பணம்

புனர்ஜன்மி

"எழுந்திருங்கள், இலைபோட்டாயிற்று. சாப்பிடலாம்" என்று பரிவுடன் தன் பதியை அழைத்த வண்ணம் உள்ளே நுழைந்தாள் ருக்மிணி.

பிரம்பு நாற்காலியில் அமர்ந்து, முழங் கைகளிரண்டையும் எதிரே இருந்த மேஜை யின்மீது ஊன்றிக்கொண்டு, உள்ளங்கை களில் தனது கன்னங்களைத் தாங்கியபடி ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருந்தான் கோபாலன். இந்த நிலைமையில் தன் ஸஹதர்மிணி சாப்பிடக் கூப்பிட்டதை அவன் காதில் வாங்கிக்கொண்டானா இல் லையா என்று நிச்சயமாய்ச் சொல்வதற் கில்லை.

கணவன் தீவிர மௌனம் சாதித்து நீண்டதோர் பெருமூச்சு விட்டதைக் கவ னித்த ருக்மிணி அவன் பக்கத்தில் வந்து நின்று "என்ன யோசனை பலமாக இருக் கிறதே! எந்தக் கோட்டையைப் பிடிப்ப தாக உத்தேசம் என் சக்கரவர்த்திக்கு?" என்று தனது சுபாவமான குறும்புத் தனத் துடன் கேட்டுக்கொண்டே, அவன் முகத் தருகே குனிந்தாள். கோபாலனுடைய வாட்டமுற்றிருந்த வதனத்தையும் கலங்கிக் கிடந்த அவனது நேத்திரங்களையும் கண்ட வுடன் அவளது மனம் துணுக்குற்றது. ஆச்சர்யத்துடன் தலைநிமிர்ந்து, கோபால னுடைய இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்துத் தனது கைகளில் அடக்கிக் கொண்டு, கொஞ்சும் குரலில் "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? என்ன வருத்தம் உங்களுக்கு? சொல்லுங்களேன்" என்று கேட்டுக்கொண்டே அவனுடைய முகமண்ட லத்தை இன்னும் விரிவாய் ஆராயத் தொடங்கினாள்.

"ஒன்றுமில்லை ருக்கு, வா சாதம்போடு. ஆபீஸுக்கு நேரமாகிவிட்டது" என்று சொல்லி மழுப்பி அங்கிருந்து கிளம்பப் பார்த்தான் கோபாலன்.

ருக்மிணியா ஏமாறுகிறவள்? அவனை எழுந்திருக்கவிடாமல் மறுபடியும் நாற் காலிக்குள்ளேயே, அத்யந்த சலுகையுடன் பிடித்துத் தள்ளி "ஓஹோ! என் துரைக்கு ஞாயிற்றுக்கிழமைகூட ஆபீஸ் உண்டா என்ன? எத்தனை நாளாக இந்தப் புது விதி அமுலுக்கு வந்திருக்கிறது?" என்று தான் சிரிக்காமல், பாசாங்கு வியப்புக் காண் பித்து, கன்னத்தில் கையை வைத்துக் கொண்டாள். கோபாலன் ஓர் அசட்டு முழி முழித்துவிட்டுப் பிறகு கெட்டியாய்ச் சிரித்தான்.

"போடி வாயாடிக் கழுதை! நான் உன் னைக் கல்யாணம் செய்துகொள்வதற்கு முன் னடியே கரடியாய்க் கத்தினேன்: 'எனக்கு வக்கில் பெண் வேண்டாம், அது சுத்த வாயாடியாக இருக்குமென்று' ஏழை வார்த் தை அம்பலத்தில் ஏறவில்லை. உன்னைக் கொண்டுவந்து என் கழுத்தில் கட்டிவிட்டு 'மாரடித்துக்கொள்' என்று சும்மா இருந்து விட்டார்கள். இப்பொழுது அவஸ்தைப் படுவது நானா, அவர்களா? கிடக்கிறது, சாப்பிடப்போகலாம் வா. இன்று ஞாயிற் றுக்கிழமை என்பதே எனக்கு மறந்துபோய் விட்டது. நாமிருவரும் சேர்ந்தாற்போல் உட்கார்ந்துகொண்டு, ஒருவர்க்கொருவர் தமாஷாய்ப் பரிமாறிக்கொண்டு சாப்பிடும் நன்னாள் அல்லவா?" என்று உற்சாகமாய்ப் பேசிக்கொண்டே நாற்காலியைவிட் டெழுந்து தன் இனியாளைத் தோளைப்பற்றி அணைத்தபடி உள்ளே நடத்திச் செல்லப் பிரயத்தனப்பட்டான்.

ருக்மிணி மேஜையைப் பலமாய்ப் பிடித் துக்கொண்டு, சத்தியாக்கிரஹம் செய்ய ஆரம்பித்தாள். முன்னால் நகர்ந்து ஓர் அடி எடுத்துவைக்கவும் மறுத்தாள்.

"ஜட்காவண்டிக் குதிரை ஆகிவிட்டாயா? சரி; கடிவாளத்தை இறுகப் பிடித்திழுத்து இரண்டு சவுக்கடி கொடுத்தால் தன்னால் நகருகிறாய்" என்று சிலேடையாய்க்கூறி, அவளுடைய நீண்ட பின்னலைப்பிடித்து ஓர் உலுக்கு உலுக்கி, அந்தப் பின்னலின் நுனியி னாலேயே அவள் முதுகில் லேசாய் இரண்டு தட்டுத் தட்டினான் கோபாலன்.

"இந்தக் குதிரை ஒன்றும், நீங்கள் நினைக் கிறதுபோல், காரணமில்லாமல் சண்டித் தனம் செய்யாது, தெரிந்ததா?" என்று உதட்டைப் பிதுக்கிக் கொஞ்சலாகக் சிணுங்கினாள் ருக்மிணி.

# TIMES HAVE CHANGED!




## காலம் மாறிவிட்டது!

சுமார் கி. மு. 800-ல் அகஸ் என்ற வெயில்மானி மணிகுறிக்கும் கருவியாக இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அதற்குமுன்பே எகிப்தில் பெரிய ஸ்பிங்க்ஸ் கட்டப்பட்டபொழுது சூரிய சஞ்சாரத்தைக்கொண்டு மணியை நிர்ணயித்து வாழ்க்கை நடத்தி வந்தார்கள்.

அது எப்படியிருப்பினும் ஆரம்பத்தில் சூரியன்தான் மணி குறிக்கும் கருவியாக யிருந்துவந்தது. அதற்குப்பிறகு பல நூற்றுண்டுகளாக கடிகாரங்களில் எவ்வளவோ நூதன அம்சங்கள் தோன்றி அவ்வறிவும் அனுபவமும் ஒருங்கே திரட்டப்பட்டு இன்று "வெஸ்ட் எண்டு" கடிகாரங்களாக வெளிவந்துள்ளன. இவை நுட்பமாயும் நாகரீகமாகவும் அப்பழுக்கில்லாத வேலைப்பாட்டுடன் கூடியவைகளாக இருந்து வருகின்றன.



"இம்பரேடார்"

18-காரட் தங்க கேஸ் உள் டோமும் தங்கம் திறந்த முகப்பு .. ரூ. 450

வெஸ்ட் எண்டு வாட்ச் கோ.
பம்பாய் — கல்கத்தா

> வரத்துக் குறைவினால் விளம்பரப் படுத்தப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளைசெய்ய இயலாது. ஆயினும் கூடியவரை ஸ்டாக் உள்ளவரை ஆர்டர்களைப் பூர்த்திசெய்ய முயலுவோம். பேப்பர் கண்ட்ரோல் ஆர்டரின்படி காட்லாக் அனுப்ப இயலவில்லை என வருந்துகிறோம்.

# WEST END WATCH Co

*Bombay • Calcutta*

"சரி காரணத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு வேண்டுமானால் ஒத்துழையாமையை மேற்கொள்ளேன்" என்று பதில் அளித்தான் கோபாலன்.

"நீங்கள் சற்று முன்பு ஏதோ யோசனையுடன் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தீர்களே! எதற்காக? சொல்லமாட்டீர்களா?"

"தேவிக்கு நான் வருத்தப்படுவது எதற்காக, சந்தோஷப்படுவது எதற்காக, என்பதெல்லாம் தெரியவேண்டியது ரொம்ப அவசியமோ?"

"அவசியம் என்று தோன்றுகிறபடியால் தான் கேட்கிறேன். நீங்கள் உங்கள் மன வருத்தத்தின் காரணத்தைச் சொல்லாமற் போனால் நான் இன்று சாப்பிடப்போவதில்லை" என்றாள் ருக்மிணி.

"அடேயப்பா! உண்ணாவிரதமா? பயமாக இருக்கிறதே மிரட்டலைப் பார்த்தால்!"

"இப்படி விதண்டாவாதம் செய்து என்னுடன் மல்லுக்கு நிற்பீர்களே ஒழிய நான் கேட்டதற்குமாத்திரம் லேசில், நேரடியாய்ப் பதில்சொல்லமாட்டீர்களே! இருக்கட்டும் இருக்கட்டும்" என்று மனத்தாங்கலுடன் தலையை ஆட்டினாள் ருக்மிணி.

"நீ என்ன கேட்டாய்? நான் என்ன பதில் சொல்லவில்லை ருக்கு" என்று சாவதானமாய், விஷயமே அறியாதவன்போல் கேட்டான் கோபாலன்.

"சரியாய்ப் போச்சு! அடியைப் பிடிடா பாரத பட்டாவென்று மறுபடியும் முதலிலிருந்து சொல்லவேண்டுமாக்கும்! என்னால் மாளாது, அப்பா உங்களோடு பேசி ஜயிக்க" என்று அலுத்துக்கொண்டவள் போல் வேகமாய்ச் சமயலறையைப் பார்க்கச் சென்றாள் ருக்மிணி.

"ராதே உனக்குக் கோபம் ஆகாதடி" என்று பாடிக்கொண்டே அவளைப் பின் தொடர்ந்த கோபாலன் "ராதே, ஹே, ராதே! ஏன் அப்படி முறைத்துப் பார்க்கிறாய்? ஆம், நீ என்னுடைய ராதைதான். நிஜமாகத்தான் சொல்கிறேன். கோபித்துக்கொள்ளாதே, ருக்கு. சாப்பிடுவோம் வா, சாப்பிடும்பொழுது உனக்கு நான் என் மன வருத்தத்தின் காரணத்தைச் சொல்கிறேன்" என்று ருக்மிணியைச் சமாதானப் படுத்தினான். பிறகு இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர். ஆகாராதிகள்கொண்ட பாத்திரங்களை இலைமுன்னால் எடுத்து வைத்துக்கொண்டு, தாமாகப் போட்டுக்கொண்டு போஜனம் செய்ய ஆரம்பித்தனர்.

கோபாலன் குழம்புச் சாதத்தைப்பிசைந்து கொண்டே "சங்கராந்தி கழித்து இன்று நான்கு நாட்கள் ஆகிவிட்டன அல்லவா ருக்மிணி? நான் ஒரு மன்னிக்கத்தகாத தவறு செய்துவிட்டேன் ருக்கு. அதை நினைக்க நினைக்க எனக்கு ஆற்றமாட்டாமல் விசனமும் பச்சாத்தாபமும் ஏற்படுகிறதே தவிர எவ்வளவு தேற்றிக்கொண்டாலும் மனது சமாதானம் அடையமாட்டேன் என்கிறது" என்று மேலே தொடர்ந்து கூறாமல், உணர்ச்சியினால் கம்மிய தொண்டையைக் கனைத்துக்கொண்டான்.

ருக்மிணி கலத்திலிருந்த கறியை எடுத்து வாயருகே கொண்டுபோனவள் அதை அப்படியே நழுவ விட்டுவிட்டு ஆச்சர்யத்துடன் தன் கணவனை உற்றுநோக்கியபடி "அப்பேர்ப்பட்ட தவறு என்னதான் செய்துவிட்டீர்கள்?" என்றாள்.

"கடந்த நான்கு வருஷங்களாக, அதாவது நான் சம்பாதிக்கத் தலைப்பட்டதிலிருந்து ஜானகி புக்ககம் சென்றது, அம்மா இறந்து போனது எல்லாம் அதே வருஷத்தில் நடந்தேறிய நிகழ்ச்சிகள்தாம். நான் பிரதி வருஷமும் சங்கராந்திப் பண்டிகைக்கு எனது அன்பளிப்பாக என் ஆசைத் தங்கை ஜானகிக்குப் பதினைந்து பதினைந்து ரூபாய் அனுப்பி வந்திருக்கிறேன். ஆனால் ஏதோ புத்திப் பிசகினால் இந்த வருஷம் அப்படிச் செய்யத் தவறிவிட்டேன். நான் அனுப்பும் இந்த அற்பத் தொகையை வைத்துக் கொண்டுதான் ஜானகி தனக்குப் பண்டிகைக்குப் புடைவையோ மற்றொன்றோ வாங்கிக்கொள்வாள் என்பது எனது அபிப்பிராயமல்ல. ஆனால் மாமூலாய் என்னிடமிருந்துவரும் சங்கராந்திப் பணம் இந்த வருஷம் கிடைக்காததுபற்றி அவள் மிகவும் வருத்தப்பட்டு இதையே ஒரு பெருத்த அச்சான்யமாகவும் கருதத் தொடங்குவாள். பாவம்! பண்டிகையும் அதுவுமாய் அவள் நீர் மல்கிய கண்களுடன் நின்றுகொண்டிருப்பாள் என்று கற்பனை செய்து பார்க்கும்பொழுது என் மனது மிகவும் வேதனையடைகிறது."

"ஏன் இந்த வருஷம் நீங்கள் பணம் அனுப்பவில்லை? மறந்து போய்விட்டீர்களா?"

"மறக்கவில்லை. நன்றாக நினைவு இருந்தது" என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறிவிட்டு நிதானமாய்ச் சாப்பிட ஆரம்பித்தான் கோபாலன்.

"நினைவு இருந்திருந்தால் அனுப்பாமலும் இருப்பார்களா? வேடிக்கையாக இருக்கிறதே நீங்கள் சொல்வது! அந்தச் சமயம் கைவசம் பணம் இருக்கவில்லையா?"

"பணம் இல்லாவிட்டால் உனக்கு மாத்திரம் எப்படிப்பண்டிகைப் பரிசாக நாற்பத்தைந்து ரூபாயில் புடைவை வாங்கிக் கொடுத்திருக்கமுடியும்?" என்று அவளையே திருப்பிக் கேள்விகேட்டான் கோபாலன்.

"எனக்கு நீங்கள் பேசுவது பெரும் புதிராக இருக்கிறது. கையில் பணமும் இருந்து மனதில் அனுப்பவேண்டுமென்ற நினைப்பும் இருந்து, அப்படியும் அனுப்பாமல் சும்மா இருந்துவிட்டு, இப்பொழுது பச்சாத்தாபப்படுவதில் என்ன பிரயோஜனம்?"

"கையில் அச்சமயம் இருந்த பணத்தை வேறு ஒருவருக்காகச் செலவழித்துவிட்டேன். பிற்பாடுதான் நான் அப்படிச் செய்தது முற்றிலும் தவறு என்று எனக்குப் புலப்பட்டது. அப்பொழுதுமுதல் வேதனைப் பட்டுத் தவிக்கிறேன்" என்று வருத்தம் மேலிட்ட தொனியில் புகன்றான் கோபாலன்.

"அந்த......... 'வேறு ஒருவர்' யாரோ?"

"ஸாக்ஷாத் தாங்களேதான்"

"என்ன? நானா? ஜானகிக்கு அனுப்ப வேண்டிய பணத்தை எனக்காகச் செலவழித்துவிட்டீர்களா?" என்றாள் ருக்மிணி திகைப்புடன்.

"ஆம், கண்ணே! நாம் குடித்தனம் செய்ய ஆரம்பித்த பிற்பாடு முதல் முதலாகக் கொண்டாடப் போகும் இந்த சங்கராந்திப் பண்டிகைக்கு உனக்கு ஒருபுடைவை வாங்கி அன்பளிப்பாகக் கொடுக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று. அவ்விதமே முதலில் முப்பது ரூபாயில் ஒரு புடைவை எடுத்தேன். அது பார்வைக்குப் பகட்டாக இல்லாமல் ரொம்ப மட்டமாகத் தென்பட்டபடியால், இன்னும் பதினைந்து ரூபாய் அதிகம் போட்டு உயர்ந்த புடைவையாகவே வாங்கிவிட்டால் போச்சு என்று எண்ணி முன்பின் யோசியாமல் ஜானகிக்கு அனுப்புவதற்காகத் தனியே எடுத்து வைத்திருந்த பதினைந்து ரூபாயையும் போட்டு உனக்கு ஒரு நல்ல புடைவை வாங்கி விட்டேன். ஜானகிக்கு இந்த ஒரு வருஷம் அனுப்பாவிட்டால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது, என்று அந்தச் சமயத்தில், என் செய்கையைக் கண்டித்த என் மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டேன். சங்கராந்தி யன்றைக்கு உன்னை என் அன்பளிப்பாகிய அந்தப் புடைவையை உடுத்திக்கொள்ளச் செய்து அழகு பார்த்து ஆனந்தப்பட்டேன். ஆனால் என் ஆனந்தம் நீடிக்கவில்லை. என் அருமைச் சகோதரிக்கு—தாய் தந்தையற்று, என்மேல் பிராணனை வைத்திருக்கும் அந்தப் பெண்ணுக்கு—இந்த வருஷம் பண்டிகை நாளில் மூளி செய்துவிட்டதைப்பற்றிய துன்ப நினைவு என்னைச் சதா வாட்டிக்கொண்டே இருக்கிறது. இனிமேல் யாரையாவது கேட்டுக் கடன் வாங்கிப் பணத்தை அனுப்பலாமென்றாலும் அது பண்டிகை சமயத்தில் போய்ச் சேர்ந்தது போலாகுமா? மூன்று நாட்களாக என்னைத் துன்புறுத்திக்கொண்டிருந்த இந்தக்கவலையை மனதிற்குள்ளேயே சிறைப்படுத்தி வைத்திருந்தேன். இன்று என்னையும் மீறி அது வெளிவந்து என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது" என்று துயரம் நெஞ்சை அடைக்க விவரித்தான் கோபாலன்.

"அப்பாடா! இதற்குத்தானா இவ்வளவு வருத்தமும் கவலையும்? நான் என்னமோ ஏதோ என்று பயந்துபோய்விட்டேன். ஜானகிக்குப் பண்டிகைக்குள்பணம்போய்ச் சேரும்படியாக நான் நான்கு தினங்களுக்கு முன்னரே அவளுக்குச் சங்கராந்திக்கென்று பதினைந்து ரூபாய் மணி ஆர்டர் செய்துவிட்டேன். கவலையை ஒழித்து நிம்மதியாய்ச் சாப்பிடுங்கள். பேச்சு மும்முரத்தில் இரண்டுபேர் இலைகளிலும் வைத்த சாதம் அப்படியே இருக்கிறது" என்று சர்வ சாதாரணமாய்க் கூறினாள் ருக்மிணி.

ருக்மிணியின் வார்த்தைகள் கோபாலனை ஒருமுழ உயரம் தூக்கிப்போட்டது. "என்ன சொன்னாய்? ஜானகிக்கு நீ பணம் மணி ஆர்டர் செய்தாயா? நான் வருஷம்தோறும் பண்டிகைக்கு அவளுக்குப் பணம் அனுப்பும் விஷயம் உனக்கு எப்படித் தெரியும்? உன்னிடம் பணம் ஏது?" என்று தாங்க மாட்டாத ஆச்சர்யத்துடன் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டான் கோபாலன்.

"நீங்கள் வருஷந்தோறும் ஜானகிக்குப் பணம் அனுப்புவதுபற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. பத்து தினங்களுக்கு முன்னர் எனக்கு அப்பாவிடமிருந்து சங்கராந்திக்காக முப்பது ரூபாய் வரவில்லையா? அதைத் தபாற்காரனிடமிருந்து கையெழுத்துப் போட்டு வாங்கி, உள்ளே கொண்டுபோய் வைக்கப் போனபோது எனக்கு அகஸ்மாத்தாய் ஜானகியின் நினைவு வந்தது. 'நமக்குப்

பெற்றோர்கள் இருக்கிறபடியால் தானே பண்டிகை பருவம் என்று ஒன்றுக்கும் விட்டுக்கொடுக்காமல், பணமாகவோ, பண்டமாகவோ அனுப்பிக்கொடுத்து நல்லநாளில் நம்மைச் சந்தோஷப் படுத்துகிறார்கள்? இப்படியெல்லாம் விதரணையாய்ச் செய்ய ஜானகிக்கு யார் இருக்கிறார்கள்? இனிமேல் நாம் தான் அந்தப் பொறுப்பை வகித்துச் செய்ய வேண்டும்' என்ற எண்ணம் ஏற்பட்டது. நீங்கள் ஏற்கனவே இந்த மாதம் செலவு ஜாஸ்தியாகி விட்டது என்று பொதுவாய்ச் சொல்லிக்கொண்டிருந்தபடியால் உங்களிடம் சொல்லி ஜானகிக்குப் பணம் அனுப்பித் தரவேண்டுமென்று கேட்க எப்படியோ இருந்தது. எனக்கு என் பிறந்தகத்திலிருந்து வந்த பணத்தில் பதினைந்து ரூபாயை எடுத்து—உங்களைக்கூடக் கேட்காமல்—ஜானகிக்கு அன்பளிப்பாக அனுப்பினேன். நான் ஆசையுடன் அனுப்பும் இந்தப் பணத்தை அவள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வேண்டி ஒரு கடிதமும் எழுதியிருக்கிறேன். என் பணமும் கடிதமும் பண்டிகைக்குள் அவளுக்குக் கட்டாயம் போய்ச் சேர்ந்திருக்கும். நீங்கள் நினைத்தபடி பண்டிகை நாளில் குறையோ மூளியோ ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. எல்லாம் கடவுளின் செயல்'' என்று முடித்தாள் ருக்மிணி.

கோபாலன் தன் காதலியின் உதார குணத்தையும் தியாக புத்தியையும் கண்டு புளகாங்கிதம்அடைந்து பேச நா வெழாமல் அயர்ந்து போனான். சில வினாடிகளுக்குப் பிறகு ''ருக்கு! உன்னைப்போலவே நற்குணங்களோடு அமைந்த பெண்கள் கிடைத்தால் நான் இன்னும் பத்து விவாகம் வேண்டுமானாலும் பண்ணிக்கொள்ளத் தயார்!'' என்று அதி உற்சாகத்துடன் கூறிவிட்டுச் சாப்பிடத் தொடங்கினான்:

''அது மாதிரி ஏதாகிலும் எக்கச்சக்கமாய் செய்துவிட்டு, என்னை நடுச்சந்தியில் நிறுத்தி விடாதீர்கள்! உங்களுக்கு ரொம்ப புண்ணியமுண்டு!'' என்று கூறி நகைத்தாள் ருக்மிணி. கோபாலனும் அவளுடைய சிரிப்பில் கலந்துகொண்டான். தம்பதிகள் இருவரும் சாப்பிட்டுக் கையலம்பிக்கொண்டு கூடத்துப் பக்கம் வருவதற்குச் சரியாய்த் தபால்காரனும் ''போஸ்ட்'' என்று கூவி விட்டு ஒரு கடித உறையை ஜன்னல் வழியாகப் போட்டுச் சென்றான்.


# இந்தியன் பாங்கு லிமிடெட்

"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

மதராஸ் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்
மவுண்ட் ரோடு தியாகராயநகர் புரசைவாக்கம்

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ... | ரூ. 60,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .... ... | ரூ. 33,66,622 |
| ரிஸர்வ் நிதி ... ... ... | ரூ. 35,00,000 |
| டிபாஸிட்டுகள் ... ... | ரூ. 12½-கோடிக்குமேல் |

எல்லாவித பாங்க் அலுவல்களும் கவனிக்கப்படும்

N. கோபால அய்யர்,
செக்ரடரி.

கடிதம் கோபாலனுக்கு, ஜானகி எழுதியிருந்தாள். கோபாலன் உறையை உடைத்துக் கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். ருக்மிணியும் தன் கணவனின் பின்புறம் வந்துநின்று தானும் அக்கடிதத்தைப் படிக்கலானாள்.

"பிரியமுள்ள அண்ணாவுக்கு அநேக நமஸ்காரங்கள்.........நீ அனுப்பிய ரூ. பதினைந்து வரப்பெற்றேன். சங்கராந்திப்பண்டிகைக்கு முதல்நாள்காலை, சுபமாய்ப் பணம் என் கைக்கு வந்து சேர்ந்தது. புதிசாகச் சம்சாரம் செய்ய ஆரம்பித்திருக்கும் குஷியில் எங்கே "மாமூல்" பரிசை அனுப்பத்தவறி விடுவாயோ என்று பயந்துகொண்டிருந்தேன். உன் ஆசைத் தங்கையை மறக்கவில்லை என்பதை அறியரொம்ப சந்தோஷம் உண்டாகிறது. மன்னி பலே கெட்டிக்காரி; தந்திரசாலியுங்கூட! பண்டிகைக்குப் பணம் அனுப்பிய பெருமையையும் பெயரையும் தான் கட்டிக்கொள்ளப் பார்க்கிறாள்! என்ன திமிர் அவளுக்குத்தான்! எனக்குத் தெரியாதா நீ சொல்லித்தான் அனுப்பியிருப்பாள் என்று? இல்லாவிட்டால் இவளுக்கு ரொம்ப கரிசனம் உண்டாகிவிட்டதோ நாத்தனாருக்குப் பண்டிகைப்பணம் அனுப்பவில்லையென்று! மன்னி தன் கடிதத்தில் 'நான் ஆசையுடன் சங்கராந்திப் பண்டிகைக்கு உனக்கு அனுப்பிக்கொடுக்கும் பதினைந்து ரூபாயைப் பெற்றுக்கொண்டு பதில் எழுது' என்று குறிப்பிட்டிருப்பதைக்காண எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. 'நாங்கள்' என்று உன் பெயரையும் சேர்த்து எழுதக்கூட மனம் வரவில்லையாக்கும் மகாராணி அம்மாளுக்கு! என்ன இருந்தாலும் அவள் காலேஜ் படிப்புப் படித்த இந்தக் காலத்து புதுமைப் பெண்! ராங்கிக்கும் மமதைக்கும் ஒன்றும் குறைச்சல் இராது தான்!.....................

இப்படிக்கு
உன் அன்புள்ள தங்கை
ஜானகி.

கடிதத்தை முற்றிலும் வாசித்த ருக்மிணியின் கண்களில் நீர் தளும்பியது. அவள் மனதில் துக்கம் குமுறிக் கிளம்பிற்று. தான் எவ்வளவோ நல்லெண்ணத்துடன் நாத்தனாருக்குப் பணம் அனுப்பியதை அவள் நேர் புத்தியுடன் வரவேற்காமல்தன்னைப்பற்றித் தூஷணையாக வேறு எழுதியிருப்பதைப் படிக்க ருக்மிணியின் உள்ளம் வேதனையினால் துடிக்காமல் பின் சந்தோஷத்தினால் துள்ளுமா என்ன? அவள் விவேகி. சட்டென்று தன் மனதைத் தேற்றிக்கொண்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். இதற்குள் கோபாலனும் பின்புறம் திரும்பி, ஹீன ஸ்வரத்தில் "கடிதத்தைப் படித்தாயா ருக்கு? என்றான். ருக்மிணி தலை குனிந்தபடியே "உம்" என்றாள்.

"சுத்த அசட்டுப் பெண்! ஜானகிக்கு என்றைக்குமே கோணல்புத்தி அதிகம். ஒரே பேத்தலாக ஏதோ எழுதியிருக்கிறாள்!" என்று ஆத்திரத்துடன் புகன்றுகொண்டே அக்கடிதத்தைச் சுக்குநூறாக்கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான் கோபாலன்.

"என்ன இருந்தாலும் நான் அவளுக்கு முற்றிலும் புதியவள் தானே? அவள் என்னத்தைக் கண்டாள், எனது குணம், மனோபாவம் இவைகளைப் பற்றியெல்லாம்? என்னோடு நான்கு நாட்கள் இருந்து பழகிவிட்டால், அப்புறம் என்சுபாவம் அவளுக்கு நன்றாய்த் தெரிந்துவிடும். வித்தியாசமாக ஏதும் எண்ணமாட்டாள். 'மன்னி, மன்னி' என்று உங்களுக்குக்கூடப் பொறாமை ஏற்படும்படி அவ்வளவு அன்பாக என்னிடம் நடந்து கொள்வாள்." என்று மனதில் கல்மஷம் இல்லாமல் தன் அபிப்ராயத்தைத் தெரிவித்தாள் ருக்மிணி.

"ருக்கு! என் செல்லமே! என்றான் கோபாலன். அவன் வாயிலிருந்து வெளிப்பட்ட அம்மூன்று சொற்களில் ஒலித்த பல் வேறு உணர்ச்சிகளை இங்கே விவரிப்பது அசாத்தியம்.

ருக்மிணி தன் கருவிழிகளை உருட்டி நாணம் கலந்த உவகையுடன் கோபாலனை ஏறிட்டுப்பார்த்து "என்ன?" என்றாள்.

"ஒன்றுமில்லை! உன்னைப்போலவே உலகத்தில் எல்லாஸ்த்ரீகளும் இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றான் மகிழ்ச்சியும் பெருமிதமும் பொங்க.

"ஏன்? அப்புறம் அந்த எல்லா ஸ்திரீகளையும் நீங்களே விவாகம் செய்துகொண்டு விடலாமென்றா?" என்று குறும்புப் பார்வையுடன் கோபாலனைக் கேட்டாள் ருக்மிணி.

கோபாலன் இடி இடி யென்று சிரித்துவிட்டு "வாயை மூடடி போக்கிரிக்குட்டி!" என்று செல்லமாய் அதட்டிவிட்டு, அளவிலா அன்புடன் அவளை நெருங்கினான்.

# பயன் தூக்கார் செய்த உதவி

சாரி

அக்ரஹாரத்தின் நடுவில் அமைந்த சிறிய ஓட்டு வீடுதான். இன்று சந்தடியே இல்லை. சின்ன மிராசு சங்கரையர் ரேழி நடையிலும், மனைவி மீனாக்ஷியம்மாள் கூடத்துச் சுவர் அருகிலும் படுத்திருந்தார்கள். வெயில் தாங்காமல், ஒரு கை விசிறியினால் வீசிக்கொண்டும், அடிக்கடி சமீபத்தில் கிடந்த ஒரு தபால் 'கார்டை.' எடுத்துப் பார்ப்பதுமாக இருந்தார், வீட்டு எஜமான். அவர் முகத்தில் திருப்தி நிரம்பிய ஒரு புன்னகை தவழ்ந்தது.

கூடத்தில் படுத்திருந்த மீனாக்ஷியம்மாள் சுவர் பக்கம் திரும்பிக்கொண்டிருந்தாள். கண்களைத் திறக்காவிட்டாலும் அவள் தூங்கவில்லை; மூடிக்கொண்டிருந்தபோதிலும் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீர் மீனாக்ஷியம்மாள் அழுவதைத் தெரிவித்தது. ஆம், இன்று தபாலில் கிடைத்த அந்தப் 'போஸ்டு கார்டு' ஏதேதோ ஞாபகங்களை அவளுடைய நினைவிற்குக் கொண்டு வந்திருக்கவேண்டும். அவைகள் சந்தோஷமளிக்கும் நினைவுகளாகவும் இருக்கமுடியாது என்பதும் நமக்குத் தெரிகிறது.

வீடு பழங்காலத்து ஆஸ்தி. மண்சுவர்கள். தலையில் இடிக்கும் நிலைகள். நடுவில் சிறிய முற்றம்; அதன் மத்தியில் கிணறு. சதா ஜலப்புழக்கத்தின் காரணமாய் அங்கே தோன்றிய பாசம், கால்வைத்தவர்களை ஒரே வழுக்கலில் யமதர்மராஜன் பட்டணத்திற்கு நேரே கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். உள்ளே சிறிய சமையல் அறை; அதை ஒட்டிக் கொல்லைரேழி. பின்புறம் சிறிய கொல்லை. ஒரு மாமரமும் தென்னந்தோப்புமாய்ச் சற்றுக் குளிர்ச்சி தந்த இடம் அந்த வீட்டில் அதொன்றுதான். அதையனுபவிக்க அங்கே ஒரு பளிங்குக்கல் மேடையோ, புல் தரையோ இருந்ததாக எண்ணவேண்டாம். எங்கும் சருகுகள் உதிர்ந்த குப்பையும் எறும்புப் புற்றுக்களுமாய்க் குவிந்து அவ்விடத்திற்குப் போய் வருவதை ஒரு பெரு முயற்சியாகச் செய்தன.

இவ்வளவு புராதனமான வீட்டில், திடீரென்று நடுநடுவே நல்ல நாகரிகத்தின் அல்லது செல்வத்தின் சின்னங்களைக் காண முடிகிறதே? அதன் விந்தை என்ன? சுவரில் மாட்டியிருந்த 'வெனிஷியன்' நிலைக் கண்ணாடியை லக்ஷப் பிரபுக்கள் வீட்டிலல்லவா காணக்கூடும்? அதேபோலத்தான் 'காமிரா' உள்ளில் இருந்த அழகிய நாக்கு மாக்கட்டிலும், அதன் விரிப்புக்களும்; அந்த வெள்ளிப் பூப்போட்ட ஆசனப் பலகை? கொடியில் சுன்னடிச் சேலைகளுக்கு மத்தியில் ஊசலாடிய இரண்டு மூன்று பழைய, மக்கிய உயர்ந்த ஜரிகைச் சேலைகள்? அப்புறம் அடுக்களையில் கற்சட்டி, மண் பாண்டங்களுக்கிடையில் மின்னிய சில 'எவர் சில்வர்' சமையற் பாத்திரங்கள்? ஒரு கிண்ணம் மட்டில் ரூ. 10 பெறுமே? அங்கு தோன்றிய எளிமைக்கும் இந்தச் செல்வச் சின்னங்களுக்கும் ஒருவித சம்பந்தமுமில்லையே, ஏன்?

"அடியே, அடியே, இந்தாயேன்!"

மீனாக்ஷியம்மாள் கண்களைத் திறந்து சுவரையே பார்த்துக்கொண்டிருந்தாள். எழுந்திருக்கப் பிரயத்தனம் செய்யவில்லை. கணவனின் குரலைக்கேட்டதும் துக்கம் அதிகரித்ததுபோலும்; லேசாக விம்மினாள். இது அவருடைய காதில் பட்டிருக்கவேண்டும்.

"சரியாய்ப் போச்சு, ஆரம்பித்துவிட்டாயா, உன் சோக புராணத்தை? இன்றைக்காவது சந்தோஷிப்பாயென்றல்லவோ நினைத்தேன்.........அப்பனே, ராமமூர்த்தி! என்ன சோதனைக் காலமடா இது?" என்று சொல்லிக்கொண்டே உள்ளே வந்தார். துல்லியமான மல் உடுத்தி ஆறடி உயரமுள்ள ஆஜானுபாஹு-வென்று சொல்லக் கூடிய புருஷன், மனைவியின் அருகில் வந்து அமர்ந்து, அவள் முகத்தைத் தன்கையால் பிடித்துத் திருப்பினார்.

அவளுக்கு என்ன தோன்றிற்றோ, என்னவோ; வெட்கிப்போய் எழுந்திருந்தாள். கண்களை அவசரமாய்த் துடைத்துக்கொண்டு நிமிர்ந்தும் உட்கார்ந்தாள். இவளும் சீமாட்டிதான்! அரையில் நான்கு ரூபாய் புடைவையே சுற்றியிருந்தபோதிலும், கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலி தவிர வேறொருவித ஆபரணமும் அவள் மேனியை அலங்கரிக்காதபோதிலும் வருஷக்கணக்காய் வம்சபரம்பரையான நாகரிகத்தில்

ஊறிய அவளது ஒவ்வொரு செய்கையிலும் பரிமளித்தது.

ஒரு புன் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு "இதோ போய், காப்பி போடுகிறேன். நாழிகை ஆனதே தெரியவில்லை." என்று எழுந்தாள். அவள் கையைப் பிடித்து அமர்த்திய சங்கரையர், "காப்பி இருக்கட்டும். குழந்தை வரப்போகிருளென்ருல் நீ இம்மாதிரி அழலாமா? நமக்கு என்ன குறை வந்துவிட்டது? நமது நிலைமை கல்யாணிக்குத்தான் தெரியாதா, என்ன? அவள் தங்கமான குணமுள்ள பெண்; மேலும் நம்ம குழந்தை தானே? உன்னுடம்பையும் சற்றுக் கவனித்துக்கொள்ள வேண்டாமா? வா, எழுந்திரு. சாமான்கள் என்னவெல்லாம் வேண்டும், ஜாபிதா கொடு. இப்பொழுதே போய் வாங்கி வந்துவிடுகிறேன்" என்று ஆதரவுடன் மொழிந்தார்.

மீண்டும் மீஞக்ஷியின் கண்களில் நீர் தளும்பிற்று. துக்கத்தில் விம்மிய அவளுடலைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டார், கணவன். அவருடைய தோளில் சாய்ந்து சற்று ஆறுதலடைந்த அவளது மனக்கண் முன்பு, சென்ற நான்கு வருடத்திய நிகழ்ச்சிகள் ஓடிக்கொண்டிருந்தன. வெகு பிரயாசையுடன் துக்கத்தை அடக்கியவளாய், சாமான்கள் வாங்குவதற்குப் பணமெங்கே யிருக்கு?" என்ருள் தன் மெல்லிய குரலில்.

ஒரு கணம் அவள் புருஷனும் திகைத்துப் போஞர். பிறகு, நிதானப்படுத்திக்கொண்டவராய், "வேலைக்காரியை அனுப்பிக் கோடியாத்தில் கடன் வாங்கி வரச்சொல்லு. ஒரு மாதத்தில் திருப்பிக் கொடுத்துவிடுவோம்" என்று சொல்லி எழுந்தார். ஆனல் இந்த யோசனை எந்த மட்டில் பலிதமாகும் என்று சந்தேஹித்த வண்ணம், உத்தரீயத்தை மேலே போர்த்துக்கொண்டு வாசல் திண்ணைக்குப் போய்விட்டார்.

* * *

இத் தம்பதிகளின் துயருக்கும் ஏழ்மை நிலைக்கும் என்ன காரணமென்று ஆராய்வோம். ஒரு காலத்தில் இவர்கள் நல்ல ஸ்திதியிலிருந்தவர்கள் என்பதற்குப் போதிய அத்தாக்ஷி மேலே சொன்ன விஷயங்கள்.

கல்யாணி இவர்களது ஒரே பெண். கரையூர் என்கிற இந்தக்கிராமத்தில் சின்ன மிராசு என்ற பெயருடன் பாதி நிலங்


வாழையடி வாழையாக வந்த நம் கூந்தல் வளர்ப்புக் கலையின்
• பொக்கிஷம் •




ஜாப்கோ
ஹேர் குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கி, உதிரும் கேசத்தை நிறுத்தி கூந்தலை — நீண்டு வளரச் செய்யும் —

ஜயபாரதம் கம்பெனி
மல்லேஸ்வரம் • பேங்களூர்

களுக்குச் சொந்தக்காரராயிருந்தவர் சங்கர அய்யர். தம் தகப்பனார் காலத்தில் சென்னைக்குக் கல்விபயிலச் சென்றவர், நகர வாழ்க்கையின் மோஹத்திலீடுபட்டுச் சென்னையிலேயே தங்கிவிட்டார். இதற்கேற்றாற்போல் தம் ஒரேமகள் மீனாக்ஷியை இவருக்கு மணம்செய்வித்த இவரது மாமனாரும், அச்சமயம் சென்னையில் தாம் வசித்துவந்த மயிலாப்பூர் பங்களாவைப் பெண் பேருக்கு எழுதி வைத்துவிட்டுக் காலமானார்.

மயிலாப்பூர் வாழ்க்கை ஆடம்பரமாகவே நடந்தது. ஊரிலிருந்த தகப்பனார் பிள்ளைக்கு மாதம் தவருமல் 500, 600 என்று பணம் அனுப்பிக் கொண்டே வந்தார். வீட்டில் இரட்டைப் பரிசாரகர், மோட்டார் வண்டி, அதை ஓட்டும் ஆள், வேலைக்காரிகள்—இப்படிப்பட்ட அநேக சிப்பந்திகளுடன் வக்கீல் தொழிலைச் சங்கரையர் நடத்தி வந்தார். வரும்படி காலணுக்கிடையாது. அதனால் என்ன பாதகம்? பணம் காய்க்கும் மரங்களை எதேஷ்டமாய்க் கரையூரில் பயிர் இட்டிருந்தாரல்லவா? இம்மாதிரி இவருடைய சென்னை நண்பர்கள் கேலி செய்வதுண்டு.

அழகே உருவெடுத்து வந்ததுபோல் கல்யாணியும் பிறந்தாள். செல்வந்தர் வீட்டு ஒரே குழந்தை எவ்வளவு அருமையாக வளர்ந்திருக்க வேண்டுமென்று நான் சொல்லாமலே தெரியும். தூக்கி எடுக்கத் தாதி, வெளியில் உலாவிவரத் தாதி, இரவு தூங்கவைக்கும் பணிப்பெண், குளிப்பாட்ட 'நர்ஸ்', படிப்புச் சொல்லிவைக்க மாதம் ரூ. 150 ல் ஆங்கில உபாத்தியாயினி, இம்மாதிரி. தாயாரும் குழந்தையைச் செல்வமாக மோட்டாரில் ஏற்றிக்கொண்டு கடற்கரைக்கும் சினேகிதிகள் வீட்டிற்கும் அழைத்துச் செல்வதுண்டு.

பருவ மங்கையாக வளர்ந்த கல்யாணி பார்வதி தேவியைப்போன்ற அழகும், வாணியை ஒத்த கலைக்கல்வியும், லக்ஷ்மியின் கடாக்ஷத்தையும் பூர்ணமாய்ப் பெற்றிருந்தாள். தாயார் பெண்ணைப் பார்த்துப் பூரித்துப் போனாள். ஆனால் இவர்களுக்குள் ஒருவித ஐக்கியமும் கிடையாது; நாகரிகம் வேறு; கல்வி வேறு, லக்ஷியங்களே வேறு. இவற்றையெல்லாம் மீனாக்ஷியம்மாள் அப்பொழுது உணரவில்லை. வாழ்க்கையும் ஒருவிதக் கலக்கமுமின்றி, இனிதாய் ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால் காலச்சக்கரம் என்னவோ மாறி மாறியே சுழலுகிறதல்லவா? ஒருநாள் சங்கரையரின் கிழத் தந்தைக்கு உடல்நிலை மோசமாயிருப்பதாகச் செய்தி கிட்டிற்று. விழுந்தடித்துக்கொண்டு பிள்ளையும் கரையூருக்குப் போய்ச்சேர்ந்தார்.

மரணாவஸ்தையிலிருந்த கிழவர் மெதுவாக மைந்தனை அருகில் அழைத்து, அவன் காதில்ஓதியசெய்தி சங்கரையரின் மனதைக் கலக்கிவிட்டது. அதன் முக்கிய சாராம்சம், பட்டினக்கரையில் டாம்பீகச் செலவுடன் வாழ்க்கை நடத்துவதற்குத் தங்களுடைய வருவாய் இன்னும் அதிகநாள் இடந்தராது என்பதே.

கிழவரும் உயிர் துறந்தார். ஈமக்கிரியை மயிலாப்பூரில் தடபுடலாக நடைபெற்றது. செலவு ரூ. 5000.

சங்கரையர் கணக்குப் பார்க்கப் புகுந்தார். ஊரிலிருந்து காரியஸ்தர்கள் வந்தார்கள், போனார்கள். பெரிய பெரிய கணக்குப் புத்தகங்களையும், மணிபோன்ற தம் தந்தையின் கையெழுத்தில் அவைகளிற் குறித்திருந்த செலவு தொகைகளையும் பார்க்கும்பொழுது மலைத்துப் போனார். இவ்வளவு வீண் செலவிற்கும் தாமே காரணமென்பதை உணர்ந்ததும் மனம் சோர்ந்து போயிற்று.

மனைவியை அழைத்து நிலைமையை ஒளியாமல் தெரிவித்தார். அவள் பெரிய குடும்பத்துப்பெண்; மானி. "ஆகவே கல்யாணிக்கு நிச்சயமாகி இருக்கும் வரனுக்கு அவளை விவாஹம் செய்துகொடுக்க முடியாதல்லவா? நீங்களும் அப்படித்தானே நினைக்கிறீர்கள்?" என்று மலைத்தாள்.

தற்போதைய கவலைகள் உடனே மனதில் தைப்பது பெண்களுக்குத்தான். இந்தப் புதிய கவலையில் ஆழ்ந்த புருஷனும், "நாம் கணக்குப் போட்டது எவ்வளவு ரூபாய்?" என்றார்.

"அதிருக்கட்டும், அவர்கள் கேட்டதல்லவோ அதையும்விடப் பெரிய தொகை? முதலில் அதைச் சொல்கிறேன், கேளுங்கள். கையில் ரொக்கம் ரூ. 10,000. மோட்டார் கார் ரூ. 8,000. பிள்ளைக்கு துஸ்து மோதிரம் ரூ 2,000. கல்யாணிக்குப் புதிய நகைகள் ரூ. 10,000. வெள்ளிப் பாத்திரம் ரூ. 5,000. பித்தளைப் பாத்திரமும் இதர சாமான்களும் ரூ. 5,000. இது தவிர ஜவுளிகள், கலியாணச் செலவு இனம்கள் ரூ. 10,000. ஆக மொத்தம் அரை லக்ஷத்திற்கு ஏறக்குறையக் கணக்குப்போட்டோமல்லவா?" என்றாள் மனைவி.

இவ்வளவு நல்ல இடத்தை விடவும் மனமில்லை. உத்யோகம் ஐ. ஸீ. எஸ். வயது 25. நல்ல அழகன். கலியாணமோ இன்னும் நான்கு மாதத்தில் நடக்கவேண்டியது. இதை எப்படி நிறுத்த மனம் வரும்?

சங்கரையர் கிராமத்திற்கு ஓடி வந்தார். கோடியாத்துப் பெரிய மிராசுதார் வீட்டில் தங்கி, அவருடன் தம் கடனையும், செலவையும், சொத்து விவரங்களையும் கணக்குப் போட்டார். தற்சமயம் கொடுபடவேண்டிய கடனைக் கொடுத்துவிட்டால், கையில் மிஞ்சி நிற்கும் தம் சொத்தின் மதிப்பு ரூ. 40,000 என்பது ஒரு வழியாக மனதிற்குப் புரிந்தது. இதில் கல்யாணம் நடந்தாக வேண்டும்.

இவரது தர்ம சங்கடமான நிலைமையைக் கவனித்த பெரிய மிராசுதாருக்கு மனம் உருகிப் போயிற்று. ஊருக்குப் பெரிய மனிதரல்லவா? கருணை மிகுந்தவர். வாய் பேசாமல் ஓர் ஏற்பாடு செய்தார். சங்கரையரின் மிஞ்சிய நிலபுலன்களைத் தம் பேருக்குச் சாஸனம் செய்துகொண்டு ரூ. 40,000 ரொக்கமாக அவர் கையில் கொடுத்தார். இந்த ஏற்பாட்டோடு மதராஸ் திரும்பிய கணவன் தம் மனைவியுடன் கலந்துபேசி, மேலே நடக்கவேண்டிய காரியங்களைத் திட்டப்படுத்திக்கொண்டார்.

(1) கல்யாணிக்குத் தங்கள் ஸ்திதியை இப்பொழுது தெரியப்படுத்துவதில்லை. (2) அவளுடைய விவாஹத்தைத் தங்கள் திட்டப் பிரகாரம் சிறப்பாக நடத்தி, அவளைப் புருஷனுடன் கூட்டி வட இந்தியாவிற்கு அனுப்பி விடுவது. (3) கையில் மிஞ்சும் மயிலாப்பூர் பங்களாவையும் தட்டுமுட்டுச் சாமான்களுடன் விற்றுவிட்டு, ஏதோ சொல்பதொகையுடன் கரையூரில் தங்கள் வீட்டில்போய் நிதானமாய்க் குடித்தனம் செய்வது—இவைகளே தம்பதிகளின் முடிவான திட்டம்.

யோசனையளவில் மிக்க சுலபமே. அப்பப்பா, கல்யாணியின் கல்யாண விமரிசைகளை எவ்விதத்திலும் வருணித்து முடியாது. ஊரே ஒரு முழம் உயர்ந்ததென்றால் பொய்யாகாது! பெண்ணும், பிள்ளையும் ஜோடி சேர்ந்த அழகு முதல் சாப்பாட்டின் ருசி வரையில் எல்லாம் முதல்தரம் என்றால் பாருங்களேன்.

ஐந்துநாள் கல்யாணம் நடந்து சம்பந்திகளும், ஊராரும் மட்டற்ற திருப்தியுடன் இல்லம் சென்றனர். சங்கரையரும் மீனாக்ஷியம்மாளும் தலையில் இடிவிழப் போவதை முன்கூட்டியே அறிந்தவர்போல் கிலி பிடித்து வளைய வந்தார்கள். இடிதான் முன்னமே விழுந்தாகிவிட்டதே. பாவம், பாவம்!

மணப் பெண்ணுக்கு மட்டும், தன்னைப் பிரிவதில் பெற்றோர்க்கு ஏன் இவ்வள்வு வருத்தம் என்பது புரியவில்லை. அதற்கு வேறு காரணமுமிருக்கக் கூடுமென்றே அவள் நினைக்கவுமில்லை. உற்சாகமாய், கணவனுடன் பிரயாணப்பட்டாள்.

* * *

ஆர அமர கல்யாணச் செலவுகளைக் கணக்குப் பார்த்தார்கள். திட்டத்திற்கு மேலேயே செலவுகள் ஓடுவது வழக்கந்தானல்லவா. மீனாக்ஷியம்மாளின் சீதனமான மயிலாப்பூர் பங்களாவை அதன் தட்டுமுட்டுச் சாமான்களுள்பட விற்ற பிறகே கடனெல்லாம் கொடுத்து ஒழிக்க முடிந்தது.

இச்சமயத்தில் அம்மாளின் உடல் நலன் கெட்டுப்போயிருந்தது. மனோ வியாதியுண்டானால் உடலையுந்தானே பாதிக்கும். சென்னைக் கடற்கரைக் காற்று அவளுடைய சுவாஸப் பைக்குக் கெடுதி செய்யுமென்று சில வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டனர். இதை ஒரு காரணமாகக்கொண்டு கணவனும், மனைவியும் கரையூரைப் பார்க்கப் பிரயாணப்பட்டார்கள். நெருங்கிப்பழகிய சில நண்பர்களுக்குமட்டில் இனிமேல் பழைய தோரணையில் மயிலாப்பூரில் வாசம் செய்ய இவர்களுக்குச் சக்தியில்லையென்பது தெரியும்.

அருமைப்பெண் கல்யாணிக்கு இதையெல்லாம் எவ்விதம் தெரிவிப்பது? தாயாரின் உடல் நலனை உத்தேசித்துக் கிராம வாசம் போவதாகவும் இவ்வளவு செலவுகளுக்குப்பிறகு பட்டணவாசம் செய்யக் கையில் போதுமான தொகையில்லையென்றும் கூடமாகத் தந்தை பெண்ணுக்கு எழுதிவைத்தார். உண்மையான நிலைமை அவளுக்குத் தெரிய வழியில்லை.

ஆனால் இவர்களுக்கே கிராமத்திற்கு வந்து பிதுரார்ஜித வீட்டில் குடியேறிய பின்புதான் தங்களின் எளிய நிலைமை மனதில் தைத்தது. சுருங்கச்சொன்னால், குடிபுகுந்த ஓட்டுக் குடிசையும் பட்டணத்து நாகரிக வாழ்வினின்று மீட்டிய சில தட்டுமுட்டுச் சாமான்களுமே அவர்களுக்கு மீதியாயிருந்த ஆஸ்தி.

சின்ன மிராசு சங்கரையரின் கதி இவ்விதமா ஆகவேண்டும்?

தம்பதிகள் மனம் சோர்ந்துபோயிருந்த நிலைமையில் கிராமத்து ஜனங்களின் உயர் குணத்தைக் கண்டார்கள். அவர்கள் மதிப்பும் லக்ஷியங்களும் பணத்தைமட்டும் சார்ந்ததில்லை யென்பது தெளிவாகத்தெரிந்தது.

பெரிய மிராசு ஐயர் இவர்களை உடனே வந்து பார்த்தார். சாப்பாட்டுக்குத் தாளம் போடும் நிலைமையைக்கண்டு மனம் வருந்தி அனுயாசமாய் ஒரு பெரும் பொய்யைத் தூக்கிப்போட்டார்.

"என்னப்பா சங்கரா, நீ வருவதாக எழுதக்கூடாதோ. நெல் குற்றி அரிசி மூட்டை தயாரில் வைத்திருப்பேனே" என்றார்.

சங்கரையருக்குத் தூக்கிவாரிப்போட்டது. "என்ன அண்ணா, கேலி செய்கிறீர்கள்? உள்ள சொத்து முழுவதும் உங்களுக்கு எழுதிக்கொடுத்து, அவற்றின் பெறுமானத்துக்குமேல் தொகையையும் பெற்றுக்கொண்டேன். எந்த முகத்துடன் அரிசி வேணுமென்று உங்களுக்கு எழுதுவது?" என்று கேட்டார்.

"யாரு சொன்னா இதெல்லாம்? சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறாயே. உனக்கா ஒண்ணுமில்லை? இருபத்தைந்து கலம் விளையக்கூடிய ஒரு மூலையை உன் பேருக்கு அப்பவே ஒதுக்கிவைத்தேனடா. மறந்துபோய் விட்டாயா? கோடை அறுவடை நெல் முழுவதும் நம்ம ஆத்துக் களஞ்சியத்தில் இருக்கிறது. இதோ போய் எடுத்து, நெல் பாதி அரிசி பாதி அனுப்பிவைக்கிறேன்" என்று சொல்லி வீட்டிற்கு விரைந்தார்.

அன்று மாலைக்குள் ஒரு வருடத்துத் தேவைக்கான நெல்லும் அரிசியும், சகல




Madras Stockists:- **M/s. RAJAN DRUG STORES**
155, Nyniappa Naick Street, MADRAS.

தானியங்களும் வீட்டில் கொணர்ந்து சேர்க்கப்பட்டன. கொல்லையில் வசித்த ஒரு பால்காரி இரண்டு வேளையும் ½ படி பால் கறந்து சமையல் அறை வாசலில் அவளாகவே கொண்டுவந்து வைத்துப் போனாள். பெரிய ஆத்துக் காரியக்காரி சேஷிஅம்மாள் தினமும் காலையில் வந்து அடுக்களை சுத்தம் செய்து, ஜலம் கொணர்ந்து நிரப்பிவிட்டுப் போவாள். இதெல்லாம் யாருமே சொல்லாமல் ஒழுங்காய்ச் சந்தடியில்லாமல் நடந்தன.

மீனாக்ஷியம்மாளுக்கும் தன் ஸ்திதி ஒருவாறாக மனதிற்பட்டது; இடிந்தே போனாள். ஒருநாளும் அடுப்பருகில் சென்றறியாதவள், இப்பொழுது பிரதி தினமும் அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளை ஒழுங்காய்ச் செய்யத் தொடங்கினாள். பாவம், பாவம்! இதுவும் நாளடைவில் பழக்கத்திற்கு வந்து விட்டது.

ஆனால் உடம்பு மட்டும் பலவீனமடைந்து கொண்டே வந்தது. ஒருநாளும் கடின வேலை செய்தறியாத அவளுடைய மெல்லிய சரீரம் இந்த அலட்டலைத் தாங்கச் சக்தியற்றதாயிற்று. இந்த நான்கு வருஷத்தில் நோய் அதிகரித்து, காசத்தில் கொண்டு போய்விட்டது.

கல்யாணமாகிப்போன பெண்ணைப் பிரிந்த பெற்றோர், இன்றளவிலும் அவளைக் காணவேயில்லை. மனதிற்குள் இந்த ஆவல் ஸதா இருந்து வந்தபோதிலும், தங்கள் தரித்திரத்தைப் பங்கிட்டுக்கொள்ள அவளை எவ்விதம் அழைப்பது? இதைக் கண்ணால் கண்டால் அவள் மனம்தான் சகிக்குமா? உயிரையே விட்டுவிடுவாளே.

இந்தச் சமயத்தில்தான் அந்த, 'போஸ்ட் கார்டு' வந்தது. ஒருவாரம் லீவு கிடைத்ததால் தானும் கணவனும் குழந்தை ராமுவுடன் மதராஸ் வருவதாகவும், அதன்பின் ஒருநாள் கரையூருக்கு வந்து அன்னை தந்தையரைப் பார்த்துப் போவதாயும் எழுதியிருந்தாள், கல்யாணி.

* * *

கோடிவீட்டுப் பெரியம்மா ரூ. 10—0—0 சேஷிப் பாட்டியிடம் கொடுத்தனுப்பினார்கள். அத்துடன், "இப்போ ஒண்ணும் திருப்பித் தரவேண்டாம். சங்கராந்தி வறது, மஞ்சள் குங்குமத்திற்காக வைத்துக்கொள்ளச் சொல்லு. மீனாக்ஷி என் பெண்ணாட்டமா." என்கிற அன்பு நிறைந்த வார்த்தைகளையும் அந்தரங்கமாய்ச் சொல்லி யனுப்பினாள். இவர்களது பெருந்தன்மை, கருணை இவற்றைப் பாராட்டி மீனாக்ஷியின் கண்களில் நீர் தளும்பிற்று. பாவம், இப்போதெல்லாம் எதை நினைத்தாலும் ஒரு நொடியில் அவளுக்கு அழுகை வந்து விடுகிறது.

பத்துமைல் தூரத்திலிருந்த டவுனுக்குச் சென்று எதெதோ சாமான்களை வாங்கித் துணியில் முடிந்துகொண்டு சங்கரையர் இரவு 8 மணிக்கு வீடு திரும்பினார்.

குழந்தைக்கு அரைப்பவுண்டு பிஸ்கோத்து; கல்யாணிக்கு ரூ. 6—0—0-ல் ஒரு கஜம் இங்கிலீஷ் வாயில்; ஒரு வீசை உருளைக் கிழங்கும் 2 ரூ. பெறுமான இங்கிலீஷ் காய்கறி வகைகளுமாகக் கிட்டத்தட்ட ரூ. 9-8-0 செலவழிந்து போயிற்று.

இந்த ஒருவாயில் சட்டைபோல் சுமார் 200 சட்டைகள் கல்யாணியின் குழந்தைப் பருவத்தில் அவள் பீரோவில் அடுக்கியிருக்கும்; இன்று தாத்தா பேரனுக்கு வாங்கி வந்த 'ஜெம்' பிஸ்கோத்தை' கல்யாணி தன் வீட்டுத் தோட்டக்காரனின் குழந்தைகளுக்குப் பவுண்டு கணக்கில் வாங்கி இனாமாக அளித்திருக்கிறாள்!

மறுநாள் பொழுது விடியுமுன்பே தம்பதிகள் எழுந்து, நீராடி, காலைக் காரியங்களை முடித்துக்கொண்டு, முக மலர்ச்சியுடன் தெருத் திண்ணைக்கு வந்துவிட்டார்கள். உள்ளே காப்பியும், இட்டிலியும் தயார் செய்து வைத்திருந்தாள் மீனாக்ஷி. வண்டி வரச் சற்றுத் தாமதமான பொழுது, இவர்களுக்கிருந்த துடிப்பைச் சொல்லிமுடியாது. பெரிய மிராசுதாரின் வண்டியும் 'ஜில்' என்று வாசலில்வந்து நின்றது. "அப்பா!" என்று அழைத்தவண்ணம் கல்யாணி வண்டியினின்று குதித்து இறங்கி உள்ளே நுழைந்தாள்.

நல்ல சிவப்பு. $5\frac{1}{2}$ அடி உயரங்கொண்ட கொடிபோன்ற சரீரம். தலை நிறைய மயிர். காலில் மூன்று இஞ்சு உயரமுள்ள ஜோடுகளை அணிந்து, உடலெல்லாம் தெரியும் பட்டுச் சேலைதரித்து மோஹினியைப்போல் இறங்கிய தன் பெண்ணைக்கண்டு பூரித்துப் போனாள், மீனாக்ஷி அம்மாள். அத்தனை அழகுடன் விளங்கினாள், கல்யாணி.

விலையுயர்ந்த தோல் பைகளும், பட்டுத் திண்டுகளும், பெட்டிகளும் கூடத்து அறையை அடைத்துக்கொண்டன. கடைசியில் பேரக் குழந்தையைத் தோளில் தாங்

கியவண்ணம் சங்கரையரும் உள்ளே நுழைந்தார். மீனாக்ஷியம்மாள் பிரமைகொண்டவள்போல் தூணில் சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்ததையும், கல்யாணி சாமான்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்ததையும் அவர் கண்டார்.

“அம்மாடி. சாமானெல்லாம் சரியாக இருக்கிறது.........” என்று பெருமூச்சுடன் வெளியில் வந்த பெண்ணைப் பார்த்து, “ஏண்டியம்மா, மாப்பிள்ளை ஏன் வரவில்லை?” என்றார் தகப்பனார். “அவருக்கு இந்தத் தூசி உடம்புக்கு ஆகாது. ஸ்டேஷன் ரூமிலேயே தங்கி விடுவதாகச் சொன்னார். நானும்தான் இரவு மெயிலுக்குத் திரும்புகிறவள் தானே.” என்று பதிலளித்துவிட்டுத் தன் தாயை முதல் முறையாக அப்பொழுதுதான் கவனித்தாள். உடனே, “ஏம்மா, உன்னுடம்பு இப்படிப் போய்விட்டது? உன்னைப் பார்த்தாலே ‘ட்யுபர் குலோசிஸ்’ என்று தெரிகிறதே. நீ ஏன் பட்டணத்தை விட்டு இங்கே வந்தாய்? நம்ம டாக்டர் உனக்குத் தகுந்த மருந்து கொடுத்திருப்பாரே.........அப்பா, மயிலாப்பூர் வீட்டை ஏன் வாடகைக்கு விட்டீர்கள்? நான் அங்கே போய்ப் பார்த்தேன். வேறு யாரோ இருந்ததால் சினேகிதர் வீட்டில் தங்க நேரிட்டது.........” என்று எதெதோ பட்டுக்கொள்ளாமல் பேசிக்கொண்டே போனாள்.

இவர்களுடைய நிலைமை தெரிந்ததாகவே தோன்றவில்லை. அதன் காரணத்தை விவரமாய்க் கேட்டு அறியவும் ஆவல் காண்பிக்கவில்லை. இந்த ஏமாற்றத்தைப் பொறுக்க மாட்டாத மீனாக்ஷியின் கண்களில் ஜலம் தளும்பிற்று. எவ்வளவோ ஆவலுடன் அந்தத் தாயுள்ளம் எதிர்பார்த்தது இதையா? இந்தப்பெண் என்ன இப்படியிருக்கிறாள்? என்ன உணர்ச்சியற்ற பேச்சு இது?

“இந்தாயேன், குழந்தைக்கும் கல்யாணிக்கும் ஹாரத்தி சுற்றேன். அவர்களுக்குப் பசிக்காது! சீக்கிரம் காப்பிகொண்டு வந்து கொடு.” என்று மொழிந்த தன் கணவரின் குரல் காதில் பட்டதும், மீனாக்ஷிக்கு இவ்வுலகப் பிரக்ஞை வந்தது. மனதை ஒரு முயற்சிசெய்து அடக்கிக்கொண்டாள்.

ஆரத்தி சுற்றிக் கொட்டியவள், கிணற்றருகில்போய், தன் முகத்தைக்கழுவிக்கொண்டு சமையல் அறைக்குள் புகுந்தாள்.

“அப்பா, இந்தப்புழுதியிலும் அழுக்கிலும் நீங்கள் எப்படிக்குடியிருக்கிறீர்கள்? அம்மா தான் எவ்விதம் இதையெல்லாம் பொறுத்துக்கொள்கிறாள். அதுவும் வட இந்தியாவிலிருந்துவந்த எனக்கு இதெல்லாம் துளியும் பிடிக்கவில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள்; அம்மாவுக்குப் பட்டணம்தான் சரி; உடனே நீங்களிருவரும் கிளம்பி மயிலாப்பூருக்குப் போய்விடுங்கள். பழைய சினேகிதர் மத்தியில் இருந்தாலே உடம்பு சரியாகிவிடும்” என்று ஒரு பாடம் படித்தாள்.

சிறு குழந்தைபோன்ற இப்பேச்சு தந்தைக்குச் சிரிப்பை மூட்டிற்று. பதில் பேசவில்லை. பேரனை எடுத்து மடியில் வைத்துக் கொஞ்சினார். இதற்குள் மீனாக்ஷி ‘காப்பி’ யுடன் அங்கே வந்து சேர்ந்தாள். அவள் முகக் குறிப்பினால் உள்ளம் ஏமாறியதை ஜாடையாக அறிந்துகொண்டார் சங்கரையர். அவர்களுக்கு ஆறுதலளிக்கும் விதமான பேச்சு ஒன்றை ஆரம்பிக்க அவர் நினைத்திருக்கையிலேயே கல்யாணி, “ஏம்மா நீ கொண்டுவருகிறாய்? நம்ப சமையற்கார மணி எங்கே?” என்று கேட்டுவிட்டாள்.

அதுவரையில் குமுறிக்கொண்டிருந்த விசனமெல்லாம் மீனாக்ஷிக்கு இந்தக் கேள்வியினால் வெளிப்பட்டது. நின்ற நிலையில்


## கறுப்பு மேனியை வெளுக்கச்செய்யுங்கள்

வாலட்டா பியூடி கிரீம்: கறுப்பு நிறத்தை நிரந்தரமாக வெளுக்கச்செய்கிறது. பருக்களையும் சுருக்கங்களையும் அகற்றி, தோலை மிருதுவாக்குகிறது. இந்த ஆக்ஸிஜன் கிரீமை இன்றே உபயோகிக்க ஆரம்பித்து உங்கள் இளமை மேனியை வரவழைத்துக் கொள்ளுங்கள். ஜாடி ஒன்று விலை ரூ. 2

## நீண்ட அழகிய கேசத்தை அடைய

டைபாயிட் முதலிய ஜ்வரங்கள், மனக்கிலேசம் முதலிய தொல்லைகளினால் அழகிய கூந்தல் உதிர்ந்துவிடுவது சகஜம். பால்டைன் கூந்தல் தைலம் மயிர்க்காம்புகளை உயிர்ப்பித்து வளரச்செய்கிறது.

பெரிய பாட்டில் ரூ. 3/ சிறியது ரூ. 2/

இவைகளுக்கு ஏஜண்டுகள் **அப்பா & கோ.,**
கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேடு, மதராஸ்.

கண்ணீர் சொரிந்தாள். ஒருவிதத்தில் அவளைச் சமாதானம் செய்துவிட்டு, மகளுக்கும் தங்கள் சிரம தசையை விஸ்தாரமாக எடுத்துரைத்தார் தந்தை.

கல்யாணிக்கு இதெல்லாம் ஒன்றும் புரியவில்லை. எதற்காக மயிலாப்பூரைவிட்டு இங்கே வந்து கஷ்டப்படவேண்டும்? ஏன் இவ்வளவு சிரம தசை வந்தது? "எல்லாம் உன் கலியாணத்தில் ஏற்பட்ட செலவுகள் தான் பாதி காரணம் அம்மா. என் ஆஸ்தியையே அதில் செலவிட்டதால் குடும்பம் நொடித்துப்போயிற்று" என்று ஒரே வார்த்தையில் விளங்கவைத்தார்.

பெண்ணுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. தன் புருஷனுடன் இதைப்பற்றிப் பேச வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டாள். தற்சமயம் பெற்றோர்க்கு ஆறுதலளிக்கும்படியான ஒரு வார்த்தையும் சொல்ல அவள் முன் வராதது என்னவோ பிசகுதான். ஆனல் அனுபவமற்ற குழந்தைதானே? அவளுக்கும் இம்மாறுதல் ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது. தன்னை நல்ல இடத்தில் கொடுப்பதற்கு அவர்கள் பட்ட சிரமமே இந்த நிலைமைக்கு ஆதிகாரணமென்பதை அவள் உணரவில்லை. இயற்கை தானே?

நாம் சந்தோஷமாயிருக்கையில் பிறருடைய சிரமங்களை உணர்வதற்குப் பெரும் கற்பனு சக்திவேண்டும்; அனுபவம் முதிர்ந்தவர்க்கே அது சாத்தியமில்லை. இளம் பிராயத்தவர்க்கு அது எவ்விதம் வாய்க்கும்?

கல்யாணிக்கு இந்தக்குக்கிராமமும் அழுக்கும், தூசியும், தரித்திரமும் வெறுப்பாக இருந்தன. "எப்படித்தான் இதிலும் ஜனங்கள் வாழ்கின்றனரோ. அம்மா எவ்வளவு நாகரிக மனுஷி. அவளுக்கும் இதெல்லாம் பொருத்தமாயிருக்கிறதே; பழைய பட்டணத்துப் பங்களா வாசமெங்கே, கரையூரெங்கே? அம்மாவுக்கோ நன்கு முற்றிப் போன க்ஷயம். கிட்டத்தில் போய் மூச்சுவிட்டாற்கூடத் தொத்திக்கொள்ளும். எப்படியாகிலும் குழந்தை ராமுவை அம்மாவிடம் நெருங்கவிடாமல் காப்பாற்றியாகவேண்டும்......" என்றெல்லாம் மனதில் நினைத்துக்கொண்டாள்.

தன் வெறுப்பையும் விருப்பையும் சுய நலத்துடன் எண்ணினளே தவிர, தனக்காகச் சகல சம்பத்தையும் துறந்து, சொல்ல முடியாத கஷ்டங்களை இன்று அனுபவிக்கும் தன் தாய்தந்தையரின்பால் இவளது மனம் சற்றும் கனியவில்லை. ஏன்? கடவுளுக்கே வெளிச்சம்.

* * *

அன்று பகல் முழுவதும் ஓடி ஓடி வேலை செய்து சகல சௌகரியங்களையும் பெண்ணுக்குச் செய்துகொடுத்தாள், மீனுக்ஷி. பிரியமான பண்டங்களைச் சமைத்துப் போட்டாள். கிணற்றிலிருந்து எவ்வளவு குடம் தண்ணீர், இந்தத் தள்ளாத உடம்பில் அவளே இறைத்துக் கொடுத்தாளென்பது நமக்குத் தெரியாது.

மகளென்னவோ உபசாரத்திற்கு "நீ சும்மா, அலையாதே அம்மா. உட்காரேன்" என்று சொல்லிய வண்ணமிருந்தாள். ஆனல் இந்த வேலைகளைப் பின் யார் செய்வது? மேலும் இவ்வித உபசார மொழியில் மீனுக்ஷிக்கு ஆறுதலேற்படவில்லை. மனம் புண்ணுகித் துடித்தாள்.

மாலை ரயிலுக்குக் கிளம்பும் நேரமும் வந்துவிட்டது. போஜனத்திற்குப் பின் கூடத்தில் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தாள் கல்யாணி. மாப்பிள்ளைக்குச் சாப்பாடு கட்டித் தருவதாகச் சொன்ன தாயின் உபசாரத்தை மறுத்துவிட்டாள். வியாதி எங்கே தொத்திக்கொள்ளுமோ என்கிற பயமே கல்யாணிக்கு முன் நின்றது.

மீனுக்ஷியும் எதெதோ சிந்தித்த வண்ணம் அமர்ந்திருந்தாள். திடீரென்று, எதையோ நினைத்துக்கொண்டு, "ராமு, உன்னை ஒரு தரம்கூட நான் இன்னும் எடுத்துக்கொள்ளவில்லையே. இங்கே வாப்பா, என் கண்ணே." என்று ஆவலுடன் குழந்தையைத் தூக்கிக் கொள்ள முன்வந்தாள்.

இதுகாறும் இவ்வித சந்தர்ப்பம் நேருவதற்கு இடந்தராமல் சாமர்த்தியமாய் நடந்து கொண்ட கல்யாணிக்கு, பயத்தினுல் உயிரே போய்விடும்போலிருந்தது.

தன் தாயைப் பாய்ந்து தடுத்தவளாய், "அம்மா, அதுமட்டும் வேண்டாம், மன்னித்துவிடு. உன் உடம்போடு நீ குழந்தையைத் தொடலாமா? முன்பு ஒரு காலத்தில் நம்ம தோட்டக்காரனுக்கு க்ஷயம், அவன் அருகில் போகாதே என்று நீயே எனக்குச் சொன்னதில்லையா?" என்று கேட்டாள்.

மீனுக்ஷி நிஸ்திராணியாய், பின்வாங்கிவிட்டாள். தாயுள்ளம் இடிந்தே போயிற்று. ......ஆம்......அதுவும் ஓர் உண்மைதான்.

பின்னால் நகர்ந்துபோய், தூணில் சாய்ந்து கொண்டாள். அதன் பிறகு அங்கே நடந்த தொன்றையும் அவள் காணவில்லை. சாமான் கள் வண்டியில் ஏற்றப்பட்டன. தகப்பனா ரும், குழந்தையும் கல்யாணியும் போய் ஏறிக்கொண்டார்கள். மீனாக்ஷி தன் நினை வின்றி வாசலில் போய், சுவரில் சாய்ந்து கொண்டு நின்றாள். கண்ணீர் பார்வையை மறைத்தது.

உள்ளத்தில் திரும்பத் திரும்ப ஒரு கேள்வி எழுந்தது. "இதுதானா நான்கு வருஷத் திற்குப்பின் ஆவலுடன் நான் எதிர்பார்த் தது? இவ்வளவுதானா?"

"பாட்டிக்கு நமஸ்தே சொல்லுடா ராமு" என்று கூறிய கல்யாணியின் சிரித்த முகம்; குழந்தை; "வாசற் கதவைப் போட்டுக் கொள். நான் திரும்பிவர இரவு பத்து மணி ஆகும்." என்று கூறிய தன் கணவன்; வண்டி மாடுகள்—இவை யெல்லாம் என்ன, எதைக் குறித்தவை?

மனித சமூகத்திற்கென நூதன ஆராய்ச்சி

# மேதாவின்

# ஈரல் கட்டி நிவாரணி

நீண்ட ஆராய்ச்சியின் பயனாக இப் புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளோம். ஈரல் கட்டியைப் போக்கடிக்க கைகண்ட மருந்து.

குழந்தைகள் வியாதியைக் குறித்து கவ லைப்படாதீர்கள்.

மேதாவின் ஔஷதம் வைத்திய உலகில் ஓர் புரட்சி உண்டுபண்ணி விட்டது.

## கே. எஸ். மேதா & கோ.,

மதராஸ்

குழம்பிப்போய், பிரமை, தட்டி நின்ற மீனாக்ஷியைச் சேஷிப் பாட்டி கைப்பிடியாக அழைத்து வந்து உள்ளே படுக்கவைத்தாள். அடுக்களைக் காரியங்களையும் செய்து முடித்துவிட்டு, அந்தம்மாள் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

மீனாக்ஷிக்கு நல்ல ஜ்வரம். இரவு வெகு நேரத்திற்குப்பின் கவலையுடன் திரும்பிய சங்கரையரும், இதை ஒரு வகையில் எதிர் பார்த்தவராய் வீடு வந்து சேர்ந்தார்.

"கல்யாணி என்ன சொன்னாள்? மாப் பிள்ளை எப்படி யிருக்கிறார்? அவர் ஏதாவது சொன்னாரா?" என்று ஆவலுடன் கேட்ட மனைவியை அமர்த்தினார் கணவன்.

"என்ன சொல்வதற்கிருக்கிறது? திரும் பத் திரும்ப நாம் சென்னைக்குப்போய், குடி யிருக்கவேண்டுமென்று வற்புறுத்தினாள், அவ்வளவுதான். எவ்விதத்தில் அது சாத் தியமாகுமென்று அவள் துளிக்கூட நினைக்க வில்லை. அந்தப் பெண்ணுக்கு ஒண்ணும் தெரியவில்லை...... இதோ பாரு மீனாக்ஷி, இதை யெல்லாம் எண்ணி நீ அழாதே. இனிமேல் ஒன்றையும் எதிர்பார்க்காதே. உனக்கு நான் இருக்கிறேன்; எனக்கு நீ! அவ்வளவுதான். மற்றவரெல்லாம், பெண் ணாக இருந்தாலுங்கூட நமக்கு அவசிய மில்லை, இவ்வுலகில்." என்று கூறி அவளைத் தழுவிக்கொண்டார்.

அந்த உண்மை அவள் உள்ளத்திலும் தைத்தது. எனினும் அப்பொழுதே புதி தாகப்பட்ட ஒரு காயம் உள்ளத்தைச் செம் புண்ணாக்கிக்கசக்கிப்பிழிந்தது. அதன் துடிப் பில் "வாஸ்தவம்தான், ஆனாலும் சகல சொத்தையும், மகத்தான வாழ்வையும் தியாகம் செய்துவிட்டு, இப்படிப் பரதேசி களாய்க் காலங்கழிக்கிறோமே. இதில் யாருக்குன்னா லாபம்?" என்றாள் சோர்ந்து போய்.

"என்ன அப்படிச் சொல்லிவிட்டாய்? கல்யாணிக்கு? அவள் சந்தோஷமாயில்லை?" என்ற கணவனின் பதில் அவள் உள்ளத் திலும் எதிரொலிபோல் அறைந்தது.

# ரோமா ரோலான்*

## (Romain Rolland)

யோகி சுத்தானந்த பாரதியார்

### க. புதுயுகச் சுடர்கள்

தோல்ஸ்தாய், லெனின், ரோமா ரோலான் (M. Romain, Rolland) நமது மகாத்மா காந்தி அடிகள், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ ரமண மகரிஷிகள் முதலியோர் புது யுகச் சுடர்கள் ஆவர். இவர்களுள், ரோமா ரோலான் பெருமையை நூல்களாலும், பிரெஞ்சு நண்பராலும் கடித உறவாலும் நான் அறிந்தேன். அவர் உலக மேதாவிகளில் ஒருவர்.

### உ. பிறப்பும் கல்வியும்

ரோமான் ரோலான் பிரஞ்சு மணி. அவர் 1886 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் தேதி கிளாமஸி என்ற கிராமத்தில் ஒழுக்கமுள்ள கத்தோலிகக் குடும்பத்தில் பிறந்தார். அவருக்கு ஒரு தங்கையே உடன் பிறப்பு. அவர் தந்தை செல்வாக்குள்ள ஒரு வக்கீல். பள்ளிப் பிள்ளையாயிருந்தபோதே ரோலான் உலக வீரர் வரலாற்றை ஆர்வமுடன் கற்றார். அவர் மனத்தில் பல வீரர்கள் குடியிருக்கலாயினர். பைபிளை அவர் ஆழ்ந்து பயின்றார். கத்தோலிக்க மதத்தை அவர் பய பக்தியுடன் அனுஷ்டித்தார். பிரான்ஸிஸ் முனிவரிடமும் தெரேஸ் முனிவரிடமும் அவருக்கு அபார பக்தியுண்டு. அம் முனிவரின் சாந்த குணம் அவருக்கு இளமையிலேயே பிடிபட்டது. சங்கீதத்தில் அவருக்கு மிகப் பிரியம்; அவர் ஓய்ந்த நேரங்களிலெல்லாம் பியானோ (Piano) வாசிப்பார். பிரெஞ்சு மொழிபெயர்ப்பிலுள்ள ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அவர் அடிக்கடி படித்துப் பரவசமாவார். நாடகத்தில் அவருக்குப் பிரியம் அதிகம்; நாடகத்தைச் சமுதாயக் கலையாக்க வேண்டுமென்பது அவர் ஆசை. அவருக்குக் கவி வாணராக வேண்டுமென்ற விருப்பம் அதிகம். ஆனால் அவர் வசனத்திலேயே கவிக் கலையை விளக்கினார். கல்லூரியில் அவர் தத்துவமும், சரித்திரமும் (Philosophy & History) ஆழ்ந்து கற்றார். ரஷியா தேசத்து ரிஷியான தோல்ஸ்தாயிடம் (Leo Tolstoy) அவருக்கு வணக்கமுண்டாயிற்று; அவருடன் கடிதப் போக்கு வரவு வைத்துக்கொண்டார். அதனால் அவருக்குத் தோல்ஸ்தாயின் அறநெறியும், கருணையும் பிடிபட்டன. தோல்ஸ்தாயின் "சண்டையும் சமாதானமும்" என்ற நூல் அவரை வசிகரித்து நாவலராக்கியது.

### ௩. ஜெர்மன் மாதின் பழக்கம்

கல்லூரிப் படிப்பானதும் ரோமா ரோலான் 23ஆம் வயதில் உரோமாபுரிக்குச் சரித்திர ஆராய்ச்சி செய்யச் சென்றார். அங்கேதான் அவருக்கு ஒரு சிறந்த ஜெர்மன் மாதின் பழக்கம் ஏற்பட்டது. அம்மாது இத்தாலிய வீரரான மாஜினி, கோஸத், கரிபால்டி முதலியோரை நேரே கண்டவள். உயர்ந்த நோக்கமும், ஒழுக்கமும், அறிவும், அனுபவமும் பெற்றவள். அவள் பெயர், மால்விடாவான் மெயிஸ்ன்பர்க். அம்மாதிற்கு வயது 73. ரோலான், அம் மாதிற்குப் பிள்ளையும் சிடனுமானார். மால்விடாவான், ரோலானை மகானுக்கினாள். ரோலானின் சங்கீதத்தில் அம்மாது மகிழ்ந்து நிற்பாள். ரோலனுக்கு ஜெர்மன் பாஷையிலும் பெரும் புலமையுண்டு. மொஜார்டு, பெதோவன், வாக்னர்—முதலியோரின் இசைச் செல்வங்களை அவர் தமதாக்கிக்கொண்டார். இத்தாலியில் புகழ்பெற்ற இசைச் செல்வத்தையும் ரோலான் பயின்று தேர்ந்தார்.

மால்விடாவான் ரோலானின் ஜெர்மன் பாட்டில் சொக்கிப் போவாள். பாட்டும், பியானோவும், நவரஸ உணர்ச்சியும் சேர்ந்து ரோலான் இசைக்கலை கேட்போர்

---

*உச்சரிப்பு—Romain Rolland என்பதை ரோமெயன் ரோலாண்டு என்று உச்சரிப்பது பிசகு. ரோமா ரோலான் என்பதே சரியான பிரெஞ்சு உச்சரிப்பு.

உள்ளத்தை உருக்கும். ஆனால் அவர் உள்ளத்தில் ஒரு குறை புகுந்தது; "நான் பிரெஞ்சுக்காரன்; எனது தாய்மொழியில் இசைப் பாடல்கள் வேண்டுமட்டும் உள்ளன. அவற்றிற்கு ஐரோப்பாவில் பிரசாரமில்லையே; பிரெஞ்சுக்காரர்கூட ஜர்மன் இத்தாலியன் சங்கீதத்தையேமெச்சித் தலையாட்டுகிறார்களே; எனது தாய்மொழியிசை தலைதூக்க வேண்டாமா? நானும் ஜெர்மனிலேயேபாடிக்கொண்டிருப்பதா?" என்று ரோலான் உணர்ந்தார். அன்று முதல் ரோலான் பிரெஞ்சு இசைக் கலையைக் கருத்துடன் போற்றினார். பெர்லியோஸ் என்ற பிரெஞ்சு இசைவாணன் முறையைப் பின்பற்றினார்.

"கலையிற் சிறந்தது இசைக்கலைதான்; ஒவ்வொரு பாஷையும் அதற்கு இனிய இசைக் கலையை வகுத்துக்கொண்டிருக்கிறது. எனது தாய்மொழியிலும் உயர்ந்த இசைச் செல்வம் வளரவேண்டும்" என்று ரோலான் விரும்பி அரும்பணி செய்தார். பிரெஞ்சு இசைவாணரையெல்லாம் அவர் ஆதரித்தார்.

சங்கீதத்துடன் கலை வரலாற்றிலும் ரோலான் பெரிய புலவனானார். ரோலான் கலைமோகத்தாலும், கல்விப் பசியாலும் வாலிபத்திற்குரிய ஆசைகளைக் கூட அடக்கினார்.

## ச. பத்திரிகைத் தொழில்

அவர், தமது 35ஆவது ஆண்டில் ஒரு நண்பருடன் அரிய கலைப்பத்திரிகை நடத்தி வந்தார். அவருடைய நூல்களெல்லாம் அப்பத்திரிகையில் வெளி வந்தன. சமூகத்தைத் திருத்தக் கூடிய பல அரிய நாடகங்களை அவர் எழுதினார்; வீரர் சரிதைகளை உணர்ச்சிததும்ப எழுதி வெளியிட்டார். பிரமசாரியான அவர் புத்தகங்களுக்கு நடுவிலேயே காலங்கழித்தார். அவர், அறிதுயில் கொண்டு சிறிதளவுணவே உண்டு, படிப்பதற்கே வாழ்ந்தார். கற்றதைச் சிந்தித்து, அனுபவத்தையும் கொண்டு அவர் உலகைத் திருத்தும் நூல்களை எழுதுவார். ரோலான் உள்ளம் பரிசுத்தமானது, வஞ்சமற்றது, சூதுவாதற்றது, உயர்ந்த கலைக்கனவில் ஆழ்ந்தது.

## ரு. அறியா உலகு

இப்படித் தூயவாழ்வு வாழும் பெரியோனை உலகம் அறியவுமில்லை, மதிக்கவுமில்லை. பணமும் இல்லை. நண்பரும் புத்தகப்பூச்சி என்று அவரைக் கைவிடுத்தனர். அவரது சாத்வீகம் பலருக்கு ஏமாளித்தனமாகப்பட்டது. சிலர் அவரை முன்னும் பின்னும் கேலிசெய்தனர்; பேனாவால் தாக்கினர். எதுவரினும் அவர் மனம் கலங்காது உயர்ந்த நிலையிற் சென்றது. துயர் வரும்போதெல்லாம் அவர் முன்னே இடர்ப்பட்ட தியாகிகளை எண்ணிச் சமாதானமாவார். உயர்ந்த நோக்கத்தைக் கைவிடமாட்டார். சுற்றிவரும் துன்பங்களைப் பாராட்டாது சிலுவைக் கிறிஸ்துவை எண்ணிப் பொறுமையாய் இருப்பார். அவர் அருட்பணியே வாழ்வானார். பிறர் நையாண்டிகளையும் கருதாமல் ஜீவகாருண்ய வழியை உபதேசித்தார்; போர் வெறியைக் கண்டித்தார். அவர் நூல்கள் பல ஐரோப்பிய மொழிகளில் உலாவுகின்றன. புத்தகங்களினின்றே உலகம் அவரை மதிக்கத்தொடங்கியது.

## சூ. அஹிம்ஸா வீரர்

ரோலான் அஹிம்ஸா தருமத்தில் மிகவும் நம்பிக்கை உடையவர். அவர் ஊனுண்பதில்லை. கருணையும், அருளும் மிக்கவர். போர் என்றால் நெஞ்சம் பதறுபவர். 1914ஆம் ஆண்டு உலகை நடுக்கிய ஜெர்மன் யுத்தத்தை எண்ணி மனம் நொந்தார். மனித சமூகம் யுத்தத்தில் தற்கொலை புரிந்து கொள்ளுவதைக் குறித்து வருந்தினார். ஜெர்மனிக்கும் பிரான்ஸிற்கும் பரஸ்பரம் நல்லெண்ணம் உண்டாக, ஆனமட்டும் முயன்றார். அப்போது அவர் ஜெர்மனில் எழுதிய கட்டுரைகள் புகழ்பெற்றவை. மனித தருமத்தையும், மனிதன் உலகிற்குச் செய்ய வேண்டியதையும், போரின் தீதையும் அவர் விரிவாக எடுத்துச் சொன்னார், உலகம் மதித்துப் போற்றும் "ழான் கிறிஸ்தோப்" (Jean Christophe) என்ற அருமையான நவீனம் இப்போதுதான் எழுதப்பட்டது. கலைக்காகத் தாம்பட்ட பாட்டையும் உலகின் இன்னல்களையும் அந்நாவலில் அவர் உருக்கமாக வர்ணித்

திருக்கிருர். அந்நாவலை மெச்சி ரோலா னுக்கு 1200 பவுண்டு மதிப்புள்ள நோபல் பரிசு (Nobel Prize) தரப்பட்டது. 'போர் என்பது மிகவும் கொடுமையும், பாப மும், அசுத்தமும், மிருகத்தனமுமானது; ஐரோப்பா இப்படி அசுரப் போர்புரிந்து அழிகிறதே' என்று அவர் அலறுவார்.

### எ. "எப்படிப் பொறுப்பேன்!"

போரின்போது அவர், இத்தாலி தேசத் திலிருந்தார். 'அந்தோ, மனிதன் வெறிபிடித்தன்றோ ஒருவனை யொருவன் கொன்று ஒழிக்கிருன். உலகிற்குப் பெரிய தீங்கு நேர்ந்ததே! சகோதரத் தன்மையும், அன்பும் மண்ணுயினவே. மனிதர், உயர்ந்த அறிவையும், ஆற்றலை யும் வீணுகச் சிதைத்துப் பாபம் சம்பாதிக் கிருர்களே; ஐரோப்பிய நாகரிகம் குலைந்து போனதே; உலகில் மிருகத்தன்மை மேலிட் டதே! இதை எண்ணும்போது என் மனம் பகீர் என்கிறதே! அந்தோ, நான் இறந்துபோயிருந்தால், இக்கொடுமை யைக் காணுதிருக்கலாமே! எப்படி இதைப் பொறுப்பேன்' என்று ரோமா ரோலான் மனம் நொந்து தவித்தார்; யுத்தத்தின் வெறியை அடக்கமுயன்றுர்.

### அ. மக்களுக்கு உதவி

பீரங்கிச் சத்தத்திற்குமேல் அவருடைய உபதேசங்கள் ஏறவில்லை. உடனே, 'மக்களுக்கு உதவி செய்வோம்' என்று தீர்மானித்தார். ஸ்விட்ஸர்லாந்தில் செஞ் சிலுவைச்சங்கம் எழுந்து நடுநிலைமை வகித் துக் காயம்பட்டவருக்கு இரண சிகிச்சை செய்து வந்தது. போர் வீரரைச் சேர்ந்த குடும்பத்தினர், தங்கள் மனிதரின் கதி என்னவாயிற்றோ என்று பதறிக்கொண்டு கடிதம் எழுதுவார். அப்படி நாள்தோறும் பல்லாயிரம் கடிதங்கள் வந்து குவியும். அக்கடிதங்களுக்கெல்லாம் பதிலெழுதும் பணியை ரோமான் ரோலான ஏற்றுக் கொண்டு, இரவும் பகலுமாய் 18 மாதங் கள் உழைத்தார். "மனிதனை மனிதன் கொல்வது அநீதி" என்று, அவர் ஓயாது


மேதாஸ்

**மஸ்தானு மாத்திரைகள்**

**சிறந்த டானிக்**

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

**பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு, தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல், காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்**

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

இன்றே ஆரம்பியுங்கள்

கிடைக்குமிடம்:—

**K. S. மேதா & கோ.,**

மருந்து வியாபாரிகள்,

**250, சைனு பஜார் (மாடி), சென்னை**

சொல்லி வந்தார். போர் வெறி பிடித்தோர், இவ்வுத்தமர் புத்திமதியை வெறுத்தனர். ஆனால், போரின் தீமைகளை அறிந்த ஐரோப்பா, பிறகு நமது வீரனை மெச்சிப் போற்றியது. ரோலான், நாள்தோறும் தம் மனத்தில் உதித்த கருத்துக்களைக் குறித்து வைத்தார். அவை சிறந்த அறிவுப் பொக்கிஷமாயின.

### சகோதர உணர்ச்சி

கோர யுத்தம் முடிந்ததும், நாடுகளுக்குள் சகோதர உணர்ச்சியை உண்டுபண்ண அவர் முயன்றுகொண்டிருந்தார். கத்திகளை எறிந்துவிட்டு, தேச வெறிகொண்டு பிற நாடுகளுடன் போர் தொடுக்கும் கொடுமையைப் போக்கி, அமைதி நிலவும் புதிய சாந்த யுகத்திற்காகப் பாடுபடச் சொல்லி மக்களைத் தூண்டிக்கொண்டிருக்கிறார். மிருகத்தனத்தை விடுத்து அன்புகொண்டு வாழ மக்களை ஊக்கினார்; உலக சமாதானத்திற்காக அரும்பாடு பட்டார்.

ரோலானுக்கு ஆறுதலளித்த மகான்கள் இருவர்—தோல்ஸ்தாய், மகாத்மா காந்தி. தென்னாப்பரிக்க சத்தியாக்கிரகம் நடந்த நாள்முதல் அவர் மஹாத்மா காந்தியின் பரிசுத்த வாழ்வைக் கவனித்து வந்தார். காந்தி மகான் இந்திய விடுதலைக்காக நடத்திய சத்தியாக்கிரகம் அவர் உள்ளத்தை ஆவேசப் படுத்தியது. அன்று முதல் அவர் மஹாத்மாவின் வாழ்க்கையைப் பின்பற்றத் தொடங்கினார். பிறகு இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் விவேகானந்தரும் அவர் உள்ளத்தில் இடங்கொண்டனர். விவேகானந்தரிடம் அவருக்குப் பெருமதிப்புண்டு.

### ரோலான் மாண்பு

ரோலான், அரிய பெரிய கவி, ரசிகர், வித்துவான், கலைஞர், அறிவாளி; கருணையுரு; சாந்தமூர்த்தி; புதுயுகச் சிற்பிகளில் ஒருவர். அவர் மனது போர், பொறாமை, பேராசை முதலியவற்றின் வாடையின்றி உயர்ந்த நோக்கத்துடன் பரிசுத்தவானில் பாடிப் பறக்கிறது. தோல்ஸ்தாய் போன்றே ரோலானும் மிக எளிய வாழ்வு வாழ்ந்தார். அவர் நமது இந்திய மஹான்களை வெள்ளைக்காரருக்கு அறிமுகப் படுத்தினார். மஹாத்மாவைப் பற்றி அவர் ஒரு சிறந்த நூல் எழுதினார். அது சில மாதங்களில் 30 பதிப்புக்கள் ஆகி விற்றனவாம். அவர் இராமகிருஷ்ண விவேகானந்தர்மேல் எழுதிய நூல்கள் இரண்டும் உலகின் இலக்கியத்தில் பெரு மதிப்புற்றன. அவர் நெட்டை; மஹாத்மாவைப் போல், ஒல்லியாக இருப்பார். சாந்தப் பார்வையும், பளபளப்பான விழிகளும், மலர்ந்த முகமும், பேரறிவும், அகத்துறவும், ஜாதி நிறம் மதம் தேசம் என்ற வேற்றுமை யற்ற சமத்துவமும், எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற அன்பும் நிறைந்தவர் ரோமா ரோலான்.

முதிய ரோலான் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றுவந்த மஹாத்மா காந்தியைத் தமது வில்நூலல்(Ville Nouvelle) குடிலிற் சந்தித்து 'என் வாழ்வில் இன்றே இன்பச்சிகரத்தை அடைந்தேன்' என்று மகிழ்ந்தார். மஹாத்மாவும் ரோமாரோலானும் சாந்தமயமாகச் சேர்ந்தமர்ந்த படம் ஐரோப்பாவெங்கும் புகழ்பெற்று விளங்குகிறது. ரோலானுக்குப் பிரெஞ்சு, லத்தீன், ஜெர்மன், இத்தாலி ஆகிய நான்கு மொழிகளும் வரும்; ஆங்கிலம் தடவல்; அவர் தங்கை மதிலேனே ஆங்கிலத்தை மொழிபெயர்த்துச் சொல்வது. அவள் அண்ணனுக்கு வலதுகைபோலுதவினாள். மதிலேன் தோழி யொருத்தி ரோலானுக்குக் காரியதரிசியாயிருந்து அரிய பணிசெய்தாள். முதிய ரோலான் அவளை மனைவியாகக்கொண்டு தம் செல்வமெல்லாம் அவள் பெயருக்கே எழுதிவைத்தார்.

### ரோலான் நட்பு

சில ஆண்டுகளுக்குமுன் ஜினிவா (Geneve) ஸர்வதேச சங்கத்திலிருந்து எனது நண்பர் ழூான் ஹெர்பர்டு (Jean Herbert) இங்கே வந்திருந்தார். நான் அவருடன் ராஸீன நாடகங்கள் படித்தேன். எனது பிரெஞ்சுக் கவிதைகளை அவர் மெச்சினார். அவர் என்னைப்பற்றி ரோமான் ரோலானுக்கு எழுதி அறிமுகப்படுத்தினார். அதுமுதல் ரோமான் ரோலானுக்கும் எனக்கும் கடிதப் போக்குவரத்து நடந்தது. அவருக்கு எனது பிரெஞ்சுக் கவிகளையும் ஆங்கில நூல்களையும் அனுப்பினேன். தமிழ் நாட்டில் உதித்த அருட் பெரியார்களைப்பற்றி எழுதினேன். "மஹாத்மா ராமலிங்கம்"

என்னும் எனது ஆங்கில நூலை அவர் போற்றினர். அவர் மிகவும் நன்றி பாராட்டி எனக்கொரு கடிதம் எழுதினர்: அவருக்கு நான் எழுதிய பதிலில் "நண்பர் மூான் ஹெர்பர்ட் மூலம் தங்கள் நட்புக் கிடைத்தது; பெரு மகிழ்வு! கலை விரிவும் லௌகிக சக்தியும் பெற்ற ஐரோப்பிய ருக்கு ஆத்மஞானச்சுடரான பாரததே சத்தைத் தாங்கள் அறிமுகப்படுத்தினீர் கள். எங்கள் மகாத்மாவிற்கு ஓர் இலக் கியக் கோயில் கட்டினீர்கள். தாங்கள் பெரிய புலவர்; அறிவாளர்; விசால ஹ்ரு தயர். மனித சமுதாய ஒற்றுமைக்கும், அன்பிற்கும், உரிமைக்கும், சமரஸத்திற் கும் பாடுபடும் உத்தமர். சகோதரனைச் சகோதரன் சுட்டு, வெட்டி வீழ்த்தும் படு கொலைக்களத்திலிருந்து மனிதரைக் கரை யேற்ற முயன்ற தீரர்.........தங்கள் வர லாற்றை நான் எழுதி வெளியிடப்போகி றேன். எனது நாட்டினர் தங்கள் உள் ளத்தை அறியவேண்டும்."—என்று குறிப் பிட்டேன். ரோமா ரோலான் எனக்கு எழுதிய முதற் கடிதத்தை மட்டும் கீழே மொழிபெயர்த்துத் தருகிறேன்.

வில்நேவ் (Ville Neuve),
ஸ்விட்ஜர்லாந்து (Switzerland)
20—5—1937

"அன்புள்ள சுவாமி சுத்தானந்த பாரதிகளுக்கு,

தங்கள் கடிதத்தை மிகவும் சந்தோஷத் துடன் படித்தேன். நான் பல வேலைகளில் ஈடுபட்டிருந்ததால், உடனே பதிலெழுத இயலவில்லை; வருந்தற்க.

தங்கள் கடிதமும், அதில் அடங்கிய உயர்ந்த நோக்கமும், அன்பும் எனது இதயத்தைத் தொட்டு உருக்கின. தங்கள் நூல்களை நான் மிகவும் கருத்துடன் படித் துப் பயன்பெற்றேன். தங்கள் பிரெஞ்சுப் பாடல்கள் உருக்கமாயிருக்கின்றன. தாங் கள் கேட்கும் எந்தக் கேள்விக்கும் மகிழ் வுடன் பதில் எழுத நான் தயார். தாங் கள் உலகப் பெரியாரான ஸ்ரீ அரவிந்தர் திருவடி யில் வசிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறீர் கள்...... தங்களைப்பற்றி அறிந்தது, எனக்குச் சந்தோஷமளிக்கிறது! உலக சமாதானத்திற்காக நாமெல்லாம் உள் ளத்தில் ஒருமைப்பட்டுழைப்போம்.

தங்கள் அன்புள்ள,
ரோமான் ரோலான்"

*1939*-ல் அவரிடமிருந்து வந்த கடிதத் தில் "ஐரோப்பா கொதித்துக்கொண் டிருக்கிறது; எரிமலை குமுறுகிறது; என்ன அக்னிபிரளயம் வருமோ; மனித சமுதா யம் மறுபடி இரத்தவெள்ளத்தில் தத் தளிக்குமோ......" என்றெழுதினர். போர் குமுறியெழுந்தது; அவர் "அமைதி அமைதி" என்று அலறினர். நாஜி ஹிட் லர் இருக்குமட்டும் அமைதியேது; வார்ஸா பிடிபட்டு நாஜிப்படைகள் உலாந்தாவை நோக்கியதும் ரோமா ரோலான் ஸ்விட் ஸர்லாந்திற்குப் போய்விட்டார்.

ஒருநாள் திடீரென்று அவர் இறந்த செய்திவந்தது; பிறகு அது பொய் என்ற னர்; மறுபடியும் அவர் இறந்த செய்தி உறுதியானது. இறந்த காரணம் பலர் பலவிதமாகச் சொல்லுவர். போர் வெறி யால் சுற்றிலும் நடந்த இரத்தக் கொடு மைகளையும் கொலைக் கூத்துக்களையும் சகிக்காமல் அவர் மெல்லிய முதிய உள் ளம் தளர்ந்து வெடித்தே உயிர்விட்டிருப் பார் என்பது உறுதி. ரோலான் அவ் வளவு இரக்கமுள்ள கருணையாளர்.


## இழந்த சக்தி

மூல சக்தியை இழந்து தாம்பத்ய வாழ்க்கையை அனுபவிக்க முடிய வில்லையா? அப்படியானல்—

ஜாய் கெமிகல் ஒர்க்ஸ்
தயாரிக்கும்

## ரெஜுவெண்டாவை

இன்றே உபயோகியுங்கள்

3 மணி நேரத்தில் நல்ல பலன் அளிக் கும். புத்துயிர், ஊக்கம், வலிமை வரும். ஸ்திரீகளின் போக வெறுப்பை நீக் கும்.

பாட்டில் ஒன்றுக்கு ரூ. 2—8—0
டஜன் பாட்டில்கள் ரூ. 27—0—0

வினியோகிப்பவர்:—
டாக்டர் R. மோஹலநோவிஸ்,
போஸ்ட் பாக்ஸ் நெ. 10013. கல்கத்தா.

குறிப்பு:—நம்பத்தகுந்த ஹோமியோபதி பயோ கெமிக் மருந்துகள் டிராம் ஒன்றுக்கு ரூ. 0—3—6 வீதம் ஷெ விலாசத்தி கிடைக்கும்.

# பட்டகுடி

டாக்டர் வே. ராகவன்

“புதிசா தமிழ் படம் வந்துருக்காமே, ராமதாஸ்னு, இன்னிக்கிவேணு போவோமா?” ராமலக்ஷ்மணனைக் கண்ட பிறகு நவாப் நடிப்பது ரொம்ப நன்னுயிருக்குங்கரா!” என்ருள் மனைவி சுந்தரம்.

பதிலில்லை.

“ஸபைக்குவேணு போலாம்;......பாடரா, அவனை நான் கேட்டதே இல்லை.” பதிலே இல்லை.

“என்ன வேலை வேண்டிருக்கு? ஒரு ஞாயித்துக்கிழமைகூட ஓச்சல் ஒழிவு இல்லை. நித்யம் 7 இல்ல, 8 இல்ல, இந்தக் கட்டுகளைக் கட்டிண்டு ஆபீஸுலே மாரடிக்கரது போராதா, இன்னிக்கிக்கூடவா இதை ஆத்துக்குக்கூட கொண்டுவந்தூடனும்” என்று மிகவும் அலுத்துக்கொண்டு தன் கணவனைப் பார்த்து இடித்தாள் சுந்தரம்.

சென்னை ‘ஸெக்ரிடேரியட்’டில் குமாஸ்தாவான குமாரஸ்வாமிக்கு வயது 35 இருக்கும்; வேலையில் புகுந்து இரண்டொரு ஆபீஸ் பரீக்ஷைகளையும் தேறி அவன் தற்போது சம்பள ஏணியில் முக்கிமுக்கி எட்டிப் பிடித்திருந்த எண் 120. காலையில் ஒரு ‘கப்’ காபியானதும் மார்க்கட், டாக்டர், சொட்டுக் குழாயடியில் தண்ணி ரொம்பி ஸ்னனம். இவைகளாகி 10 மணிக்குள் சாப்பிட்டு, ‘தர்மாஸ் பிளாஸ்க்’ காபி முன் தொங்கிக்கொண்டும், பின் ‘ஆபீஸ் பைல்கள்’ கட்டப்பட்டுமிருக்கும். ஸைகிளில் ஆபீஸ் போனல், இரவு 7, 8-க்குத்தான் திரும்பி வரவு. வந்தால் சந்தி, சாப்பாடு சற்று நண்பர் வந்தால் ஆபீஸ் தகராறுகளைப்பற்றிப் பேச்சு; பேச்சிற்கு நடுவிலேயே கொட்டாவி வந்துவிடும். குமாரஸ்வாமி ஒண்டிக்குடியாய் இருந்துவந்த திருவல்லிக்கேணி சந்துவீட்டைப் பொந்து என்றே சொல்லவேண்டும்; இப்பொந்தின் ஒரு பாகத்தில் இவன், இவன் மனைவி, கல்யாணத்திற்கு இருக்கும் பெண், படிக்கும் பிள்ளை, கைக்குழந்தை—இவ்வளவு ஜீவன்கள் புழுங்கவேண்டும், புழுங்கவேண்டும். சற்று ஓய்விருந்த அந்த ஞாயிற்றுக்கிழமை குமாரஸ்வாமி சற்று உறங்கிவிட்டு, பிற்பகல் காபியைப் பருகிவிட்டு, ஏதோ கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தான்; மனைவி குத்திக்காட்டிய ஆபீஸ் பைல்களைத் தொடவில்லை; ஸொந்த வ்யவஹாரத்தையே கவனித்துக்கொண்டிருந்தான். பல வருஷங்களாகவே அவனுக்கு வரவு செலவைச் சரிவர ஸமாளிக்க முடியாதபடி மிகவும் நெருக்கடியாகவே இருந்துவருகிறது. ஸ்நேகிதரிடம் கைமாற்று, ஆபீஸ் ஸொஸைட்டிகளில் கடன், பாங்குகளில் நகைக் கடன்கள், சிறிய கடனையடைக்கப் பெரிய கடன்—இப்படிப் பெரும் சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டிருந்தான்.

“நன்னு இருக்குடி, இருக்கர நெலை தெரியாம ஸினிமா போலாமா பாட்டுக் கச்சேரிக்குப் போலாமா இங்கரே” என்ருன் கடைசியாய் குமாரஸ்வாமி மனைவி சுந்தரத்தைப் பார்த்து.

“நமக்குத்தான் வெடியர காலம்னு ஒண்ணு இருந்தாத்தானே? அலை ஓஞ்சு ஸ்னனம் பண்ணப்போரோமா? ஏதோ கொஞ்ச நாழியாவது கஷ்டத்தை மரந்துட்டு இருக்கலாமேனுதான் சொன்னேன்; வாராவாரம் சொல்ரேணு என்ன?”

“ஸரி வா! இன்னிக்கு பீச்சுக்குப்போகலாம். பீச்சுலே ஒரு ஸ்நேகிதன் நம் ஜானகிக்கு 2, 3, ஜாதகம் கொண்டுவந்து கொடுக்கரேன்னு சொல்லியிருக்கான். வர தையிலாவது பண்ணிவிடனும்.”

“ஜாதகம் பாக்கலாம், பணத்துக்கு மொதல்லே வழிபாருங்கோ” என்று சொல்லிக்கொண்டே ஒரு நொடியில் சுந்தரம் பீச்சுக்குத் தயாராளுள்.

பைக்ராப்ட்ஸ் ரோட் நதிவழியாய் பீச் மணலில் மனிதவெள்ளம் வந்து விழுந்துகொண்டே இருந்தது. ரேடியோக் குழாயைத்தாண்டி, ஜலக்கரைக்குப் போய் கட்டமரம் ஒன்றில் சாய்ந்தான் குமாரஸ்வாமி. கைக்குட்டையில் ஒரு அணுவுக்கு நிலக்கடலையை வாங்கிப்போட்டு எல்லோருமாய்க் கொரித்தார்கள். ‘இந்தா’ என்று ஜாதகங்களை நீட்டிக்கொண்டு குமாரஸ்வாமியின் நெருங்கிய நண்பர் ராஜமய்யர்

வந்துசேர்ந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் பணத்திற்கு என்னசெய்வதென்ற பேச்சு எழுந்தது.

* * *

குமாரஸ்வாமிக்குத் தஞ்சையில் பட்டகுடி என்ற கிராமம். அவன் தந்தை வைதிகராயிருந்தார்; பாட்டனார் வெகு அழகாய் ராமாயணம் ப்ரவசனம் செய்துவந்தார்; கொள்பாட்டனார் சாஸ்த்ர வித்வானாய், புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் பரீக்ஷாதிகாரியாயிருந்து சில தானமானங்களைப் பெற்றிருந்தார். சாஸ்த்ரிகளுக்குத் தம் பிள்ளை புதுப்படிப்பு படித்து உத்யோகம் செய்யவேண்டுமென்ற ஆசை. பையன் பி. ஏ. ஆக, குடும்பத்திற்கு இருந்த சிறு நிலபலம்முழுதும் விற்கவேண்டியதாயிற்று. படிக்கும்போதே நல்ல எதிர் ஜாமீன் வாங்கிப் பிள்ளைக்குக் கல்யாணத்தைச் செய்துவைத்தார். பட்டிணத்தில் அவனுக்கு வேலையானதும் சாஸ்த்ரிகள் கிராமத்தையும் உபாத்யாயத்தையும் விட்டுவிட்டு, குழந்தைகளுடன் இருக்க ஆசைப்பட்டு சென்னையோடு வந்தார். வந்தவருக்கு ஒன்றிற்குப்பின் ஒன்றாய் நோய்கள் வந்து கையில் இருந்த ரொக்கம் கரையும்மட்டும் இருந்துவிட்டுப் பரலோகம் போய்ச்சேர்ந்தார். ஊரில் அக்ரஹாரத்திற்கு நடுவே சாஸ்த்ரிகள் வீடு என்ற ஒரு சொத்து மட்டும் இருந்தது. அதில் குமாரஸ்வாமியின் தூரபந்து ஒருவன் இருந்துவந்தான். அவனுக்குக் கடிதம் எழுதி வரவழைத்து பணத்திற்கு யோஜனை செய்வதாய்த் தீர்மானித்தான் குமாரஸ்வாமி.

* * *

அக்கம்பக்கத்தில் 'பட்ட குடியாவது, படாதகுடியாவது' என்பார்கள் ஜனங்கள். புட்டகுடி என்ற பெயரின் பொருள் மறந்துபோயிற்று. சோழவரசர் தம் காலத்தில் 'பட்ட விருத்தி' என்று சாஸ்த்திரம் படித்த பட்டர்கள், அதாவது வித்வான்கள் இருப்பதற்காக மான்யம் வழங்கிவந்தார்கள். அப்படி பட்டர்கள் குடியேறிய கிராமம் அது. அக்ரஹாரம், கோடியில் ஆறு, அரசமரம் மடம், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸந்நிதி; ஸ்னானம், அனுஷ்டானம், வேதகோஷம், சாஸ்த்ர வாக்யார்த்தம், ஆலயதரிசனம்—இப்படி இருந்த இடம். குடியானத்தெருவையும் சேரியையும் தாண்டி மூன்று மைல்களுக்கு அப்பால் ரஸ்தாவில் பாளயம் என்ற கிராமம் ஒன்று. முன் மகம்மதிய கலாபத்தின் போது அதன்வழியாய் துருஷ்கப் படையொன்று போகும்போது அங்கிருந்த வெள்ளாளக் குடும்பங்கள் அவ்வளவும் கத்திக்கு பயந்து, தலையைக் கொடுப்பதற்குப் பதில் தலைமயிரைமட்டும் கொடுத்துப் பிழைத்தனர். ஆங்கில ஸாம்ராஜ்ய காலத்திலிருந்தே பட்டகுடி அக்ரஹாரம் க்ஷீணிக்க ஆரம்பித்தது. பழம் சிரத்தைகளும், தூயதான தொல்வழிகளும் நழுவிவந்தன. வெத்திலை புகையிலைபோட்டு, திண்ணையில் உட்கார்ந்து வம்பளக்கும் வெட்டிகள் அதிகரித்தனர். அச்சிறு அக்ரஹாரத்தில் மூலையில் ஒரு காபிக்கடையும் தோன்றிவிட்டது. சிலர் பக்கத்துக் கிராம மிராசுகளில் குமாஸ்தாக்களாகவும், சிலர் தஞ்சை முதலிய நகரங்களுக்குச்சென்று பற்பல சில்லறை அலுவல்களிலும் சம்பளவேலை ஏற்றனர். பாளயத்தில் இஸ்லாமானவர்களில் சிலர் கண்ணாடி, குடை, விளக்கு முதலிய புதுப் பண்டங்களின் கடைகள் வைத்திருந்தனர்; அவரிடமும் சில பட்டகுடி ப்ராம்மணப் பிள்ளைகள் கணக்குப் பிள்ளைகளானார்கள். பட்டகுடி பட்டுக்கொண்டுவர, பாளயம் வலுத்துக்கொண்டு வந்தது. நாம் பேசிவரும் காலத்தில் பட்டகுடியில் படிப்பிலும் பொதுநலத்திலும் பெரிய நோக்கத்திலும் ஈடுபட்டவர் என்று சொல்ல ஒரே ஒருவன்தான் இருந்தான். அவன்தான் நம் குமாரஸ்வாமியின் வீட்டில் வசித்துவரும் அவன் பந்துவான கௌண்டின்ய சர்மா. தன் கோத்ர ரிஷியின் பெயரையே தனக்கு வைத்துக்கொண்டதிலிருந்து அவன் மனப்பாங்கையும், பண்டைரத்தத்தில் ஊறியிருந்த அவனுடைய உள்ளத்தையும் ஊஹித்துக்கொள்ளலாம்.

ஆற்றங்கரையில் சவுக்கண்டி ஒன்று போட்டுக்கொண்டு அதில் பள்ளிக்கூடம் ஒன்றை அவன் நடத்திவந்தான். பாடம் நடத்திக்கொண்டிருக்கும்போது அவனுக்குக் கடிதம் ஒன்று வந்தது. எழுத்திலிருந்து பட்டிணத்திலிருந்து குமாரஸ்வாமி எழுதிய கடிதம் என்று தெரிந்துகொண்டு, உடைத்துப்பார்த்தான். உடனே மாணாக்கர்களை "வீட்டிற்கோ, விளையாட்டிற்கோ போங்கடா" என்று கலைத்துவிட்டு, யோஜனையில் ஆழ்ந்தான்; "ஆகா! அப்பொழுதே இந்த நிலை வரும் என்று எனக்குத்தெரியும். அப்பா காலமானதும், பரணிலிருந்த ஸம்ஸ்கிருதச் சுவடிகளை யெல்லாம் அனுப்பச் சொல்லி, அதைச் சுவடி சேகரிக்கும் ஜெர்மன் ப்ரொபஸரொருவருக்கு ரூ. 200க்கு விற்றானே, அப்பொழுதே எனக்குத் தெரியும். நான் ஸரஸ்வதிபூஜை யன்று பூஜைசெய்வேன்; அச்சுவடிகள் போனதே

ஒரு குறிபோலாயிற்றே இந்த மிச்சமிருக்கும் வீடும் போக! ஸரி, இன்றே சென்னை சென்று அவனுடன் பேசித் தடுக்கவேண்டும்.''

* * *

திருவல்லிக்கேணி சந்துத்தெருவில் நுழையவே பிடிக்கவில்லை. கௌண்டின்ய சர்மாவுக்கு; தன் கிராமத்து சவுக்கண்டியை நினைத்தான். சொட்டுக் குழாயடிக்குப் போனான், ஆற்றங்கரை நினைவு வந்தது. சாப்பாடானதும் குமாரஸ்வாமியிடம் சொன்னான்:

"இதோ பார், குமாரஸ்வாமி! நான் ஏதோ நடக்காத காரியத்தைப் பேசத்தரேன்னு சொல்லாதே! இதென்ன பட்டண வாஸம், ஸஹிக்க வில்லயே! ஸம்பாதிச்சும் கட்டிவரல்லே, சுகமுமில்லே; சிவனேனு ஊரோட வந்துடு; நான் ஒன் காலக்ஷேபத்துக்கு அழகா ஏற்பாடு பண்ரேன் பாரேன்.''

சர்மா! இதெல்லாம் நடக்கர காரியமா? இப்ப ஆகவேண்டிய காரியத்தைச்சொல்லு. எனக்கு நாளத்தை பொறந்தா குட்டிக்குக் கல்யாணம் பண்ணனம். பையன் அனேகமா நிச்சமாயிடுத்துனே சொல்லலாம். ஊர்லே வீட்ட வச்சுண்டு நான் என்ன பண்ரது? அதை வித்துத்தான் ஆகனும்'' என்றான் குமாரஸ்வாமி.

''அவஸரப்படாதே; பட்டணத்துக்கு வந்துட்டதுனலே கிராமாந்தர நிலைமையே ஒனக்குத் தெரியல்லே. அக்ரஹாரத்துக்கு நடுப்பர ஒத்தை வீட்டை யார் வாங்க வருவா? நமக்குள்ள வாங்கக்கூடிய பணக்காரனே இல்லே; பிள்ளை மார்களோ, முதலியார்களோ இதை வாங்க முன்வர மாட்டார்கள்.''

''சர்மா! இதோ பார், நம்பூர் நடராஜன் எழுதியிருக்கிருன்'' என்று திடீரென கௌண்டின்ய சர்மாவிடம் குமாரஸ்வாமி கடிதமொன்றை நீட்டினுன்.

கடிதத்தைப் படித்ததும் சர்மாவின் கண்கள் சிவந்தன. ''இது நடக்காது'' என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொன்னுன். ''நடந்தாக வேண்டும்'' என்றான் குமாரஸ்வாமி. ''நடராஜன், மானங்கெட்ட பயல், கோடாலிக் காம்பு'' என்று வெய்தான் சர்மா.

சென்னையில் கடன்பட்டு, பெண் கல்யாணச் செலவுக்கு பணமுடையாய் இருக்


ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்
புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.
(மலைவாசல் உள்மண்டபம்)
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.—உயர்ந்த பனரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

கிறான் தங்கள் ஊர் குமாரஸ்வாமி என்று தெரிந்துகொண்டு, நடராஜன் என்ற பட்டகுடி அஸாமி ஒருவன் சர்மாவுக்குத் தெரியாமல் குமாரஸ்வாமிக்குக் கடிதம் எழுதினான். நடராஜன் பாளயத்தில் 'ஷாப்' வைத்திருக்கும் பிரபல முகம்மதிய ப்ரபுவிடம் காரியக்காரன். தனக்கு நடுவிலே ஒரு ஆயிரத்தைத் தரகாய் வைத்து, ஒருவரிடமும் கிடைக்கக் கூடாத பெரு விலைக்குத் தன் முதலாளி ராவுத்தருக்கு அக்ரஹாரத்திலுள்ள குமாரஸ்வாமி வீட்டை வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டான். நடராஜன் ஊரில் நடத்தைப் பிசகானவன்; சர்மாவின் பெரு நோக்கிற்கும், பொதுநல ஈடுபாட்டிற்கும் நேர் எதிரி; கக்ஷிகளைக் கிளப்பி ஊரை இரண்டு பண்ணி வருபவன். குமாரஸ்வாமியின் வீட்டைத் தன் முதலாளிக்கு விலையாக்கிவிட்டால், சர்மாவை உட்கார இடமற்றவனாய் அடித்து, தான் அவ்வீட்டில் புகுந்து கொள்ளலாம் என்றெல்லாம் நடராஜனுக்கு உத்தேசம். நடராஜனின் கெட்ட நடத்தையையும், நாணயமற்ற நடவடிக்கைகளையும் சர்மா குமாரஸ்வாமியிடம் சொல்லிப் பயனில்லை. துக்கம் சர்மாவின் தொண்டையை அடைத்தது; சொன்னான்.

"குமாரஸ்வாமி! நாம் கௌண்டின்ய கோத்திரம், மரந்துடாதே. நம் முன்னோர்களில் ஒரு கௌண்டின்யன் தென் இந்தியாவிலிருந்துபோய், கம்புஜ தேசம் என்ற கம்போடியாவில் குடியேறி, நம் வம்சத்தையும், நாகரிகத்தையும், கலையையும் அங்கு பரவச் செய்து, அதையும் விசால பாரதத்தின் ஒரு பாகமாய்ச் செய்தான். அந்தப் புது நிலம் வென்ற குடியில் தோன்றி, இருக்கும் இடத்தையும் பறிகொடுக்கிறாயே!"

"சர்மா, ஒன் 'ஹிஸ்டரி' எல்லாம் என் பெண்ணுக்குக் கல்யாணஞ் செய்துவைக்காது" என்றான் குமாரஸ்வாமி.

"கல்யாணம் என்பது நம் மக்கள் பெருகுவதற்கான உபாயம். நீயோ நம் குலம், நம் மதம், நம் நிலம் என்று ஒரு பற்றுமில்லாதவனாய் இருக்கிறாயே!" என்றான் சர்மா.

எல்லாவற்றையும் 'ஸரி, ஸரி' என்று ஒரே உதறல் உதறித்தள்ளினான் குமாரஸ்வாமி......பட்டகுடி, அக்ரஹாரம், வீடு—எல்லாவற்றையும் அதே உதறிலிலேயே உதறித்தள்ளினான். குடும்பத்திலிருக்கும் பழங்கிழவியொருத்தியை உதைத்தெறிந்தால் எப்படியிருக்கும், அப்படித் தோன்றிற்று சர்மாவின் பரந்த மனதிற்கு.

பாளயத்து ராவுத்தருக்கு அவ்வீடு விற்கப்பட்டது ஒரு புளவிபோல் இருபுறமும் பரவிற்று. நடராஜனின் நடத்தைகள் பிடிக்காமல் அவ்வீட்டிலிருந்தும் தம் வேலையிலிருந்தும் நடராஜனை விரட்டிவிட்டு, ராவுத்தர் தம் விலையுயர்ந்த ஷாப்பு சாமான்களுக்கு உக்ராணமாய் வைத்தார் அவ்வீட்டை. அதற்குக் காவலாட்களாக இரண்டு சாயப்புமார்களையும் வைத்தார். ஐந்தே வருஷத்தில் பட்டகுடி பட்டே போயிற்று. நல்லவிலை கிடைக்கிறதென்று வெள்ளத்தில் மணல்முட்டு சரிந்து விழுவது போல், ராவுத்தரின் பணவீச்சில் நஞ்சை புஞ்சைகளுடன் அக்ரஹார மனைகள் ஒன்றொன்றாய் விழுந்தன. கோடியில் அரசமரத்தடி, கோயில், மடம் இவைகளுக்கு முன் ஒருபெருஞ் சுவரும் பல அடர்ந்தமரங்களும் எழுப்பப்பட்டு, அம்மூலை மட்டும் ஒதுக்கப்பட்டது. அக்கரையிலிருந்து ஒரு குருக்கள் வெள்ளமில்லாக் காலங்களில் மட்டும் தம் அக்கரையைக் காண்பித்து, தக்ஷிணாமூர்த்திக்கு இரண்டு சொம்பு ஜலத்தைவிட்டு, மணியை அடித்து, நைவேத்யத்தைக் காட்டிவிட்டுப் போவார்.

ராவுத்தரவர்கள் கிராமத்தை முன்னுக்குக் கொண்டுவந்தார். அக்கரைச் சீமையில் அவர் மைந்தன் வர்த்தகம் செய்துவிட்டுத் திரும்பி வந்திருந்தான். செலவைத் தாராளமாகச்செய்து, புதிய மிஷின் வசதிகளை ஏற்படுத்தி, கம்பெனி எருக்களைக் கொட்டி, கோடையில் கொடிக்காலுக்காக ஊற்றுக்கால் எடுத்து, மாற்றுப்பயிர், கரும்பு முதலிய சாகுபடி செய்தார். அக்ரஹாரத்தில் நுழைந்ததிலிருந்து அவருக்கு நல்ல அதிர்ஷ்டமானதால், குமாரஸ்வாமி வீட்டைத் தம் அதிர்ஷ்டத்திற்கு மூலமாய் எண்ணி, அதையே தம் தனித்த இருப்பிடமாய் ஜோடித்துக் கொண்டார்.

* * *

ராவுத்தரவர்களின் காலமாயிற்று. அவர் மைந்தர் காலத்திலும் ஊரின் உழவும் குடும்பத்தில் வர்த்தகமும் வளர்ந்தன. பெரும்பண்ணை ராவுத்தர் என்று அப்பக்கத்திலேயே மகம்மதியருக்கிடையே பெரிய மனிதராய்க் கருதப்பட்டார். பண்ணையில் கடன் பட்டு, சாயப்புமார்களுக்கிடையே உழைத்து, வேறு போக்கிடமில்லாப் பல ஏழைப் படையாச்சிகள் நாளடைவில் தாமும் முக்காலே மூணுவாசி மகம்மதியராகவே ஆனார்கள். இருந்த சந்தேகத்தையும் 'ஸென்ஸஸ்' சரிப்படுத்தி விட்டது. வீட்டு வேலையிலிருக்கும் பல தாழ்ந்த பெண்

கள் மூலமும் பல அனாதைக் குழந்தைகள் பிறந்து மகம்மதிய குடும்பங்களோடு வளர்ந்து வந்தன.

* * *

கௌண்டின்ய சர்மாமட்டும் விழித்த கண்களுடன் காலப் போக்கையும் புரண்டுவந்த மாறுதல்களையும் பார்த்துப் பதைத்து, யோஜனை செய்துகொண்டு இருந்தார். ராவுத்தரால் விலக்கப்பட்ட நடராஜன் வாழ்க்கை கெட்டு, கடன்பட்டுத் தவித்துக் கொண்டிருப்பதைத் தெரிந்து, சர்மா தமக்குத்தம் ஊரில் காலூன்ற ஓரிடம் இல்லாமல் போகக் கூடாதென்ற திட உறுதியுடன், நடராஜனுக்கு ஊருக்கு எல்லையில் இருந்த தோப்பொன்றைப் பணம் கொடுத்து வாங்கினார். அதில் தென்னை, மா முதலியவற்றைச் செழிக்கச் செய்து, அதற்குக் கௌண்டின்யாச்ரமம் என்ற பெயரை வைத்து வசித்துவந்தார். தக்ஷிணாமூர்த்தி கோயிலுக்கு வந்து பூஜை காட்டிவிட்டுப் போகும் குருக்களையும் தம் ஆச்ரமத்திற்குள் சேர்த்துக் கொண்டார். சுமார் முப்பது ஏழைக்குடியானவர் குடும்பங்கள் கொஞ்சங் கொஞ்சமாய், சர்மாவைச்சுற்றிப் பலகைத்தொழில்கள் கற்பிக்கப்பட்டு வாழ ஆரம்பித்தன. இடிக்க முடியாத பழங்கோயில் சுவர்போல், சர்மாவும், ஆச்ரமமும், அம்முப்பது குடிகளும் ஒற்றுமைப் பலத்தால் நின்றனர்.

* * *

பெரிய ராவுத்தரின் மைந்தர் குழந்தையில்லாமல் காலமானார். பெரிய ராவுத்தருக்கிருந்த ஒரேபெண்ணை, பாளயத்தில் 'புது ராவுத்தர்' என்ற குடும்பத்தில் கொடுத்திருந்தது. பட்டகுடிப் பண்ணை மாப்பிள்ளை ராவுத்தரை அடைந்தது. மிகவும் ஸாத்வீகமான போக்கு மாப்பிள்ளை. பாளயத்தில் தம் பங்களாவிலிருந்தபடியே பட்டகுடியைக் கவனித்துவந்தார். இது ஒரு வழியில் கார்வார் சாயப்புவுக்குத் தன் யதேச்ச வியவஹார, அதிகாரங்களுக்கு அனுகூலமாகவே இருந்ததால், மாப்பிள்ளையைப் பட்டகுடி பங்களாவுக்கு வரவேண்டுமென்று நிர்ப்பந்திக்கவில்லை.

சர்மாவிடம் கார்வார் சாயப்புவுக்குக் காரம்; ஆச்ரமத்தில் நெசவு செய்த கைலிகளை விற்க, பட்டகுடிக்குள் வரக்கூடாதென்று உத்தரவு போட்டான். ஒரு அலக்ஷ்யம்; "இவன் யாரு? எலும்பும் உடலுமா, இக்குனூண்டு? நாலு ஆளைச் சேத்துண்டா, ஆச்ரமம்னு......" என்பான். ஒரு அந்திப் போதில், மரக் கிளைகளுக்கிடையே சாயும் சூரியனின் மஞ்சள் பொன்னொளி விழுந்து கொண்டிருக்கும் நேரத்தில், ஒரு மரத்தடி மேடையில் உட்கார்ந்து, சர்மா தம் ஆச்ரம வாஸிகளுக்கு உபன்யாஸஞ் செய்துகொண்டிருந்தார். கார்வாரின் ஆட்களில் சிலர் வரப்போடு போய்க்கொண்டிருந்தவர்கள், விறைப்பினால் திடீரென ஆச்ரமத்தினுட் புகுந்து தடியடி செய்து, பலரைக் காயப் படுத்திவிட்டு ஓடிப்போனார்கள். அது வரையில் சர்மா மாப்பிள்ளை ராவுத்தரைப் பார்த்ததில்லை; அன்று காயம்பட்ட தம் குடிகளுடன், பஜனை செய்துகொண்டு, மாப்பிள்ளையிடம் வந்து முறையிட்டுக்கொண்டார். அடிபட்டவரின் காயங்களைக் கண்டு மாப்பிள்ளையின் மனம் இளகிற்று. "சர்மா, நீர் போம்; இதே நீர் முதல் முதல் என்னிடம் வந்தது; உம் முறையை நான் தள்ள முடியாது; விசாரித்துத் தக்க ஈடு செய்கிறேன்" என்றார்.

மறுநாள் முற்பகலில் கார்வாரை வரவழைத்து, விசாரணையை முடித்து, கார்வாரைக் கண்டித்துவிட்டு, மாலையில் கால்நடையாய், கௌண்டின்யாச்ரமத்திற்குத் தாம் வருவதாய்த் தகவல் அனுப்பினார். மாலையில் கௌண்டின்யாச்ரமம் மாலையும் தோரணமுமாயிருந்தது. சிறு பிள்ளைகள் பெரும்பண்ணை மாப்பிள்ளை ராவுத்தர் வந்ததும் வரவேற்புப் பாடினார்கள். சர்மா ஆச்ரமத்தில் நூற்கப்பட்ட நூல் மாலையைப் போட்டார்; அங்கே நெசவு செய்த கைலி, தோப்புப் பழம், புஷ்பம்—இவற்றை ஒரு தட்டில் வைத்துப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மாப்பிள்ளையைச்சுற்றி அழைத்துப்போய் ஆச்ரமத்தில் தாம் நடத்திவரும் கிராம முன்னேற்றக் கைத்தொழில்களைக் காண்பித்தார்.

* * *

பட்டகுடி கார்வார் கொட்டமும் குலைப்பும் அடங்கிக்கொண்டு வந்தன. சர்மாவுக்கும் பண்ணை மாப்பிள்ளைக்கும் போக்குவரத்து அதிகமாயிற்று. கௌண்டின்யாச்ரமத்திற்குப் பண்ணையிலிருந்து நன்கொடைகள் கொடுக்கப்பட்டன. அந்தி வேளையில் மாப்பிள்ளை சிலநாள் ஆச்ரமத்திற்கு நடந்துவிட்டு வருவார். சர்மா ஆச்ரமத்தில் ஏழைகளுக்காக ஆயுர்வேத இலவச வைத்ய சாலையொன்றை மாப்பிள்ளையைத் திறந்துவைக்கச் செய்தார்.

சர்மாவே கார்வாராக ஆய்விடுவாரோ என்ற பயமும் கோபமும் பழங் கார்வார்

சாயப்புவுக்கு அடிக்கடி எழும்; ஒரே வீசு வீசி, முடித்துவிடலாமா என்ற பேய் எண்ணம் தோன்றியும், மாப்பிள்ளையின் கோபத்திற்குப் பயந்து தயங்கினன். சர்மாவுக்குப் பலம் ஒருவேளை இந்தக் கோவில்லே இருக்கும் சாமியாத்தானிருக்கும்'' என்று நினைத்தான். ஒருவருக்கும் தெரியாமல் ஓரிரவு தக்ஷிணாமூர்த்திஸந்நிதியைப்பாழாக்கி விடுவதெனத் தீர்மானித்தான்.

என்ன தைரியமாயிருந்தாலும் 'என்ன மோசாமி, பூதம்னு சொல்ராங்களே' என்று ஒரு அச்சம் உள்ளூற இருந்தது. கும்மிருட்டைப் பார்த்தால் யாரோ நிற்பதுபோல் தோன்றிற்று. கடப்பாறையும் கையுமாய் கோயிலடிக்கு வந்து, பாருங்கல் தரையில் கடப்பாறையை 'டங்' என்று வைத்து, உள்ளே போக அடி எடுத்து வைத்தவன் 'டங்' என்று கோபுரத்தின் வாசலில் பக்கச் சுவரில் செதுக்கி வைத்திருக்கும் பெரும் சிலை] யொன்றில் முட்டிக்கொண்டான். ஆஜானுபாகுவாய், முறுக்கிய மீசையுடன் கைகூப்பி அங்கு நின்ற அவ்வுருவத்தைக் கார்வார் நெருங்கிப்பார்த்துக் கையால் தொட்டான். உடனே உருவம் உயிர் பெற்று தன்னை வெறித்துநோக்குவதுபோல் பட்டது. கார்வாரின் அஸ்தியில் ஜ்வரம் கண்டது. ''நான் தாண்டா, இந்த கோபுரத்தைத் திருப்பணிசெய்த கதிர்வேலுப்பிள்ளை! கதிர்வேலுஎன்றால்அழும்குழந்தையும்வாய் மூடும் என்று பட்டகுடியில் சொல்வார்கள். என் குலத்தில் பிறந்து, கசாப்புக் கடைக்குப் போகிறவனுய் ஆய்விட்டாயே! கையில் கடப்பாறை, முப்பாட்டன் வேலைசெய்த கோயிலை இடிக்க வந்தூட்டான்! சீ.........'' என்று சொல்லித் தாளில் ஒரு அறைவிட்டாற்போல் இருந்தது. கடப்பாறை காலிலேயே விழ, கார்வார் ப்ரக்ஞையற்று, தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதியில் ஸாஷ்டாங்கமாய் விழுந்தான்.

கோபுரத் திருப்பணிப் பிள்ளையவர்களின் சிலையிலிருந்து எந்த நேரத்தில் பிள்ளையின் தோற்றம் எழுந்ததோ, அதே நேரத்தில் பாளயத்தில் தம் பங்களாவில் தூங்கும் மாப்பிள்ளை ராவுத்தருக்கும் கனவு ஏற்பட்டது. ''குழந்தாய்'' என்று ஒரு அந்தணமாது குங்குமமும் நெற்றியுமாய் அன்பு ததும்பும் குரலில் அழைத்தாள்; மாப்பிள்ளை விழித்து நோக்கினர்; ''குழந்தாய்! பட்டகுடி அக்ரஹாரத்திலே சாஸ்த்ரிகள் வீட்டிலே முத்தத்திலே துளஸிமடத்தினடியிலே ஒரு சிறு இரும்புப் பெட்டியில் பார்''—சிறிது நேரத்திற்கெல்லாம் அந்திப் பொன்னெளிபோல் மறைந்தது அத்தோற்றம். மாப்பிள்ளைக்கு ஒன்றும் விளங்கவே இல்லை. அந்தோற்றம் தமக்கு விடுத்த செய்தியை மந்திரம்போல் ஜபித்துக்கொண்டு, படுக்கையில் உறக்கமின்றி விடியும் வரையில் கிடந்தார். விடிந்ததும் வில்வண்டி யேறி, பட்டகுடி அக்ரஹாரத்திலுள்ள சாஸ்த்ரிகள் வீட்டிற்கு வந்தார்; வரும்போதே ஆளை அனுப்பிச் சர்மாவை வரச் சொன்னர்.

சர்மா வந்ததும் தம் கனவைத் தெரிவித்து விளக்கச் சொன்னர். ''ராவுத்தர்வாள்! நான் முன் இவ்வீட்டில் குமாரஸ்வாமியின் உறவு என்று வசித்துவந்த காலத்தில் எனக்கும் இத்தோற்றம் இரண்டொருதரம் தோன்றியிருக்கிறது; ஆனல் எனக்குச் செய்தி யொன்றும் சொன்னதில்லை; முத்தத்தில் துளஸிமடம் இருந்த இடம் எனக்குத் தெரியும்; கிழே வெட்டிப் பார்ப்போம்'' என்றார் சர்மா. ஆட்கள் வந்து வெட்டியதும், இரும்புப் பெட்டி யொன்று அகப்பட்டது. அதனுள் எழுத்தோலை ஒன்றும், மஞ்சள் நூலும் பொன்னுமாய்த் திருமங்கல்யம் ஒன்றும் கிடந்தன. ஓலையைச் சர்மா வாசித்தார்.

* * *

<u>ஊ</u>த்துக்காடு தாடிப் பஞ்சுவின் கதை சில கிழவர்கள் கேட்டிருக்கலாம். கிராமத்தில் நாடகத்தில் துலுக்க வேஷ ஹாஸ்யத்தை வெகு திறமையாய் நடித்து, பஞ்சு என்ற பிராம்மணன் பட்டகுடி அக்ரஹாரம் சாஸ்த்ரிகள் குடும்பத்தில் கல்யாணம் செய்துகொண்டிருந்தான். ஏதோ தசாபலக் கோளாறினல் அவன் திடீரென ஒருவருக்கும் தெரியாமல் ஊரைவிட்டு, வெளியே சுற்ற ஆரம்பித்து, தாடி வளர்த்துக்கொண்டு, காசி, பத்ரி முதலிய இடங்களில் திரிந்துவிட்டு, இருபது வருஷங்களுக்குப் பிறகு ஒருநாள் ஊத்துக்காட்டில் நுழைந்தான். தாடி பிராம்மணனுக நுழையக்கூடாதா? கிராம மண்ணை மிதித்ததும் நாடகம் நினைவுக்குவர, தான் முன்போட்ட துலுக்க வேஷத்தைப் போட்டுக்கொண்டு ஊராரைச் சிரிக்க வைக்கவேண்டுமென்று தன் வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு இடுப்பும் குடமுமாய் வெளியே வந்துகொண்டிருக்கும் தன் மனைவி கையைப் பிடித்து இழுத்தான். இடுப்பிலிருந்த குடத்தாலேயே மனைவி ஒரு நெத்து நெத்தினுள். மற்ற ஜனங்களும் கூடி நய்யப் புடைத்து, முதுகை அகற்றிவிட்டார்கள். உடனே வேஷத்தைக் கலைத்து, தான் பழம் துலுக்கவேஷப் பஞ்சு என்று வெளிப்படுத்தினன். அவன் பல வருஷங்கள் குடும்பத்தை நிராதரவாய் தவிக்கவிடடுத்

ஓடிப்போனதால் அனைவரும் அவனிடம் கோபம்கொண்டு திட்டினர். அவன் மனைவியோ இடையே நியமநிஷ்டைகளால் தனது மனதைத் தேற்றிக்கொண்டதுமல்லாமல், ஏதோ ஈச்வரானுக்ரஹத்தால் சில்லறைப் பீடைகளைப் போக்கும் மந்திர சக்தி முதலியவற்றைப் பெற்று, கௌரவமாயிருந்துவந்தாள். தாடிப் பஞ்சுவை மறுபடியும் வீட்டிற்கு அழைத்து இல்லறம் நடத்தக்கூடிய மனப்பாங்கை மீறிய வைராக்யத்தில் அவள் வேரூன்றியிருந்தாள். ஊரில் வெறுத்துத் தள்ளப்பட்ட பஞ்சு 'சீ' என்று பூணூலை அறுத்தெறிந்துவிட்டு, பேட்டை என்ற ஊரில் அஸல் துலுக்கனாகவே மாறி, இனி ஆடு கிழிப்பதில் பஞ்சு ராவுத்தருக்கு நிகரில்லை என்ற பெயர் வாங்கி, மிக ஈனமான கசாப்புத் தொழிலை ஆரம்பித்து அங்கேயே மணந்து, குழந்தை எடுத்து, நாளடைவில் பணக்காரனாகி மகம்மதியருக்குள் வெகு செலாவணியான மனுஷ்யனாக ஆய்விட்டான். அவன் வாரிஸில் வந்தவர்களே பாளயத்தில் புது ராவுத்தர் என்று வந்துகுடியேறிய சாயப்புமார்கள்; அவர்களுக்குப் பேட்டை சொத்துக்களும் இருந்துவந்தன.

"ஏன்ன! சர்மா! ஆச்சரியமாயிருக்கிறதே கதை!" என்றார் மாப்பிள்ளை.

"ஆம்! வாழ்க்கை கதையைவிட விநோதமாயிருக்கும் என்பார்கள்" என்றார் சர்மா.

மாப்பிள்ளை வியப்பில் ஆழ்ந்து மௌனமாயிருந்தார்.

"குழந்தாய் என்று உம்மை அழைத்த அந்த அம்மாளே தாடிப்பஞ்சுவின் பூர்வாச்ரம மனைவி; இந்த சாஸ்திரி வீட்டுப்பெண்; அவள் திருமங்கல்யமே இது."

"என் அன்னை! சர்மா, இத்திருமங்கல்யத்தைத் தாழ்த்தாய்ச் செய்துவரச் சொல்லும், நான் எப்போதும் போட்டுக்கொண்டிருக்கவேண்டும்" என்றார் மாப்பிள்ளை.

இப்படி மாப்பிள்ளையும் சர்மாவும் பேசிக்கொண்டிருக்கும்போது ஊர் கூடியிருந்தது. கூட்டத்தை வேகமாய் விலக்கிக்கொண்டு கௌண்டின்யாச்ரமத்திலிருந்து ஒரு ஆள் வந்தான். "என்ன தகவல்?" என்றார் சர்மா. வந்த ஆள் தெரிவித்தான்.

'கார்வார் ஆச்ரமத்திற்கு வந்திருக்கிறாரு. என்னமோ சில ரகசியங்கள்ளாம் சொல்லனுமா; அவருக்கு ஒடம்பு, மனசு, ஒன்னும் சொகப்படல்லயாம். நம்ப தச்சிணாமூர்த்தி கோயில்லே பூசை போடனமா........"


# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிடி ஆபீஸ்கள்:

சைனா பஜார், மாம்பலம், மயிலாப்பூர்,
— திருவல்லிக்கேணி, பெரியமேட் —

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்லா | கும்பகோணம் | சாலூர் | திருச்சிராப்பள்ளி |
| அனகாபள்ளி | மதுரை | சீயாழி | திலாறு (சிகாகோல்) |
| சிதம்பரம் | மருடேரு | தாடபள்ளிக்கூடம் | வேலூர் |
| சித்தூர் (கொச்சி) | பாலக்காடு | தஞ்சாவூர் | விஜயபுரம் (திருவாரூர்) |
| காஞ்சீவரம் | பார்வதிபுரம் | திருநெல்வேலி ஜங்ஷன் | விருதுநகர் |
| ஈரோடு | புதுக்கோட்டை | திருநெல்வேலி டவுன் | விஜயநகரம் |
| காரைக்குடி | | | |

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் நடத்தப்படும்.

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

# ஆடிப்பாவை

## ஒரு தமிழ்நாட்டுச் சுய சரிதை

("கையும் காலும் தூக்கத்தூக்கும் ஆடிப்பாவை போல......" குறுந்தொகை)

எம். அனந்தநாராயணன் I. C. S.

— 1 —

### க. பிறந்ததும் வளர்ந்ததும்

'நான் பிறந்ததைக் குறித்து அவ்வளவு நிச்சயமாகச் சொல்லமுடியாது' என்றொரு ஆங்கில தத்வ சாஸ்திர நிபுணர் கூறியிருக்கிறார். மெய்யாகவே இந்தச் சம்பவம் கேள்விமுறைதான், அனுபவ ஞானத்தில் கிடையாது. அநேகமாயில்லை என்று சொல்லவேண்டும். சிலருக்குக் கற்பனா சக்தி யதிகம். ப்ளேக் (Blake) என்ற ஆங்கிலக் கவிஞர் தாம் பிறந்ததைக் குறித்தே—

"அப்பன் அழ, என் அம்மை கதறிட
தப்புற விழுந்தேன் தவலய மீதில்
ஆர்வ மின்றலறி, அம்மண மூர்த்தியாய்க்
காரிருள் மூடிய கிராதனைப் போலும்"

என்று பாடுகிறார்.

நான் கவிஞனில்லை. அதுபற்றி என் பிறப்பை நினைவுலகில் ஓர் உருவமாகக் கண்டறியேன். வியவஹார ரீதியில் பிறந்தேனென்று நம்பிவிட்டேன். நான் பிறந்தது காவேரி தீரத்தில் 'இருபோக' வயல்கள் சிறந்த குன்றியூர் என்ற கிராமத்தில், ...............குன்றியூரில் உமாமஹேச்வரரென்ற சிவாலயம் விசேஷம். இது திருநாவுக்கரசு நாயனாரியற்றிய திருக்ஷேத்திரக் கோவையில் குறிக்கப் பெற்றது. வேணுகோபால ஸ்வாமியின் விஷ்ணு கோவிலும் ஒன்றுண்டு. பிரார்த்தனைகள் அநேகமாய் அங்கேதான் நிறைவேற்றப் படும்.

ஊரில் முக்கிய மிராசுதாரகளெல்லாரும் பிராமணர்கள் தான்; அதிலும் அநேகமாய்ப் பிரஹத்சரண வகுப்பைச் சேர்ந்தவர். அக்ரஹாரம் விசாலமாகவும் சிறப்பாகவும் இருக்கும். சில காலத்துக்கு முன் ஹரிகதா காலக்ஷேபம் செய்துகொண்டிருந்த வித்வான் ஒருவர் 'ப்ருஹத்சரணம்' என்ற தொடரை விரிவாய் விளக்கி, இதற்குப் பெரும்பயணமென்ற பொருளென்றும், இந்த வகுப்பினர் வட இந்தியாவிலிருந்து மிகப் புராதனத்தில் தென்னிந்திய சமபூமியில் பரவிய ஆரியரின் சந்ததியரா யிருக்கலாமென்றும் பிரசங்கித்தவுடன் எனக்கு ஓரளவு கர்வமாகத்தானிருந்தது. என் தகப்பனார் சீதாராமையர் என்பவர் கௌசிக கோத்திரம். பல வருஷம் தஞ்சாவூர் ஜில்லாவில் 'சப் மாஜிஸ்டிரேட்' வேலைபார்த்துவந்தார். பிறகு உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு தம் பூஸ்திமிகுந்த இந்தக் கிராமத்தில் ஒரு வீட்டையும் விலைக்கு வாங்கி, குன்றியூரில் குடி புகுந்தார். அவர் வேலைபார்த்துவந்த நாட்களில் மிகவும் சமர்த்தரென்றும் யோக்யரென்றும் பெயரெடுத்தார். ஆனால் அவருக்கு ஆட்களை மிரட்டவோ, வெளிவேஷம் போடவோ தெரியாது. இது பற்றியே அவர் தாஸில்தாராகவில்லையென்று சொல்லிக் கொள்வார்கள். என் சிறு வயதில் பலகாலம் அவர் தாம் தாஸில்தாராகாவிட்டாலும் 'கிரஹாம்' என்ற கலெக்டர் துரையிடம் வேலைபார்த்தது தம் மனதுக்குப் போதிய சந்துஷ்டி என்று கூறுவதுவழக்கம். கிராமத்தார் அவரிடம் நீர்ப் பாய்ச்சல், மதகைப் பழுது பார்த்தல், முதலிய சில்லறை விஷயங்களைக் குறித்து புத்திகேட்டால் "இந்த நாளில் யாருக்கென்ன தெரியும்? 'ரிவின்யூ போர்ட்' விதிகளைப் படித்தறியாத கழுதைகளெல்லாம் 'இன்ஸ்பெக்டராய்' இலங்குகிறார்கள். 'கிரஹாம்' துரையைப்போல் ஒரு கலெக்டரிருந்தால் இந்தச்சாயம் வெளுக்குமா?" என்பார். இறுதியில் கூடியமட்டும் உதவி புரிவார்; தெளிவாகவும் சுருக்கமாகவும் மனுக்கள் எழுதிக்கொடுப்பார். தெய்வ பக்தியுள்ளவர். சிவாலயத் திருப்பணி

யெல்லாம் அவரை வைத்துக்கொண்டு தான் நடக்கும். வேணுகோபாலஸ்வாமி கோயிலைப் புதுப்பித்தபொழுதும் விக்ர ஹங்களைப் பாலாலய பிரதிஷ்டை செய் தல், கும்பாபிஷேகம் முதலிய சடங்கு களில் முன்னின்று முடித்து வைத்தார்.

அவருக்கு, சுமார் எட்டுவேலி நிலமிருந் தது. அநேகமாய்ப் பூர்வீக சொத் தென்றே சொல்லவேண்டும். எங்கள் வீடு பெரிய திண்ணைகள், நடை, முன் கூடம், பின்கூடம், பூஜையுள், கொல்லைத் தோட்டம் எல்லாம் கூடிச் சௌகரியமாக விருந்தது. என் தாயார் லக்ஷ்மியம்மாள் தந்தையின் இரண்டாம் தாரம். முதல் தாரம் தவறினகாலத்தில் அவருக்கு வயது நாற்பதிருக்கலாம். மறுமணமின்றியே வாழவேண்டுமென்று விரும்பினர். தம் தாயார் வற்புறுத்தியதன்பேரில் தூர பந்துவாகிய இந்தச் சிறுபெண்ணை விவா ஹம் செய்துகொண்டார். வயதில் வித்தி யாசம் சற்று அதிகமிருந்ததால், என் தாயார் அவரிடம் எப்பொழுதும் பயபக்தி யுடனேயே பேசி நடந்துகொள்வாள். என் தகப்பனர் இளமையில் சுந்தரபுருஷராக இருந்தாரென்று ஊகிக்க இடமுண்டு. சற்று அம்மை வடுக்கள் பட்டிருந்தாலும், நல்ல பார்வையான முகம். பொன்னிறம், ஆஜானுபாஹுத்தோற்றம். சில வேளை களில் கோபம் பொங்கிக் கூச்சல் போடு வார். ஆனல் க்ஷணமாத்திரம்தான். நன் ருகச் சாப்பிடுவார். இரண்டு மூன்று ஊறுகாய் வகைகளில்லாமல் மோர் சாதம் உள்ளே செல்லாது. திருநெல்வேலி ஜில் லாவில் இரண்டு வருஷம் 'ஸெட்டில் மெண்ட்' குமாஸ்தாவாக வேலைபார்த்து, சுட்ட அப்பளத்திலும், வற்றல் குழம்பி லும் சுவையும் விருப்பமும் சம்பாதித்து வந்தார். இதைப்பற்றிப் பேசும்போதெல் லாம் என் தாயாருக்குச் சிரிப்பு வந்து விடும். நானும் என் தங்கை கோமளமும் ஏழுமுறை மணிக்கே அடுக்களையில் சென்று 'அம்மா, என்ன சமையல், என்ன சமை யல்?' என்று அலட்டுவோம். "இன்னிக்கு உங்களப்பா வயலிலே வேலே பார்த்து களைப்பாய் வரராம். அவருக்குப் பிடித்த திருநெல்வேலிச் சமையல்—சுட்டபபளாம், சுண்டைக்காய் வத்தல்குழம்பு, கீரை மசி யல்' என்பாள். எங்களுக்குப் பெரிய ஏமாற்றம். இன்றைக்கும் நாளைக்கும் எண்ணெய் சொட்டும் பொரித்த அப்ப ளத்தைப் பார்த்துவிட்டால் என் நாக்கில் ஜலமூறும். அவ்வளவு சுட்ட அப்பளங் களை இளமையில் வேண்டா மனதுடன் தின்றிருக்கிறேன்.

என் தகப்பனர் பழைய 'மெட்ரிகுலே ஷன்' தான் படித்தவர். ஆனல் தற்கால 'பி. ஏ.'க்களைக் காட்டிலும் திருத்தமாக வும் வலிமையுடனும் ஆங்கிலம் எழுது வார். அவருக்குப் புத்தகங்களில் விருப்ப மென்று சொல்லமுடியாது. என் குழந் தைப் பருவத்தில் வீட்டிலிருந்த 'இங்கி லிஷ்' புத்தகங்களைக் கைவிரலால் கணக் கிடலாம். கிறிஸ்துவர் 'விவிலிய' நூலின் பழைய பிரதியொன்று; இது பரிசுப் புத்தகமென்பது ஞாபகம். 'ரிவினியூ மானு யல்', இந்தியன் பீனல் கோட்', கிரிமினல் ரூல்ஸ்' போன்ற சில உத்தியோக ரீதிப் புத்தகங்கள், சில வாசகப் புத்தகங்கள், 'ஸ்காட்' என்பவரின் நாவல்கள் ஓரி ரண்டு இவைதான். தமிழிலோ என் தகப்பனருக்கு ருசியே கிடையாது. வட மொழியில்தான் அவர் பயிற்சி. வால்மீகி ராமாயணம், உபநிஷத்துகள், பகவத் கீதை, சௌந்தர்யலஹரி, லலிதா ஸஹஸ்ர நாமம் முதலிய ஸ்தோத்திரப் புத்தகங் கள், இவைகளை வைத்திருந்தார். அடிக் கடி எடுத்துப் பாராயணமும் செய்வார். தந்தைக்கும் மகனுக்கும் இயற்கை யிலேயே முரண்பாடு அமைந்தபோதிலும் இன்றும் நான் வடமொழியில் ஞானமும் பயிற்சியும் குன்றி, தமிழில் ஆர்வமுள்ள வனக இருக்கிறேன்.

என் தகப்பனருக்குத் தம் முதல்தாரத் துக்குப் பிறந்த பிள்ளையொருவனுண்டு. அவன் பெயர் சந்திரசேகரன்; 'சந்துரு' என்றழைப்பார்கள். பி. ஏ. படித்துவிட் டுப் பிறகு தன் பாக நிலங்களைப் பிரிவு செய்துகொண்டு, ரங்கூனுக்கு வியா பாரம் செய்யப் போய்விட்டான். அந்தக் காலத்தில் ரங்கூனில் பொன்விளையு மென்ற திட நம்பிக்கை. பாவம், அதிர்ஷ் டக்குறைவால் அவன் பல நஷ்டங்களை அடைந்து, முடிவில் மேல் பர்மாவில் மர் வியாபாரம் செய்து வந்ததில் 'மலேரியா' சுரத்தால் இறந்தான். அவன் பத்துப் பன்னிரண்டு வயதாகவிருந்தபொழுது என் தகப்பனர் மாயவரத்தில் 'சப் மாஜிஸ்

டிரேட்' ஆக வேலைபார்த்து வந்தார். அப்பொழுதுதான் அவர் முதல் தாரம் தவறியநாதனம். வீட்டில் சமையல் செய்ய ஒரு சிறு பிராமணப்பிள்ளை. 'சந்துரு' ஹைஸ்கூலில் படித்துவந்தான்.

ஒரு நாள் திருவையாற்றுக்கு மாற்றப்பட்டதாக அவருக்குத் தபாலில் உத்தரவு கிடைத்தது. உடனே சேரவேண்டிய தென்றும் கண்டிருந்தது. பதிலாக மாயவரத்திற்கு 'சப் மாஜிஸ்டிரேட்' டாகமாற்றப்பட்டவர் 'கலெக்டர்' ஆபீசில் உயர்தர குமாஸ்தாவாகவிருப்பவர். சற்றேனும் தாமதியாமல் தமக்கு மேல்படியான 'சப் மாஜிஸ்டிரேட்' 'வேலையில் சேர வந்து நிற்பாரென்று திண்ணம். என் தகப்பனுர் மனதில் பெரிய குழப்பமுண்டாயிற்று. அவரோ வைதீக ஆசாரங்களில் சிலவற்றையேனும் பின் பற்றுபவர். திருவையாற்றில் ஏதோ ஓர் 'ஹோட்டலில்' போஜனம் கொள்வது அநுசிதம், உத்யோக மரியாதைக்கும் குறைவு; சமையல்காரப் பையனைத் தம்முடன் அழைத்துக்கொண்டு செல்வதென்ருல் "சந்துரு"வின் கதி என்னுவது? அந்தக்காலத்தில் பள்ளியில் "ஹாஸ்டல்" வசதிகள் கிடையாது. மாயவரத்தில் அவருக்கு உற்ருர் உறவினர் ஒருவருமில்லை. இவ்வாறு மனம் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில், ஒரு 'ஜவான்' வந்து கச்சேரியில் ஸ்ரீரங்கம்நாயுடு வென்ற புதிய "சப்-மாஜிஸ்டிரேட்" வந்து காத்துக்கொண்டிருப்பதாகவும், ராகுகாலம் முடிந்ததும் அவர் "சார்ஜ்" பெற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிருரென்றும் தெரிவித்தான். என் தகப்பனுர் உத்தியோக நியமத்தில் சிறிதேனும் பிசகமாட்டார். கிரமத்தில் சென்று "சார்ஜ்" கொடுத்துவிட்டுத் திரும்பி, வியாகூல சித்தராய், சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருக்கு நன்கு அறிமுகமான கனபாடிகள் ஒருவர் வந்தார். அவர் தெரிவித்த விஷயமென்னவென்ருல், தேரடி வீதியில் மஹானுன அவதூத ஸ்வாமிகளொருவர் வந்திருப்பதாகவும் அவர் தரிசனத்திற்காகப் பல கனவான்கள் கூடுகிருர்களென்பதுமே. இந்த ஸ்வாமிகளைத் தரிசனம் செய்ய வேண்டுமென்ற அவா என் தகப்பனுருக்கு உண்டாயிற்று. அவர் ஸ்நான பூஜைகளை முடித்து விட்டுச்சென்ருர்.

அந்த ஸ்வாமிகள் இறங்கியிருந்த இடம் ஒரு பாழடைந்தவீடு. அவதூதராகவிருப்பதால், அவர் கிரஹஸ்தர் வீட்டில் எக்காரணமும் பற்றித் தங்குவதில்லை. கறுப்பு நிறம், திடகாத்திரமான சரீரம், பெரிய ஜடை, ஒளி பொறிக்கும் கண்கள், தாடி மீசைகளுடன் கூடியவர். அவர் உட்காருவது நிற்பதெல்லாம் ஒரு விலங்கின் சுயேச்சையான அசைவுகளைத் தோற்றுவிக்குமல்லாது, மனுஷ்ய பாவமே வராது. என் தகப்பனுர் சென்ற தருணத்தில் அவர் பிக்ஷான்னம் உட்கொண்டிருந்தார். அதாவது தெருத்திண்ணையில் அவரை நிறுத்தி, சிலர் வேஷ்டிகளால் மறைவு ஏற்படுத்தினுர்கள். சாதம், குழம்பு, கறி, தயிர், இவைகளை ஒன்ருக்கின மூன்று கவளங்களை அவர், யானை அருந்துவதுபோல், நின்றே கையில் வாங்கிச் சாப்பிட்டார். இந்த முறையைத்தான் சிறிதும் மாற்றமின்றி அவர் அனுஷ்டித்தார். இரவில் போஜனம் கிடையாது.

மறுபடி ஸ்வாமிகள் அமர்ந்தபின், பல கனவான்கள் அவரைத் தரிசனம்செய்து சென்ருர்கள். என் தகப்பனுர் மாத்திரம் ஒரு மூலையில் காத்திருந்தார். சந்தான பாக்கியமில்லாத சில ஸ்திரீகளும் அவரை நமஸ்கரித்துத் தம் குறைகளைச்சொல்லி விபூதி பிரஸாதம் பெற்றுச் சென்ருர்கள். இவரின்றி, ஆண் மகவு விரும்பின மற்ற ஸ்திரீகளும் வெகு உருக்கமாக அவர் அனுக்ரஹத்தைக் கோரிச்சென்ருர்கள். அந்த ஸ்வாமியின் முகத்தில் எப்பொழுதும் புன்சிரிப்புத் தவழுமாம். எல்லோரும் சென்றபின் அவர் என் தகப்பனுரை நோக்கிச் சிரித்தார்.

ஸ்வாமிகள்: பார்த்தீர்களா! ஜனங்களின் மூட நம்பிக்கையை? என்னுல் என்னமுடியும்; ஏதோ விபூதியை நல்ல மனதுடன் யார் கேட்டாலும் அளிக்கிறேன். என் வலிமை துரும்பளவு. இந்த விநயத்துடன் ஏன் ஸர்வ வல்லமைபெற்ற ஈச்வரனைத் தியானிக்கக்கூடாது? அவனுல் அனைத்தையும் பெறலாம். ஏமாற்றமடைகிருர்கள், பொக்கிஷ எஜமானனை அறியாமல் வாயில் காப்போனிடம் பிச்சை கேட்பது போல்.

என் தகப்பனுர்:—நான் மிகத் தாழ்வாகத் தெரிவிப்பதென்னவென்ருல், அவ்விடம்

அப்படி உத்தரவாகக்கூடாது. ஈச்வரனை ஆச்ரயிப்பது ஸாமான்யமா, எல்லோர் சக்திக்கும் உட்பட்டதா? அந்த முறையை அறியாமல் பாமரராகிய நாங்கள் இருளில் மூழ்கியிருக்கிறோம். தங்களைப்போன்ற மஹான்கள் தான் ஈச்வர கிருபைக்குப் பிரத்யக்ஷ அறிகுறிகள் எனலாம். தங்கள் மூலமாய் வெளிப்படும் அருள் எங்களைப் பக்தியில் நிலைநிறுத்துகின்றது.

ஸ்வாமிகள்:— (தாடியைத் தடவிக் கொண்டு) அவனன்றி ஓரணுவுமில்லை. மூலமாய் என்று சொன்னீர்கள்; அது உண்மை. நாமெல்லோரும் சிஷ்யகோடிகள். அவன் விளையாட்டின் கருவிகள் எனலாம். அந்த விளையாட்டின் நுட்பத்தைச் சாஸ்திரமறியாது. ஞானிகளறியார். அருணகிரியாரும் — "உல்லாச நிராகுலயோக இதச் சல்லாப விநோதனும் நீயலையோ?" என்று பாடினர்.

இவ்வாறு சம்பாஷணை சில நிமிஷங்கள் நடந்தது. பிறகு என் தகப்பனார் தாம் இன்னாரென்பதையும், தமக்கு அன்று காலையில் ஏற்பட்ட தர்மசங்கடத்தைக் குறித்தும் விநயபூர்வமாக விண்ணப்பித்தார்.

ஸ்வாமிகள்:—நீங்கள் என்ன செய்ய யோசித்திருக்கிறீர்கள்? மனுஷ்ய ப்ரயத்தனமில்லாமல், அனுக்ரஹமில்லை. இயன்றவரை முயற்சிசெய்யவேண்டும். வில்லை நாணேற்றி வளைத்தால், அம்பு தானாகவே பாயும்.

என் தகப்பனார்:—கலெக்டர் துரை கும்பகோணம் 'ஜமாபந்தி' முகாத்தில் இருக்கிறான். அவனைப் பார்த்துக் கேட்கலாமென்று யோசனை. புறத்தவனுக்கு அசௌகரியம் உண்டு பண்ணலாகாதென்று, இன்றைக்கே 'சார்ஜ்' கொடுத்துவிட்டேன். சந்தர்ப்பங்களை விரிவாய்க் 'கலெக்டரிடம்' சொன்னால் ஒரு வேளை உத்தரவு மாறலாம்——என்னைக் குறித்தவரையில் நம்பிக்கையில்லை.

ஸ்வாமிகள்:—(தம் ஜடாபாரத்தினின்று சிறிது விபூதியை எடுத்தளித்து) அப்படியே செய்யுங்கள். இந்த விபூதியைப் பூசிக்கொண்டு எஜமானரைப் போய்ப் பாருங்கள். உங்களுக்கு ஸாதனமாகும்.

தகப்பனார்:—(மிக மகிழ்ச்சியுடன் நமஸ்கரித்து) எல்லாம் தங்கள் அனுக்ரஹம்.

என் தகப்பனார் அவ்வாறே கும்பகோணம் சென்று கால்ட்வெல் என்ற துரையைச் சந்தித்து, தம் சந்தர்ப்பங்களை விரிவாய் எடுத்துச் சொன்னார். அந்தத் துரை சாதாரணமாய் வேண்டுகோளுக்கிணங்குபவனில்லை. ஆனால் முணுமுணுக்காமல் உடனே 'சார்ஜ்' கொடுத்துவிட்டுத்தன்னை 'சப் மாஜிஸ்டிரேட்' பார்க்கவந்ததைப் பற்றி' அவனுக்கு அந்தரங்க திருப்தி. தவிரவும் சீதாராமையர் மிக யோக்கியரென்று கேள்விப்பட்டிருந்தான். நேரில் இணங்காவிட்டாலும் இரண்டு நாளில் மாற்றுதல் உத்தரவுகளை 'ரத்து' செய்துவிட்டான். என் தகப்பனார் மாயவரத்திலேயே அடுத்த இரண்டு வருஷங்களைக் கழித்தார். அந்த அவதூத ஸ்வாமிகளின் புகைப்படமொன்று அவர் பூஜை அறையில் பல வருஷங்கள் மாட்டப்பட்டிருந்தது. (தொடரும்)

28548

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.




ஒன்றுபோலவே கூவிக் கூவிப் பழகிய ஏலக் கூறுவோரின் கூச்சல் அது. சூழ்ச்சியில் கைதேர்ந்த அவர் மக்களின் தளர்ந்த மன நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளுகிறார். தம் சரக்குகளைப் பிரமாதப்படுத்திப் புகழுகிறார். ஏலங்கேட்கும்படித் தூண்டுகிறார். இங்கும் அங்கும் ஏவி விடுகிறார். ஏலத்தொகை உயருகிறது. ஏலம் முடிகிறது. ஏலத்தில் எடுத்தவர் சற்று தயங்கி யோசிக்கிறார்... கொடுக்கவேண்டிய தொகையை விட அதிகமாகக் கொடுத்துவிட்டேனோ? எப்படியிருந்தாலும், தான் கொடுக்க விரும்பிய தொகையைவிட அதிகத் தொகையைத்தான் கொடுத்துவிட்டார்!

நீங்கள் ஏதேனும் சாமான் வாங்கவேண்டியிருந்தால், நீங்களும் இதுபோன்ற கேள்விகள் உங்களைக் கேட்டுக் கொள்ளுவதுண்டா? இந்தக் காலத்தில் நீங்கள் சாமான்கள் வாங்கும்போதெல்லாம் ஏலம் கேட்கிறீர்கள் என்று உணருவதில்லை போலும். தேவைக்கேற்ற அளவு சாமான்கள் கிடைப்பதில்லை. தேவையுள்ளவர்களோ அதிகம். இது அனைவருக்கும் தெரிந்ததே. ஒரு பொருள் இருந்தால், அதை வாங்க ஒரு டஜன் பேர்வழிகள் அல்லது 100 பேர்வழிகள் போட்டி போடக்கூடும். இது வியாபாரிகளுக்குத்தெரியும். ஏலக்காரர்களைப் போலவே இதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளுகிறார்கள். உயர்ந்த விலைக்கு எதையும் வாங்காதீர்கள். புத்திசாலித்தனமாக இருந்து, போர் முடிந்த பிறகு வாங்கிக்கொள்ளலாமென்று இப்போது பணத்தை மிச்சப்படுத்தி வையுங்கள்.

## எதிர்காலத்தின் பொருட்டு இப்போதே திட்டமிடுங்கள். உங்களால் இயன்ற வரை மிச்சப்படுத்துங்கள்.

நீங்கள் மிச்சப்படுத்தும் தொகைகளை எங்கே போட்டுவைப்பதென்று எண்ணிப்பாருங்கள். பத்திரமாகவும், வேண்டியபோது கிடைக்கக்கூடியபடியும் போட்டுவைக்கவேண்டும். நிலம், கட்டடங்கள், சரக்குகள், செய்பொருட்கள், நகைகள் ஆகியவற்றை வாங்கவேண்டாம். அவற்றின் விலைகள் வெகு அதிகம். நாளடைவில் அவ்விலைகள் குறையும். இப்போது, இன்ஷூரென்ஸிலும், கூட்டுறவு சங்கங்களிலும், சேமநிதிகளிலும், தபாலாபீஸ் சேமநிதியிலும், இவை எல்லாவற்றையும் விட நாலுவருஷ சேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளிலும், அரசாங்கக் கடன் பத்திரங்களிலும், முதலீடு செய்வதைவிட மேலான முதலீடு வேறெதுவுமில்லை. எதிர்காலத்தை முன்னிட்டுப் பாதுகாப்பான முறையில் மிச்சப்படுத்துங்கள்.

கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா, பைனான்ஸ் இலாகா வெளியீடு.

Regd. No. M. 4405






டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
அகமகிழ்கிறாள்.

இம் மகிழ்ச்சியை நீங்களும் எளிதில் அடையலாம்

டி. எஸ். ஆர்

கோகுல் கூந்தல் தைலம்,

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைல

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை

மதராஸ் ஸிடி ஏஜண்டு: புஷ்பவனம் ஸ்டோர்ஸ் பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM